பதற்குமே வசதியில்லை. போரை அடியோடு எதிர்பார்க்காத விக்கிரமபாண்டியன் ஆயுதங்களையும் சேர்க்கவில்லை. உணவுப் பொருள்களையும் நிரப்பிக்கொள்ளவில்லை. எல்லாவற்றையும் நான் வந்து செய்தேன். நான் வந்து கொல்லர்களைக் கூப்பிட்டு வேல்கள் தயார் செய்தும் பின்பும் ஆயுதபலம் நமக்குக் குறைவாக இருக்கிறது. இப்பொழுதிருக்கும் வேல்களைக் கணக்கிட்டால் வீரனொருவனுக்குப் பத்து வேல்கள் கிடைப்பது கூடக் கஷ்டம். எதற்கும் வீரபாண்டியன் முற்றுகையிடும் முன்பு இன்னும் கொஞ்சம் வேல்களைத் தயார் செய்து அம்புகளுக்கும் இரும்பு முனைகளை அடிப்போம்'' என்று விளக்கினான் அபராஜிதன்.

"மேற்கொண்டு எதுவும் செய்ய அவகாசமில்லை பிரபு!'' என்றான் காரி பெருமூச்சு விட்டுக்கொண்டே.

''ஏன் காரி?''

"கன்னிமாடத்தை முற்றுகையிட வீரபாண்டியன் படைகளுடன் புறப்பட்டுவிட்டதாகப் பொன்னமராவதியில் ஏக அமர்க்களமாயிருக்கிறது. எந்த நிமிஷத்திலும் வீரபாண்டியன் இக் கோட்டையை வளைத்துக் கொள்ளலாம்.''

காரியின் சொற்களைக்கேட்ட அபராஜிதன் மீண்டும் தீவிரமாகச் சிந்தனையில் ஆழ்ந்தான். கடைசியாகச் சொன்னான்: ''காரி, எப்படியும் நாம் கார்குழலியைக் காப்பாற்றியாக வேண்டும். இருக்கிற அவகாசத்திற்குள் ஏற்பாடுகளைச் செய்து முடிப்போம். நீ சீக்கிரம் ஸ்நானம் செய்து விட்டு வா.''

அபராஜிதன் கட்டளைப்படி உடைகளைக் களைந்து ஸ்நானத்துக்குக் கிளம்பினான் காரி.

அன்று முழுவதும் முற்றுகையைச் சமாளிப்பதற்கான வேலைகளில் இருவரும் முனைந்தனர். கொல்லர் பட்டறைகள் நாள் முழுவதும் இடைவிடாது சப்தித்தன. குதிரை வீரர்களை அணிவகுத்து நடத்திப் பயிற்சியளித்த நாள் கன்னிமாடம் கிடுகிடுவென்ற அதிர்ந்த

கோட்டைச்சுவரை அடுத்து நின்ற தாழ்வாரத்தையும் ஆயுதக் கூடுகளையும் பரிசோதித்த பாண்டிய சேனாதிபதியும் காரியும் யார் யாரை எங்கெங்கு நிறுத்தி எப்படிப் போர் புரிவதென்பதை நிச்சயம் செய்து கொண்டார்கள். எதிரிகள் ஏணி வைத்து மதில்களில் ஏறத்துணிந்தால் அவர்கள்மீது எண்ணெய் காய்ச்சி ஊற்ற கொப்பரைகள், கோட்டைச் சுவர் தாழ்வாரத்தில் எழுப்பப்பட்ட இரும்புக்கிராதிகளில் பொருத்தப்பட்டன. அவற்றுக்குக் கீழ் தீ போடுவதற்கும் பெரிய அடுப்புகள் அமைக்கப்பட்டன. பெரிய மரங்களைக் கொண்டு எதிரிகள் கதவை இடித்துத் தள்ள முயன்றால் அதைச் சமாளிக்கப் பெரிய இரும்புச் சலாகைகள் கதவுகளுக்குக் குறுக்கே பக்கத்துக் கட்டைகளில் பொருத்தப்பட்டன. கதவுகள் இடங்கொடுத்தாலும் ஆயுத வண்டிகள் நுழைய முடியாதபடி தடுக்க கதவுக்குச் சற்று தள்ளி, பெரிய பெரிய மர முனைகள் வட்டமாக அடிக்கப்பட்டன. இரண்டு நாட்களுக்குள் கன்னிமாடம் பூரண ஆயுதம் பூண்டு யுத்த வெறி கொண்ட அரக்கன் போல் வீரபாண்டியனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தது.

அந்த இரண்டு நாட்களிலும் கார்குழலியின் மனம் சொல்லவொண்ணா வேதனையால் பீடிக்கப்பட்டிருந்தது. பிரதி தினம் மாலை வேளைகளில் அல்லிப் பொழிலுக்கருகில் உட்கார்ந்த அவள் இரண்டு நாட்களிலும் சோர்ந்தே திரும்பினாள். உள்ளத்தேயிருந்த துக்கத்தால் உறக்கம் பிடிக்காமல் இரவில் ஏங்கிய வண்ணம் படுக்கையில் படுத்திருந்தாள். முதல் நாளிரவை மெள்ளக் கழித்த கார்குழலி இரண்டாம் நாளிரவு அடியோடு உறக்கம் கொள்ளாமல் படுக்கையில் புரண்டாள். தொடர்ச்சியாகக் கண் விழித்ததால் அவள் உடல் அயர்ந்து துவண்டு கிடந்தது. துக்கம் மீறிட்டதால் மார்பு திடுதிடுவென்று அடித்துக் கொண்டது. இரண்டாவது நாள் இரவில் மூன்றாவது ஜாமத்தில் வீர பாண்டியன் முற்றுகை முரசம் கோட்டைக்கு வெளியே திடுதிடுமென பயங்கரமாகச் சப்தித்தது

41. அடிகளின் ரோஷமும் விக்ரமன் வேஷமும்

இரவின் மூன்றாம் ஜாமத்திலே, எவரும்கண்ணயரும் நேரத்திலே, கன்னிமாடத்துக்கு எதிரேயிருந்த காட்டின் முகப்பிலே, வீரபாண்டியன் முன்னணிப் படைகள் போர் முரசைப் பலமாக அடிக்கவே, கோட்டைக்குள் மிருந்த பரபரப்பு ஏற்பட்டு வீரர்கள் பந்தங்களைக் கொளுத்திக் கொண்டு நாலாபக்கங்களிலும் ஓடலாயினர், காமத்தால் கண்விழித்துக் கிடந்த கார்குழலி மாத்திரமின்றி அத்தகைய உணர்ச்சிகளால் பீடிக்கப்படாத அவள் தோழிமாரும் கன்னிமாடத்து மாடியின் வெளித் தாழ்வாரத்திலே வந்து கூடி, காட்டுப் புறத்தே கண்களை ஓட்டினர். நந்தவனத்தை அடுத்து அமைக்கப்பட்டிருந்த கொட்டகைகளில் கட்டப்பட்டிருந்த குதிரைகள் அவிழ்க்கப்பட்டு, சேணம் பூட்டப்பட்டன.

குதிரைப் பாதுகாப்பாளரால் இப்படித் தயார் ,செய்யப்பட்ட குதிரைகளை நோக்கி ஆயுதபாணிகளாகத் திடுதிடுவென்று ஓடி வந்த வீரர்கள் அவற்றின் மேல் பாய்ந்தேறி, கன்னிமாடக் கோட்டைச் சுவரின் நாலா பக்கங்களிலும் வேகமாகப் புரவிகளை ஓட்டிக் காவலைச் சோதனை செய்தனர். மற்றும் சில குதிரை வீரர்கள் கோட்டைக் கதவுகளின் முன்பாக அணிவகுத்துச் சாரியாக நின்று கதவு உடைக்கப்படும் பட்சத்தில் அதைச் சமாளிப்பதற்குத் தயாரானார்கள். காலாட் படையினரும், கோட்டை மதில்களைக் காப்பதற்காக நியமிக்கப்பட்டவருமான சிலர் பந்தங்களை ஏந்திக் கோட்டைச் சுவரை ஒட்டி நாலாபக்கத்திலும் ஓடிக் கொண்டிருந்த அகலமான தாழ்வாரத்தில் ஏறிச் சென்று இருபதடிக்கு ஒருவராக நின்று வெளிச்சம் காட்டலாயினர். காலாட் படையில் வல்லவரும் வேலெறிபவர்களும் ஆங்காங்கு தயாராக வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைத்தாங்கி எதிரிப்படைகளைக் குறி பார்த்து நின்றனர். அபராஜிதனும் காரியால் பயிற்றுவிக்கப் பட்ட கன்னரும் மற்ற வீரர்களும் தங்கள் தங்கள்

பணிகளை ஏதோ மாபெரும் விசையால் இயக்கப்பட்ட மந்திரப் பாவைகளைப் போலப் பணி புரிவதைக் கண்ட அடிகளார் அதிசயத்தில் ஆழ்ந்து போனார்.

எத்தனை எத்தனையோ கவலைகளில் ஆழ்ந்து உறக்கம் பிடிக்காமல் தமது காவி போர்த்த பஞ்சணையில், படுத்துக் கிடந்த அந்தத் துறவி, முரசொலி கேட்ட மாத்திரத்தில் அவசர அவசரமாக எழுந்திருந்து கன்னிமாடத்துக்கு முன் வெளி முற்றத்திற்கு ஓடிவந்தார். தாம் எழுந்த துரிதத்தை விட அதிக துரிதத்தில் வீரர்கள் எழுந்துவிட்டதையும் சில வினாடிகளுக்குள்ளாக அவர்கள் உடைபணிந்து போர்ப் படைகளை ஏந்திக் கன்னிமாடத்தை காபந்து செய்து விட்டதையும் பார்த்த அடிகளார், பாண்டிய சேனாதிபதியின் சாமர்த்தியத்தை எண்ணிப் பார்த்து, ‘இவனுக்கு பெரிய வீரன் என்று பெயர் வந்ததில் வியப்பேதும் இல்லை’ என்ற முடிவுக்கு வந்தார். அத்துடன் ‘இப்பேர்ப்பட்ட வீரன் கையில் இக்கோட்டையிருப்பதால் எதிரிகள் இதைப் பிடிப்பது அவ்வளவு சுலபமல்ல. வீரர்களின் தொகை காரணமாக எதிரிகள் பிடித்தாலும் பெரும் பலி கொடுத்தே கன்னிமாடக் கோட்டைக்குள் நுழைய வேண்டியிருக்கும. ஆகவே கார்குழலியை வீரபாண்டியன் அடைவது அவ்வளவு சுலபமல்ல’ என்று தமக்குள்ளேயே யோசித்து, இருந்த நிலை பற்றி ஓரளவு திருப்தியும் மகிழ்ச்சியும் கொண்டா மகிழ்ச்சியின் காரணமாக மந்தகாச வதனத்துடன் மாடிப் படிக்கருகே வந்து நின்ற குதிரை வீரர்களைப் பார்த்துக் கொண்டே வந்ததால் எதிரே வந்த விக்ரமபாண்டியனைக் கவனிக்காமல் அவன் மீது மோதிக் கொண்டார்.

அடிகளாரின் பிரும்மாண்டமான தேகமும் முக்கியமாக வெண்மையான ஆனால் உறுதியான வழுக்கைத் தலையும் திடீரென மேலே மோதியதால் ஏற்பட்ட வலியாலும் நாலுபேருக்கு எதிரில் பாண்டிய மன்னர் மரபில் வந்த தன்மேல் அவர் விகாரமாக மோதிவிட்டாரே என்ற ஆத்திரத்தாலும் சினம் கண்களில் உதிர அவரை நோக்கிய

விக்ரமபாண்டியன் "என்ன அடிகளாரே உமக்கு கண்பன் ஏதாவது தெரிகிறதா?" என்று வினவினான்.

அடிகளார் சற்று நிதானித்துக்கொண்டு மிருத்த இகழ்ச்சி ததும்பும் பார்வையொன்றை அவன்மீது வீசினார். விக்ரம பாண்டியன் அப்பொழுதுதான் உறக்கத்தில் வருகிறானென்பதையும், அந்தச் சமயத்திலும் அவன் போர்க் கவசமணியாமல் சாதாரண உடைகளுடன் சண்டையை வேடிக்கைபார்க்க வருகிறவன்போல் வந்திருக்கிறானென்பதையும், உடையில் வாளோ, கையில் வேலோ எந்தபோர்க் கோலமும் இல்லாமல் இருப்பதையும் அந்த ஒரே பார்வையில் அளவெடுத்துக்கொண்ட அடிகளார், "கண் தெரியவில்லை மன்னவா?" என்று விஷமம் நிரம்பிய குரலில் சொன்னார்.

"ஏன்? கண் குருடாகி விட்டதா?" என்று விக்ரம பாண்டியன் உஷ்ணமாகக் கேட்டான்.

"உண்மையாகவே குருடாகி விட்டது" என்றார் அடிகளார் மீண்டும் விக்ரமபாண்டியனை நோக்கிப் புன்முறுவல் செய்துகொண்டே.

"எதனால்?" அடிகளார் பேசிய மாதிரியில் ஏதோ சந்தேகம் உதிக்கவே சற்றுத் தயக்கத்துடன் இந்தக் கேள்வியை வீசினான் விக்ரமபாண்டியன்.

"இதுவரை வீரர்களைப்பார்த்துக்கொண்டிருந்தேன்".

"நீர் சொல்வது புரியவில்லை."

"புரியவில்லையா? கேளுங்கள் மன்னவா! அதோ பாருங்கள். எத்தனை வீரர்கள் பந்தங்களைப் பிடித்துக் கொண்டு நிற்கிறார்கள்?"

"ஆமாம், நிற்கிறார்கள்."

"அவர்கள் நிற்கிறார்களே தவிர, குதிரை வீரர்கள் நிற்கவில்லை. ஆங்காங்கு சஞ்சரித்தபடி இருக்கிறார்கள்."

"அதனாலென்ன?"

"அதனாலென்னவா? பந்தங்களின் ஜாஜ்வல்யமான பிரகாசத்தில் கவசமணிந்த வீரர்கள் குறுக்கே ... வினால்..."

"பளபளப்பான கவசங்கள் பந்தங்களால் பிரகாசிக்கின்றன. அவற்றை அணிந்த வீரர்கள் வேகமாகக் குறுக்கும் நெடுக்கும் செல்வதால் அந்தப் பிரகாசம் பளீர் பளீரெனக் கண்களில் தாக்குகின்றன மன்னவா! இதனால் என் கண்கள் குருடாயின. ஆனால் மனம் மகிழ்ச்சியால் நிறைந்திருக்கின்றது. ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்றது. இந்த மாதிரி வீரர்கள் உலவும் காட்சியை நான் கண்டு எத்தனை நாளாகின்றன! அநேக வருஷங்களுக்கு முன் மழவராயன் இப்படித்தான் தன் படைகளை நடத்துவான்! அவன் யுத்தரங்கங்கள் பலவற்றில்நான் இருந்திருக்கிறேன். வீரர்கள் என்ன வேகமாகச் சென்று தாக்குவார்கள். இராக் காலப் போராட்டங்களில் எத்தனை தலைகள் உருளும்! எத்தனை முண்டங்கள் எழுந்து கோரத் தாண்டவமாடும்! எத்தனை குதிரைகள் வீரிட்டலறி மாயும்! எத்தனை யானைகள் பீரிட்டுக்கதறும்! அத்தனை காட்சியும் பந்தங்களின் வெளிச்சங்களில் எப்படி ஜொலிக்கும் தெரியுமா மன்னவா! அந்த யுத்தரங்கங்களில் ஏற்படும் எதிரிகள் கூக்குரலைத் தமிழர்கள் படைகளின் சிங்கநாதம் அடக்கும். எதிரிகள் வாழ்வை நமதுவேல் உறிஞ்சும் அந்தக் காட்சிகள் தமிழ் நாட்டில் அடங்கிவிட்டன...." என்று ஆவேசமாகப் பேசிக்கொண்டே ஏதேதோ யோசனைகளில் ஆழ்ந்த சிவானந்த அடிகளார் எதிரே விக்ரம பாண்டியன் நின்றானென்பதையோ அவனுடன் தாம் சம்பாஷணையில் இறங்கியிருப்பதையோ நினைக்காமல் தமிழ் வீரர் பணிகளைப் பற்றிய கனவுகளில் சஞ்சரிக்கலானார். அப்படி அந்தக் கனவுகளில் ஆழ்ந்துவிட்ட அடிகளாரின் கண்களில் எதிரே நடமாடிய வீரர்கள், பந்தங்கள், வேல்கள், கவசங்கள் இவை தோற்றமளித்தனவேயொழிய மற்ற எல்லாம் மறைந்துவிட்டன. ஈ எறும்புக்குக்கூடத் தீங்கிழைக்கக்கூடாதவரும் உலக பந்தங்களை அறவே வெறுத்ததற்கு அடையாளமாகக் காவி கட்டியிருப்பவருமான அந்த அடிகளாரின் பேச்சைக் கேட்ட விக்ரம பாண்டியன் மிதமிஞ்சிய ஆச்சரியத்தால் ஸ்தம்பித்து

தின்றான். அடிகளாரின் முகத்தில் அமைதிக்குப் பதிலாகப் போர்வெறி ஒளி நிற்பதையும், ரோஷத்தால் அவர் முகத்தில் கருஞ்சிவப்பேறியிருப்பதையும், ஏற்கனவே பளிச் பளிச்சென்று மின்னும் கண்கள் அதிகமாக மின்னுவதையும் கண்ட விக்ரமபாண்டியன், 'இவர் உண்மைத் துறவியா, போர் வெறியனா?' என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டு உள்ளேயிருந்த எண்ணங்களை வெளியிலே விடவும் தொடங்கி, "அடிகளாரே! உம் நிலைக்கும் பேச்சுக்கும் சம்பந்தமிருப்பதாகத் தெரியவில்லையே" என்றான் மெதுவாக, ஆனால் குத்தலாக.

அடிகளார் தமது போர்த்தியானத்தைச் சற்றே கலைத்துக் கொண்டு விக்ரம பாண்டியனை ஒருமுறை ஏற இறங்கப் பார்த்தார். அதுவரை வெறி மண்டிக்கிடந்த துறவியாரின் கண்களில் விஷமம் புகுந்து கொள்ளவே அவர் பதில் சொன்னார், "மன்னவா! நிலைக்கும் பேச்சுக்கும் மட்டுமல்ல. நிலைக்கும் செய்கைக்கும்கூடப் பலரிடம் மாற்றத்தைக் காண்கிறோமல்லவா?" என்று.

விக்ரம பாண்டியன் ரத்தக் குறைவாலும் பயத்தினாலும் வெளுத்திருந்த தன் சோகை முகத்தை அவர் பக்கமாகத் திருப்பி, "காணவேண்டியது அவசியமா?" என்று கேட்டான்,

"அவசியமல்ல மன்னவா! ஆனால் காலம் மாறிக் கிடக்கிறத. அதனால் அவரவர் நிலையும் மாறுகிறது" என்றார் அடிகளார்.

"என்ன அப்பேர்ப்பட்ட காலம்?"

"தமிழ்நாடு தற்காலமிருக்கும் காலம். அதில் மட்டும் வீரர்கள் நிரம்ப இருந்தால் இன்று பாண்டியநாடு சிங்களத்தின் கால்களில் சிக்கிக் கிடக்குமா?"

"தமிழ்நாட்டில் வீரர்கள் இல்லையென்று சொல்கிறீரா?" என்று விக்ரம பாண்டியன் வினவினான்.

அடிகளார் பதிலுக்குத் தமது கண்களைக் கோட்டை மதில் சுவர் தாழ்வாரத்துக்காக உயர்த்தி யவனர்கள் போல் உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை போர்க்கவசமணிந்து நடமாடிய பாண்டிய சேனாதிபதியையும், மார்பிலும் தலையிலும் மட்டும் கவசமணிந்து அவனுடன் சென்றுகொண்டிருந்த காரிவளவனையும் பார்த்துவிட்டுச் சொன்னார். "அடியோடு இல்லை என்று சொல்ல முடியாது. சிலர் இருக்கிறார்கள்."

விக்ரமபாண்டியன் கோழையானாலும் கெருத்திரமக் காரனாதலால் அடிகளார் பார்வை சென்றவிடத்தையும் அதைத்தொடர்ந்து உதிர்ந்த வார்த்தைகளையும்கவனித்து அவற்றின் அர்த்தத்தையும் புரிந்துகொண்டான். இருந்தாலும் அடிகளாரை இடித்துக் காட்ட வேண்டுமென்பதற்காகச் சொன்னான்; "அடிகளாரே! அப்படி வீரர்கள் குறைந்து போனாலென்ன? தங்களைப் போன்றவர்கள் இருக்கிறார்களல்லவா?"

அடிகளார் பெரிதாகச் சிரித்துவிட்டு, "மன்னவா! புரிந்துகொண்டு விட்டீர்கள்" என்றார்.

"எதைப் புரிந்துகொண்டுவிட்டேன்?" உஷ்ணமாக எழுந்தது அந்தக் கோழையின் கேள்வி.

"நிலை மாறவேண்டிய அவசியத்தை."

"என்னது?"

"நான் வீரனாகவும் நீர் துறவியாகவும் மாற வேண்டிய அவசியத்தை."

"அடிகளாரே...." சினத்துடன் கூவினான் விக்ரம பாண்டியன்.

அவன் சினத்தைக் கண்டு அஞ்சாத அடிகளார் வெந்த புண்ணில் வேலை விடும் பணியை மேற்கொண்டார்: "விக்ரமா, சற்று முன்பு என் முகத்தில் போரின் வெறியைக் கண்டாய். துறவியின் முகத்தில் எதற்காகப் போர் வெறி என்று ஆச்சரியப்பட்டாய். சிருஷ்டியின் ரகசியத்தை நீ, அறியாதவன். எப்பேர்ப்பட்டவனும் பிறவிக் குணத்தை ஜயிக்க முடிவதில்லை. ஆண்டாண்டு

னாகக் காட்டில் தவம் செய்த முனிவர்களே உணர்ச்சிகளை வெற்றிகொள்ள முடியவில்லையென்றால் ராஜாங்கத்திலிருக்கும் துறவியான என்னால் எப்படி வெற்றிகொள்ள முடியும்? வீரர்களான தமிழர்களைக் கண்டதும், என் இயற்கைக் குணம் செயற்கை அடக்கத்தை உதறி எறிந்துவிட்டது. உண்மைத் தமிழனுக்கு ரத்தத்தில் ஊறியிருக்கும் வீராவேசம், உணர்ச்சிகளில் சதா சுழன்று கொண்டிருக்கும் உறுதியின் விலாசம், அநீதியைக் கண்டதும் அறிவில் சுடர்விடும் ஆத்திரத்தின் ஜ்வாலை, வீரச் செயல்களின் குறிகளைப் பார்த்ததும் நரம்புகளில் ஏற்படும் துடிதுடிப்பு ஆயுதங்கள் உராயும் என்ற எண்ணத்திலேயே இதயத்தில் ஏற்படும் மகிழ்ச்சிக் கொந்தளிப்பு அத்தனையும் ஏற்பட்டு விட்டன. விக்ரமா! ஆனால் நீயோ, சண்டையை வேடிக்கை பார்க்கவரும் சாதாரண மனிதனைப்போல் அரைத் தூக்கத்துடன் இங்கு வந்து நிற்கிறாய். என் உணர்ச்சிகள் உனக்கு ஏன் ஏற்படவில்லை? நீயும் தமிழ்நாட்டில் பிறந்தவன்தானே? வீரன் தானே?'' என்று படபடவென்று யாரும் அதுவரை கண்டறியாத கோபத்துடன் வெடித்துத்தள்ளினார் அடிகளார்.

அடிகளாரின் ஆத்திரத்திலே அயர்ந்து வேகத்துடன் உதிர்ந்த சொற்றொடரிலே அடிபட்டுச் செயலிழந்து உணர்ச்சி குன்றித் தலைகுனிந்து நின்றான் விக்ரமபாண்டியன், அடிகளார் மேலும் சொன்னார்: ''விக்ரமா! நான் சொல்கிறேனென்று வருத்தப்படாதே. நீ பெரிய வீரனாக வரவேண்டுமென்ற ஆசையால் சொல்கிறேன். எனக்கும் தமிழ்நாட்டு ராஜ குடும்பங்களுக்கும் உள்ள நேசத்தை முன்னிட்டுச் சொல்கிறேன். ஒருவேளை சோழப் பேரரசின் உதவியால் உன் தந்தை குலசேகர பாண்டியன் மீண்டும் மதுரையின் அரியணையில் அமர்ந்தால், அவனுக்குப் பின் அதே பீடத்தில் அமரவேண்டிய நீ, வீரபாண்டியன் போல் ருக்கக் கூடாது? வீரவானேந்தி பரம்பரைப்புகழ்குன்றாமல் தமிழ்நாட்டின் பெருமை சிரழியாமல் அரசாளத் தகுந்

னாக வேண்டும் என்ற ஒரே எண்ணத்தால் சொல்கிறேன். நீ அரசனானால் இந்த அடிகளுக்குத் தேவையானது ஒன்றுதான். பாய் வேய்ந்த பராந்தகனும் கங்கை கொண்ட ராஜேந்திரனும் இராமாயணக் கதை கேட்ட மாத்திரத்தில் அநீதியை அழிக்க நால்வகைப் படையுடன் கடலில் இறங்கிய குலசேகர பெருமானும், நீதி வழங்கக் கையைத் துண்டித்துக் கொண்ட பொற்கைப் பாண்டியனும் அரசாண்ட இந்தத் தமிழ்நாட்டிலே கோழையும் பலவீனனுமான விக்ரம பாண்டியனும் அரசாண்டான் என்ற பழிச்சொல்லுக்கு, சரித்திரத்தின் இழிசொல்லுக்கு ஆளாகாதிருக்க வேண்டும் என்பதுதான் தேவை. ஆகவே, போ விக்ரமா! போய், போர்க்கோலம் பூண்டுவா, பாண்டிய வம்சத்தில் யாரைப் பார்த்தாவது பிறர் பரிகசித்தால் நான் பொறுக்காதவன். மற்ற வீரர்கள் உன்னை இப்படிப் பார்த்தால் பரிகாசம் செய்வார்கள். உனக்காக இல்லாவிட்டாலும் உன் தந்தைக்காக, உன் வம்சத்துக்காகப் போர்க் கோலம் அணிந்து கொள், போ'' என்றார் அடிகளார் வெறுப்பு, கோபம், இகழ்ச்சி அத்தனையும் கலந்த குரலில்.

மகுடியில் புன்னாகவராளியைத் திரும்பத் திரும்ப ஊதினால் படமெடுத்து மயங்கி நிற்கும் அரவத்தைப்போல அடிகளாரின் வீர மந்திரோபதேசத்தால் கட்டுண்டு நின்ற விக்ரமபாண்டியன், மகுடி வாசிப்பு முடிந்ததும் படத்தைச் சுருட்டிக் கொண்டு புற்றை நோக்கி ஊர்ந்து செல்லும் பாம்பைப் போல் சரசரவென்று தன் அறைக்காக நடந்து சென்றான். அறைக்குச் சென்றவன் போர்க்கோலம் அணியவில்லை. படுக்கை மேல் வெகு நேரம் உட்கார்ந்து கொண்டிருந்தான்.

அறைக்குள் வேகமாக நுழைந்த முத்துநகை, ''பிரபு! உங்களை இளவரசி அவசரமாக அழைக்கிறார்கள்'' என்றாள்.

''எங்கிருக்கிறாள் உன் எசமானி?''

''கோட்டைச் சுவர் தாழ்வாரத்தில்.''

''என்ன சொல்கிறார்கள்?''

''யாருடனோ பேசப் போகிறார்கள்.''

''யாருடன்?''

''எதிரிகளுடன்.''

''எதிரிகளுடனா!''

''ஆமாம் பிரபு! இரண்டு குதிரை வீரர்கள் வந்து அகழிக்கு அப்பால் நின்று முரசு கொட்டி அழைத்திருக்கிறார்கள்.''

அதற்குமேல் விக்ரமபாண்டியன் எக்கேள்வியையும் கேட்காமல் விடுவிடுவென்று போர்வேஷம் தரித்து, கோட்டைச் சுவர் தாழ்வாரத்தின்மீது ஏறிச் சென்றான். கார்குழலி அங்கு ஏற்கனவே நின்றிருந்தாள். அவளுக்கு இரு பக்கங்களிலும் அபராஜிதனும், காரியும் பின்பக்கத்தில் மார்க்கீயனும் நின்றிருந்தார்கள். விக்ரமபாண்டியனும் அவர்களுக்குப் பின்னால் வந்து நின்று வெளியே நோக்கினான். கோட்டைச்சுவருக்கு வெளியே அகழியை அடுத்து இரு வீரர்கள் குதிரை மீது ஆரோகணித்து நின்றார்கள், அவர்களில் ஒருவன் முரசறைபவன், மற்றவன் வீரபாண்டியன். மீண்டும் ஒருமுறை முரசு முழங்கியது. வீரபாண்டியன் உக்கிரம் கலந்த பெருத்த குரலில் தன் கேள்வியை வீசினான்; ''விக்ரம பாண்டியன் அங்கு இருக்கிறானா?'' என்று எழுந்தது முதல் கேள்வி மிகப் பயங்கரமாக.

42. இரவில் பறந்த அம்பு

அகழிக்கு அப்புறத்தே நின்று வீரபாண்டியன் விடுத்த முதல் கேள்வி காதில் விழுந்ததும் விக்ரமபாண்டியன் மிதமிஞ்சிய திகிலால் வெலவெலத்துப் போனான். பயத்தின் காரணமாக, கச்சலான அவன் சரீரமும் ஒரு நிலையில் நில்லாமல் கன்னிமாடக் கோட்டைச் சுவரின் மீதுமெல்ல அப்படியும் இப்படியும் அசைந்தது. கால்களின் ஊடுருவிச் சென்ற நடுக்கத்தைச் சமாளித்துக்கொள்ள அவசியம் அவன் கைகள் கோட்டைக் கைப்பிடிச் சுவரை

அதிகமாக அழுத்திப் பிடித்தன. எதிரி வாசலில் வந்து நின்று கூவிய காரணத்தால் மற்றவர்கள் விக்ரம பாண்டியன் நிலையைக் கவனிக்காவிட்டாலும் அடிகளார் மட்டும் பக்கவாட்டாக ஒரு பார்வை பார்த்து உள்ள விஷயத்தை ஊகித்துக் கொண்டார். விக்ரம பாண்டியன் அப்பொழுதிருந்த நிலையில் அவனிடமிருந்து எந்தக் கேள்விக்கும் பதில் வராதென்பதை நன்றாகப் புரிந்துகொண்ட அடிகளார் அபராஜிதனுக்காகத் திரும்பி, ''பிரபு! கேள்வி விக்ரமபாண்டியனைப்பற்றியதானாலும் பதிலைநீங்களே சொல்லிவிடுவது நலம்'' என்று யோசனை சொன்னார்.

அபராஜிதன் தன் கண்களை விக்ரம பாண்டியனுக்காகத் திருப்பி, ''வீரபாண்டியனுக்கு நான் பதில் சொல்லட்டுமா? உத்தரவு கொடுக்கிறீர்களா?'' என்று வினவினான்.

''அவர் உத்தரவு எதற்கு?'' என்று அடிகளார் ஆச்சரியத்துடன் கேட்டார்.

''கேள்வி அவரைப் பற்றியது. அவரே அதற்குப் பதில் சொல்ல இஷ்டப்படலாம்'' என்றான் அபராஜிதன்.

''அப்படி ஒன்றும் அவர் இஷ்டப்படவில்லை'' என்று விக்ரம பாண்டியன் அபிப்பிராயத்தை அடிகளார் தமது திருவாக்கு மூலமே தெரிவித்தார்.

தான் கேட்ட கேள்விக்குப் பதிலேதும் வராமலிருப்பதையும், கோட்டை மதில் பிராந்தியத்தில் ஏதோ தர்க்கம் நடப்பதையும் கவனித்த வீரபாண்டியன் சற்றே கோபம் ஏறிய குரலில் மீண்டும் கேட்டான், ''நான் கேட்டது உங்கள் காதில் விழுந்ததா இல்லையா?'' என்று.

உச்சந்தலை முதல் உள்ளங்கால் வரை கப்பிரமாக வனர்களைப் போல் இரும்புக் கவசம் பூண்டு நின்றிருந்த அபராஜிதன் அதற்குமேலும் மௌனமாயிருப்பது தங்கள் பலவீனத்தைக் குறிக்கும் என்ற காரணத்தால் கவசத்தின் காப்புரத்தை மட்டும் திறந்துவிட்டுக் கொண்டு தான் இன்னாரென்று அடையாளம் தெரியாதிருப்பதற்காகக் குரலையும் மாற்றிக்கொண்டுபேசத்தொடங்கி, ''பாண்டிய

மன்னனே! உன் கேள்வி விசித்திரமாயிருக்கிறது. யார் இருந்தால் உனக்கென்ன? இல்லாவிட்டால் உனக்கென்ன? முற்றுகையைப் பற்றி ஏதாவது சொல்லவேண்டியிருந்தால் சொல்'' என்றான்.

வீரபாண்டியன் சற்றே தலையை உயர்த்தித் தன்னை எதிர்த்து இத்தனை தைரியமாகப் பேசுகிறவன் யாரென்பதை அறிய முயன்றான். அபராஜிதன் கண், வாய்ப் பிரதேசங்கள் தவிர முகத்தின் மற்ற பாகங்கள் கவசத்தால் மறைக்கப்பட்டிருந்ததால் அடையாளம் ஏதும் புரியாமல் போகவே கோபத்தால் நிதானமிழந்த வீரபாண்டியன், ''டேய் முட்டாள்! காரணமில்லாமல் நான் விக்ரம பாண்டியனைப்பற்றி விசாரிக்கவில்லை. இந்த முற்றுகைக்கும் அவனுக்கும் பெரிதும் சம்பந்தமிருக்கிறது. அவன் இங்கிருக்கிறான் என்பதும் எனக்குத் தெரியும். அவனை வரச்சொல்'' என்றான்.

''மன்னனே, முட்டாள்தனம் யாருக்கு இருக்கிறது என்பதைச் சீக்கிரம் புரிந்து கொள்வீர். அது கிடக்கட்டும். நீர் சொல்லவேண்டியது ஏதாவதிருந்தால் கோட்டைத் தலைவனான என்னிடம் தான் சொல்லவேண்டும்'' என்று அபராஜிதன் திட்டமாக அறிவித்தான்.

''டேய் கோட்டைத் தலைவனே, இன்னும் சில நாட்களில் உன் தலையை இந்தக் கோட்டை வாசலில் செருகி வைக்கிறேன்...'' என்று ஆரம்பித்த வீரபாண்டியனை அபராஜிதனின் பயங்கர சிரிப்பு ஒன்று அடக்கியது.

கோபமும் வெறியும் கலந்த அந்தச் சிரிப்பை அபராஜிதனிடமிருந்து எதிர்பார்க்காத அடிகளார்கூட அந்தப் பயங்கர சப்தத்தைக் கேட்டுக் கலங்கினார். எதிரேயிருந்த காடுபூராவும் அந்தச் சிரிப்பு ஊடுருவிச் சென்று ஒலித்ததால் வீரபாண்டியன் மனதில்கூட ஓரளவு அச்சம் உதயமாயிற்று. அந்தப் பயங்கரச் சிரிப்பை உதிரவிட்ட அபராஜிதன் மரியாதையைக் கைவிட்டுப் பேசலானான்: ''மன்னனே! கோட்டை வாசல்மீது தலைகளை

வெட்டிச் செருகுவதில் நீ சமர்த்தனென்பதைத் தமிழ்நாடு அறியும். அப்படி வெட்டுவதற்கும் உனக்குச் சாமர்த்தியம் கிடையாதென்பதும் மக்களுக்குத் தெரியும். சிங்களர் படைபலம் உன்னைப் பேசச் செய்கிறது. பிறநாட்டு ஆதிக்கம் உன் கரங்களுக்கு வலுவு கொடுக்கிறது. உன் அதிகாரத்துக்குச் சப்பைக்கட்டுப் போடுகிறது. ஆனால் எல்லோர் தலைகளையும் வெட்டிவிட முடியுமென்று மட்டும் கனவு காணாதே. இங்குள்ள வீரர்களின் தலைகளை நீ வெட்டும் முன் ஒரு தலைக்குப் பத்துத் தலையாக உன் சைன்னியத்தில் உருளும் என்பதை நினைவில் வைத்துக் கொள்.''

வீரபாண்டியன் கண்கள் கோபத்தால் கனன்றன. உடல்கூட நிதானத்தை இழந்து துடித்தது. ஓர் அற்பன் தன்னைப் பார்த்து இகழ்ச்சியாகப் பேசத் துணிந்துவிட்டானே என்ற ஆத்திரம் அவன் உள்ளத்தை உலுக்கியது. இருந்தபோதிலும் அதையெல்லாம் அடக்கிக்கொண்டு, ''டேய்! நீ யாராயிருந்தாலும் சரி, கோட்டையைக் காவல்புரிய லாயக்கற்றவனென்பதை நிரூபிக்கிறாய். அசட்டுத் துணிச்சலால் மற்றவர்களையும் உன்னோடு சேர்த்துக் கூண்டோடு கைலாசம் கொண்டு போக நினைக்கிறாய். அனாவசியமாக நான் உன் கோட்டைக்குள் இருப்பவர்களின் ரத்தத்தைச் சிந்த விரும்பாததால்தான், விக்ரமபாண்டியனுடன் பேச விரும்பினேன். இந்தக் கன்னிமாடத்துக்கு மழவரராயன் மகளைத் திருட்டுத்தனமாக அழைத்து வந்தது அவன்தான். அவனுக்கு இப்பொழுதாவது புத்தி வந்து கோட்டையைஎன்னிடம் ஒப்புவிக்கும் பட்சத்தில் அங்கிருக்கும் வீரர்களுக்கும் விக்ரமனுக்கும் மன்னிப்புக் கிடைக்கும். இல்லையேல் இந்தக் கோட்டைச் சுவர்களின் கற்களை ஒவ்வொன்றாகப் பெயர்த்து எடுத்து, கோட்டைக்குள்ளிருக்கும் ஒவ்வொரு வீரன் தலையையும் வெட்டியெடுத்து வாயிலில் தோரணமாகக் கட்டிக் கழுகுகளுக்கு இரையாக்குவேன்'' என்றான்.

"வீரபாண்டியா! பழமொழிகளைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் உளறுகிறாய். வில்லம்பினும் சொல்லம்பு கூர் என்பது நல்ல பழமொழிதான். ஆனால், சொல்லம்பை வீரர்கள் யுத்தகளத்தில் நம்பியிருப்பதை நான் பார்த்ததில்லை. உன் சொல்லம்புகள் பிறரைக் கொல்ல முடியுமானால் நாங்கள் அனைவரும் இத்தனை நேரம் மடிந்து மண்ணாகப் போயிருப்போம். ஆனால் மடியவில்லை, பார்! எதையும் செய்கையில் காட்ட முயன்று பார், மன்னவா! நானும் உனக்குப் பதில் சொல்ல முடியும், சொற்களைக் கொண்டல்ல, அம்புகளைவீசி! சமயம் வரும் போது எங்கள் போர்க்கலங்கள் உன் வசைபாடுகளுக்கு மற்றொரு விதமான இசைபாடும். இறுதியாகச் சொல்லுகிறேன். கேள். மழவநாட்டு இளவரசியை நீ தொடுமுன்பு இங்குள்ள வீரர்களின் தலைகள் முதலில் உருண்டாக வேண்டும்'' என்றான் அபராஜிதன்,

''அப்படி உன்னிடம் எத்தனை வீரர்கள் இருக்கிறார்கள்?''

''பெண்பிடிக்க வந்திருக்கும் உன்னையும் உன் சகாக்களையும் அடித்து விரட்டப் போதுமான வீரர்கள் இருக்கிறார்கள்.''

''உன்னிடமிருப்பது ஐம்பது அறுபது வீரர்கள்தான் என்பதை நாம் அறிவோம். விக்ரமபாண்டியனின் கள்ளர்கள் இருபத்தைந்து பேர். மழவவீரர்கள் இருபத்தைந்து பேர் உன்னையும் அந்தச் சாமியாரையும் சேர்த்து ஐம்பத்திரண்டு. நான் இரண்டாயிரம் வீரர்களுடன் வந்திருக்கிறேன்'' என்று சொல்லி அபராஜிதனுக்குச் சற்றுத் தள்ளி நின்றிருந்த அடிகளாரைக் கையாலும் சுட்டிக் காட்டினான்.

இன்னும் வீரபாண்டியன் நம்மை மறக்கவில்லையென்பதை அவன் வாய்ப்படக் கேட்ட அடிகளாரும் சற்று நடுங்கினார். சில நாட்களுக்கு முன்பு, அவன் தனக்குச் சிவபதத்தைக் காட்டச் செய்த ஏற்பாடுகளை நினைத்த மீண்டும் போது அவர் சித்தம் பெரிதும் கலங்கலாயிற்று.

வீரபாண்டியனுக்கும் அபராஜிதனுக்கும் சம்பாஷணை நடக்கவே தம் பயத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு அடிகளார் சம்பாஷணையில் கவனம் செலுத்தலானார்.

''மன்னவா! உன் கணக்குப்படி என்னிடம் ஐம்பத்திரண்டு பேர்கள்தானே இருக்கிறார்கள். இதோ பார்', என்று சொல்லி, காரிக்காகத் திரும்பிய அபராஜிதன் ''நமது வீரர்களில் நூறு பேரை வரச்சொல்'' என்று உத்தரவிட்டான். அடுத்த விநாடி காரி போட்ட சத்தத்தால் கோட்டையின் பல பாகங்களிலும் காவல் புரிந்து கொண்டிருந்த வீரர்கள் தடதடவென அபராஜிதனிருந்த இடத்துக்கு வந்து குவிந்தனர். வந்தவர்களின் எண்ணிக்கையை வீரபாண்டியன் உணரும்பொருட்டு, பந்தங்களைத் தூக்கிப் பிடிக்க உத்தரவிட்ட அபராஜிதன் வீரபாண்டியனை நோக்கி மீண்டும் சொன்னான்: ''பாண்டிய மன்னனே! என் படையின் ஒரு சிறு பகுதியை எண்ணிப் பார். நூறு வீரர்களுக்குமேல் இருக்கிறார்கள். இதே மாதிரி நூற்றுக்கணக்கான பேர் கோட்டையின் ஒவ்வொரு பகுதியையும் காவல் புரிகிறார்கள். தரைப்படை தவிர குதிரைப்படையும் உள்ளே ஏராளமாக இருக்கிறது. வேல்களை ஆயிரக்கணக்கில் அடித்து வைத்திருக்கிறேன். விஷம் தீட்டப்பட்ட அம்புகள் வேறு ஏராளமாயிருக்கின்றன. எங்களிடமுள்ள உணவுப் பொருள்கள் இன்னும் இரண்டு வருஷ காலத்துக்கு வரும். ஆகையால் தவறான கணக்கிலும் வீண் நம்பிக்கையாலும் நிதானத்தை இழக்காத உன் சிங்களக் கூலிகளைக் கொண்டு சரியாகப் போரிடு'' என்றான்.

அபராஜிதன் பக்கத்தில் நின்றிருந்த கார்குழலி அவன் துணிச்சலையும் எதிரியைத் திணற வைக்கக்கூடிய சமயோசிதப் புத்தியையும் கண்டு பெரிதும் மகிழ்ந்தாள். இப்பேர்ப்பட்ட ஒரு வீரன் தன் வாழ்க்கையின் மிக நெருக்கடியான சந்தர்ப்பத்தில் கிடைத்தது தன் அதிர்ஷ்டமென்றே எண்ணினாள். அவளைப் போலவே மற்ற வீரர்

களும் அவனைப் பார்த்து ஆச்சரியப்பட்டு நின்ற அந்த சமயத்திலேயே விக்ரம பாண்டியன் புத்தி பலத்தால் பிடிக்கப்பட்டிருக்கிறான் அவன் வீரபாண்டியனின் ஒவ்வொர் அசைவையுமே கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்தான். வீரபாண்டியன் கோபம் எல்லை மீறி விட்டதையும் அதனால் குதிரை மீதே சிறிது சலனப்பட்டு அவன் அசைந்ததையும் கண்ட விக்ரம பாண்டியன் இதெல்லாம் எந்த அனர்த்தத்தில் கொண்டு போய்விடுமோ என்ற அச்சத்தால் அபராஜிதனை நோக்கி, "அவன் கோபத்தை விளைவிக்க வேண்டாதீர்கள் வீரபாண்டியனை நான் நன்றாக அறிவேன்" என்றான்.

இந்த எச்சரிக்கையின் காரணமாக விக்ரம பாண்டியனுக்காகத் திரும்பிய அபராஜிதன், "உங்களைவிட வீரபாண்டியனை நான் நன்றாக அறிவேன்" என்று பதில் சொல்லிவிட்டு வீரபாண்டியனை மீண்டும் நோக்கி, "மன்னவா! நீ போய் வரலாம். இனிப் பேசவேண்டியது எதுவுமில்லை. ஒரே ஒரு விஷயம் மாத்திரம் சொல்கிறேன். இந்தக் கன்னிமாடத்தைக் காக்க இதோ உன் கண்ணில் படும் நூறு வீரர்களே போதும். சிறுபடையை வைத்து நீண்ட காலம் முற்றுகையைச் சமாளிக்கும் முறையில் இக்கோட்டை அமைக்கப்பட்டிருக்கிறது. கோட்டைச் சுவர்களிலுள்ள வளைவுக் கூடுகளைப் பார். ஒவ்வொரு கூட்டிலும் செய்யப்பட்டிருக்கும் துவாரங்கள் மூலம் மறைவிலிருந்தே அம்புகளை எய்யலாம். ஆகவே உன் வீரர்களைக் காட்டுக்குள்ளேயே நிறுத்திவை. எவனாவது காட்டு முகப்பில் தலையை நீட்டும் பக்ஷத்தில் உடனே அம்பு பாய்ந்து மாள்வது நிச்சயம். இதை நினைவில் வைத்துக்கொள் போய் வா மன்னவா. இனி யார் வெற்றி பெறுவார்கள் என்பது விதியின் கையில் இருக்கிறது" என்றான்.

வீரபாண்டியன் சலனமான தன் கண்களால் கோட்டையை ஒருமுறை அளவிட்டான். பிறகு வீரர் கூட்டத்தை நோக்கினான். "ஐம்பது வீரர்களுக்குமேல்

[illegible]மென்று மழவராயன் சொன்னானே! எது [illegible] வீரர்கள்!" என்று சிந்தித்தான். கவசமணிந்த கோட்டைக் காவலன் யார் என்பதை ஆராயப் பார்த்து, [illegible] ஒரு முறை கோபப் பெருமூச்சு விட்டான். [illegible]யாக அபராஜிதனை ஏறெடுத்துப் பார்த்து, "டேய் [illegible] படியாதத்தால் இந்தக் கோட்டையிலுள்ளவர்கள் [illegible] நினைத்தால் அது அவர்கள் பொறுப்பு. ஆனால், அப்படிச் சாக இஷ்டப்படாமல் சரணடைய இஷ்டப்பட்டால் அவர்களுக்கு யாதொரு தீங்கும் வராது என்று [illegible] மீனாட்சியின் மீது ஆணையிடுகிறேன். இந்த மாதிரிப் பேச்சுக்கு தூதுவரைத்தான் அனுப்புவது வழக்கம்! [illegible] மனம் புண்படக்கூடாது என்ற உத்தேசத்தாலும் உன்னைப் போன்றவர் பேச்சைக் கேட்டு அனாவசியமாகப் பலபேர் மடிய வேண்டாம் என்ற [illegible]யாதுமே நானே பேச வந்தேன். இனி உங்கள் இஷ்டம். ஏதாவது என்னுடன் பேச வேண்டியிருந்தால், உங்களுக்கும் புத்தி சரியானபடி வேலை செய்து சரணடைய இச்சையிருந்தால் ஓலையை எழுதி அம்பில் கட்டி என் பாசறைக்காக எய்தால் போதும்" என்று சொல்லிவிட்டுக் குதிரையைச் சரேலெனத் திருப்பிக்கொண்டு காட்டுக்குள் மறைந்தான். முரசறைவிப்பவனும் அவனைப் பின்தொடர்ந்தான்.

அவர்கள் கண்ணுக்கு மறைந்ததும் காரி பெரிதாக நகைத்து, "பிரபு! வீரபாண்டியன் கண்ணில் நன்றாக மண்ணைத் தூவி விட்டீர்களே" என்றான்.

"நூறு வீரர்களைக் காட்டி அவனைப் பயமுறுத்தி விட்டீர்களே பிரபு!" என்று மார்க்கியனும் சிரித்தான்.

ஏதோ தானும் பேசியாக வேண்டுமென்பதற்காக "மீதி ஐம்பது பேரை ஏன் அவனிடம் காட்டவில்லை?" என்று விக்ரமபாண்டியன் கேட்டான்.

"காட்டவேண்டிய அவசியமில்லை. ஐம்பது பேர் கோட்டைக்குள்ளிருப்பதாக அவனுக்கு மழவராயன் [illegible] கொடுத்திருக்கிறான். அந்தத் தைரியத்தில்தான்

வீரபாண்டியன் முற்றுகைக்கு வந்திருக்கிறான். நூறு பேரைப் பார்த்ததும் அவனுக்கு இங்குள்ள வீரர் களின் எண்ணிக்கையைப் பற்றிச் சந்தேகமுண்டாகும் என்ற அபராஜிதனை நோக்கி, ''சந்தேகமுண்டானால்...'' என்று வினவினான் விக்ரமபாண்டியன்.

''அந்தச் சந்தேகம் நமக்குப் பாதுகாப்பு. வீரர்கள் தொகை தெரியும் வரையில் நமது பலாபலம் வீரபாண்டி யனுக்குத் தெரியாது. அது தெரியும் வரையில் அவன் கோட்டையைத் தாக்கமாட்டான். கோட்டையைச் சுற்றி முற்றுகையிட்டு நம்மைப் பட்டினி போட்டுப் 'பணிய வைக்கப் பார்ப்பான். அல்லது நாம் சற்று அசந்திருக்கும் நேரமாகப் பார்த்துத் தாக்க முயல்வான். உடனடியாக நடவடிக்கை மட்டும் ஏதுமிருக்காது' என்று விளக்கினான் அபராஜிதன்.

அத்துடன் அவனுடன் பேச்சை முடித்துக்கொண்ட பாண்டிய சேனாதிபதி அடிகளாரை நோக்கி, ''அடிகளாரே! இளவரசியை அவர்கள் இருப்பிடத்துக்கு அழைத்துப் போங்கள். நானும் காரியும் சென்று கோட்டைக் காவலைச் சோதிக்கிறோம்'' என்று கூறி விட்டுக் கார்குழலியைப் பார்த்து, ''இளவரசி! உங்கள் இருப்பிடத்தின் மாடியறைகளிலிருந்து யாரும் எட்டிப் பார்க்க வேண்டாம். உங்கள் தோழிகளை நன்றாக எச்சரித்து வையுங்கள். என் ஊகம் சரியாயிருந்தால் இன்று மாலைக்குள் எதிர்கள் காட்டுக்குச் சென்று உள் புறத்தில் பாசறைகளை அமைத்துத் தங்குவார்கள். உண்மை. அபாயம் நாளையப் பகல் முதலே துவங்கி விடும். சிங்களத்து வில்லவர்கள் குறி தவறாதவர்கள். யார் தலை தெரிந்தாலும் அம்பெய்து கொன்றுவிடு வார்கள்' என்று எச்சரித்தான்.

''பிரபு! வீரபாண்டியன் சிங்களப் படையைத்தான் கொண்டு வந்திருக்கிறானென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று கார்குழலி வினவினாள்.

''பாண்டியப்படைகளை அவன் கொண்டு வர முடியாது.''

''ஏன்?''

''வீரபாண்டியன் தாயாதியான விக்ரம பாண்டியன் நம்முடனிருக்கிறான். வீரபாண்டியன் சிம்மாசனத்துக்கு விக்ரமபாண்டியன் போட்டியாக நிற்கிறானென்பது பாண்டிய வீரர்களுக்குத் தெரியும். பாண்டிய வீரர்களுக்குத் தன்னிடம் எந்தவிதப் பக்தியும் கிடையாதென்பது வீர பாண்டியனுக்கும் தெரியும். பாண்டிய வீரர்களை அழைத்து வந்து விக்ரம பாண்டியனைக் கண்டதும் அவர்கள் ராஜபக்தி எதிரிபக்கம் சாய்ந்தால் தன் கதி அதோகதி ஆகிவிடும் என்பதை வீரபாண்டியன் அறிவான். அவன் அறிந்தாலும் அறியாவிட்டாலும் சிங்களத்து சேனாதிபதியான இலங்காபுரத் தண்டநாயகன் அறிவான். ஆகவே பாண்டிய வீரர்களை வீரபாண்டியன் அழைத்துச் செல்வதற்கு அவன் ஒருநாளும் சம்மதிக்க மாட்டான்.

கார்குழலி புரிந்துகொண்டாள்; அபராஜிதன் அரசியல் ஞானத்தின் ஆழத்தைப் புரிந்து கொண்டாள். விஷயங்களை அவன் அலசிப்பார்க்கும் அழகை நினைத்து நினைத்து வியந்தாள். இப்பேர்ப்பட்டவன் தன் பெயரை மாத்திரம் சொல்ல மறுக்கிறானே என்ற விசனத்தால் மெல்லப் பெருமூச்சும் எறிந்தாள். ஏதோ நினைப்புகள் மனத்தைச் சூழ்ந்துகொள்ளவே சம்பாஷணையை அத்துடன் அறுத்துக்கொண்டு தன் இருப்பிடத்தை நோக்கி மெல்ல நடந்தாள். அவளைத் தொடர்ந்து விக்ரமபாண்டியனும் நடந்தான். ஆனால் அவன் மனதில் எண்ணங்கள் எழுந்து வேறு திக்கில் ஓடிக்கொண்டிருந்தன. எதிரேயிருந்த வீரபாண்டியன் படைபலத்தையும் அதனால் ஏற்படக்கூடிய விபரீதத்தையும் எண்ணிப்பார்த்தான். அத்துடன் ஒவ்வொரு விநாடியும் கார்குழலிக்குப் புதிதாக வந்து முளைத்த அபராஜிதன்மீது மதிப்பும் அன்பும்

அறிகப்படுவதையும் சிந்தித்து சிந்தித்து ஏங்கினான். அந்தச் சிந்தனைகளை ஏந்தி நடந்து அறைக்குள் சென்று கவசங்களைக் களைந்த பின்பும் கவலை அவன் மனத்தை வாட்டி நின்றது. தன் எண்ணத்தில் மண் விழுவதை நினைந்து நினைந்து வருந்திய அவன் உள்ளத்தில் மறு நாள் பொழுது புலர்ந்த பின்பும் பொழுதுபோன பின்பும் கூட ஒரு நிம்மதி ஏற்படவில்லை.

பகல் பூராவும் மாடியறையில் நின்று எதிரேயிருந்த காட்டைக் கவனித்துக் கொண்டிருந்தான். நாட்டுக்கு அப்புறத்தே உள்ள சிங்களப் படைகள் ஆயுத வாகனங்கள் உட்புகுவதற்காகக் காட்டையறுத்துப் பாதைபோட முற்பட்டதால், வெட்டிமுறித்த மரங்கள் தடால் தடாலென்று விழும் சப்தம் காதைப் பிளந்தது. காட்டுக்குள் மூன்று பாதைகளை அமைத்த வீரபாண்டியன் காட்டு முகப்புக்கு வண்டிகளைக் கொண்டுவராமல் பக்கத்து மரங்களின் மறைவில் படைகளை நிறுத்தினான். இடையே மரங்கள் அடர்த்தியாக இருந்த இடத்தில் தன் கூடாரத்தை அமைத்துக்கொண்டான். இரவில் வீரபாண்டியன் பாசறைப் பந்தங்களின் வெளிச்சத்தில் மின்னியது. அதே இரவில் என்ன செய்வதென்று புரியாமல் ஏதோ யோசித்த வண்ணம் கன்னிமாடத்தின் புறாக் கூண்டுகளுக்குச் செல்லும் மாடிப்படிகளில் ஏறி உச்சிக்கூண்டை அடைந்து எதிர்ப் பாசறையைக் கவனித்த விக்ரம பாண்டியனுக்கு ஒரு விபரீத யோசனை உதயமாயிற்று. ஒரு வினாடி ஏதோ யோசித்த விக்ரம பாண்டியன் விடுவிடு என்று கீழே ஓடிச் சென்று வில்லும் கையுமாகத் திரும்பி மீண்டும் உச்சிக்கு வந்தான். வந்ததும் அப்புறமும் இப்புறமும் பார்த்து விட்டு மடியிலிருந்த ஓர் ஓலையை எடுத்து அம்பில் மாட்டி வில்லில் அம்பைப் பொருத்தி நாணை இழுத்து வீரபாண்டியன் கூடாரத்துக்காகக் குறிவைத்து வானில் பறக்க விட்டான்.

48. கசங்கிய ஓலை!

கன்னிமாடத்தைச் சூழ்ந்து நின்ற காடு, வீரபாண்டியன் படைகளின் பாசறைப் பந்தங்களால் நல்ல வெளிச்சத்தைப் பெற்றிருந்தாலும், மரங்கள் இருந்த அடர்த்தியின் காரணமாக வெளிச்சத்தை அதிகமாக வெளியே வீசாமலும் பாசறைகள் அமைக்கப்பட்டிருந்த இடங்களை எதிர்க்குக் காட்டிக் கொடுக்காமலும் பாதுகாப்புச் செய்து கொண்டிருந்தது. அவ்வப்பொழுது எண்ணெய் ஊற்றப் பட்டதால் நல்ல ஜ்வாலையைப் பெற்ற பந்தங்கள் மட்டும் அடிக்கடி கட்டுப்பாட்டைச் சிறிதே குலைத்து, மரங்கள் அசைந்ததால் ஏற்பட்ட காற்றில் அலைந்து அலைந்து ஜ்வாலையைப் பெருக்கிக்கொண்டு கூண்டிலிருந்து தலை நீட்டும் பறவை இனங்களைப் போல, சரேல் சரேலென்று தங்கள் தீத் தலைகளை எழுப்பி எழுப்பிக் கன்னி மாடத்தில் உள்ளவர்களுக்குத் தாங்கள் சிறைப்பட்டுக் கிடக்கும் செய்தியை அறிவித்துக் கொண்டிருந்தன. இவற்றின் விஷம சுபாவத்தை அறிந்த சிங்களப் படைவீரர் பந்தங்களைச் சுற்றிலுமிருந்த கொடிகளையும் மரக்கிளைகளையும் கழித்துப் போட்டு இலை பக்கவாட்டுகளில் எதையும் தொட இடமின்றிச் செய்து கொண்டிருந்தனர். நன்றாகக் கட்டப்பட்ட மூன்று வேல்களுக்கிடையிலும் மரத்தின் சில பெரிய கிளைகளிலும் ஆங்காங்கு செருகப் பட்டிருந்த பந்தங்கள் அடிக்கடி ஒன்றின் பக்கமாக மற்றொன்று சாய்ந்து யாருக்கும் புரியாத ஜாடைகளைச் செய்து கொண்டிருந்தன. சரியான இருட்டில் வெளியே உலாவும் விஷ ஜந்துக்கள் கூட வெளிச்சத்தாலும் வீரர்களின் நடமாட்டத்தாலும் பயந்து தங்கள் பாழிகளுக்குள்ளிருந்து புறத்தே தலையை நீட்டாமல் பதுங்கிக்கிடந்தன. காட்டில் ஒவ்வொரு மூலையிலிருந்த புற்றுகளிலிருந்து சர்ப்பங்கள் சற்று நேரம் வெளியே வந்து படமெடுத்து நின்று உள்ள நிலைமையை அறிந்து திரும்பவும் சர்ரென்று வாலை வளையவிட்டு பிலத்வாரங்களில் நுழைந்

விட்டன. மரக்கிளைகளிலேயே வாழும் பச்சை ஓணான்கள் தாங்கள் இருப்பது தெரியாமல் மூச்சுக்கூட விடாமல் மரத்தோடு மரமாக ஒட்டிக் கிடந்தன. எங்கும் நல்ல இருளும் வெளிச்சமும் கலந்திருந்ததால் காட்டு மரங்களின் பெரிய கிளைகள் ஆங்காங்கு நீண்ட நிழல்களைப் பாய்ச்சி, தப்பித் தவறி வெளியே வந்துவிட்ட வனம்வாழ் பிராணிகளுக்குப் புகலிடம் அளித்துக்கொண்டிருந்தன. ஆங்காங்கு பந்தங்களிலிருந்து வீசிக் கொண்டிருந்த வெளிச்சம் சிங்கள வீரர்கள் பகடையாட உதவிக்கொண்டிருந்தது. வீரபாண்டியன் கொடுமைக்கு அஞ்சி எந்தப் பிராணியும் காட்டில்கூடத் தலைநீட்டப் பயப்பட்ட அந்த இரவில் நரிகள் மட்டும் எந்தவித அச்சமும் கொள்ளாமல் பலமாக ஊளையிடத் தொடங்கி, இரவின் தன்மையை மிகப் பயங்கரமாக அடித்துக் கொண்டிருந்தன.

இத்தகைய வனப் பிரதேசத்தின் நடுப் பகுதியில் கன்னிமாடக் கோட்டை வாசலுக்கு நேர் எதிர்த் திக்கில் கூடாரத்தை அமைத்துத் தங்கியிருந்த வீரபாண்டியன் அன்றைய நிகழ்ச்சிகளால் ஆத்திரமும் வேதனையும் கலந்த உள்ளத்துடன் தன் மலரணையில் மல்லாந்து கிடந்தான். சிந்தனையில் திரும்பத் திரும்பத் தோன்றிய அந்தக் கவசமணிந்த வீரனின் உருவத்தைப் பார்க்கப் பார்க்க, அவன் பேசிய மொழிகள், வீசிய வசைக்கோவைகள் இவை திரும்பத் திரும்பக் காதுகளில் ஒலிக்க ஒலிக்க, வீரபாண்டியன் நிதானத்தை அடியோடு கைவிட்டவனாய்ச் சிறிது நேரம் படுக்கையில் புரளுவதும், சிறிது நேரம் அசையாமல் படுப்பதுமாக சித்திரவதைக்குள்ளாகிக் கொண்டிருந்தான். கவசமணிந்த வீரன் நின்ற நிலை, அவன் பேசிய முறை, அவன் கைகளை வீசிய பாணி இவையனைத்தையும் எங்கோ பார்த்திருப்பது போன்ற உணர்ச்சி, வீரபாண்டியனுக்கு ஏற்பட்டிருந்தாலும் எங்கே பார்த்தோம் என்பதை நிர்ணயிக்க முடியாதவனாகத் திண்டாடினான். தன்னை எதிர்த்து அவ்வளவு தைரியமாகப் பேசக்கூடியவர்கள் தமிழ்நாட்டில் யாராயிருக்க முடியும் என்ற கணக்கையும் போட்டுப்பார்த்து ஒவ்வொருவராக விலக்கிவந்து கடைசியில் சூன்யமாகிவிட்ட எண்ணிக்கையில் ஏதுமறியாமல் ஏங்கினான் வீரபாண்டியன். வீரனின் அடையாளத்தைக் கண்டுபிடிக்கும் முயற்சி தோல்வி அடையவே கோட்டையின் படைபலத்தைப் பற்றிச் சிந்திக்கலானான். மொத்தம் ஐம்பது வீரர்கள் இருப்பதாகத்தானே மழவராயன் சொன்னான். கண்கூடாக வீரர்களைப் பார்த்தோமே, இந்த அதிகப்படி வீரர்கள் யார்? மொத்தம் எத்தனை பேர் இருக்கிறார்கள்? நம் படைகளைச் சமாளிக்கப் போதுமான வீரர்கள் இருப்பார்களா? அப்படியிருந்தால் இன்னும் படைகளை நாம் மதுரையிலிருந்து வரவழைக்கவேண்டாமா? மதுரையிலிருந்து இனி வீரர்களை வரவழைப்பது முடியாத காரியமாயிற்றே. இரண்டாயிரம் வீரர்களை அனுப்புவதற்கே இலங்காபுரன் ஆட்சேபித்தானே. இனியும் அதிகப்படி வீரர்களைக் கேட்டால் அனுப்ப மறுப்பது திண்ணமாயிற்றே. எந்த நிமிஷத்திலும் சோழப் பேரரசின் படையெடுப்பை எதிர்பார்த்து நிற்கும் மதுரையைப் பாதுகாப்பதைவிடக் கன்னிமாடப் பெண் கோட்டை 'அவ்வளவு அவசியமல்லவென்று இலங்காபுரனும் நினைத்தால் அதிலும் தவறில்லையே! அப்படி இலங்காபுரன் உதவி அனுப்பாமல் அழைத்து வந்திருக்கிற படையும் கன்னி மாடத்தை வீழ்த்தப் போதாமல் தான் திரும்ப நேரிட்டால் மழவ நாடும் பாண்டிய நாடும், ஏன் உலகமே கைகொட்டிச் சிரிக்குமே' என்று இப்படிப் பலவாறாக யோசித்துக் கடைசியாக எழுந்த யோசனையின் விளைவாக மனத்தில் புகுந்த திகிலால் திண்டாடிய வீரபாண்டியனுக்கு ஆறுதலளிக்கும் தூதன்போல் விக்ரம பாண்டியன் விடுத்த வாளி கூடாரத்தின் உச்சியில் சர்ரென்று பாய்ந்து நின்றது.

அம்பின் பாய்ச்சலால் சிந்தனை கிளம்பிய வம்பின் சிக்கலிலிருந்து விடுதலை அடைந்த வீரபாண்டியன்

மஞ்சத்திலிருந்து துள்ளி எழுந்து கூடாரத்தைவிட்டு வெளியே ஓடி வந்தான். மன்னன் வருமுன்பே அங்கு பாய்ந்து கூடாரத்தின் சேதத்தையும் பார்த்துவிட்ட காவலாளிகளும் [illegible] கூடாரத்தின் முன்பாகக் கட்டப் பட்ட ஒருவனைப் பக்கத்திலிருந்த மரத்திலேயே கட்டி கூடாரத்தின் உச்சியிலிருந்த அம்பைப் பிடுங்கி எடுக்க வச் செய்தார்கள். பந்தம் காட்டி அம்பைச் சோதித்த வீரபாண்டியன் அதன் உடலில் ஓர் ஓலையும் கட்டப் பட்டிருப்பதைப் பார்த்து அதை அவிழ்த்து எடுத்துப் படிக்க ஆரம்பித்தான். படிக்கப் படிக்க பாண்டிய மன்னன் முகத்தில் மகிழ்ச்சி ஏறுவதையும் சாதாரணமாக சனைத்தால் நடுக்கும் அவன் இதழ்களில் புன்முறுவல் படருவதையும் கண்ட சிங்கள வீரர்கள், செய்தி என்னவாயிருக்கும் என்று யோசித்துக் கொண்டு நின்றனர். ஓலையைப் படித்த மன்னர் வீரர்களைத் திரும்பிப் பார்க்காமலும் ஒரு வார்த்தைகூட அவர்களுக்கு விளக்கம் சொல்லாமலும் விரைவாகக் கூடாரத்துக்குச் சென்று அங்கிருந்த விளக்கில் ஓலையை மீண்டும் கவனமாகப் படித்தான். கடிதத்தில் அவன் கண்டது இதுதான்:

“வீரபாண்டியா! நீயும் நானும் குடும்ப வைரிகள். பாண்டியநாட்டு அரியணைக்காகவும் போராடுகிறோம். ஆனால் நாமிருவரும் நமது குலப்பெருமையை முன்னிட்டு ஒன்றுசேரவேண்டிய அவசியம் இப்பொழுது ஏற்பட்டிருக் கிறது. மழவநாட்டு இளவரசி கார்குழலிக்காக நீ இந்த முற்றுகையில் இறங்கி இருக்கிறாய். உன்னிடமிருந்து தப்புவிக்க அவளை நான் இங்குக் கடத்திக்கொண்டு வந் தேன். ஆனால் நாம் இருவரும் ஏமாறப் போகிறோம். வேறு இடத்தில் அவள் மனம் லயித்திருக்கிறது. உன்னைப் பார்த்து இன்று வசைமொழிகள் பேசினானே அவன்தான் அவள் ஆசைநாயகன். பாண்டிய மன்னர் குலத்தில் பிறந்த இருவருக்கும் இழிவுதேடப் பாமரன் ஒருவன் நாடும் பாவையையும், அவளுடன் சேர்த்தொழிக்க

...நாத்துக் கட்டுவது நம் குலப்பெருமைக்கு இன்றியமை யாதது. நீ விட்டும் நான் தப்பிச்செல்ல அனுமதி அளிப்ப தானால் இந்தக் கோட்டை வாயிலை உன் படைகளுக்கு இரகசியமாகத் திறந்துவிட என்னால் முடியும். இதற்கு உன் நிபந்தனைகள் என்ன? தெளிவாக எழுதி ஓலையை அம்பில் கட்டிக் கன்னி மாடத்தின் உச்சிக் கூண்டின் மாடத்துக்காக எய்துவிடு.”

—விக்ரம பாண்டியன்

ஓலையின் செய்தியைப் படித்த வீரபாண்டியன் பெரும் உவகை எய்தினாலும் ஓரளவு சந்தேகம் கொண் டான். இத்தனை எழுதியவன் கோட்டையின் படை பலத்தைப்பற்றி ஒரு வரி கூட எழுதாததைக் கவனித்த வீரபாண்டியன், ‘இந்த விக்ரம பாண்டியனை நம்பலாமா கூடாதா?’ என்ற தயக்கங்கொண்டு சிறிதுநேரம் சிந்தனை யில் ஆழ்ந்தான். ஏதோ யோசனை திடீரென மனத்தில் உதயமாகவே மீண்டும் அவசரமாகக் கடிதத்தைப் படித் தவன் சற்று நின்ற இடத்திலேயே தன்னாடிக் கூடாரத் தனையப் பிடித்து நிதானித்துக் கொண்டான். ‘சந் தேகமேயில்லை, சந்தேகமேயில்லை’ என்று வெறி பிடித்த வன்போல் உளறிய பாண்டிய மன்னன் முகத்தில் பயமும் ஆச்சரியமும் கலந்த ரேகை ஒன்று படரத் தொடங்கியது. ஓலையை மீண்டும் பிரித்து, “வேறோர் இடத்தில் அவள் மனம் லயித்திருக்கிறது. உன்னைப் பார்த்து இன்று வசை மொழிகள் பேசினானே அவன்தான் அவள் ஆசை நாயகன்” என்று திரும்பத் திரும்பக் கடிதத்திலிருந்த வாக் கியத்தைச் சொல்லிக் கொண்டான். கார்குழலியின் மனம் லயித்திருக்கிற இடம் எது என்பதைத்தான் அவனிடம் [illegible] சிக்கிய அடிகளார் உளறியிருக்கிறாரே!

தன்னை எதிர்த்து வசைமொழிகளை வீசிய வீரனின் இரும்புக்கவசங்களை நொடிப்பொழுதில் நெரித்துக்காட்டிய அந்த இரண்டு வரிகளால் கோட்டைப் பாதுகாப்பை ஏற்றிருப்பவன் தன் சேனாதிபதி அபராஜிதன்தான் என்

யதைச் சந்தேகமற அறிந்துகொண்ட வீரபாண்டியன் எந்த நேரிட்ட எதிர்ப்பைத் தான் சமாளிக்க நேர்ந்திருக்கும் என்பதை நினைத்துப் பிரமித்துப் போனான். ராஜசிம் [illegible] என்று பெயர் வாங்கிய சேனாதிபதி தன் காதலுக்கு மட்டுமின்றித் தன் நற்பெயருக்கும் எமனாக வந்து சேர்ந்தானே என்ற நினைப்பால், ஏனைய கோபமும் ஏற்பட்ட பாண்டிய மன்னனுக்கு, இந்த இக்கட்டிலிருந்து எப்படித் தப்பப் போகிறோம் என்று சிந்தித்த அவன் உள்ளத்துக்கு விக்கிரம பாண்டியன் ஓலை சாந்தியை அளித்தது. இத்தகைய கருநாகத்தை எதிரிக் கோட்டைக்குள் புகவிட்ட சொக்கப் பெருமானாகத்தான் இருக்கவேண்டும் என்பதும், தனக்காகவே அவர் தமது நாகங்களிலொன்றை நியோகம் செய்து மனித உருவம் கொடுத்து விக்ரம பாண்டியன் ரூபத்தில் கோட்டைக்குள் அனுப்பியிருக்கிறாரென்பதிலும் சிறிதும் சந்தேகம் கொள்ளாத வீரபாண்டியன், சொக்கப் பெருமானையும் தேவி மீனாட்சியையும் ஒருகணம் தியானித்துவிட்டுப் பதில் ஓலையொன்றைச் சரசரவென்று எழுதி எடுத்துக்கொண்டு கூடாரத்துக்கு வெளியே வந்து "டேய் யாரங்கே" என்று கூச்சலிட்டான்.

மன்னன் கூச்சல் கேட்டு [illegible] கூடாரத்துக்கருகே மீண்டும் மண்டியிட்ட வீரர்களைச் சுற்றி நோக்கிய வீரபாண்டியன், "உங்கள் ஒருவரிடமும் வில் இல்லையா? இங்கு என்ன பூப்பறிக்கவா வந்திருக்கிறீர்கள்" என்று சீறி விழுந்தான். "இதோ வில் இருக்கிறது மன்னா" என்று வில்லுடன் வந்த வீரனிடம் ஓலையைக் கொடுத்து "இதை அம்பில் கட்டி அதோ இருக்கும் கன்னிமாடச் சாளரத்துக்காக எய்துவிடு. குறி தவறாதே. தவறினால் உன் தலை உடலில் தங்காது" என்று இடியென வார்த்தைகளை உதிர்த்தான். [illegible] வில்லாளியும் மிகுந்த எச்சரிக்கையுடன் அம்பில் ஓலையைக் கட்டி, வில்லில் பொருத்திச் சாளரத்துக்குக் குறி வைத்தான்.

அம்பு வரும் என்ற நிச்சயத்தால் [illegible] கதவைச் சாத்திக்கொண்டு சாளரத்தின் பக்கலில் மறைந்து நின்ற விக்கிரம பாண்டியன் அம்பு அறைக்குள் வந்து விழுந்ததும் அதை அவசர அவசரமாக எடுத்துப் படித்தான். படித்ததும் ஆனந்தத்தால் ஒரு கணம் சுவரில் சாய்ந்துகொண்டு [illegible] செய்தான். வீரபாண்டியன் பின்வருமாறு எழுதியிருந்தான்:

"விக்கிரமா! குலப்பெருமையை முன்னிட்டு கன்னி மாடத்தைத் திறந்துவிட நீ ஒப்புக்கொண்டது பற்றி நானும் மகிழ்ச்சியடைகிறேன். சுயநலத்திலும் ரத்த பாசம் வலிது என்பதையே உன் கடிதம் வலியுறுத்துகிறது. பாண்டியர்கள் மரபின் பேரில், தேவி மீனாட்சியின் பேரில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன். கேள்: கன்னிமாடத்தை நீ என்னிடம் ஒப்படைத்தால் உனக்கும் உன் சகாக்களுக்கும் எந்தவிதத் தீங்கும் நேரிடாமல் பார்த்துக் கொள்கிறேன். நீ உன் தந்தையிடம் க்ஷேமமாகப் போய்ச் சேர நானே வழி செய்வதன்றி உனக்கு இரண்டு லக்ஷம் பொற்காசுகளும் தருகிறேன். பணத்தினால் உன் மனத்தைத் திருப்ப அல்ல. பின்னால் எனக்கு எதிராகப் படை திரட்ட உனக்கு அது உதவும். பின்னால் நாம் எதிரிகளாகப் போர்க்களத்தில் சந்திப்போம். ஆனால் குலப்பெருமைக்கு இழுக்கு விளைவிக்கும் இந்தக் கன்னிமாட சகாப்தம் சம்பந்தப்பட்டவரை நாம் உறவினர் நண்பர்."

—வீரபாண்டியன்

இந்தச் செய்தியை இருமுறை படித்த விக்கிரமபாண்டியன், கையில் ஓலையைக் கசக்கிய வண்ணம் அறைக்குள் [illegible] உலாவி அம்பு வந்த சாளரத்திற்கு எதிர்ச் சாளரத்தில் சாய்ந்து அறைக் கதவுக்கு முதுகைக் காட்டிய வண்ணம் ஏதோ யோசித்தான். யோசித்துக் கடைசியாக ஒருமுடிவுக்கு வந்தவன் இதழ்களில் புன்முறுவலை நன்றாகப் படரவிட்டுக்கொண்டு கீழே இறங்கிச் செல்லக் கதவைத் திருப்பினான். திரும்பியவன் திரும்பியபடியும் கை கால் ஆடாமலும் சிலையென நின்றுவிட்டான். உதட்டில்

எழுந்த புன்முறுவல் கன்னிமைக்கும் நோக்கில் மறைந்தது. முகம் வெளுத்தது. அவன் லலாடப் பிரதேசம் வேர்வை கொள்ள ஆரம்பித்தது. பிரமிப்பாலும் பயத்தாலும் கண்கள் கலக்கப்பட்டுத் திண்டாடின. அவனுக்கு எதிரே அடிகளார் நின்றுகொண்டிருந்தார்.

அவர் எவ்வளவு நேரம் அந்த இரவின் நிகழ்ச்சிகளைப் பார்த்திருப்பாரோ என்று திண்டாடிய விக்கிரமபாண்டியனை ஒருகணம் உற்றுப் பார்த்த அடிகளார், தமது இயற்கையான பாணியில் பேசத் தொடங்கி, "தாங்களும் என் நிலைக்கு வந்து விட்ட மாதிரி இருக்கிறது..." என்றார்.

விக்கிரம பாண்டியன் அவர் உள்ளத்தில் ஓடிய உணர்ச்சிகளை ஆராயப் பார்த்தான். அதில் பலன் கிடைக்காது போகவே, "நீங்கள் சொல்வது புரியவில்லை" என்று அவர் கேள்விக்குப் பதில் சொன்னான்.

"ஏன் புரியவில்லை! என் நிலை என்ன என்று புரிந்ததா இல்லையோ?"

"என்ன நிலை?"

"நான் தற்சமயம் இருக்கும் ஆசிரமம்?"

"இந்தத் துறவி வேஷத்தைப் பற்றிச் சொல்கிறீரா?"

தம் துறவி நிலையை விக்கிரம பாண்டியன் வேஷமென்று சொன்னதால் அடிகளார் ஆத்திரமேதும் கொள்ளவில்லை. அவர் விஷயத்துக்கு அவன் பேச்சு தூபம் போட்டது. ஆகவே அவர் சொன்னார்: "விக்கிரமா, நாம் எல்லோரும் வேஷம் தாம் போடுகிறோம்" என்று.

"எல்லோருமா?"

"ஆம். நீயே சொல்லி விட்டாய். நான் துறவி வேஷம் போடுகிறேனென்று. நீயோ வீரன் போல் வேஷம் போடுகிறாய். கோட்டைக் காவலன் இருக்கிறாரே அவர், பெயரைச் சொல்லாமலே நாடோடி போல் வேஷம் போடுகிறார். இதெல்லாம் வேஷம் போட வேண்டிய காலம் விக்கிரமா! இதை உன்னைவிட நன்றாகப் புரிந்து கொண்டவர்கள் இருக்க முடியாது."

விக்கிரம பாண்டியன் பதிலேதும் சொல்லாமல் அடிகளாரை உற்றுப் பார்த்தான். அவர் பேசுவதில் உள்ளர்த்தங்கள் பல இருக்கின்றனவென்று தெரிந்துகொண்டானே தவிர என்னென்ன அர்த்தங்கள் வைத்துப் பேசுகிறார் என்பது மட்டும் அவனுக்குப் புலப்படாததால், "உமது நிலைக்கு நான் வந்துவிட்டேனென்று சொன்னீரே, அதற்கு என்ன அர்த்தம்?" என்றான்.

"இந்த இடம், அதாவது இந்தக் கூண்டு எதற்கு உபயோகப்படுவது தெரியுமா?"

"சொல்லும்."

"இங்குதான் நான் இறைவனை நினைத்து ஜபம் செய்கிற வழக்கம்."

"உம்..."

"வேறு யாரும் இங்கு வருவது கிடையாது. சாதாரணமாக மூடியே இருக்கும்."

"ஓகோ..."

"அப்படியிருக்க நீ மட்டும் இந்த இடத்திற்கு, அதுவும் இராக் காலத்தில் இப்படி வரவேண்டிய அவசியமென்ன என்பது இந்தச் சிற்றறிவாளனுக்குப் புரியவில்லை. ஒருவேளை நீ போடும் பல வேஷங்களில் துறவி வேஷமும் ஒன்றோ?" என்று வினவிய அடிகளாரின் உதடுகள் இகழ்ச்சிக்கு அறிகுறியாக ஒரு பக்கமாக சுழிபட்டன.

"அடிகளாரே! நீர் அத்துமீறிப் பேசுகிறீர்..." என்றான் விக்கிரமபாண்டியன்.

"விக்கிரமா! அத்து மீறியது நீ. இது என் தியானத்துக்கான இடம்."

"வேறொருவரும் வரக்கூடாதா?"

"வரக்கூடாது என்பது மழவராயன் கட்டளை."

"இப்பொழுது மழவராயன் கட்டளைக்கு உட்பட்டா இங்கு ஓடி வந்திருக்கிறோம்?"

"இல்லை. ஆனால தற்சமயமிருக்கும் கோட்டைக் காவலன்கூட மழவராயன் உத்தரவை மாற்றவில்லை."

"இதென்ன அப்பேர்ப்பட்ட பிரமாதமான இடம்?"

"பிரமாதமாக இல்லாவிட்டால் தாங்கள் இத்தனை படிகளையும் ஏறி இங்கு விஜயம் செய்யக் காரணம்? அதுவும் போஜனம் கூடச் செய்யாமல்...."

விக்ரம பாண்டியனுக்கு மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியாததால் மென்று விழுங்கினான். அடிகளார் அதற்குமேல் அவனுடன் பேச்சு வைத்துக்கொள்ள இஷ்டப்படாமல், "விக்ரமா! நான் ஏதோ இப்படிப் பேசுகிறேனென்று கோபித்துக்கொள்ளாதே. என் உடம்பைப் பார். உன் உடலைப்போல் பத்துமடங்கு பெரிது. இதைத் தூக்கிக்கொண்டு இத்தனை படிகளையும் ஏறி வருவதென்றால் சாமான்யமா? எனக்குப் பெருமூச்சு வாங்குவது உனக்குத் தெரியவில்லையா?" என்றார்.

"அப்படி உம்மை யார் இங்குவரச் சொன்னது?"

"கார்குழலி."

"யார்! கார்குழலியா, எதற்கு?"

"சாப்பிடுவதற்கு. கோட்டைக்காவலன், எல்லோரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டுப் பிறகு கோட்டைக் காவலைப் பற்றிப் பேசலாம் என்று சொன்னார்...."

"உடனே கார்குழலி ஒப்புக் கொண்டாளாக்கும்..."

விக்ரம பாண்டியன் சொற்களில் உதிர்ந்த உஷ்ணத்தை அடிகளார் நன்றாக அறிந்துகொண்டதால் சொன்னார்: "விக்ரமா, பெண்கள் மனத்தைக் கவர இது வல்ல வழி. எதற்கும் சந்தேகப்படுபவனைப் பெண்கள் விரும்புவதில்லை: ஓரிரு காரியங்களில் புருஷன் சந்தேகப்பட்டால் பெண்கள் மகிழ்ச்சியே கொள்கிறார்கள். ஆனால் சதா சந்தேகப்பட்டு; நச்சரிக்கும் ஆண்களை அறவே வெறுக்கிறார்கள். கார்குழலியை நீ அடைய இஷ்டப்பட்டால் கவனமாயிரு. அடிக்கடி வெறுப்பைக் காட்டாதே. அவளைக் காக்கும் வழியில் சிரத்தைகாட்டு."

விக்ரமபாண்டியன் அடிகளாரை ஆச்சரியம் ததும்பும் கண்களுடன் நோக்கினான். அடிகளார் அவனது

னில் அத்தனை அக்கறை காட்ட வேண்டிய அவசியம் என்னவென்று புரியாமல் திணறினான். அவன் அதிகமாக யோசிக்க இடம் கொடாத அடிகளார், "விக்ரமா! கிளம்பு, உனக்காக எல்லோரும் காத்திருக்கிறார்கள்" என்றார்.

கூண்டிலிருந்து இறங்கி வந்து படிகளின் அடியை அடைந்ததும் அடிகளார், "மாடியறையிலேயே எல்லோரும் இருக்கிறார்கள், போ" என்றார்.

"ஏன் நீங்கள் வரவில்லையா?"

"துறவிக்கு இரவுப் போஜனம் இல்லையப்பனே. சில கனிகள் மட்டும்தான். அவையும் ஆசாரமாக என் அறையிலே இருக்கின்றன" என்று கூறிவிட்டு விடுவிடு என நடந்தார் அடிகளார். விக்ரமபாண்டியன் மாடியறைக்குப் போனானே தவிர அடிகளார் தமது அறைக்குப் போகவில்லை. அறைக்குப் போவதாகப் போக்குக்காட்டிய அடிகளார் விக்ரமன் தலை மறைந்ததும் திரும்பவந்து கிடுகிடுவென உடல் சதைகள் குலுங்கக் கூண்டுக்குச் செல்லும் மாடிப்படிகளில் ஏறிச் சென்றார். கூண்டை அடைந்ததும் அங்கு தரையில் கிடந்த வாளியை எடுத்துப் பரிசோதித்தார். பிறகு விக்ரமபாண்டியன் நின்றிருந்த சாளரத்துக்குச் சென்று வெளியே தலையை நீட்டிப் பார்த்த அடிகளார் பார்வையில் கூண்டுக்குப் பல அடிகளுக்குக் கீழே சுவரை ஒட்டி ஓடிய சிறு தளத்தில் கசங்கி விழுந்து கிடந்த ஓலை தென்படவே, 'நினைத்தேன் அப்போதே' என்று முணுமுணுத்துக் கொண்டார். அத்துடன் சும்மா நிற்காமல் மீண்டும் கீழே போய்ப் பெரிய தாம்புக் கயிற்றைக் கொண்டுவந்து கூண்டின் சாளரத்தில் பிணைத்துத் தொங்கவிட்டுக் கயிற்றைப் பிடித்துக்கொண்டு மெள்ளக் கால்களைச் சுவரில் ஊன்றி ஓலையை நோக்கி இறங்கலானார், உலகமே பொய்யென்ற தத்துவத்திற்கே வாழ்க்கையை அர்ப்பணித்த அந்த அரசியல் துறவியார். அந்தச் சமயத்தில் கீழே காவல் புரிந்து கொண்டிருந்த ஒரு வீரன் யாரோ சாளரத்தில் கயிறு கட்டி இறங்குவதைப்

பார்த்துச் சந்தேகம் கொண்டு வில்லில் அம்பைப் பொருத்திப் பார்த்த அவர் முதுகுக்காகக் குறி வைத்து நாணை இழுத்தான்.

44. பள்ளியறைச் சிலை

அறைச் சாளரத்தில் கயிறு கட்டிக் கீழே இறங்கி ஓலையை எடுக்க முயன்று அந்தரத்தில் ஆடிக்கொண்டிருந்த அடிகளாரின் முதுகுக்காகக் குறிவைத்த காவலாளி நாணை வலிய இழுத்து அம்பை மிக வேகமாக எய்தே விட்டான். அடிகளாரின் தலையில் ஆயுள் மிகக்கெட்டியாக எழுதியிராவிட்டால் அவர் அன்றே சிவபதம் எய்தி விக்கிரமபாண்டியனுக்குப் பெரிதும் மன நிம்மதியை அளித்திருப்பார். ஆனால் அவரைப் பிடித்த நல்ல திருஷ்டமோ விக்கிரம பாண்டியனைப் பிடித்த துரதிருஷ்டமோ தெரியவில்லை. அம்பு அணுகுவதற்குச் சற்று முன்பாக அடிகளார் இடது காலைப் பக்கத்துச் சுவரில் ஊன்றிக் கயிற்றை ஓர் ஆட்டு ஆட்டி அப்புறம் சென்று விடவே, அம்பு சட்டென்று அவருக்கு அப்பாலிருந்த சுவரின் தாக்கி நுனியிலிருந்த இரும்பு அலகு 'கிளிங்' என்று சப்திக்கக் கீழே தரையில் விழுந்துவிட்டது. கயிறு அறுந்து விடாமல் கீழ்த் தளத்துக்குப் போகவேண்டுமே என்ற கவலையுடனிருந்த அடிகளார், தம்மை நோக்கி யாரோ அம்பையும் எய்திருக்கிறான் என்பதை அறிந்ததும் இனி சற்றே அதிகமாகவே இடது காலை பக்கத்துச் சுவரில் ஊன்றி நிதானித்துக் கீழே நோக்கினார். அம்பு எய்த வீரன் முதல்அம்பு பலனளிக்காது போகவே, இரண்டாவது அம்பை வில்லில் பொருத்திக் கொண்டிருப்பதைப் பார்த்த அடிகளார், "இவன் நம்மைத் தொலைத்து விட்டுத்தான் மறுவேலையைப் பார்ப்பான் போலிருக்கிறது" என்று தமக்குள்ளேயே அவனைச் சபித்துக் கொண்டு, "டேய்! டேய்! யாரது? சும்மா இரு" என்று கயிற்றில் ஆடியபடியே கூவினார்.

இந்தக் கூச்சலால் தலையை நிமிர்த்திக் கவனித்த வீரன், அந்தரத்தில் தொங்குவது அடிகளார் என்பதைப்

புரிந்துகொண்டதும் அம்பை எடுத்து உறையில் போட்டு எதற்காக அடிகளார் இந்த ஜாலவித்தையைச் செய்கிறார் என்று அறியமாட்டாமல் அவரைப் பார்த்தபடி பிரமித்துக் கொண்டு நின்றான். அந்தரத்தில் தொங்கிய அடிகளார் ஒரு கையால் கயிற்றைப் பிடித்தபடி, இன்னொரு கையால் வாயைப் பொத்திக் காட்டி அவனைப் பேசாமலிருக்கும்படியும் அந்தப் பக்கம் யாரும் வராமல் பார்த்துக் கொள்ளும்படியும் சைகை செய்துவிட்டு மிக ஜாக்கிரதையுடன் தமது காரியத்தில் இறங்கலானார். கீழ் தளத்தில் கிடந்த ஓலைமீது மீண்டும் கண்களை ஓட்டிய அடிகளார் இன்னும் பத்தடி தூரமாவது தாம் இறங்கவேண்டியிருக்கும் என்பதைத் தீர்மானித்துக் கொண்டார். அத்துடன் சுவரின் பக்கப் பகுதிகளையும் கவனித்து, எந்தெந்த இடங்களில் காலை வைத்தால் தாம் ஜாக்கிரதையாக இறங்க முடியும் என்பதையும், நிர்ணயித்துக் கொண்டார். கயிற்றையும் ஒருமுறை ஆட்டிச் சரிபார்த்துக் கொண்ட பிறகு மீண்டும் மிகுந்த எச்சரிக்கையுடன் கால்களைச் சுவர்ப் பக்கங்களில் வைத்தும் முதுகை சாய்த்துக் கொண்டு கயிற்றுக்குத் தமது பாரத்தில் அதிகத்தைக் கொடுக்காமல் மெள்ள மெள்ள ஓலையை நோக்கி இறங்கிக் கடைசியாக ஓலையிருந்த சிறு தளத்திலும் காலை வைத்தார். காலை வைத்ததும் ஏதோ பெரிய காரியத்தைச் சாதித்தது போன்ற உணர்ச்சி ஏற்பட அடிகளார் ஓலையை எடுக்கக் குனியுமுன்பு அந்தச் சிறு தளச்சுவரில் நின்று பெருமூச்சு விட்டுத் தம்மை ஆசுவாசப் படுத்திக் கொண்டார். பின்புதான் ஓலையை எடுத்துப் பிரித்துப் பார்த்தார்.

உச்சிக் கூண்டின் அறையிலிருந்த பந்தத்தின் வெளிச்சம் நேராக அந்தச் சிறு தளத்தின்மீது அடித்துக் கொண்டிருந்ததால் சிறிதும் சிரமமின்றி ஓலையைப் படித்த அடிகளாரின் முகத்தில் கோபமும் கவலையும் கலந்து தாண்டவமாடிய. விக்கிரம பாண்டியனுடைய சுபாவத்தைப் பற்றித் தாம் எடை போட்டது சரியாகிவிட்டது என்பதை

திசைத்துப் பார்த்துத் தமது தீர்க்க தரிசனத்தில் மகிழ்ச்சியை அடைந்தாலும், அந்த விஷப் பாம்பு கன்னி மாடத்திலுள்ளவர்களுக்கும், முக்கியமாகக் கார்குழலிக்கும் விளைவிக்கவிருந்த பெருந் தீங்கை எண்ணிச் சொல்லவொண்ணாச் சினமும் கொண்டார். இவனை எப்படியாவது சீக்கிரம் தீர்த்துக் கட்டாவிட்டால் கன்னிமாடத்திலுள்ள சகல பேர்களையும் எதிரியிடம் ஒப்படைத்து விடுவான் என்ற யோசனையில் ஏதோ ஒருவித முடிவுக்கு வந்து மீண்டும் கயிற்றைப் பிடித்து ஏறிக் கூண்டின் அறைக்கு வந்து சேர்ந்தார். கூண்டின் அறையை அடைந்ததும் அடிகளார் மிகச் சுறுசுறுப்புடன் தாம்புக் கயிற்றைச் சாளரத்திலிருந்து அவிழ்த்துச் சுருட்டிக்கொண்டதன்றி அந்த அறையில் கிடந்த வீர பாண்டியன் அம்பையும் எடுத்து மடியில் செருகிக் கொண்டு மிக அவசரமாய்ப் படிகளில் இறங்கித் தமது அறைக்காகச் சென்றார். அவ்விடத்தில் தாம்புக் கயிற்றை ஒரு மூலையில் எறிந்துவிட்டு அம்பையும் பத்திரப்படுத்தி ஓலையை மட்டும் மடியில் செருகிக் கொண்டு போஜனசாலையை நோக்கி விரைந்தார்.

நன்றாகத் துலக்கப்பட்டுச் சுற்றிலும் சுவர்களில் பொருத்தப்பட்டிருந்த விளக்குகளாலும், ஆங்காங்கு தொங்கிய வெள்ளிச் சரவிளக்குகளாலும் போஜன சாலையின் நடுவிலிருந்த கூடம் ஜாஜ்வல்லியமாகப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. போஜனம் செய்வதற்காக மஞ்சங்களுக்கெதிரே வைக்கப்பட்டிருந்த வெள்ளித் தட்டுகளிலும் தங்கக் கிண்ணங்களிலும் விளக்கொளி பாய்ந்திருந்ததால் வெண்மையும் பொன்னிறமும் கலந்த ஜோதி ஆங்காங்கு வீசிக்கொண்டிருந்தன. எதிரேயிருந்து காட்டில் பெரிய படைபலத்துடன் பலமான வைரி தங்கியிருந்த அந்த சமயத்திலும் சிறிதும் கவலையின்றிச் சிரித்துப் பேசியவண்ணமே உணவருந்திக்கொண்டு வந்தான பாண்டிய சேனாபதி. எதற்கும் மனம் விட்டு நகைக்கக்கூடிய பொன்னமரா வதியின் படைத் தலைவனான காரிவளவன் தனது தலைவன் எதைச் சொன்னாலும் ரசித்துப் பெரிதாக நகைத்துப் போஜன மண்டபத்தை அதிர அடித்துக் கொண்டிருந்தான். அரசிளங்குமரியுடன் உணவருந்தும் போது அடக்கத்தைக் காட்டவேண்டுமென்ற சம்பிரதாயத்தையொட்டி அபராஜிதன் கண்ணைக்காட்டி எத்தனைமுறை எச்சரித்தும் காரியிடம் அவை பயனற்றுப் போயின. அபராஜிதன் பேச்சை மிகவும் ரசித்த கார்குழலியும் அவ்வப்பொழுது நகைத்தாள். மார்த்தியன் கூட அதிகமாக நகைக்காவிட்டாலும் ஓரிரு முறை புன்முறுவல் காட்டினான். ஆனால் இத்தனை சந்துஷ்டியிலும் கலந்து கொள்ளாமல் ஏதேதோ யோசனைகள் மனத்திலோடிய காரணத்தால் சூழ்நிலையை மறந்தவனாகப் பிரதிமை போல் உட்கார்ந்திருந்தான் விக்ரமபாண்டியன். முத்துநகையும் இதர பணிப்பெண்களும் அவ்வப்பொழுது திமாற வந்து உணவு வகையறாக்கள் வேண்டுமா என்பதை அறியக் கையிலிருந்த கிண்ணங்களிலிருந்த பாண்டிகளை அமுது—ன் எடுத்த சமயங்களிலும் விக்ரம பாண்டியன் பதிலேதும் சொல்லாமல் பிரமை பிடித்தவன் போல் உட்கார்ந்திருந்தான்.

அவன் உள்ளத்தே ஓடிய எண்ணங்களை யாராலும் அறிய முடியவில்லையே ஒழிய அவன் மனம் விவரிக்க முடியாத கவலையால் சூழப்பட்டிருக்கின்றதென்பதை மட்டும் எல்லோரும் உணர்ந்து கொண்டார்கள். கார்குழலி இடையிடையே கேட்ட ஓரிரு கேள்விகளுக்கும் சற்று தாமதித்தே அவன் பதில் சொன்னத்தைக் கவனித்த அபராஜிதனும் காரியும் சட்டென்று ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். பெரிய ராட்சதன்போல் எதிரே உட்கார்ந்திருந்த மார்த்தியனும் தனது பெரிய கண்களால் விக்ரமபாண்டியனை ஊடுருவிப் பார்த்து அவன் மனத்தில் என்னதான் இருக்கும் என்பதை ஆராய முனைந்தான். கார்குழலிகூடத் தன் கடைக்கண்ணால் அவன் முகத்தைக் கவனித்தான். இப்படி எல்லோர் பார்வைக்கும் இலக்கான விக்ரம

பாண்டியன் மட்டும் யாரையும் கவனிக்காமல் எதிரேயிருந்த தங்கக் கிண்ணத்தில் தன் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தான். தங்கக் கிண்ணத்திலிருந்த பழ வகையறாக்கள் அவனைப் பார்த்து விழித்தன. பழங்கள் அவனைப் பார்த்து விழித்தனவேயொழியப் பழங்களை அவன் பார்க்கவில்லை. பழங்களில் பிரதிபலித்த வீரபாண்டியன் முகமும், அவன் ஓலையிலிருந்த வாசகத்தின் வரிகளும் அவன் கண்முன் எழுந்து தாண்டவமாடின. அவை மீண்டும் மீண்டும் கிண்ணத்தில் பளிச்சிட்டதால் கிண்ணத்தைப் பார்க்க இயலாதவனாய்க் கண்களை மற்றவர்களுக்காக உயர்த்தினான். அந்தச் சமயத்தில் கார்குழலி அவனைப் பார்த்து லேசாக நகைத்தாள்.

ஏற்கனவே வேதனையால் வெந்துகொண்டிருந்த விக்ரம பாண்டியனுக்கு அவள் சிரிப்பு, வேலை எடுத்துப் புண்ணில் சரேலென்று செருகிய உணர்ச்சியை உண்டாக்கியதால் அவளைக் கோபம் மிக்க விழிகளால் நோக்கி, "எதற்காகச் சிரிக்கிறாய்?" என்று மூர்க்கத்தனமாக வினவினான்.

அதற்குக் கார்குழலி பதில் சொல்லவில்லை; அபராஜிதன் பதில் சொன்னான், "தாங்கள் கோபிக்கும்படியாக அரசகுமாரி எதுவும் சொல்லவில்லையே! சிரிப்பதும் ஒரு குற்றமா?"... என்ற அபராஜிதனைப் பாதியிலேயே மடக்கிய விக்ரம பாண்டியன், "அரசகுமாரிக்குப் பதில் நீங்கள் தான் பேச வேண்டுமோ? அவர்களுக்கு வாயில்லையோ?" என்று வினவினான்.

"வாயிருக்கிறது, மன்னவா! ஆனால் அவர்களுக்குப் பதிலாகப் பேச வேண்டியவன் நான்தான்" என்றான் அபராஜிதன்.

"இந்த அதிகாரத்தை உங்களுக்கு யார் கொடுத்தது?" என்று சீறினான் விக்ரம பாண்டியன்.

"அரசகுமாரிதான் கொடுத்தார்கள். தங்களுக்கும் தான் அது தெரியுமே!" என்று பதில் சொன்னான் அபராஜிதன்.

"எனக்குத் தெரியாது."

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்? தங்கள் முன்பாகத் தானே என்னைக் கோட்டைக் காவலனாக நியமித்தார்கள்."

"அதனால்....?"

"அவர்களுக்குப் பதிலாக இந்தக்கோட்டைக்குள் பேச அதிகாரம் பெற்றவன் நான் ஒருவன்தான். இன்று வீரபாண்டியன் பேச்சுக்கு அவர்களா பதில் சொன்னார்கள்? இந்தக் கோட்டைத் தலைவன் என்ற முறையில் அரசகுமாரியின் ஆணை, வாக்கு எல்லாம் நான்தான். இது தங்களுக்கும் தெரிந்திருக்குமென்று தான் நான் நினைத்தேன்" என்றான் அபராஜிதன்.

இதுவரையில் வாயை மூடிக் கொண்டிருந்த காரி அதற்கு மேலும் வாளாவிருக்க முடியாமல், "இந்தச் சின்ன விஷயம் இது வரையில் மன்னர்பிரானுக்குத் தெரியவில்லையென்பது தெளிவாகிவிட்டது" என்று கூறிவிட்டு நகைத்தான்.

விக்ரமபாண்டியன் காரிவளவனை மிக உஷ்ணமாகப் பார்த்து, "உங்களை எனக்கு அதிகமாகத் தெரியாது!" என்று ஆரம்பித்தவனை நடுவிலேயே மடக்கிய காரி, "சரி உங்களுக்குத் தெரியாத விஷயம் இது இரண்டாவது! ஏதாவது தெரிந்த விஷயங்களைப் பற்றிப் பேசுங்களேன்" என்றான்.

விக்ரமபாண்மயனுக்கு என்ன பதில் சொல்வதென்று புரியாததால் உள்ளே ஆத்திரம் பொங்கப் பொருமினான். எதிரே உட்கார்ந்திருந்தவர்களிடம் ஆத்திரத்தைக் காட்ட இயலாததால் பக்கவாட்டில் திரும்பிக் கார்குழலிக்காகத் தன் கோபத்தைக் காட்டத் தொடங்கி, "இங்கு என்னை உணவருந்தக் கூப்பிட்டீர்களா, வசையருந்தக் கூப்பிட்டீர்களா?" என்று வினவினான்.

"உணவை நீங்கள் அருந்தியதாகத் தெரியவில்லை...." என்று துவங்கிய காரியை அடக்கிய அபராஜிதன், "காரி! மன்னர் இப்பொழுது ஹாஸ்யத்தை ரசிக்கும் மனோ

பாலத்தில் இல்லை. பேசாதிரு'' என்று கூறிவிட்டு விக்ரம பாண்டியனை நோக்கி, ''மன்னவா! தங்களைத் தூஷிக்கும் நோக்கம் யாருக்குமில்லை. சாப்பிட்டபின் தர்க்கிக்க வேண்டிய முக்கிய விஷயங்கள் இருக்கின்றன. சாப்பிடும் போதாவது அவற்றைச் சற்று மறந்திருப்போம் என்று வேடிக்கையாகப் பேசினோம்'' என்று சமாதானம் சொல்லிவிட்டுச் சாப்பிட்டு முடிந்ததற்கு அறிகுறியாகப் பக்கத்திலிருந்த தண்ணீரை எடுத்துக் கையையும் அலம்பிக் கொண்டான். மற்றவர்களும் கை கழுவி எழுந்திருந்து கோட்டைக் காவலைப்பற்றி விவாதிக்க அடுத்த கூடத்திற்குச் செல்ல முயன்றதும் அபராஜிதன் அவர்களைத் தடுத்து, ''மந்திராலோசனை இன்றிரவு வேண்டாம். நாளைப் பகலில் பார்த்துக்கொள்வோம்'' என்றான்.

''ஏன்? இன்று பேசினாலென்ன?'' என்று கார்குழலி வினவினாள்.

''மன்னர் இன்று மந்திராலோசனைக்கு வேண்டிய நிலையில் இல்லை'' என்றான் அபராஜிதன்.

''நான் இல்லாவிட்டால் என்ன?'' என்று வினவிய விக்ரம பாண்டியன் குரலில் வெறுப்பும் கோபமும் கலந்திருந்தன.

''பாண்டிய நாட்டுக்கு மன்னராகக்கூடியவர் இருக்கும் போது அவரைவிட்டு நாங்கள் மந்திராலோசனையில் இறங்குவது முறையல்ல'' என்றான் அபராஜிதன்.

விக்ரமபாண்டியன் இதற்குப் பதிலேதும் சொல்லவில்லை. அபராஜிதன் மனத்தில் எத்தகைய எண்ணம் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதை அறியத் தன் கண்களை அவன் முகத்துக்காக உயர்த்தினான். அபராஜிதன் முகத்தில் எந்த வித உணர்ச்சியும் இல்லை. அவன் இதழ்கள் மட்டும் ஒரு கோடியில் லேசாக இழுபட்டு மந்தகாசத்தைக் காட்டிக் கொண்டிருந்தன. சற்றுநேரம் வைத்த கண் வாங்காமல் அவனைப் பார்த்துக்கொண்டு நின்ற விக்ரமபாண்டியன் சரேலென்று திரும்பி விடு-

விடென்று நடந்து கட்டிடத்தை விட்டு வெளியே சென்றான். அவன் சென்றதும் கார்குழலியை நோக்கித் திரும்பிய அபராஜிதன், ''அரசகுமாரி! வாருங்கள். உங்களைக் கொண்டுபோய் பின் கட்டிடத்தில் விட்டுவிட்டுப் பிறகு என் அலுவலைக் கவனிக்கச் செல்கிறேன்'' என்று கூறிவிட்டு, தான் வரும்வரையில் கோட்டைக் காவலைச் சோதனை செய்யும்படி மார்க்கீயனுக்குக் கட்டளையிட்டுக் காரி பின் தொடரக் கார்குழலியுடன் கட்டிடத்தைவிட்டுக் கிளம்பினான்.

போஜன சாலைக்குச் சற்றுத் தள்ளியிருந்தது கார்குழலியின் நந்தவனம், இடது புறத்திலிருந்தது அந்தப்புரம். கட்டிடத்தைவிட்டு வெளியே காலடி வைத்த உடனேயே காரி ஒரு சந்தேகம் கேட்டான் ''பிரபு! விக்ரம பாண்டியனை மன்னர் மன்னரென்று அழைக்கிறீர்களே அவர் எந்த ஊருக்கு மன்னர்...'' என்று வினவினான்.

''பிற்காலத்தில் பாண்டிய நாட்டு மன்னனாகலாம்'' என்றான் அபராஜிதன்.

''அதற்காக இப்பொழுது முதற்கொண்டே பட்டம் எதற்கு?'' என்று காரி மீண்டும் சந்தேகம் கேட்டான்.

''நாடில்லாவிட்டாலும் விக்ரமன் மன்னர் மரபில் பிறந்தவன்.''

''மரபுக்காக மரியாதை போலிருக்கிறது. அப்படித் தானே மன்னவா?''

''என்னையா அழைக்கிறாய் காரி?''

''ஆமாம்; தாங்களும் மன்னர் மரபில் பிறந்தவர் தானே?''

தூக்கி வாரிப்போட்டது அபராஜிதனுக்கு காரியின் ஹாஸ்யம் அத்தனை தூரத்துக்குப் போகும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. சரேலென்று பக்கவாட்டில் மின்னல் வேகத்தில் பார்வையைவீசிய அபராஜிதன் கண்களிலிருந்த எச்சரிக்கையைக் கண்ட காரியும் அத்துடன் பேச்சை நிறுத்திக்கொண்டு மௌனமாகவே நடந்தான். ஆனால் காரி

பின் சொற்கள் கார்குழலியின் சித்தத்தில் ஏதேதோ சிந்தனைகளைக் கிளப்பிவிட்டன. அவள் விசாலமான தன் விழிகளால் அபராஜிதன் முகத்தை ஒருமுறை பார்த்தாள். அவனும் பார்த்தான். இரு ஜோடிக் கண்களும் பேசின; ஆனால், ஒரு ஜோடிக் கண்கள் பதில் சொல்ல மறுத்தன. 'நீங்கள் மன்னர் மரபில் பிறந்தவரா? நீங்கள் யார்? சொல்ல மாட்டீர்களா?' என்று கொஞ்சின கார்குழலியின் கண்கள். 'இத்தனை நாள் பொறுத்தவள் இன்னும் கொஞ்ச நாள் பொறு. எல்லாம் விளங்கும்' என்று கெஞ்சின அபராஜிதன் விழிகள். கண்ணோடு கண் பேசியபின் வாய்ச் சொற்களில் என்ன பயன் ஏற்பட்டுவிடப் போகிறது? ஆகவே கார்குழலியும் அபராஜிதனும் பேசாமலே நடந்தார்கள். அந்தப்புரத்திற்குள் நுழையுமுன்பு அபராஜிதனை ஒருமுறை திரும்பிப் பார்த்துவிட்டுச் சென்றாள் கார்குழலி. அந்தப் பார்வையில்தான் எத்தனை வசீகர அழைப்பு!

கௌரவத்தாலும் அடிகளாருக்குக்கொடுத்துள்ளவாக்கினாலும் அரசிளங்குமாரியின் நன்மையை முன்னிட்டும் அவளைப் பின்பற்றிச் செல்லக் காலெழாத சேனாதிபதி ஏக்கம் கலந்த பெருமூச்சொன்றை விட்டுத் திரும்பினான். அபராஜிதன் மனோபாவம் காரிக்கு நன்றாகப்புரிந்திருந்ததால் சேனாதிபதியின் புத்தியை வேறு திசையில் திருப்ப அவன் முயன்று, 'பிரபு! இன்று விக்ரமபாண்டியனைச் சரியாகக் கவனித்தீர்களா?'' என்று கேட்டான்.

''கவனித்தேன்.''

''ஏன் அப்படிப் பேயறைந்த மாதிரி உட்கார்ந்திருந்தான்?''

''தெரியவில்லை.''

''ஏதோ தீவிர சிந்தனையிலிருந்திருக்கவேண்டும்.''

''ஆமாம்'' என்றான் அபராஜிதன்.

''எந்தக் கோட்டையைப் பிடிக்க யோசனையோ!'' என்று வினவினான் காரி.

''இந்தக் கோட்டையைத்தான்'' என்று பின்னாலிருந்து எழுந்த குரலால் திடுக்கிட்டுத் திரும்பிய இருவரும் எதிரே அடிகளார் நின்றிருப்பதையும் கண்டு அடிகளார் முக்கியமான செய்தி எதையோ அறிவிக்க விரும்புகிறாரென்பதையும் உணர்ந்து கொண்டனர்.

''என்ன அடிகளாரே! ஏதாவது விசேஷமிருக்கிறதா?'' என்று சம்பாஷணையைத் துவக்கினான் அபராஜிதன்

''இருக்கிறது.''

''என்ன விசேஷமோ?'

''கோட்டையைப் பற்றிய விசேஷம் தான்.''

''சொல்லுங்கள்.''

''இங்கு பேசுவதற்கில்லை. என் அறைக்கு வாருங்கள்'' என்று கூறிவிட்டு வேகமாக நடந்த அடிகளாரைப் பின்பற்றி அபராஜிதனும் காரியும் நடந்தனர். அறைக்குள் மூவரும் பிரவேசித்ததும் கதவை ஜாக்கிரதையாகச் சாத்தித் தாளிட்ட அடிகளார் அறையின் மூலைக்குச் சென்று அங்கிருந்த அம்பை எடுத்து வந்து, ''இதைப் பாருங்கள்'' என்று அபராஜிதனிடம் கொடுத்தார். அம்பைப் பார்த்தவுடனேயே அது யாரைச் சேர்ந்தது என்பதைப் புரிந்து கொண்டே அபராஜிதனும் காரியும் அடிகளாரைப் பார்த்தார்கள். ''இதில் இது கட்டி வந்தது'' என் மதடியிலிருந்த ஓலையையும் எடுத்துக் கொடுத்தார் அடிகளார்.

காரி தோள் வழியாக எட்டிப்பார்க்க, அபராஜிதன் விளக்கொளியில் ஓலையைப் படித்தான். பிறகு ஓலையை அடிகளாரிடம் கொடுத்துவிட்டு அறையில் சிறிது நேரம் யோசித்துக் கொண்டே உலவினான். கடைசியில் அடிகளாரை நோக்கி, அடிகளாரே! ஓலையை எரித்துவிடுங்கள். தகவலை யாரிடமும் சொல்ல வேண்டாம்'' என்று சொல்லிவிட்டு வெளியே செல்லத் தொடங்கிய சேனாதிபதியை, ''பிரபு'' என்று கூப்பிட்டு நிறுத்திய அடிகளார், ''எதற்கும் விக்ரமபாண்டியன் மேல் ஒரு கண்ணைத் திருப்பது நல்லதல்லவா?'' என்று கேட்டார்.

"அவசியமில்லை" என்றான் அபராஜிதன்.

"ஏன்?"

"அவன் திருப்பக்கூடிய வீரர்கள் கள்ளர்கள்தான். அவர்களில் மொத்தம் இருபத்து நான்கு பேர்தான் இருக்கிறார்கள். நான் போட்டிருக்கும் காவல் முறையில் அவர்கள் இருக்கிற இடத்தை விட்டு நகர முடியாது. கவலைப்படாதீர்கள். அந்த ஓலை வந்தது நல்லதாயிற்று"

இதற்கு மேல் ஏதும் சொல்லாமல் வேகமாகக் காரியுடன் வெளியே சென்ற அபராஜிதன் கட்டுக் காவல்களையெல்லாம் கடந்து கார்குழலியின் அந்தப்புரத்திற்குள் நுழைந்து அவள் அறையின் கதவை இடித்தான். வெளியே வந்து கதவைத் திறந்த முத்துநகையை நோக்கி, "முத்து நகை! சீக்கிரம் அரசகுமாரியைக் கூப்பிடு" என்று உத்தரவிட்டான். முத்துநகை ஏதோ ஆபத்து மும்முரமாயிருக்கிறதென்ற நினைப்பில் அவசரமாக ஓடிக் கார்குழலியை எழுப்பி வந்தாள். ஏதோ என்னவோவென்று அலறிப் புடைத்துக் கொண்டு வந்த கார்குழலியை நோக்கிய அபராஜிதன் "அரசகுமாரி! பயப்படுவதற்கு ஏதுமில்லை. தங்கள் பள்ளியறையை நாங்கள் பார்க்க வேண்டும்" என்றான்.

கார்குழலி ஏதும் புரியாமல் விழித்து ஒருகணம் முத்துநகையை நோக்கினாள். பிறகு "சரி, வாருங்கள்" என்று இருவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றாள். பள்ளியறையையடைந்ததும் அபராஜிதன் "இங்குதானே முன்பு எங்களைத் தங்க வைத்தீர்கள்?" என்று கேட்டான்.

"ஆமாம்' என்றாள் கார்குழலி

அபராஜிதன் அறை முழுவதையும் தன் பார்வையால் அளந்தான். அவன் கண்கள் மெல்லிய திரைச்சீலைக்கு அப்பாலிருந்த கற்சிலையின் மேல் கடைசியாக நிலைத்தன. வெகுநேரம் அந்தக் கற்சிலைமீது கண்களை ஓட்டிய பாண்டிய சேனாதிபதி அரசகுமாரியை நோக்கி, "நீங்களும் முத்துநகையும் சற்று வெளியே செல்லுங்கள்" என்றான். அரசகுமாரி ஒரு வினாடி யோசித்துவிட்டு முத்துநகையுடன் வெளியே சென்று கதவை மூடிக்கொண்டாள். வெளியே அவர்கள் சென்று சில வினாடிகள் தான் இருக்கும். கட்டிடமே கலகலத்துத் தலைமேல் விழுவது போன்ற பயங்கர சப்தம் அடுத்த அறையிலிருந்து எழுந்தது.

45. இடிந்த சுவரும் இருளடைந்த பாழியும்

கட்டிடத்தின் கருங்கற்கள் பல கலகலத்துத் திடீர் திடீரெனக் கீழே இறங்குவது போன்ற ஒலிகளாலும், பெரும் பாறைகள் ஒன்றுடன் ஒன்று மோதியும் உராய்ந்தும் செல்வது போன்ற சப்த பேதங்களாலும் கவலை பாய்ந்து கலங்கிய கார்குழலியின் கருவிழிகள் அருகே நின்ற முத்துநகையை ஒரு முறை நோக்கிவிட்டு அடுத்த அறையை நோக்கிப் பாய்ந்தன. இரவில் எழுந்த அந்தப் பயங்கர சப்தங்களால் அடுத்த அறையில் என்ன விபரீதம் நடந்துவிட்டதோ என்று நடுங்கிய முத்துநகையும் அரசகுமாரியின் பார்வையிலும் முகத்திலும் பிரதிபலித்த கவலையில் பங்குகொண்டு அடுத்த அறைக்குப் போகக் காலெழாமலும் இருந்த அறையில் இருக்க இருப்புக் கொள்ளாமலும் இரண்டும்கெட்டான் நிலைமையில் திண்டாடினாள். அடுத்த அறையில் துவங்கிய சப்தங்கள் மட்டும் நிற்காமல் தொடர்ந்து வந்து கொண்டேயிருந்தன. கட்டிடம் நிலைகுலைவது போன்ற அத்தனை சப்தத்தை விளைவிக்க எத்தனை கற்கள் கலகலத்துக் கொட்டவேண்டும் என்று நினைத்துப் பிரமித்து நின்ற கார்குழலி, பக்கத்து அறையில் ஏற்பட்ட அவ்வளவு விபரீதத்திலும் தான் நின்றிருந்த கூடத்தின் சுவர்களோ, சுவர்களிலிருந்து தொங்கிய விளக்குகளோ சற்றும் ஆடவோ அசையவோ இல்லாமல் இருக்கிற நிலையிலேயே இருப்பதைப் பார்த்து, 'இது எப்படி சாத்தியம்!' என்று வியந்தாள். இப்படி அரசகுமாரியும், முத்துநகையும் மாறிமாறி யோசித்து

கொண்டிருந்ததால் ஓடிய சில வினாடிகளில் பக்கத்தறையிலிருந்து கிளம்பிக்கொண்டிருந்த சப்தங்களும் மெள்ளக் குறையலாயின. கற்கள் பல சர்ரென்று எங்கெங்கோ பாய்ந்து 'தட்தட்' என்று ஒன்றின் மேல் ஒன்று உட்காரும் ஓசைகள் கேட்டன. கடைசியாக 'கிளிங்' என்று ஏதோ உலோகம் உலோகத்தின் மேல் அடிபடுவதுபோன்ற ஒரு பிரமை. அப்புறம் ஒரே நிசப்தம்!

நிசப்தமும் சில வினாடிகள் நீடித்தது. பிறகு அந்த நிசப்தத்தைக் காரியின் கேள்விகளும் பாண்டிய சேனாதிபதியின் பதில்களும் உடைத்தன. இருவரும் சிறிது நேரம் ஏதோ தர்க்கித்துக் கொண்டிருப்பதைக் கார்குழலி உணர்ந்தாளானாலும் கதவைத் திறந்துகொண்டு சென்று பக்கத்தறையில் நடந்ததென்னவென்பதை ஆராயத் தானும் முயலவில்லை; முத்துநகையையும் அனுமதிக்கவில்லை. ''அம்மா! நான் வேண்டுமானாலும் போய் அங்கு என்னதான் நடக்கிறதென்று பார்த்துவிட்டு வருகிறேன். இந்த மாதிரி விபரீத சப்தங்களை நாம் இந்த கன்னிமாடத்தில் இத்தனை நாளாகக் கேட்டதில்லையே'' என்றாள் முத்துநகை.

''வேண்டாம் முத்துநகை! அவர்களே வந்து சொல்லட்டும்'' என்று அரசகுமாரி தடுத்தாள்.

''அவர்கள் ஏதோ பேசிக்கொண்டே இருக்கிறார்களே யொழிய இங்கு வருவதாக உத்தேசமில்லை போலிருக்கிறதே'' என்றாள் முத்துநகை.

''ஏதோ காரியமாகத்தான் பேசிக் கொண்டிருப்பார்கள்...''

''என்ன அப்படித் தலை போகிற காரியமாயிருக்கும்! இரவில் ஆண்பிள்ளைகள் இந்தக் கட்டிடத்துக்கு வருவதே குற்றம். அதுவும் தங்கள் பள்ளியறைக்குள் நுழைந்ததற்குத் தங்கள் தந்தை மட்டும் இங்கிருந்தால் இவர்கள் தலையைச் சீவிப் போட்டுவிட்டு மறுவேலை பார்த்திருப்பார்.''

''அதெல்லாம் சாதாரண காலங்களில், முத்துநகை''

''இதென்ன அப்படி அசாதாரண காலம்?''

''யுத்த காலம். யுத்தகாலத்தில் வாழ்க்கை முறைகள் அடியோடு மாறுபடுகின்றன. சாதாரண காலமாயிருந்தால் இந்தப் பிரபுக்கள் இங்கு வருவார்களென்று நினைக்கிறாயா?''

''ஏன் வரமாட்டார்கள்? உங்கள் கோட்டைக் காவலன் இருக்கிறாரே அவர் காயம் பட்டுக்கிடந்தபோது எங்கிருந்தாராம்?'' இந்தக் கேள்வி கார்குழலியின் மனத்தே பழைய எண்ணங்களைக் கிளப்பிவிட்டபடியால் அவள் அடுத்த அறை நிகழ்ச்சிகளை அகலவிட்டு எங்கோ கனவுலகத்துக்குச் சென்றாள். கன்னிமாடத்துக் காட்டுக்கெதிரே காயமடைந்து ரத்தம் சேதப்பட்டுக்கிடந்த அந்தப் பாண்டியநாட்டு வீரனைத் தான் முதன்முதலாக சந்திக்க நேர்ந்த சம்பவங்களையெல்லாம் எண்ணிப் பார்த்தாள். அவன் தற்சமயம் இருக்கும் அதே அறையில் தன்னுடன் பேசிச் சிரித்ததையும் அதைக் கண்டு அடிகளார் சந்தேகப் பார்வை பார்த்ததையும் எண்ணி மெள்ளத் தனக்குள்ளேயே நகைத்துக்கொண்டாள். தன் உள்ளத்தை அன்றே கொள்ளைகொண்ட அந்த வீரன், திடீரெனக் கனவில் தோன்றியவனைப்போல் மறைந்து மீண்டும் தன்னைக் காத்து நிற்க அதே கன்னிமாடத்துக்கு வந்துசேர்ந்ததையும் நினைத்து விதியின் விசித்திர லீலைகளை எண்ணிப்பார்த்துப் புன்முறுவலொன்றையும் உதடுகளில் தவழவிட்டாள்,

நனவுலகத்திலிருந்த அரசகுமாரி கனவுலகத்தில் சஞ்சரிக்க ஆரம்பித்துவிட்டதையும், அதன் காரணத்தையும் உணர்ந்துகொண்ட முத்துநகையும் லேசாக நகைத்தாள். அவள் உதிரவிட்ட அந்த சின்னஞ்சிறு சிரிப்பொலி கார்குழலியின் கனவுலகத்தில் திடீரெனப் பாய்ந்துவிடவே சுயநிலைக்கு வந்த அரசகுமாரி, முத்துநகையின் மேல் கோபப் பார்வையொன்றை ஓட்டி, ''எதற்காகச் சிரிக்கிறாய் முத்துநகை?'' என்று விசாரித்தாள்.

பாதி கவலையும் பாதி கோபமும் கேள்வியிற் கலந்து நின்றன.

கார்குழலியின் குரலைக் கேட்டதனாலோ என்னவோ பக்கத்தறைக் கதவைத் திறந்துகொண்டு அபராஜிதன் உள்ளே நுழைந்தான். கூடத்திற்கு வந்தவன் நேராகக் கார்குழலியை அணுகாமல் கதவின் பக்கத்திலேயே சிறிது நேரம் நின்று ஏதோ யோசித்துவிட்டுப் பிறகு அவளை நோக்கி, ''அரசகுமாரி! நான் உங்கள் கோட்டைக் காவலன்...'' என்று ஏதோ சொல்லத் துவங்கியவன் மேற்கொண்டு பேச்சை ஓட்டாமல் சற்று நிதானித்தான்.

கார்குழலியின் கண்கள் அவனை ஏறெடுத்துப் பார்த்தன. அவள் வாய் திறந்து பதிலேதும் சொல்லாவிட்டாலும், 'மேலே சொல்லுங்கள்' என்று அவள் விழிகள் உத்தரவிட்டதைக் கண்ட அபராஜிதன் மேலும் பேச்சைத் தொடர்ந்து, ''நான் உங்கள் கோட்டைக் காவலன். இந்தக் கோட்டையைக் காப்பது என் கடமையாகிறது. ஆகவே அந்தக் கடமையைச் சரிவரச் செலுத்துவதற்கான உபாயம் எதுவாயிருந்தாலும் அதை நான் கையாண்டுதான் ஆகவேண்டும்'' என்றான்.

கார்குழலி மௌனமாகவே இருந்தாள் அவள் மௌனத்தின் காரணத்தைப்புரிந்துகொண்ட அபராஜிதன் மறுபடியும் சொன்னான்: ''அரசகுமாரி! நான் கையாளும் முறை உங்களுக்கு விசித்திரமாயிருக்கலாம் சில வேளைகளில் அருவருப்பாகக்கூட இருக்கலாம். ஆனால் யுத்த காலத்தில் கசப்பான காரியங்களையும் போர்த்தலைவன் செய்யத்தான் வேண்டியிருக்கிறது.''

அவன் எதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறானென்பதைக் கார்குழலி நன்றாகப்புரிந்து கொண்டிருந்தாலும் ஏதோ கேட்கவேண்டும் என்பதற்காகக் கேட்டு வைத்தாள், ''அது என்ன அப்படிக் கசப்பான காரியம்?'' என்று.

''உதாரணமாக, இதோ பாருங்கள்; இந்த இராக் காலத்தில் நான் இந்த இடத்திற்கு வருவது பிசகான

...ரியம். விரும்பத் தக்கதல்ல, ஏன்? வெறுக்கத்தக்கதும் ...ட ஆனால் வந்துதான் ஆகவேண்டியிருக்கிறது'' என்று ...சொன்னான் பாண்டியன் சேனாதிபதி.

''நீங்கள் வருவதை யார் வெறுப்பதாகச் சொன்னார் ...? யார் தடுத்தார்கள்'' என்று கார்குழலி குழைந்த ...ரலில் கேட்டாள்.

''யாரும் தடுக்கவில்லை, அரசகுமாரி. ஆனால் இது ...கத்துக்கு ஒவ்வாத காரியம். சாதாரண காலத்தில் ...டுமையான குற்றமும்கூட. ஆனால், உங்கள் நன்மையை ...முன்னிட்டே இந்தக் குற்றத்தை நான் புரிய வேண்டி ...ருக்கிறது. இந்தக் குற்றம் மட்டுமல்ல; இன்னொரு குற்றமும் புரிந்திருக்கிறேன். அதற்கும் உங்கள் மன்னிப்பு வேண்டும்'' என்றான் அபராஜிதன்.

''இன்னொரு குற்றமா?'' ஆச்சரியத்துடன் ...வினாள் கார்குழலி.

''ஆமாம். இப்படி வாருங்கள்'' என்று அவளை அழைத்துக்கொண்டு பக்கத்தறைக்குச் சென்றான் அபராஜிதன். அந்த அறையில் அந்தப் பிரபு என்ன குற்றத்தைத்தான் புரிந்திருப்பார் பார்ப்போமென்று அரசகுமாரியைப் பின்தொடர்ந்து சென்ற முத்துநகை அறைக்குள் தலை நீட்டியதும் பேரதிர்ச்சியடைந்தவளாய் விழிகள் நன்றாக மலரப் பிரமை பிடித்து அப்படியே ஒரு கணம் நின்றுவிட்டாள். அரசகுமாரியின் பள்ளியறையின் ...கோடியிலிருந்த திரைச்சீலை ஒதுங்கிக் கிடந்தது. அந்தச் சீலைக்குப் பின்னாலிருந்த கற்சிலையின் முகம் நேராகப் பார்க்காமல் முதுகுப் பக்கமாகத் திரும்பிக் கிடந்தது. அந்தச் சிலைக்கு அப்புறத்தேயிருந்த சுவர், பாளம் பாளமாக வெடித்து இரண்டு மூன்று இடங்களில் விலகி ...ந்த, அதையடுத்து நாகலோகத்தின் பிலத்துவாரம் போல் இருள் சூழ்ந்த பெரிய பாழியொன்றும் தெரிந்தது.

கார்குழலி வைத்த கண் வாங்காமல் அந்தப் பெரிய இருண்ட பாழியைக் கவனித்துக்கொண்டே அறையின் நடுவே நின்றாள். தன் பள்ளியறையில் இப்படி ஒரு பாதாளம் இருக்கிறதென்பதை அறியாத கார்குழலிக்கு இதை இந்தப் பிரபு மாத்திரம் எப்படிக் கண்டுபிடித்தார் என்று விளங்காததாலும், தான் இதுவரை பிரதி தினம் புஷ்பமிட்டுப் பூஜித்து வந்த அம்மன் சிலை உண்மையில் ஒரு மர்ம யந்திரமாகி விட்டதே என்ற உணர்ச்சி மேலிட்டதாலும் அவள் ஏதும் பேச வகையற்றவளாய், அந்தப் பள்ளியறை நடுவே மற்றொரு சிலைபோல மௌனமாக நின்றாள்.

அந்த மௌனத்தை அபராஜிதனே உடைத்து, "அரசகுமாரி! சற்று இப்படி வந்து பாருங்கள்" என்று அவளை அழைத்துவிட்டு, "காரி அந்த விளக்கை எடுத்து இந்தப் பாழிக்காகக் காட்டு" என்று உத்தரவிட்டு அரசகுமாரியுடன் பாழிக்கருகே சென்றான். காரி காட்டிய விளக்கில் பாழியைக் கவனித்த கார்குழலியும் முத்துநகையும் கீழே ஓடிய படிகளைக் கண்டு, அது ஒரு சுரங்கப் பாதையென்பதையும், அடிகளாரும் மழவராயனும் மிக ரகசியமாக வைத்திருந்த அந்தரங்க வழி அதுதானென்பதையும் சந்தேகமறப் புரிந்துகொண்டாலும் இத்தனை நாள் இங்கேயே இருந்த தாங்கள் கண்டுபிடிக்க முடியாத இந்த மர்மத்தை அபராஜிதன் எப்படிக் கண்டுபிடித்தார் என்பதை அறியமாட்டாதவர்களாய் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

பெண்களிருவரும் நயன பாஷையில் பேசியதின் உட்கருத்தை உணர்ந்துகொண்ட அபராஜிதன், "அரசகுமாரி! இதை நான் புதிதாக இன்று கண்டுபிடிக்கவில்லை. கண்டுபிடித்து பல நாட்களாகின்றன. ஆனால் இந்த வழியை உபயோகப்படுத்த அவசியம் நேர்ந்ததால் இந்த ரகசியத்தை உங்களுடன் பகிர்ந்துகொள்ள முன்வந்தேன்" என்றான்.

"எப்பொழுது கண்டுபிடித்தீர்கள்?" என்று கார்குழலி வினவினாள்.

"முன்பு நான் இந்த அறையில் தங்கியிருந்தேனே, நினைவிருக்கிறதா?" என்று கேட்டான் அபராஜிதன்.

"ஆகா! இருக்கிறது."

"அப்பொழுதே கண்டுபிடித்ததுதான். இந்த அறையிலிருந்த நாங்களிவரும் திடீரென மறைந்து விட்டது உங்களுக்கு ஞாபகமிருக்கலாம்."

"ஞாபகமிருக்கிறது. அப்பொழுது நீங்கள் கயிறு கட்டி வெளிப்பக்கமாக அல்லவா இறங்கிச் சென்றீர்கள்?"

"இல்லை, அரசகுமாரி! அடிகளாரை ஏமாற்றுவதற்காக இந்தத் தந்திரம் செய்தேன். இந்தப் பாதை வழி செல்வது மிகக் கடினம். எனக்கு இந்தப் பாதை தெரிந்துவிட்டது என்று மட்டும் அடிகளாருக்குத் தெரிந்திருந்தால் என்னை வெளியே செல்லவிடாமல் இந்தப் பாதாள வழியைப் பூட்டியிருப்பார். இந்த வழியின் முழு மர்மம் இப்பொழுதுகூட எனக்குத் தெரியாது. கைதேர்ந்த சிற்பி யாரோ இதை அமைத்திருக்கிறான், அரசகுமாரி. வழி நெடுகப் பல இடங்களில் பலவித பொறிகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகையால் வழியில் எந்த இடத்திலும் அடிகளார் என்னை மடக்கியிருக்க முடியும். மழல நாட்டு அந்தரங்கச் சுரங்கங்கள் போர்த் தந்திரங்களுக்கு இன்றியமையாதவை. அவற்றைப் பிறருக்குக் காட்டிக் கொடுக்க அடிகளார் ஒரு நாளும் சம்மதிக்க மாட்டார். அவரிடம் மீண்டும் சிக்கினால் சிறை வாசமோ அதைவிட மோசமான கதியோ நிச்சயமென்பதை அறிந்த நான் அவருக்குப் போக்குக் காட்டக் கயிறுகளை வெளிச் சாளரத்தில் கட்டித் தொங்கவிட்டேன். ஆனால் சென்றது இவ்வழிதான்" என்று அபராஜிதன் விளக்கினான்.

"இதை எப்படிக் கண்டுபிடித்தீர்கள்? இத்தனை நாளாக இந்த அறையிலிருக்கும் எனக்குப் புரியாத

மர்மம் உங்களுக்கு எப்படிப் புரிந்தது?" என்று கார்குழலி வினவினாள்.

"அரசகுமாரி! எனக்குக் கிடைத்த சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைக்கவில்லை."

"என்ன சந்தர்ப்பம்?"

"இந்தப் பாதாள வழியில் எப்பொழுதாவது போயிருக்கிறீர்களா?"

"இல்லை."

"நான் வந்திருக்கிறேன் பாருங்கள். அடிகளார் எங்களிருவரையும் கண்களைக்கட்டித்தான் அழைத்து வந்தார். கண்களைத்தான் அவர் கட்டினாரே தவிர என் கைகளைக் கட்டவில்லை. கருத்தையும் கட்டவில்லை. என் கருத்து அந்த அந்தரங்க வழியின் மர்மத்தை ஆராய்வதில் முனைந்தது. கைகள் கருத்துக்கு உதவின. அடிகளார் எங்களுக்கு வழி காட்டிக்கொண்டு முன்னே சென்றார். நான் தட்டுத் தடுமாறுவதுபோல் பாசாங்கு செய்து சுவர்களின் இருபுறத்தையும் தடவிக்கொண்டே வந்தேன். வழி நெடுகப் பல பிரதிமைகளைத் தடவினேன். கடைசியாக இந்த அறையை அடையுமுன்பு ஒரு பிரதிமையின் முகம் தென்பட்டது. அதைத்தடவி அது ஒரு கற்சிலையென்பதை அறிந்துகொண்டேன். அதன் முகம் மட்டுமே கையில் பட்டது. மற்ற இடங்களைத் தடவிப் பார்த்தேன். வழவழப்பாக இருந்தன. மார்பகமோ கைகளோ தென்படவில்லை. தட்டுப்பட்ட இரு முழங்கைகளிலிருந்து சிலையின் முகம் திரும்பியிருப்பதை உணர்ந்தேன். கடைசி படி ஏறியதும் அடிகளார் சற்று நிதானித்தார். பிறகு எங்களை அழைத்துக்கொண்டு மற்றோர் அறைக்குச் சென்று கட்டுகளை அவிழ்த்தார்" என்று விவரித்தான் அபராஜிதன்.

"மற்றோர் அறைக்கு உங்களை அழைத்துச் செல்வானேன்?"

"சிலையின் மர்மத்தை நான் உணராதிருப்பதற்காக."

"பிறகு எப்படிக் கண்டுபிடித்தீர்கள்?"

அபராஜிதன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியது. "சொல்கிறேன், கேளுங்கள். அடிகளார் பின்னால் நடந்து சென்ற ஒவ்வொர் அடியையும் அளந்துதான் நடந்தேன். ஒவ்வொரு திருப்பங்களையும் மனத்தில் பதித்துக் கொண்டேன். மீண்டும் அவர் எங்களை உங்கள் பள்ளியறையில் பதுக்கி வைத்தபோது அது நாங்கள் முதலில் வந்த அறைதான் என்பதை ஊகித்துக்கொண்டேன். சிலையை ஆராய்ந்தேன். அம்மன் தலை நேராக என்னைப் பார்த்துக் கொண்டு நின்றது. ஒரு கையில் பூச்செண்டுடன் மற்றொரு கையை இடுப்பில் கொடுத்தும் நின்ற சிலையைக் கவனித்தேன். அறையில் வேறு சிலை இல்லை. நான் கடைசியாகப் பிடித்தது இந்தச் சிலையாயிருந்தால் அது முகத்தை முதுகுப்பக்கம் திருப்பிக்கொண்டிருக்கவேண்டும். அப்பொழுது தான் என் கைகளில் சிலையின் கரங்கள் படவில்லையே ஆகையால் அம்மன் தலையில்தான் பொறி இருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். பொறி இயலிலும் சிறிது பயின்றிருக்கிறேன் அரசகுமாரி" என்று விளக்கினான் அபராஜிதன்.

"சரி! இப்பொழுது எதற்காக இந்த வழியைத் திறந்திருக்கிறீர்கள்?"

"பொறி பழையபடி இருக்கிறதா என்பதைப்பார்க்கத்தான். இனி தங்கள் ஒத்துழைப்புத் தேவை" என்றான் அபராஜிதன்.

"என்ன செய்யவேண்டும்?"

"முதலாவதாக இந்த மர்மம் நமக்குத் தெரிந்திருக்கிறதென்ற விஷயம் அடிகளாருக்குத் தெரியக்கூடாது."

கார்குழலி அவன் சொன்னதை ஆமோதிக்கவோ மறுக்கவோ இல்லை. அபராஜிதன் மேலும் சொன்னான். "அரசகுமாரி! இரண்டாவதாக நானோ காரியோ இந்தப் பாதையை எந்த வினாடியிலும் உபயோகப்படுத்த நீங்கள் அனுமதிக்க வேண்டும், வீரபாண்டியனை முறியடிக்க இது அத்தியாவசியம்" என்றான்.

பாண்டியநாட்டுப் பிரபு தன்னைப் பாதுகாக்கவே அத்தனை விவகாரங்களிலும் ஈடுபடுகிறான் என்பதை அறிந்ததால் கார்குழலியின் உடலில் உவகை ஊடுருவிச் சென்றது. நன்றியும் காதலும் கலந்து பிரவேசிக்கும் பார்வையொன்றை அவன்மீது வீசிய கார்குழலி, "உங்களிஷ்டப்படி செய்யுங்கள். இதற்கு என் அனுமதி எதற்கு?" என்றாள்.

அபராஜிதன் அவளை ஒரு வினாடி பார்த்தான் பிறகு காரியை நோக்கி, "காரி, நீ சென்று மார்க்கியனை என் அறைக்கு அழைத்து வா. இந்தச் சுரங்க வழியை மூடிவிட்டு நான் வருகிறேன்" என்று கூறி காரியை வெளியே அனுப்பினான். அவன் சென்றதும் அம்மன் சிலையிடம் சென்ற அபராஜிதன் அதன் தலையைப் பிடித்துப் பலமாகத் திருகவே சுவர்கள் ஒன்றுபட்டன. மீண்டும் தன்னை அருட்கண்களால் நோக்கிய அம்மனைக் கூர்ந்து நோக்கினாள் கார்குழலி. பிறகு அந்த சிலையை நோக்கி நடந்தாள்.

அம்மன் பக்கத்திலிருந்த விளக்கு சுடர்விட்டு நன்றாக எரிந்து கொண்டிருந்தாலும் மங்கலான வெளிச்சத்தை அறை முழுவதும் பரப்பிக் கொண்டிருந்தது. அம்மன் அருள் விழிகளில் சற்றுக் கேலிச் சிரிப்பும் உதிர்ந்ததைக் கார்க்குழலி கவனித்தாள். அதன் காரணத்தை உணர அவள் பின்பக்கம் திரும்பவேண்டிய அவசியமே ஏற்படவில்லை. அபராஜிதன் தனக்கும் பின்னால் வெகு அருகில் நிற்பதை உணர்ந்தாள்; வெட்கமும் ஆசையும் கலந்த உணர்ச்சிகள் அவளைச் சித்திரவதை செய்தன. முத்துநகை எங்கேயென்று பார்க்கச் சட்டென்று திரும்பினாள். முத்துநகையை அறையில் காணவில்லை. ஆனால் திரும்பிய வேகத்தில் அவள் உடல் அபராஜிதன் மீது சரேலென்று உராய்ந்தது.

46. இன்னும் பத்தே நாட்கள்!

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய வேண்டிய காலம் கடந்து துயிலும் நேரம் நெருங்கிவிட்டதால், கார்குழலியின் பள்ளியறைத் தீபங்கள் பலவும் அணைக்கப் பட்டு அம்மன் அருகிலிருந்த சிறு வெண்கலக் குத்துவிளக்கு மட்டுமே மங்கலான பிரகாசத்தை அறை முழுவதும் பரப்பிக் கொண்டிருந்தது. பள்ளியறைச் சூழ்நிலையும் மங்கலான வெளிச்சமும் சிருஷ்டித்த மயக்கத்துக்குத் தூபம் போட, அறை மூலையிலிருந்த தூபக்கால் அகில் புகையைச் சுருள் சுருளாக எழுப்பிக் கொண்டிருந்தது. அகில் புகையின் சுகந்தத்தை அதிகமாக ஓங்கவிடக் கூடாதென்ற காரணத்தால் எதிரேயிருந்த காட்டின் ஏதோ ஒரு மூலையிலிருந்த மனோரஞ்சித மரம் தனது மலர்களின் நறுமணத்தை தென்றலின் இன்ப அலைகளில் தவழவிட்டு, கார்குழலியின் அறைக்கு அனுப்பிக் கொண்டிருந்தது. பள்ளியறையின் இரண்டு மூலைகளிலிருந்த சாளரங்கள் திறந்திருந்ததால் அறையில் இரண்டு வெள்ளிப் பாளங்களைப்போல் சந்திர வெளிச்சம் பாய்ந்து கிடந்தது. அந்தச் சாளரங்களிலொன்றின் பக்கமாக வளர்ந்திருந்த முல்லைக்கொடியொன்று சாளரத்திலிருந்து சற்று தூரத்தில் போடப்பட்டிருந்த கார்குழலியின் மஞ்சத்தைப் பாதுகாத்த போதிலும் அந்தப் பாதுகாப்பையும் சந்திரன் இடையிடையே உடைத்துத் தனது வெள்ளி அஸ்திரங்களில் சிலவற்றை அவள் பஞ்சணையின்மீது உதிர்த்திருந்த காரணமாக அவள் படுக்கையில் இயற்கையின் வைரங்கள் இழைந்து கிடந்தன. மஞ்சத்தின் நாலு கால்களின் உச்சியிலும் செதுக்கப்பட்டிருந்த பதுமைத் தலைகளது தங்கக்கவசங்களின் கண்களில் புதைக்கப்பட்டிருந்த மரகத மணிகள் சந்திர கிரணங்களால் தாக்கப்பட்டுச் சிற்சில பச்சைப் பட்டைகளைப் பஞ்சணைத் தலையணைகளில் பதியவைத்திருந்தன. அரசகுமாரி படுப்பதற்காக வழக்கம்போல் முத்துநகை படுக்கையில் தூவியிருந்த உதிரிமல்லிகை மலர்கள் பாதி நிலவொளியிலும் பாதி விளக்கொளியிலும் சிக்கி கண்களை மட்டுமன்றிக் கருத்தையும் கவரும்

வண்ணம் இணையற்ற அழகுடனும் நறுமணத்துடனும் அரசகுமாரியை எதிர்பார்த்து விழித்துப் படுத்துக் கிடந்தன. அறையின் சுவரிலிருந்த ரதியின் சித்திரமொன்று அந்த மல்லிகை மலர்களின் அசட்டுத்தனத்தைப் பார்த்து, ''அரசகுமாரி இப்பொழுது எப்படி வருவாள்?'' என்று வெட்கச் சிரிப்பு சிரித்துக் கொண்டிருந்தது.

அப்பொழுது கார்குழலி அசையும் நிலையில் கூட இல்லை. அபராஜிதன் தனக்கு வெகு அருகில் நிற்கிறானென்பதை உணர்ந்து விட்ட மாத்திரத்திலேயே உணர்ச்சி வெள்ளத்தில் சிக்கி விட்ட அவள் மனம், அவன் திடீரெனத் திரும்பியதும் உடல் மீது உராய்ந்த வேகத்தால் ஏற்பட்ட இன்ப அதிர்ச்சியில் அடியோடு ஸ்தம்பித்து நின்று விட்டது. இருப்புச் சலாகையுடன் இருப்புச்சலாகை வேகமாக உராயும் போது வாரிக்கொட்டும் தீப்பொறிகள் போல உடல் பூராவும் அள்ளி வீசப்பட்ட காமாக்கினியால் கணநேரம் கருத்தை அறவே இழந்த கார்குழலி, தன்னைத் திடப்படுத்திக் கொள்ள, மலரினும் மென்மையான கால்களைத் தரையில் சற்றே அழுத்தி ஊன்றினாள். லேசாக நடுங்கிய அவள் கரம் சற்றுப் பின்னடைந்து திரைச்சீலையோடு அம்மன் கையிலிருந்த செண்டையும் பலமாகப் பிடித்துக் கொண்டது. அவள் அழகிய இடை சற்றே துவண்டது. உதடுகள் ஒன்றுடன் ஒன்று கூடி ஒரு வினாடி இழைந்த பிறகு செயலற்று நின்றன. கண்கள் சலனப்பட்டுத் தரையை நோக்கின.

தாமரைத் தளிர் போன்ற மிருதுவான அவள் சரீரத்தின் மோதலால் அபராஜிதனும் ஒரு வினாடி நிலைகுலைந்தே போனான். அவனுக்குப் பின்னால் நின்று,வாரி விடப்பட்ட அவள் கரிய கூந்தலையும், வளைந்து எடுத்துக் கட்டப்பட்டுச் சுருண்டு கிடந்த கருநாகம்போல் காட்சியளித்த அவள் பின்னலையும், அப்பின்னல் கட்டைச்சுற்றி சூடப்பட்டிருந்த கதம்பச் சரத்தையும்,கரியபின்னல்கட்டுக்குக் கீழே வெளேரென்று தெரிந்த கழுத்தையும் சேலை

மறைத்திருந்த இதர வனப்புப் பிரதேசங்களையும் பார்த்து மதியைப்பறிகொடுத்த அபராஜிதன், கார்குழலி திடீரெனத் திரும்பியதால் எத்தனை எத்தனையோ இன்ப அலைகள் உடம்பில் ஊடுருவிச்செல்ல என்ன செய்வதென்று அறியாமல் ஒரு கணம் திகைத்துப் போனான். அந்தத் திகைப்பிலிருந்து அவன் மனம் மீண்ட பிறகும் கண்கள் மட்டும் ஒரு நிலையில் நில்லாது அரசகுமாரியின் உருவத்தை ஆராயத் தொடங்கின. அவனுக்கு உதவுவதற்கோ என்னவோ திரைச் சீலைக்குப் பின்னாலிருந்த சிறு குத்து விளக்கு தன் ஒளியை ஓரளவு கார்குழலியின் உடையிலும் பாய்ச்சியிருந்தது. கார்குழலியின் உடையை நெய்தவனும் சேனாதிபதியின் அபிலாஷையைப் புரிந்துகொண்டிருக்க வேண்டும். அவள் அன்று அணிந்திருந்த மேகவர்ணப் பட்டுச் சேலை மிக மெல்லியதாயிருந்தது.

அவள் பூவுடலை அதிகமாக உறுத்தக் கூடாதென்ற எண்ணத்தால் மெள்ளவளைந்து அவளைச் சுற்றிச்சென்று ஆங்காங்கு மடிந்தும் தவழ்ந்தும் கிடந்த அந்தச் சேலை மார்பின் பகுதியில் மட்டும் லேசாக நெகிழ்ந்து கிடந்ததால் அபராஜிதன் சிலவினாடிகள் மூச்சைக்கூட விடாமல் மெய் மறந்து நின்றான். அவள் கழுத்தில் அணிந்திருந்த ஆரங்களிலிருந்த வைர, வைடூரிய மணிகள் அவள் அழகிய மார்பில் புரண்டு மெல்லிய சேலைக்கு அடியிலிருந்து சேனாதிபதியைப் பார்த்து நகைத்துக் கொண்டிருந்தன. ஆரமொன்றின் அடியில் பதிக்கப்பட்டிருந்த புலிநகம் சற்றுப் பக்கவாட்டில் திரும்பிக் கிடந்தது. படுப்பதற்காக மாற்றப்பட்ட அவள் ரவிக்கை மேல் பாகத்தில் பட்டுக் கயிற்றாலும் கீழே துணி ஓரங்களாலும் நன்றாக இழுத்துப் பிணைக்கப்பட்டிருந்தாலும் அவள் அழகின் திண்மை காரணமாகச் சற்று இடைவெளி கொடுத்து சேனாதிபதியைப் பைத்தியமாக அடித்துக் கொண்டிருந்தது. போதாக்குறைக்கு, கார்குழலி வேறு மெள்ளக் கண்ணை நிலத்திலிருந்து உயர்த்தி அவனைப் பார்த்தாள்.

கார்குழலியின் கரிய விழிகளைச் சந்திக்கக்கூடச் சக்தி யற்றுவிட்ட அந்த வீரனின் கூரிய விழிகள் அவள் முகத்தின் பக்கமே போகாமல் நின்றன. இரண்டு கரங்களும் அவள் அழகிய இடையில் மெள்ளத் தவழ்ந்து அந்த அழகியை மெள்ள முன்னோக்கி இழுத்தன. கார்குழலியின் சரீரத்தில் விவரிக்க இயலாத இன்ப அலைகள் பாய்ந்து சென்றன. அவன் கரங்களின் அழைப்பைஏற்று அவன்மீது சாய்ந்துவிட்ட அவள் உடல், லேசாக அவன்மீது அசைந்து துவண்டது. முதலில் மெதுவாக அவள் இடையில்தவழ்ந்த அவன் கரங்கள் பலமாக அழுந்த ஆரம்பித்தன. அவன் முகம் அவள் கழுத்துக்காகத் தாழ்ந்தது.

கார்குழலி மெல்ல நெகிழ்ந்தாள். துவண்ட சரீரம் கீழே விழாதிருப்பதற்காகவோ, என்னவோ ஒரு கையால் அவன் உடலைச் சற்று இறுகப் பிடித்துக்கொண்டாள். சிறிது நேரத்திற்கெல்லாம் தன் சரீரம் தன் வசத்திலில்லாததை உணர்ந்தாள். அவன் கரங்கள் அவள் உடலில் வளைந்து வளைந்து சென்றன கார்குழலி என்ன செய்வதென்று அறியாமல் கண்களை மூடிக்கொண்டாள். அவன் கன்னம் ஒரு வினாடி அவள் கன்னத்துடன் இழைந்தது. ஏதோ சொல்ல முயன்றாள். உதடுகளும் சிறைப்பட்டுக் கிடந்ததால் பேச இயலவில்லை.

பரஸ்பரப் பிணைப்பில் சிக்கி, உலகத்தையே மறந்துவிட்ட அவ்விருவரில் அபராஜிதனே முதலில் சுய உணர்வு பெற்றான். கன்னிமாட முற்றுகை ஒருவழியாகத் தீர்ந்து கார்குழலி சுதந்திரம் பெறும்வரையில் அவளைத் தீண்டுவதில்லையென அடிகளாருக்குக் கொடுத்த வாக்கைத் தான் அடியோடு காற்றில் பறக்கவிட்டுவிட்டதை நினைத்துப் பார்த்து அதன் விளைவாக அரசகுமாரியை விட்டுச் சற்றே விலகமுயன்றான். ஆனால் கார்குழலியின் மென்மையான சரீரம் அவன் அளித்த விடுதலையை ஏற்க மறுத்தது. சற்றே உயர்ந்து வெட்கத்துடன் அவனை நோக்கிய விழிகளில், ''ஏன் இப்படி?'' என்ற ஏக்கக் கேள்வி நன்றாகத் தொனித்தது

அந்தப் பார்வையின் அர்த்தம் அபராஜிதனுக்கு நன்றாகப் புரிந்தாலும் புரியாதவன்போல் பாசாங்கு செய்து அவள் காதுக்கருகில் நன்றாகக் குனிந்து, ''அரசகுமாரி'' என்றான் மெள்ள.

''ஹூம்'' என்றாள் குழலி

''நேரமாகிறது...'' என்று ஏதோ ஆரம்பித்தான் அபராஜிதன்.

கார்குழலி மறுமுறை கண்ணை உயர்த்தாமல் கீழே பார்த்தபடியே கேட்டாள், ''எதற்கு நேரமாகிறது?'' என்று.

அபராஜிதனுக்கு என்ன பதில் சொல்வதென்று ஒரு வினாடி புரியவில்லை. பிறகு மெள்ளச் சொன்னான்: ''நீங்கள் படுத்துக் கொள்வதற்கு.''

''ஓகோ!'' என்று சொல்லிவிட்டு லேசாகச் சிரித்தாள் குழலி.

''எதற்காகச் சிரிக்கிறீர்கள்?'' என்று கேட்டான் அபராஜிதன்.

''உங்கள் பேச்சுக்கும் செயலுக்கும் வித்தியாசம் நிரம்ப இருக்கிறதே என்பதற்காகச் சிரித்தேன்'' என்று கார்குழலி சொல்லிவிட்டுப் புன்முறுவலொன்றையும் உதிர்த்தாள்.

''சொல்லுக்கும் செயலுக்கும் வித்தியாசமா?''

''ஆமாம்; என்னை அரசகுமாரி நீங்கள் என்றெல்லாம் மரியாதையாகத்தான் அழைக்கிறீர்கள்....'' வாசகத்தை முடிக்காமலே விட்டாள் மழவராயன் மகள்.

அவள் எதைச் சுட்டிக்காட்டுகிறாள் என்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டான் பாண்டிய சேனாதிபதி. அவளுக்குப் பதில் சொல்ல வகையறியாமல் திணறினான். அவளை அணைத்துப் பிடித்திருக்கும் தான் பேச்சில் மட்டும் மரியாதை காட்டுவதில் அர்த்தமில்லையென்பதை அறிந்துகொண்ட அபராஜிதன் பேச்சின் தோரணையை மாற்றி ''குழலி'' என்றழைத்தான்.

குழலி தன் தலையை நன்றாக நிமிர்த்தி மோகனப்பார்வையொன்றை அவன்மீது வீசி, ''இப்பொழுதுபொருத்தமாயிருக்கிறது'' என்று சொல்லி மீண்டும் லேசாகச் சிரித்தாள். அபராஜிதன் முகம் தீவிர சிந்தனையைக் காட்டியது. சாதாரணமாக அவன் இதழ்களில் தவழ்ந்து கொண்டிருக்கும் கேலிச்சிரிப்புக்கூட அந்தச் சமயம் மறைந்து கிடந்தது. அவளைப் பிடித்திருந்த கரங்களிலொன்று அவனைவிட்டு நகர்ந்தது. இடது கரத்தால் மட்டும் அவன் இடையைத் தாங்கிப் பிடித்த வண்ணம் அபராஜிதன் சொன்னான். ''குழலி! மனித வாழ்க்கை விசித்திரமானது. இச்சிப்பதையெல்லாம் மனிதன் அடைய முடிவதில்லை'' என்று.

கார்குழனியும் சற்று யோசித்துவிட்டு, ''மனித வாழ்க்கை விசித்திரமானதுதான். இச்சிப்பதையெல்லாம் அடைய முடிவதில்லைதான் ஆனால் அடைந்துவிட்டதை ஏன் இச்சிக்காமலிருக்கவேண்டும்'' என்று வினவினாள்.

''கைக்கெட்டிய பழங்களையெல்லாம் பறிக்கமுடியுமா?''

''ஏன் முடியாது?''

''அனுமதி வேண்டாமா?''

''ஏன் அனுமதியில்லை!''

''தடுப்பதற்கு அதிகாரமுள்ளவர்கள் தடுப்பார்கள்.''

''தடுத்ததாக யார் சொன்னது?'' இந்தக் கேள்வியைக் கேட்ட கார்குழலி, தன் இடக் கரத்தை எடுத்து அவன்மேல் வைத்து, ''சொல்வதைச் சற்று விளக்கமாகத்தான் சொல்லுங்களேன்'' என்றாள்

''குழலி! நீ உலகமறியாதவள்; ஆனால் உன் நன்மையில், அக்கறையுள்ளவர்கள் பலரிருக்கிறார்கள்...'' என்றான் அபராஜிதன்.

''அவர்களில்...?''

''அடிகளார் ஒருவர்.''

''சரி....''

''நான் உன்னைத் தனிமையில் சந்திப்பதை அவர் விரும்பவில்லை.''

கார்குழலி சற்று நேரம் பதில் சொல்லவில்லை. பிறகு கேட்டாள்: ''அடிகளாருக்கு இதில் என்ன ஆட்சேபனை இருக்க முடியும்?''

அபராஜிதன் அவளைவிட்டுச் சற்று விலகி நின்றான். சம்பாஷணையின் காரணமாக மெள்ள மெள்ள இருவரும் பூரணமாகச் சுயநிலைக்கு வந்துவிட்டதால் அபராஜிதன் விஷயத்தை விளக்கத் தொடங்கினான்.

''குழலி! அன்று அல்லிப் பூம்பொழிலில் நாமிருவரும் சந்தித்தோமல்லவா?''

''ஆமாம்''

''அதை அடிகளார் பார்த்துவிட்டார்.''

''அதனாலென்ன?'

''அதனால்தான் என்னை எச்சரித்தார். இந்த முற்றுகை ஒரு வழியாக முடியும்வரையும் உன்னை அணுகக்கூடாதெனத் தடை விதித்தார்.''

''அதனால்தான் நீங்கள் மறுநாள் முதற்கொண்டு நந்தவனத்துப் பக்கமே வரவில்லையோ?''

''ஆமாம்,''

''நல்ல கெட்டிக்காரர்.''

''நான் என்ன செய்வது குழலி!''

''என்ன செய்வதா? உண்மையை அடிகளாரிடம் சொல்வதுதானே?''

''உண்மைதான் அவருக்குத் தெரியுமே!''

''தெரிந்தபின் தடை செய்வதில் என்ன அர்த்தமிருக்கிறது? தமிழகத்துப் பெண் தன் உள்ளத்தை ஒருவரிடம் ஒப்படைத்தபின் மாற்றுவாளென்று அடிகளார் நினைக்கிறாரா?

''அப்படி நினைக்கவில்லை குழலி! அடிகளார் சொன்னதில் எந்தத் தவறுமில்லை. ஒருவேளை இந்த முற்றுகையில் வீரபாண்டியன் வெற்றிகொண்டு உன்னை மணந்தால் நீ பரிசுத்தமான ராணியாக இருக்கவேண்டும்

என்பது அடிகளாரின் அவா. இதில் தவறேதுமில்லையே. யுத்தத்தில் ஜெயாபஜெயம் யார் பக்கம் சொல்ல முடியும்?"

கார்குழலி இகழ்ச்சி ததும்பும் பார்வையொன்றைச் சோதிப்பதுபோது வீசினாள்: "நீங்களும் அடிகளாரும் என்னைத் தெரிந்து கொண்டேது அவ்வளவுதானா? வீர பாண்டியன் இந்தக் கோட்டையைப் பிடிக்கலாம். மழவராயன் மகளை உயிருடன் பிடிக்க முடியாது என்பதை அடிகளாருக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்களும் புரிந்துகொள்ளுங்கள்" என்றாள்.

வீரம் ததும்பும் அபராஜிதன் அவள் கூறுவதைச் செய்து முடிக்கக்கூடியவளென்பதை நன்றாகப் புரிந்து கொண்டான். அவள் பார்வையில் பிரதிபலித்த இகழ்ச்சி அவள் உள்ளத்தின் கொதிப்பிலிருந்து எழுந்ததென்பதையும் தெரிந்துகொண்டான். இருந்தாலும் தன் மனத்தி லெழுந்த எண்ணங்களை வெளிக்குக்காட்டாமல் அவளைச் சமாதானப்படுத்த மீண்டும் அவள் உடலைத் தன் இரு கைகளாலும் அணைத்து மெள்ள அழைத்துச் சென்று பஞ் சணையில் அவளை உட்காரவைத்துத்தானும் உட்கார்ந்து கொண்டான்.

அத்தனையிலும் சமாதானமடையாத கார்குழலி அவனை ஏறெடுத்துப் பார்க்காமல் குனிந்த தலை நிமிரா மலே உட்கார்ந்திருந்தாள். அவள் தலையைத் தன் கையால் நிமிர்த்திய அபராஜிதன், "கார்குழலி. இதோ பார்! இதில் கோபிப்பதற்கு எதுவுமில்லை. உன் எண்ணம் அடிகளாருக்குத் தெரியாதா? தெரிந்தும் நமக்குத் தடை விதித்தாரென்றால் காரணமில்லாமலா விதிப்பார்? இதில் சம்பந்தப்பட்டிருப்பது நீயும் நானும் மட்டுமல்ல" என்றான்.

"வேறு யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள்?"

"லட்சக்கணக்கான மக்கள், தமிழ் சமூகமே சம்பந்தப் பட்டிருக்கிறது. தமிழ்நாட்டின் இக்கட்டான சரித்திரக் காலத்தில் நாம் ஜீவிக்கிறோம். உன் ஒருத்தியின் காரண மாகத் தமிழ்நாட்டில் ரத்தவெள்ளம் ஓடலாம். நீ

சிக்கலில்லை என்று கா...
...ன்றும் யார் லசமும் சிக்கலில்லை கோட்டைமீது கடுமையான
...ன் வீரபாண்டியன் இக் கோட்டைமீது கடுமையான
நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. நீ பிறனுக்குச்
சொந்தம் என்று தெரிந்தால் தன்னிடமுள்ள அத்தனை
சிங்களப் படைகளையும் இங்கே கொண்டுவந்து குவிக்க
லாம். பிறகு என்ன நேரும் என்ன நேராது என்று
யாரும் சொல்ல முடியாது. சிங்களப் படைகள் பூராவாக
இங்கு வந்தால் மதுரையில் பாண்டியப் படைகளின்
புரட்சி ஏற்படலாம். நிலைமை எப்படியாகும், எப்படித்
திரும்பும் என்பதை நிர்ணயிக்க முடியாது. இதையெல்
லாம் யோசித்துத்தான் அடிகளார் சற்று எச்சரிக்கையுடன்
இருக்கிறார். இதில் தவறேதுமில்லை, சில நாட்கள்
பொறு, குழலி இந்த வீரபாண்டியன் தோற்று ஓடச் சில
நாட்களே இருக்கின்றன. அதுவரையில் பொறு..."
என்று சொல்லிக்கொண்டே போனவனை இடை மறித்த
கார்குழலி, "என்ன? இன்னும் சில நாட்களா? அதென்ன
அப்படி நிச்சயமாகச் சொல்கிறீர்கள்?" என்றுகேட்டாள்.

"சந்தேகமே வேண்டாம். இன்றையிலிருந்து பத்தா
வது நாள் வீரபாண்டியன் இந்த முற்றுகையைக் கைவிட்டு
ஓடப் போகிறான்" என்று சொன்ன அபராஜிதன்
கட்டிலை விட்டு எழுந்தான்.

'என்ன ஒரே புதிராக இருக்கிறதே!" என்றாள் கார்
குழலி, பஞ்சணையிலிருந்து எழுந்திருக்காமலே.

"இதற்குமேல் என்னை ஏதும் தற்சமயம் கேட்காதே.
என்னை நம்பு குழலி! வீணாக மனத்தைத் துன்புறுத்திக்
கொள்ளாதே. நமக்கு நல்ல காலம் வர நாட்கள் அதிக
மில்லை படுத்துக்கொள்" என்று சொல்லிவிட்டுப்
படுக்கையில் உட்கார்ந்திருந்த கார்குழலியை மெல்லத்
தன் இரு கைகளாலும் பிடித்து படுக்க வைத்துவிட்டு
அறையிலிருந்து வெளியேறினான். அவன் அறையைவிட்டு
வெளியேறிய பிறகு வெகுநேரம் மட்டும் கார்குழலி
தூங்காமல் பஞ்சணையில் புரண்டுகொண்டேயிருந்தாள்.
...னும் பத்து நாட்களில் வீரபாண்டியனை எப்படி

ஓட்டப் போகிறார். என்று தனக்குள்ளேயே கேட்டுக் கொண்டு விடையறியாதவனாய்த் தவித்தான்.

அதே சமயத்தில் வீரபாண்டியனை முறியடிப்பதற்கான திட்டத்தைச் சரியாக வகுத்துக்கொண்டே அபராஜிதன், தன் அறைக்கு வந்த மார்க்கியனை நோக்கி மிக விசித்திரமான உத்தரவொன்றைப் பிறப்பித்தான்.

''மார்க்கியா! கள்ளர்கள் உன் சொற்படி கேட்பார்களல்லவா?'' என்று கேட்டான் அபராஜிதன்.

''கண்டிப்பாய்க் கேட்பார்கள்'' என்றான் மார்க்கியன்.

''இதை ரகசியமாக வைத்துக்கொள், மார்க்கியா! விக்ரம பாண்டியன் கள்ளர்களை அணுகிக் கோட்டை வாசலை வீரபாண்டியனுக்குத் திறந்துவிட உதவும்படி கேட்பான்...'' என்ற அபராஜிதனைப் பார்த்துப் பிரமித்துப்போன மார்க்கியன், ''அவ்வளவு தூரத்துக்கு வந்துவிட்டானா? சரி, கள்ளர்களை விட்டே அவனை வெட்டிப் போடுகிறேன்'' என்று ஆத்திரத்துடன் கூவினான்.

''அவசரப்படாதே. அதுதான் கூடாது!'' என்றான் பாண்டிய சேனாதிபதி.

மார்க்கியன் பிரமிப்பு அதிகமாயிற்று. ''வேறு என்ன செய்ய வேண்டும் பிரபு?'' என்று வினவினான்.

''விக்ரம பாண்டியன் ஏற்பாட்டுக்கு கள்ளர்களை ஒப்புக்கொள்ளச் சொல்'' என்று அபராஜிதன் உத்தரவைக் கேட்ட மார்க்கியன் பாண்டிய நாட்டுப் பிரபுவுக்கு ஒருவேளை பைத்தியம் பிடித்திருக்குமோ என்ற சந்தேகத்தால் அபராஜிதன் முகத்தைக் கூர்ந்து நோக்கத் தொடங்கினான்.

47. பெரிய பல்லவராயர்

கங்கையினும் புனிதமான காவிரியின் பாய்ச்சலால் பயிரும் மன்னுயிரும் செழித்துச் சிறந்தோங்கிய சோழ மண்டலத்தின் மாநகரங்களில் ஒன்றான கங்கைகொண்ட

சோழபுரத்தின், பிரம்மாண்டமான கட்டிடங்களின் நிழல்கள், சற்றுத் தூரத்தே தெரிந்த சோழமங்கலம் என்ற ஏரியின் பெரிய நீர்ப்பரப்பில் பிரதிபலித்துக்கொண்டிருந்தன. வடநாடுவென்று வாகை சூடிய இராஜேந்திரன் வல்லமைக்கும் தமிழ்ச் சிற்பிகளின் கைத்திறனுக்கும் அடையாளமாக விளங்கிய அந்த நகரத்தின் கோட்டைச் சுவர்களைத் திடீரென்று அணுகப் பயந்த காலைச்சூரியன் எதிரேயிருந்த சோலை மரங்களின் கிளை இடுக்குகள் வழியாகத் தன் கிரணங்களைப் பாய்ச்சி ரகசியமாகப் பார்க்கத் துவங்கினான். நகரத்துக்கு நாயகமாக விளங்கிய சோழன் கேரளன் என்ற பிரசித்தி பெற்ற மன்னர்பிரான் மனையில் இன்னிசைக் கருவிகளின் உதய நாதம் எழுப்பி, அரண்மனைச் சுவர்களில் தாக்கி அரண்மனையையே நாதமயமாக அடித்துக்கொண்டிருந்தது.

அரண்மனையை அடுத்தாற்போல் ஏவலாளருக்காக நிர்மாணிக்கப்பட்டிருந்த 'திருமஞ்சனத்தார் வேள'த்தில் விடியுமுன்பே ஏற்பட்ட வேலைபரபரப்பு, கதிரவன் தலை காட்டியதும் அதிகமாகி ஏவலாளர் அங்குமிங்கும அதிதுரிதமாக நடமாடிக் கொண்டிருந்தாலும், மன்னன் துயிலெழாத காரணத்தால் சப்தம் சிறிதும் தெரியாமல் அடிமேலடி வைத்து நகர்ந்து கொண்டிருந்தனர். ஆனால் மன்னர்க்கு மன்னனாய் உயிர்க்கெல்லாம் பேருயிராய் விளங்கிவந்தவனும், ஒன்பதாம் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ள கருவூர்த்தேவரின் பதிகமொன்றால் சிறப்பிக்கப்பட்டவனுமான சிவபிரான் உறையும் கங்கைகொண்ட சோழேச்சரத்தின் சங்கங்கள் பூம்பூம் என்று சப்தித்துக்கொண்டிருந்ததன்றி மேளவாத்தியங்களும் பலமாக முழங்கிக் கொணடிருந்தன. நூறடிச் சதுரமாக அமைந்துள்ள அந்த நூற்றெழுபதடி உயரமுள்ள ஒன்பது அடுக்குச் சோழேச்சரக் கோபுரமும் இராஜராஜன் சிருஷ்டித்த தஞ்சைப் பெரிய கோயிலுக்குத் தன் நிழலை எந்த இடத்திலும் பாய்ச்சாது கர்வத்துடன் ஆகாயத்தில் தலைநிமிர்ந்து

நின்றுகொண்டிருந்தது. அந்தக் கோவிலில் இருந்த சிற்ப வேலைப்பாடுகளும் ஒற்றைச் சிவலிங்கமும் சிங்கத்தின் வயிற்றில் சிங்கமே பிறக்கும் என்பதுபோல் சிங்கத்தின் வயிற்றில் பிறந்த இராஜேந்திர சோழன் இராஜராஜனின் தந்தைக்குச் சிறிதும் சளைத்தவனல்ல கலை உணர்ச்சியில் என்பதற்குச் சான்றுகளாக விளங்கிவந்தன.

இத்தனை அழகான நகருக்கு மெருகு கொடுக்காதிருப்பது தவறு என்ற எண்ணத்தால் மெல்ல மெல்ல நகரத்தின் மதில்களையும் சோழேச்சரத்தின் தங்கக் கலசங்களையும் அரண்மனையின் கிரீடங்களையும் தழுவத் தொடங்கிய சூரிய கிரணங்கள் சோழ கங்கத்தின் நீர்ப்பரப்பிலும் பாய்ந்து வெள்ளி அலைகளைத் தரைக்கு அனுப்பிக் கொண்டிருந்தன. சூரியோதயத்தை உணர்ந்துவிட்ட அரண்மனைக் கோட்டத்திலிருந்த போர் யானைகள் அசைந்தாடி எழுந்திருந்து திரும்பித் திரும்பி உடலைக் குறுக்கித் துதிக்கைகளை உயர்த்திப் பிளிறியதால் ஏற்பட்ட சப்தம் நகரத்துக்குப் புறம்பே கிடந்த சோலைகளை ஊடுருவிச் சென்றதன்றி, கட்டிட மதில் சுவர்களிலும் தாக்கிப் பயங்கரமாக எதிரொலி செய்தது. விடியற்காலையிலேயே திருமஞ்சன நீரைக் கொண்டுவரச் சோழ கங்கத்துக்கு ஓட்டிச் செல்லப்பட்ட கோவில் யானைகள் நீரில் விழுந்து பெரிய அலைகளைத் தரையில் மோதவிட்டும் துதிக்கையால் நீரை உறிஞ்சி ஆகாயத்தில் வாணம் போல் விட்டும் விளையாடிக் கொண்டிருந்தன. இரவுக் காவலருக்கு ஓய்வளிக்கக் காவல் மாற்றவேண்டிய வீரர்கள் பலர் புரவிகளில் ஏறி, கனவேகமாகச் சென்றுகொண்டிருந்ததால் ராஜவீதிகளில் ஏற்பட்ட குதிரைக் காலடிகள் நகரமெங்கும் பலமாகச் சப்தித்துக் கொண்டிருந்தன. கடைவீதிகள் திறக்கத் தொடங்கியதால் பாத்திரங்களின் சப்தமும், உருண்டோடிய கட்டை வண்டிகள் அரவமும், ஒரு பக்கத்திலிருந்து வீசிக் கொண்டிருந்த புஷ்பங்களின் வாசனையும் கங்கை கொண்ட சோழபுரத்தின் பகற்கால நடவடிக்கைகள் துவங்கிவிட்டதை அறிவுறுத்தின. பகல்

வேளையின் முதல் ஜாமத்தில் சப்திக்கவேண்டிய உதய காலத் தாரைகள் கோட்டை வாசலில் திரும்பத் திரும்ப முழங்கத் துவங்கின. ஏரியில் ஸ்நானம் செய்வதற்காகத் தோளில் பட்டாடைகளையும் செல்விய இடைகளில் குடங்களையும் தாங்கி நடந்த அந்தச் சோழபுர மங்கையரின் செங்கை வளைகள் குலுங்கியதால் கால் கொலுசுகளின் கிண்கிணிகள் முரன்று பாடியதாலும் ஏற்பட்ட இன்ப கீதத்தை மற்ற நாடுகளுக்குக் காட்டுவதற்காகக் காற்றுக் கடவுள் தன்னுடைய தென்றல் தூளியில் தூக்கி எடுத்துக்கொண்டு துரிதமாக வடக்கு நோக்கிச் செல்லலானான்.

சூரியோதயத்தால் தட்டி எழுப்பப்பட்ட கறவைகளும் கன்றுகளும் காளைகளும் ஆயர்களால் ஓட்டிச் செல்லப்பட்டு மந்தை மந்தையாய் நகரத்துக்கு வெளியே தொலை தூரத்தில் கிடந்த மேய்ச்சல் வெளிகளுக்காகச் சென்றுகொண்டிருந்தன. பயமறியாக் கன்றுகள் சில, தங்கள் கழுத்தின் வெண்கல மணிகள் ஒலிக்க மந்தையை விட்டுப் பிரிந்து ஓடி, வாலை முறுக்கிக்கொண்டு துள்ளி எழும்பிக் குதித்தன. சில முரட்டுக்காளைகள் மட்டும் தலைகளைத் தாழ்த்திக் கொம்பை நீட்டிக்கொண்டு பக்கத்தில் சென்ற மாடுகளைக் குத்திச் சண்டைக்கிழுத்தன. ஆயர்கள் நாற்புறத்திலும் ஓடி மந்தையிலிருந்து பிரிந்த கன்றுகளை விரட்டி மந்தையில் அடக்கியும் மந்தைக்குள் புகுந்துமுட்டிய மாடுகளைக் கழிகளால் புடைத்து அடக்கியும், இடையே கிடைத்த சில விநாடிகளில் உல்லாசமாகப் பாடிக்கொண்டும் போய்க்கொண்டிருந்தனர். சோழ கங்கத்தின் நீர்ப் பரப்பாலும் காவிரித்தாயின் வாய்க்கால்களாலும் வருடம் பூராவும் பாசனம் கிடைத்துக்கொண்டிருந்ததால் சதாசர்வ காலமும் பயிர்த்தொழில் நடந்து, சோழவள நாடு சோறுடைத்து என்ற பெருமையை உலகத்துக்கு அறிவித்துக் கொண்டிருந்த சோழ மண்டலத்தின் அந்தக் கோ நகரத்தின் கழனிவெளிகள் பச்சைப்

பசேலென்று பெரிய பயிர்ப் பாளங்களை நகரத்தைச்சுற்றி விரித்திருந்தன. 'ஓங்கு பெருஞ்செந்நெலூடு கயலுகள், பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்ப' என்று ஆண்டாள் கண்ட கனவைப் பதினொன்று பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் நனவாக்கித் தந்த அந்த மாநகரத்தின் சோழ கேரளத்திலே, அரண்மனையிலிருந்த தன் பள்ளியறைப் பஞ்சணையிலே, படுத்திருந்த இரண்டாவது இராஜாதிராஜனை மட்டும் நகரத்தில் அத்தனை உதய கால சப்தங்களும் பாதிக்காததால் மன்னன் நித்திரை கலையாமல் உறங்கிக் கொண்டேயிருந்தான் அவன் உறங்கலாம். ஏனென்றால், அவனுக்காக விழிக்கவும் அரசை நடத்தவும் இணையற்ற பக்கபலமாக விளங்கி வந்தான் சோழப் பேரமைச்சனான திருச்சிற்றம்பலமுடையான் பெருமான் நம்பிப் பல்லவராயன்.

வேதவனமுடையான் அம்மையப்பனான அண்ணன் பல்லவராயன் சோழ சேனாதிபதியாயிருந்தாலும் இரண்டு பல்லவராயர்களிடையேயும் வித்தியாசம் தெரிய வேண்டிய காரணத்தாலும் பேரமைச்சனைப் பெரிய பல்லவராயரென்றும் சேனாதிபதியைச் சிறிய பல்லவராயரென்றும் அழைத்து வந்தார்கள். மக்கள் மதிப்புக்கும் சோழர் பெருமைக்கும் பகைவர் நடுக்கத்திற்கும் காரணமாக விளங்கி வந்த இரண்டு பல்லவராயர்களும், வீரபாண்டியன் கன்னியாடத்தை முற்றுகையிட்டுத் திண்டாடிக்கொண்டிருந்த அதே காலத்தில் சோழ கேரளத்தின் அந்தரங்க அறையொன்றில் மந்திராலோசனையில் ஈடுபட்டிருந்தனர். ஆகாயத்தை அளாவி நின்ற அந்த மந்திராலோசனை அறை பெரிய கூடத்தைப் போல் விசாலமாக நிர்மாணிக்கப்பட்டிருந்தது. தமிழகத்தின் சரித்திரத்தில் பெரிய மாறுதல்களை விளைவித்த திருப்புறம்பியப் போரிலிருந்து கங்கைகொண்ட சோழன் காலம்வரை நிகழ்ந்த போர்களையும் அவற்றில் சோழர் கண்ட வெற்றிகளையும் குறிக்கும் வண்ணச் சித்திரங்கள் பல சுற்றிலுமிருந்த சுவர்களில் தீட்டப்பட்டிருந்தன. சோழர்களின் கொடி அடையாளமான பெரும் புலியொன்றை வெள்ளியில் செய்து தீவிழி விழிக்க விழிகளில் சிவப்புக் கல்லையும் பொறுத்தி அறையின் நடுவில் நிறுத்தியிருந்தான் அரண்மனைச் சிற்பி. அறைமூலையிலிருந்த ஸ்வர்ண மஞ்சத்தில் அமர்ந்து வயோதிகத்தின் காரணமாகச் சற்று காலை நீட்டிச் சாய்ந்துகொண்டிருந்த பேரமைச்சர் பெரிய பல்லவராயர் கண்கள் புலியின் கண்களைவிடச் சற்று அதிகமாகவே ஜொலித்துக் கொண்டிருந்தன.

வயோதிகத்தின் சகல அடையாளங்களும் பெரிய பல்லவராயரைப் பற்றிக்கொண்டிருந்தன. உடல் பூராவும் தசைகளில் ரத்தம் சுண்டிச் சுருங்கிவிட்டதை அங்கிக்குப் புறம்பே தெரிந்த மெல்லிய கைகளும் விரல்களும் நிரூபித்தன. அவர் கால்களில் அணிந்திருந்த வெள்ளிக் குமிழ் பாதகுறடுகளை லேசாகக் கவ்வியிருந்த கட்டை விரல்களும் அதற்கடுத்த விரல்களும் உடலில் சக்தி குறையவில்லையென்பதையும் அது உரமாகவே யிருக்கிறதென்பதையும் நிரூபித்தன. தலை பூராவும் நரைத்துப்போன கேசங்கள் முகத்தைச் சூழ்ந்து வெண் மேகங்களைப் போலக் காட்சியளித்தன. மீசையும் வெண்மையடைந்திருந்தாலும் மிகப் பயங்கரமாக முறுக்கிவிடப்பட்டிருந்தது. அந்தப் பேரமைச்சனின் லலாடப் பிரதேசத்தில் இழுத்துப் பூசப்பட்ட சோமேச்சரப் பெருமானின் திருநீறு அவரைச் சிவப்பழமாக அடித்ததன்றி முகத்தில் இயற்கையாக இருந்த கம்பீரத்தை அதிகப்படுத்தியது. அவர் தோளில் தவழ்ந்து பாதம் வரையில் தொங்கிய சரிகைப் பட்டு அங்க வஸ்திரத்தை மோதிரம் தரித்து அவரது கை விரல்கள் இரண்டும் மஞ்சத்தின் பிடியில் அழுத்திப் பிடித்துக்கொண்டிருந்தன பெரிய பல்லவராயர் அன்று ஆழ்ந்த சிந்தனையிலிருந்தார் என்பதை, அவர் கண்களும் முகபாவமும் தெளிவாக அறிவித்தன. அவர் ஆழ்ந்த யோசனையிலிருந்தார் என்பதற்கு இன்னொரு சான்றும் இருந்தது. அவரது வாயிலிருந்து என்ன வார்த்தை உதிரும் என்பதை எதிர்பார்த்து மிக மௌனமாக அவர்

முகத்தையே எதிர்பார்த்து அவர் உட்கார்ந்திருந்த மஞ்சத்தை விட்டுச் சற்றுத் தள்ளி அப்பால் நின்று கொண்டிருந்தான் சோழ சேனாதிபதியான அன்னன் பல்லவராயன்.

நீண்ட நேர யோசனையில் ஆழ்ந்திருந்த பெரியபல்லவராயர் கடைசியாக அன்னன் பல்லவராயன்மீது கண்களை ஓட்டி, "வீரபாண்டியன் மதுரைக்கு இன்னும் திரும்பவில்லை?" என்று வினவினார்

அன்னன் பல்லவராயன் கண்களும் சற்று ஏறெடுத்துப் பேரமைச்சரை நோக்கின. சில வினாடிகள் யோசித்துவிட்டு, "அவன் எப்படி மதுரைக்குத் திரும்ப முடியும்? கன்னிமாட முற்றுகை இன்னும் முடியவில்லையே" என்றான்.

பேரமைச்சரின் கண்களில் சற்றே ஆச்சரியம் பிரதிபலித்தது. "கேவலம், பெண்களைக் காவல் வைக்கும் கன்னிமாடம். அதைக் காக்க நூறு வீரர்கள்கூட இல்லை. இதை ஒரு மன்னன் முற்றுகையிடுகிறான். அந்த முற்றுகை நாலைந்து நாட்களுக்குமேல் நீடிக்கிறதென்றால் ஆச்சரியமாயில்லையா? பாண்டிய நாட்டுப்போர் வண்டிகள் எங்கு போயின? பந்தங்களை எறிந்து கட்டிடங்களைக் கொளுத்தக் கூடிய பாரிவிந்தகுழிகள் எங்கே போயின? கன்னி மாடத்துக்கு எதிரே காடு இருப்பதாகச் சொன்னீர். அப்படியானால் பெரிய மரங்களை வெட்டச்சொல்லிப் போர்வண்டிகளில் நெடுகப் பொருத்தி மதில் கதவுகளை இடித்து ஏன் உட்புகக்கூடாது?" என்று வினவினார்.

அன்னன் பல்லவராயன் இதழ்களில் சற்றே புன்முறுவல் படர்ந்தது. "தாங்கள் சொல்வது அனைத்தையும் செய்யலாம். இருமுறை வீரபாண்டியன் செய்தும் பார்த்தான். ஆனால் கோட்டையை அணுகக்கூட முடியவில்லை" என்று சொன்னான் சேனாதிபதி.

"என்ன காரணம்?"

"முதலாவதாகக் கன்னிமாடக் கோட்டை சாதாரணக் கோட்டையல்ல. பாண்டிய நாட்டுப் படையெடுப்பு ஏற்

பட்டால் முதல் அரணாக உபயோகப்படுத்த மழவராயன் சமீப காலத்தில் அதை மிகவும் பலப்படுத்தி விட்டான். இரண்டாவதாக, கோட்டையைத் தன்வசம் பாதுகாப்பவன் கையாளும் போர்த் தந்திரத்தைச் சமாளிக்க வீரபாண்டியன் சிங்களப் படைகளால் முடியவில்லை."

"ஏன்?"

"தாங்கள் சொன்னபடி கதவை உடைத்து உட்புக மரங்களை வெட்டிப் போர் வண்டிகளில் இணைத்து வீரபாண்டியன் தயார் செய்தான். ஆனால் அந்த வண்டிகள் கதவை அணுகு முன்பாகவே தீப்பந்தங்கள் அவற்றின் மீது எறியப்பட்டன. சற்று அருகில் சென்றவர்மீது கொப்பறைகளிலிருந்த எரியும் எண்ணெய் ஊற்றப்பட்டது. இருமுறையும் இதே கதைதான். அத்துடன் மற்றொரு விசித்திரமும் நடந்தது" என்றான் அன்னன் பல்லவராயன்.

"என்ன அது?" என்று வினவினார் பெரியபல்லவராயர்.

"இருமுறை கோட்டைக் கதவுகளைத் திடீரென இராக் காலங்களில் திறந்து கொண்டு பாண்டியன் முன்னணிப் படைகளை வெட்டிப் போட்டுமீண்டும் துரிதமாகக் கோட்டைக்குள் ஓடிவிட்டார்கள் கன்னிமாட வீரர்கள்" என்று விளக்கினான் அன்னன் பல்லவராயன்.

பெரிய பல்லவராயர் மீண்டும் யோசனையில் ஆழ்ந்துவிட்டு மறுபடியும் கேட்டார்: "காட்டு முகப்பில் வீரபாண்டியன் படைகளை நிறுத்தியிருக்கிறானா?"

"இல்லை."

"காட்டு முகப்பில் யாராவது தலையைக் காட்டினால் ஒழித்துவிடுவதாகக் கோட்டைக் காவலன் கூறியிருக்க வேண்டும்."

"அப்படித்தான் செய்தி கிடைத்திருக்கிறது."

"கோட்டைக்குள் நடமாட்டம் எப்படியிருக்கிறதாம்?"

''இரவு பகலும் குதிரை வீரர் நடமாட்டம் மாத்திரமன்றிக் காலாட் படையின் சஞ்சாரமும் இருப்பதாக மதுரைக்குத் தகவல் கிடைத்திருக்கிறது.''

''கோட்டைச் சுவர்கள் மீது காவல்?''

''இரவும் பகலும் இருந்து கொண்டேயிருக்கிறது.''

''விற்போருக்கும் வேலெறிவதற்காகவும் கட்டப்பட்டிருக்கும் கூண்டுகளின் துவாரங்களில் சதா அம்புகளும் வேல்களும் தெரிகின்றன அல்லவா?''

''ஆமாம். அம்புகளும் வேல்களும் எதிரேயுள்ள காட்டை நோக்கிப் பாயத் தயாராக இருக்கின்றன.''

இதைக் கேட்ட பெரிய பல்லவராயர் இடியிடி என நகைத்தார். இதில் நகைப்பதற்கு என்ன இருக்கிறது என்பதை அறியாத அன்னன் பல்லவராயன் பெரிய பல்லவராயன் விளக்கத்துக்கு எதிர்பார்த்து நின்றான். பெரிய பல்லவராயர் சிரிப்பை நிறுத்திக் கொண்டு சொன்னார். ''படைத்தலைவரே! கன்னிமாடக் கோட்டைக்குள் ளே ஆள் அதிகமில்லை. அமர்களம் அதிகமாயிருக்கிறது. நிரம்பப் பல முடையவன் ஈட்டிகளையும் அம்புகளையும் கோட்டைக் கூடுகளிலிருந்து வெளிக்குக் காட்டமாட்டான். மறைத்து வைத்துத் திடீரென எதிரி மீது பொழியவே பார்ப்பான். இந்தக் கன்னிமாட முற்றுகையில் விசித்திரமான அம்சங்கள் பல இருக்கின்றன. கோட்டையைக் காப்பவன் தன் பலத்தை மறைப்பதற்குப் பதில் பறைசாற்றி வீரபாண்டியனைப் பயமுறுத்துகிறான். தன்னிடம் படைபலம் அதிகம் என்பதை வலியுறுத்த அடிக்கடி வெளியே வந்து துணிச்சலுடன் தாக்கித் திரும்பிக்கோட்டைக்குள் பதுங்குகிறான். கோட்டைக்குள் ஆள் பலம் அதிகமில்லை. புத்தி பலம் அதிகமிருக்கிறது. தமிழ் நாட்டுப் போர் வியூகங்களை நன்றாக அறிந்து சமயத்துக்குத் தக்க தந்திரங்களை வகுக்கவல்ல பலமான ஒரு தலைவனால் கோட்டை காக்கப்படுகிறது'' என்றார்.

''அப்படி யாரும் அங்கிருப்பதாகத் தெரியவில்லை. மழவராயன் மகனை விக்ரம பாண்டியன் அழைத்துச்

சென்றதாகத்தான் வதந்தி உலவுகிறது. இதற்குத் துணை செய்தவன் யவன மார்க்கியனும் சில கள்ளர்களும்...''

என்ற வாசகத்தை அன்னன் பல்லவராயன் முடிக்கு முன்பே, 'பிறகு வந்து சேர்ந்து கொண்டவன் பாண்டிய சேனாதிபதி அபராஜித பல்லவன்'' என்று குறுக்கிட்டுச் சொல்லியபல்லவராயர் இதழ்களில் விஷயத்தை ஊகித்துக் கொண்டதற்கு அடையாளமாகப் புன்முறுவலொன்றும் படர்ந்தது.

தூக்கிப் போட்டதற்கு அடையாளமாகத் திடீரென்று தலையைத் தூக்கிப் பெரிய பல்லவராயரைப் பார்த்தான் அன்னன் பல்லவராயன். பெரிய பல்லவராயர் மீண்டும் சொன்னார்: ''இதில் சோதிடம் ஏதுமில்லை. அபராஜிதன் நாடு கடத்தப்பட்டது உமக்குத் தெரியும். அவன் மழவன் தலைநகர் சென்றதும் உமக்குத் தெரியும். அங்கு சென்ற மறுநாளே சேனாதிபதி சுவடு தெரியாமல் மறைந்துவிட்டான். பிறகு இநத விசித்திரமான துணிகரமான போர் கன்னி மாடத்தருகே நடக்கிறது. இரண்டும் இரண்டும் நாலுதானே?''

''அபராஜிதன் கன்னிமாடத்திற்குள் இருக்கிறானென்று நீங்கள் நிச்சயமாக நம்புகிறீர்களா?''

''அதில் சந்தேகமே வேண்டாம். இந்தப் போர் முறைகள் கோழையான விக்ரம பாண்டியனுக்கோ யவன மார்க்கியனுக்கோ தெரியாது. தவிர, அபராஜிதன் கோட்டையிலிருப்பதை வீரபாண்டியனும் அறிந்து கொண்டிருக்க வேண்டும்.'',

''எப்படி?''

''கோட்டைத் தாக்குதலை அவன் தாமதிப்பதே அதற்கு அத்தாட்சி. தன்னுடைய பழைய சேனாதிபதியின் திறன் வீரபாண்டியனுக்குத் தெரியும். பலமான எதிரி கோட்டைக்குள்ளிருப்பதால்தான் அவன் கோட்டையை முழு படைபலத்துடன் தாக்க அஞ்சுகிறான்.''

''இதற்கு முடிவு?''

''இன்னும் ஒரு வாரத்தில் தெரியும்.''

பெரிய பல்லவராயர் கோட்டை முற்றுகையைப்பற்றி இவ்வளவு திட்டமாகச் சொன்னதை உத்தேசித்து அண்ணன் பல்லவராயன் ஆச்சரியப்பட்டுக் கொண்டிருந்த சமயத்தில் காவல் வீரனொருவன் உள்ளேவந்து, "பாண்டிய நாட்டிலிருந்து ஒற்றன் வந்திருக்கிறான்" என்று அறிவித்தான். "வரச்சொல்" என்பதற்கு அடையாளமாகத் தலையை அசைத்த அண்ணன் பல்லவராயன் ஆணையை நிறைவேற்றக் காவல் வீரன் வெளியே சென்ற அடுத்த வினாடி ஒற்றன் உள்ளே நுழைந்து பேரமைச்சரையும் சேனாதிபதியையும் வணங்கி நின்றான்.

"பாண்டி நாட்டில் விசேஷம் ஏதாவது உண்டா?"

"உண்டு."

"என்ன?"

"மாதவி, கூடலுக்குப் புறப்பட்டுவிட்டாள்."

"எந்த மாதவி? சிங்களத்துப் பெங்கிளியா?"

"ஆம்"

"எதற்காக?"

"ஜகத்விசயனைச் சந்திக்க."

எதற்கும் அசையாத பெரிய பல்லவராயரே ஆசனத்திலிருந்துதிடீரென்று எழுந்தார். அவருடைய கூரியவிழிகள் எதிரேயிருந்த வெள்ளிப் புலியின் சிவப்புக் கண்களைவிட அதிகமாகவே ஜொலித்தன. "ஜகத்விசயனா!"; என்று கேட்ட அவர் குரலிலும் கவலை அளவுக்கு அதிகமாக ஒலித்தது.

48. படைத்தலைவனும் மரப் பலகையும

ஜகத்விசயனைச் சந்திக்க மாதவி கூடலுக்குப் புறப்பட்டு விட்டாள் என்ற செய்தியைக் கேட்டமாத்திரத்தில் ஆசனத்திலிருந்து திடீரென எழுந்து சோழப் பேரமைச்சரான பெரிய பல்லவராயர், தீவிர யோசனையில் மீண்டும் ஆழ்ந்து நீண்ட நேரம் ஏதும் பேசாமல் அறையில் அங்குமிங்கும் மெல்ல உலவிக்கொண்டிருந்தார். அந்த

மௌன நிலையில் அவர் உதடுகள் பேசாவிட்டாலும் உள்ளம் எழுந்து பேரிரைச்சலாகப் பல விஷயங்களைப் பற்றிச் சர்ச்சை செய்துகொண்டிருக்கிறதென்பதையும், அவர் உலவிய சமயத்தில் வைக்கப்பட்ட ஒவ்வொரு காலடியிலும் ராஜீயப் பிரச்சனைகள் சீராக அளக்கப்படுகின்றன என்பதையும், பல நாட்கள் அவருடன் பழகிய காரணத்தால் புரிந்துகொண்டிருந்த சேனாதிபதி அண்ணன் பல்லவராயன், அவரது யோசனைக்குக் குறுக்கே புக இஷ்டப்படாமல் தானும் மௌனமாகவே நின்றுகொண்டிருந்தான். வெகுநேரம் சிந்தித்துவிட்டுச் சடைசியில் ஏதோ முடிவுக்கு வந்த பெரிய பல்லவராயர் உலவுவதை நிறுத்தி ஒற்றனுக்காகக் கண்களைத் திருப்பி, "ஜகத்விசயன் சிங்களத்திலிருந்து எப்பொழுது புறப்பட்டான்?" என்று வினவினார்.

"எப்பொழுது புறப்பட்டான் என்பது தெரியாது. இரண்டு நாட்களுக்கு முன்பு கூடலில் இறங்கினான் என்ற தகவல் தான் மதுரைக்கு எட்டியிருக்கிறது? என்றான் ஒற்றன்.

"ஜகத்விசயன் சிங்களத்திலிருந்து அமைத்து வந்திருக்கும் படைபலத்தைப் பற்றித் தகவல் ஏதாவது உண்டா?" என்று வினவினார் பேரமைச்சர் மீண்டும்.

"ஜகத்விசயத் தண்டநாயகனுடன் பத்தாயிரம் வீரர்கள் வந்திருப்பதாகக் கேள்வி" என்று விளக்கினான் ஒற்றன்.

"மாதவி மதுரையைவிட்டுக் கூடலுக்கு எப்பொழுது புறப்பட்டாள்?"

"நேற்றுக் காலையில்."

"அவளுடன் இன்னும் யார் போகிறார்கள்?"

"யாருமில்லை. மாதவி தனியாகவே செல்கிறாள். இரண்டு பணிப் பெண்களும் பன்னிரண்டு காவலாட்களுமே அவளுடன் செல்கிறார்கள்."

"இலங்காபுரத் தண்டநாயகன்?"

"மதுரையிலேயே இருக்கிறான்."

இத்துடன் சோழப் பேரமைச்சர் ஒற்றனுக்குப் போக அனுமதியளித்துவிட்டு மறுபடியும் ஏதோ யோசித்தார். கவலை நிரம்பி நின்ற அவர் முகத்தில் வயோதிகம் காரணமாகக் காணப்பட்ட சுருக்கங்கள் புத்தி தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்ததற்கு அறிகுறியாக அதிகமாகச் சுருங்க ஆரம்பித்ததன்றி, அவருடைய வெள்ளைப் புருவங்களும் இருமுறை எழுந்து தாழ்ந்தன. ''இலங்காபுரன் மதுரையில், ஜகத்விசயன் கூடலில்'' என்று அவர் உதடுகள் திரும்பத் திரும்ப முணுமுணுத்தன. கடைசியாக ஏறெடுத்துப் பார்த்த அவர் கூரிய விழிகளில் முன்னைவிடப் பிரகாசம் சற்று அதிகமாகவே இருந்ததைக் கவனித்த அண்ணன் பல்லவராயன், சோழப் பேரமைச்சர் ஏதோ ஒரு முக்கிய முடிவுக்கு வந்திருக்கிறார் என்று நிர்யாணித்துக் கொண்டான்

பெரிய பல்லவராயரும் மெள்ள விவாதத்தில் இறங்கத் தொடங்கி, ''படைத்தலைவரே! தகவல் எப்படியிருக்கிறது கவனித்தீரா?'' என்றார்.

''கடுமையாகத்தான் இருக்கிறது'' என்று அண்ணன் பல்லவராயன் சம்பிரதாயமாகச் சொல்லி வைத்தான், பேரமைச்சரிடமிருந்து விஷயம் பூராவும் வெளியாகட்டும் என்ற எண்ணத்தால்

''கடுமை என்பது மிகச் சாதாரணமான சொல் படைத்தலைவரே! தமிழ்நாடு போர்க்களமாகும் காலம் நெருங்கிவிட்டது. தமிழர்களுடைய ரத்தத்தைச் சிந்தாமலே சிங்களத்துச்சிக்கலைத்தீர்க்கலாமென்று பிரயத்தனப் பட்டேன்; முடியாது போலிருக்கிறது. நம்மை மீறிய சந்தர்ப்பங்கள் அரசியலில் குறுக்கிடுகின்றன'' என்றார் பேரமைச்சர்.

''அப்படியென்ன நம்மை மீறிய சந்தர்ப்பங்கள்?'' என்று வினவினான் படைத்தலைவன்.

''கருணாகரத் தேவன் திட்டப்படி மேலைமங்களத்துக்கும் பாண்டிய நாட்டுக்கும் திருமணத் தொடர்பு ஏற்

பட்டு மழவராயன் கை ஓங்கியிருந்தால் இலங்காபுரன் செல்வாக்கு மதுரையில் குன்றியிருக்கும். வீரபாண்டியன் மனம் மாதவியிடமிருந்து கார்குழலியிடம் லயித்திருந்தால் சிங்களத்துப் பாசம் தமிழ்நாட்டுப் பாசமாக மாறியிருக்கும். பாண்டியநாட்டுப் படைபலம், மக்களின் ஆதரவு, மழவராயன் ராஜதந்திரம், இவற்றுடன் நாமும் சிறிது பாண்டியநாட்டுக்கு கை கொடுத்திருந்தால் இலங்காபுரன் இத்தனை நாள் சிங்களத்துக்குத் தோணி ஏறியிருப்பான். ஆனால்...'' என்று சிறிது நிறுத்தினார் பேரமைச்சர்.

''ஆனால்''

''விதி குறுக்கே புகுந்து விளையாடி விட்டது படைத் தலைவரே! மாதவியிடமிருந்த மையலை வீரபாண்டியன் கார்குழலியிடம் திருப்பிவிட்டான். ஆனால், கார்குழலி மனம் அவனிடம் லயிக்கவில்லை. தகப்பனிடமிருந்து தப்பியோடி, தகப்பன் நிச்சயித்த மணாளனுடன் போரிடுகிறாள் யழவராயன் மகள் இது சரியான சந்தர்ப்பத்தை அளித்துவிட்டது இலங்காபுரனுக்கு''

''எப்படி?''

''மன்னன் கன்னிமாடத்தை முற்றுகையிட்டவுடன் அந்த முற்றுகை வெற்றி பெற்றால் ஏற்படக்கூடிய விளைவை இலங்காபுரன் உணர்ந்து கொண்டிருந்தான். வீரபாண்டியன் பலவந்தமாகக் கார்குழலியைப் பிடித்து வந்து மணமாலை சூட்டிவிட்டாலும் மழவராயன் உதவி வீரபாண்டியனுக்கு ஏற்படுமென்பதும் பிறகு மழவராயன் கையே மதுரையில் ஓங்குமென்பதும் இலங்காபுரனுக்குத் தெளிவாக விளங்கியிருக்கிறது. இந்தத்திருமண பந்தமான பேசசைத் துவங்கிய மாத்திரத்திலேயே உதவிப்படையை அவசரமாக அனுப்பும்படி இலங்காபுரன் சிங்களத்து மன்னனுக்கு ஓலை அனுப்பியிருக்க வேண்டும். அந்த ஓலையின் விளைவாகவே சிங்கள மன்னனான பராக்கிரம பாகு, ஜகத்விசயத் தண்டநாயகனைப் பெரும் படையுடன் அனுப்பியிருக்கிறான். ஜகத்விசயத் தண்டநாயகனும்

சாமானியப்பட்டவனல்ல. போர்த்தந்திரங்களை நன்றாக அறிந்தவன். அனேக போர் முனைகளில் வெற்றி வாகை சூடியவன். இப்பொழுது அவன் வரவால் சிங்களத்தின் கை மீண்டும் தமிழ்நாட்டில் ஓங்கிவிட்டது. பலமான இரும்புச் சிறைக்குள் பாண்டியநாடு சிக்கிவிட்டது'' என்றார் பேரமைச்சர்.

பேரமைச்சர் எதைக் குறிப்பிடுகிறார் என்பதை அண்ணன் பல்லவராயன் நன்றாக உணர்ந்துகொண்டான். இருந்தபோதிலும், ''அப்படியென்ன பெரிய சிறை இப்பொழுது புதிதாக ஏற்பட்டுவிட்டது? ஏற்கனவே பாண்டியநாடு சிங்களத்தின் காலில் மிதிக்கப் பட்டுத் தானே கிடக்கிறது'' என்று கேட்டுவைத்தான்.

பேரமைச்சர் ஆச்சரியம் ததும்பும் கண்களுடன் அண்ணன் பல்லவராயனைப் பார்த்துவிட்டுக் கேட்டார்: ''படைத்தலைவரே! ஜகத்விசயன் கூடலில் வந்து இறங்கி விட்டானென்பதை ஒற்றன் சொல்லக் கேட்டீர். கூடல் எங்கிருக்கிறது என்பதைப் படைத் தலைவரான உமக்குச் சொல்லத் தேவையில்லையல்லவா?''

''தேவையில்லை. கூடல் இராமேஸ்வரத்தின் அருகிலிருப்பது எனக்குத் தெரியும்'' என்று பதில் சொன்னான் பல்லவராயன்.

''அந்தக் கூடல் பாண்டிய நாட்டின் ஒரு கோடியிலிருக்கிறது. கூடல்மாநகரம் என்று பிரசித்தி பெற்ற மதுரையம்பதி மற்றொரு கோடியிலிருக்கிறது. இந்த இரண்டு கூடல்களுக்குமிடையே பரந்து கிடக்கிறது பாண்டியநாடு. அதன் ஒரு கோடியில் ஜகத்விசயன். இன்னொருகோடியில் இலங்காபுரன். ஜகத்விசயன் அந்தக் கோடியைவிட்டு அசையமாட்டான்; இலங்காபுரனும் இந்தக் கோட்டையைவிட்டு அசையமாட்டான்; இருவரும் பாண்டியநாட்டின் இரு பெரிய சுவர்கள். இந்த இருவருக்குமிடையே இருக்கிறது பாண்டியநாடு என்ற பெரும் சிறை. இடையேயுள்ள மேலைமங்கலச் சிற்றரசு

போரைக்கிளப்ப முயன்றால் மேல்பாகத்திலிருந்து இலங்காபுரன் படைகளும் கீழ்புறத்திலிருந்து ஜகத்விசயன் படைகளும் நெருங்கி மேலைமங்கலத்தைக் கண்ணிமைக்கு நேரத்தில் அழித்துவிடலாம். ஆகவே பாண்டியநாட்டின் பக்கத்தில் எந்தப் போரும் தற்சமயம் நடக்க முடியாது. என் ஊகம் சரியானால் ஜகத்விசயன் தான் இறங்கியிருக்கும் இடத்திலிருந்து அசையமாட்டான்'' என்று விளக்கினார் பெரிய பல்லவராயர்.

அண்ணன் பல்லவராயனும் ஆழ்ந்த யோசனையில் இறங்கினான். பாண்டியநாட்டின் கதியை இலங்காபுரன் எப்படி அதோகதியாக்கிவிட்டான் என்பதை நினைத்துப் பார்த்துப் பெருமூச்சும் விட்டான். இத்தகைய சிக்கலான நிலைமையை எப்படிச் சமாளிக்கலாம் என்பதைச் சிந்தித்துப் பார்த்து விடையேதும் கிடைக்காதவனாய், ''இதற்குப் பரிகாரம் போர்தானே?'' என்று பெரிய பல்லவராயரைக் கேட்டான்.

''போர்தான். ஆனால் எப்பொழுது போர், எப்படிப் போர் என்பதைத்தான் தீர்மானிக்க வேண்டும்'' என்றார் பெரிய பல்லவராயர்.

''முப்பதினாயிரம் சோழப் படைகள் போருக்குத் தான் தயாராயிருக்கின்றன. அன்று நான் தங்கள் உத்தரவுப்படி வீர பாண்டியன் சபாமண்டபத்தில் போர் முரசு கொட்டி வந்த நாட்களாகப் படைகளைத் தயாராக நிறுத்தி வைத்திருக்கிறேன். தாங்கள் ஒரு வார்த்தை சொன்னால் படைகளை பாண்டியநாட்டின் மீது நடத்திச் செல்கிறேன்'' என்று சொல்லிய அண்ணன் பல்லவராயன் கண்கள் வீராவேசத்தால் ஜொலித்தன.

படைத் தலைவரின் ஆவேசத்தைக் கண்ட பல்லவராயர் மெல்லப் புன்முறுவல் செய்தார்.

''எதற்காக சிரிக்கிறீர்கள்? தங்கள் படைபலத்தில் தங்களுக்கு நம்பிக்கையில்லையா? அல்லது படைத் தலைவனிடத்தில் நம்பிக்கையில்லையா?'' என்று ஆத்திரத்துடன் வினவினான் அண்ணன் பல்லவராயன்.

"இரண்டிலும் நம்பிக்கை இருக்கிறது. இருந்தாலும் எதிரியின் படைபலத்தையும் நாட்டின் சூழ்நிலையையும் கவனிக்க வேண்டியிருக்கிறது" என்றார் பேரமைச்சர்.

"என்ன எதிரியின் படைபலம்? அவனுக்கு நாம் குறைந்திருக்கிறோமோ?"

"இல்லை, சரிசமமாயிருக்கிறோம். ஜகத்விசயன் பத்தாயிரம் வீரர்களுடன் வந்திருக்கிறான். இலங்காபுரனிடம் இருபதினாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள். இரண்டும் சேர்ந்தால் சோழப் படைகளின் கணக்குத்தான் வருகின்றன. அத்துடன் பாண்டிய நாட்டுப் படைகள் வேறு இருக்கின்றன. இலங்காபுரன் ஆதிக்கம் பாண்டிய நாட்டில் இருக்கும்வரை பாண்டியப்படைகளும் அவன் அதிகாரத்தின் கீழ் தான் இருக்கும். அந்தப் படையையும் நீர் கணக்கில் சேர்த்துக் கொண்டால் சோழ நாட்டுப் படை பலம் குறைவாகவே இருக்கும்."

"சோழநாட்டு வீரன் ஒவ்வொருவனும் இரண்டு சிங்கள வீரர்களுக்குச் சமம்" என்று அண்ணன் பல்லவராயன் சற்று பதற்றத்துடனேயே சொன்னான்.

"அப்பேர்ப்பட்ட வீரர்களை அனாவசியமாகத் நியோகம் செய்ய நான் விரும்பவில்லை" என்று பதில் சொன்ன பேரமைச்சர் படைத் தலைவன் பதற்றத்தைப் பார்த்துச் சற்று விஷமமாக சிரித்தார்.

"அப்படியானால் என்னதான் செய்யவேண்டும்? பாண்டிய நாட்டில் சிங்கள ராஜ்யம் ஏற்படுவதைப் பார்த்து நாம் கைகட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்க வேண்டுமா? அடுத்தபடி அந்தச் சிங்களப்படை நம்மீதும் பாயாதென்பது என்ன நிச்சயம்?" என்று வினவினான் அண்ணன் பல்லவராயன்.

"கைகட்டிக் கொண்டு உட்கார்ந்திருக்கவேண்டிய அவசியமுமில்லை. பாண்டியநாட்டைச் சிங்களத்திடம் ஒப்புவிக்க வேண்டிய அவசியமுமில்லை. இலங்காபுரனுடன் போர் தொடுப்பது உமதுவேலை. அதற்கு

முன்பாக யுத்தகளத்தை உமக்குச் செப்பனிட்டுத் தருவது என் வேலை" என்றார் பெரிய பல்லவராயர்.

"எப்படிச் செப்பனிடப் போகிறீர்கள்?"

"ராஜதந்திரத்தால், படைத்தலைவரே! புஜபலம் மாத்திரம் யுத்தங்களை வென்று விடுவதில்லை. ராஜதந்திரமும் கலக்கும் போது தான் வெற்றி கிட்டுகிறது நீர் உமது படைகளைப் பாண்டிய நாட்டுக்குள் நடத்திச் செல்லும் முன்பாகப் பாண்டிய நாட்டின் சிறையை உடைக்க வேண்டும்"

"எப்படி?"

"இலங்காபுரனுக்கும் ஜகத்விசயனுக்கும் இடையே உள்ள ஏதாவது ஒரு பிரதேசத்தைத் துண்டிக்கவேண்டும்."

"எந்தப் பிரதேசத்தை? மேலைமங்கலத்தையா?"

"அல்ல."

"வேறு எந்தப் பகுதியை?"

"பொன்னமராவதியை."

அண்ணன் பல்லவராயனுக்குப் பெரிய பல்லவராயர் மனப்போக்குப் புரியாததால் பிரமை தட்டிய கண்களுடன் அவரைப் பார்த்தான்.

பல்லவராயர் சற்று உரக்கவே சிரித்துக்கொண்டு சொன்னார்: "கன்னிமாட முற்றுகை இன்னும் ஒருவாரத்திற்குள் முடியுமென்று சொன்னேனல்லவா?"

"ஆமாம்."

"ஒரே வாரத்தில் வீரபாண்டியன் முறியடிக்கப்பட்டு பாண்டியநாடு திரும்புவான். அவன் திரும்பிய மறுநாள் நீர் கன்னிமாடத்திற்குள் நுழைய வேண்டும்."

பேரமைச்சர் பேச்சு பெரும் புதிராவதைக் கண்ட அண்ணன் பல்லவராயன் ஏதுமறியாமல் திகைத்தான். பெரிய பல்லவராயரும் புதிர் போடுவதை விடுத்து மெள்ளத் தமது திட்டத்தை அவிழ்த்துச் சொல்லலானார். அவர் சொல்லச் சொல்ல அண்ணன் பல்லவராயர் பிரமிப்பு அதிகமாயிற்று. பெரிய பல்லவராயர் அன்றாடம்

ஏற்பட்டுள்ள ராஜீய விவகாரங்களை எவ்வளவு நுட்பமாகக் கவனித்து வருகிறாரென்பதையும் நினைத்து இப்பேர்ப்பட்ட பேரமைச்சரைப் பெறச் சோழ ராஜ்யம் என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்று சொல்லவொண்ணா ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். அவன் ஆச்சரியத்தை அதிகப்படுத்தத் தமது ஆசனத்துக்குச் சென்று அங்கிருந்த மரப்பலகையொன்றை எடுத்து வந்து காட்டினார் பெரிய பல்லவராயர். அந்த மரப் பலகையில் இழுக்கப்பட்டிருந்த கண்ணாம்புக் கட்டிக் கோடுகளைக் கண்ட அண்ணன் பல்லவராயனின் பிரமிப்பு உச்ச நிலையை அடையவே அவன் ஏதும் பேசாமல் வாய் அடைத்துப் போய் ஏதோ பெரிய விந்தையைப் பார்ப்பவன் போல் அந்தக் கோடுகளிலேயே கண்களைப் புதைத்துக் கொண்டு சிலைபோல நின்றுவிட்டான்.

49. கோடுகள் சொன்ன கதை

பெரிய பல்லவராயர் மரப் பலகையில் இழுத்திருந்த கண்ணாம்புக் கோடுகளும் வரைந்திருந்த சித்திரங்களும் சாதாரண மனிதனுக்குப் பெரும் புதிராயிருந்திருக்கலாம். பேரமைச்சரைச் சரியாகப் புரிந்துகொள்ளச் சக்தியில்லாதவர்கள் அந்த மரப் பலகையைப் பார்த்தால் வயோதிகத்தால் பெருமான் நம்பிக்குப் புத்தி சபலித்துவிட்டது என்று கூட முடிவு கட்டலாம். ஆனால் பல யுத்தங்களில் வெற்றி கண்டவனும் போர்த் தந்திரங்களை அணு அணுவாக அறிந்திருந்தவனுமான அண்ணன் பல்லவராயனுக்கு அந்தக் கோடுகள் பெரிய, மிக அதிசயமான எப்பேர்ப்பட்ட ராஜதந்திரியும் கண்டு வியக்கும்படியான கதையைச் சொல்லின. தாறுமாறாக இழுக்கப்பட்ட அந்தக் கோடுகளிலும், பலகையின் வலது புறக் கோடியில் எழுப்பப்பட்டிருந்த அலைச் சித்திரத்திலும், அங்கங்கு வரையப்பட்டிருந்த புலி, யானை, குதிரை, மனிதன் முதலிய

சித்திரங்களிலும், இடையிடையே வைக்கப்பட்டிருந்த பெரும் புள்ளிகளிலும் போர்த்தந்திரத்தின் பெரும் பாட வரிசைகளைக் கவனித்த அண்ணன் பல்லவராயன் தன் புத்தி பூராவையும் அந்தக் குறிகளிலேயே லயிக்கவிட்டு, உபாத்தியாயர் முன்பு சிரத்தையுடன் கல்வி பயிலும் மாணவனைப்போல் மரப்பலகையை ஊன்றி ஆராய்ந்து கொண்டிருந்தான், அவன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த பெரிய பல்லவராயரும் தாம் எழுதின சித்திரங்களைத் தாமே ரசிப்பவர்போல் சற்றுப் புன்முறுவலுடன் பலகையைப் பார்த்துக் கொண்டு நின்றார்.

அண்ணன் பல்லவராயனின் கண்கள் பலகைக் கோடுகளைத் துழாவிக் கவனித்துவிட்டு கடைசியாக ஒருபெரும் புள்ளியில் நிலைத்ததைக் கண்ட பெரிய பல்லவராயர், "ஆம் படைத்தலைவரே! அதே இடம்தான். யுத்த சக்கரம் திரும்புவதற்கான இரிசு' அதுதான் என்றார்.

அண்ணன் பல்லவராயன் சற்றே சந்தேகம் உதித்த கண்களை அவர்மீது திருப்பினான். அவன் மனோபாவத்தைப் புரிந்துகொண்ட பெரிய பல்லவராயர், "படைத்தலைவரே! நீர் சுட்டிக்காட்டும் புள்ளிதான் பொன்னமராவதியைக் குறிக்கிறது. அதிலிருந்துதான் நாம் சிங்களப்படைகளை இரண்டாகப் பிளக்க முடியும், நான்...வரைந்திருக்கும் கோடுகளின் எல்லையைக் கவனித்துப்பாரும். வடக்கே இருக்கும் இந்தக்கோடு பாண்டியநாட்டின் வட எல்லையைக் குறிக்கிறது. அதோ, தெற்கில் இருக்கும் கோடு பாண்டிய நாட்டின் தென் எல்லையைக் குறிக்கிறது. கிழக்கேதான் சமுத்திரத்தைக் குறிப்பிடுவதற்காக அலையை எழுப்பிவிட்டேன். வடக்கு, தெற்கு எல்லைக் கோடுகளைக் கவனித்தால் பொன்னமராவதி நமக்கு எப்படி உதவமுடியும் என்பதைப் புரிந்து கொள்வீர்" என்று தன் கையின் ஆள்காட்டி விரலால் ஆங்காங்கு சுட்டிக்காட்டி விளக்கினார்.

அவர் என்ன சொல்லியும் அண்ணன் பல்லவராயன் மட்டும் திருப்தியடைந்ததாகத் தெரியவில்லை.

பொன்னமராவதியில் ஆள்காட்டி விரலை ஊன்றியபடியே கேட்டான் படைத்தலைவன். "பாண்டியநாட்டு இரு எல்லைகளுக்கும் நடுவில் பொன்னமராவதியிருந்தால் தாங்கள் சொல்வதுபோல் அது யுத்த சக்கரத்தின் இரிசாக முடியும். அந்த இடத்தைப் பலப்படுத்தி படை திரட்டி ஜகத்விசயனுக்கும் இலங்காபுரனுக்கும் இடையில் பிளவை உண்டு பண்ணலாம். ஆனால் அது சற்றுத் தெற்கே தள்ளியிருக்கிறது. கிழக்கிலும் லேசாகச் சாய்ந்திருக்கிறது."

"படைத் தலைவரே! பொன்னமராவதியை நான் தேர்ந்தெடுத்ததற்கே அது ஒரு முக்கியமான காரணம். பாண்டிய நாட்டு இரு எல்லைகளுக்கும் இடையே நிற்பது மேலை மங்கலச் சிற்றரசு ஒன்றுதான். அந்தச் சிற்றரசைச் சிருஷ்டித்ததே இலங்காபுரன்தான் என்பதை உமக்குச் சொல்லத் தேவையில்லை. இலங்காபுரன் தீர்க்காலோசனையுடன் காரியங்களைச் செய்திருக்கிறான் பிற்காலத்தில் பாண்டிய நாட்டில் யுத்தம் ஏற்பட்டால் பாண்டியநாட்டின் நடுவில் தனக்குச் சாதகமான ஒரு பிரதேசம் இருக்கவேண்டும் என்பதற்காகவே இலங்காபுரன் மேலைமங்கலச் சிற்றரசை ஏற்படுத்தி அதை மழவராயனுக்குத் தானம் செய்தான்..." என்றார் பெரிய பல்லவராயர்.

"ஆனால் இப்போதுதான் மழவராயன் இலங்காபுரனுக்கு எதிராகத் திரும்பிவிட்டானே!" என்று குறுக்கிட்டுச் சொன்னான் படைத்தலைவன்.

உண்மைதான். மழவராயன் இலங்காபுரனுக்கு விரோதியானாலும் பாண்டியநாட்டுக்கோ வீரபாண்டியனுக்கோ விரோதியல்லவென்பதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். வீரபாண்டியனுக்கு மழவராயன் அனுகூலம். வீரபாண்டியன் சோழநாட்டுக்கு அனுகூலமானவனல்ல. அவன் வீரபாண்டியன் பக்கமிருக்கும்வரை மேலைமங்கலத்தை இரிசாகக்கொண்டு யுத்த சக்கரத்தைச் பாண்டி... முற்று முழுதும்... தவிர. மேலை மங்கலம்

நாட்டின் நடுவிலிருப்பதால் ஜகத்விசயனும் இலங்காபுரனும் ஏககாலத்தில் இருபுறத்திலிருந்தும் அதை நெருங்கி நொறுக்கிவிட முடியும் என்பதை முன்னே சுட்டிக்காட்டியிருக்கிறேன்" என்று தமது அபிப்ராயத்தைத் தெரிவித்தார் பேரமைச்சர்.

பேரமைச்சரின் காரணங்கள் அசைக்க முடியாமையாயிருந்தபடியால் என்ன பதில் சொல்வதென்று தெரியாமல் ஒரு கணம் திகைத்த படைத்தலைவன், "பொன்னமராவதியில் மட்டும் நமக்கு இந்த இடைஞ்சல்கள் இல்லையா?" என்று வினவினான்.

"இல்லை" என்றார் பேரமைச்சர்.

"ஏன் இல்லை? பொன்னமராவதி ராமேச்வரத்துக்கு அருகிலிருக்கிறது. அங்குள்ள கூடலில் தான் ஜகத்விசயன் இருக்கிறானே!" என்று வினவினான் அண்ணன் பல்லவராயர்.

"ஜகத்விசயன் அருகிலிருக்கிறான். ஆனால் இலங்காபுரன் வெகு தூரத்திலிருக்கிறான்" என்று சொல்லிய பல்லவராயர் தாமும் மரப்பலகைக்காகக் குனிந்து தமது போர்த் திட்டத்தை விளக்கலானார். "படைத் தலைவரே! இதோ பாரும். மதுரைக்கும் பொன்னமராவதிக்கும் தூரம் அதிகம். ஆகவே, இலங்காபுரன் சற்றுத் தாமதமாகத்தான் அதை அனுக முடியும். சாமர்த்தியமாகப் போர் செய்தால் பொன்னமராவதியிலுள்ள படைகள் இலங்காபுரன் வருமுன்பாக ஜகத்விசயனை அழித்துவிடலாம். தவிர இலங்காபுரன் வருவதற்குத் தடையும் இடையே ஏற்படலாம். மத்தியிலிருக்கும் மேலைமங்கலச் சிற்றரசின் நோக்கம் அச்சமயத்தில் எப்படியிருக்குமென்று சொல்ல முடியும்? மழவராயன் மனம் மாறி நமது பக்கம் சேர்ந்தால் ஜகத்விசயனைப் பொன்னமராவதிப் படைகளும் இலங்காபுரனை மேலைமங்கலப் படைகளும் சமாளிக்கலாம். மேலைமங்கலத்திற்கு இலங்காபுரன் அதிகப் படைகள் அனுப்ப முடியாதபடி வடக்கு எல்லையில் நாம் தாக்கி அவனுக்கு வேலைகொடுக்கலாம். இப்படி

பாண்டிய நாட்டு யுத்தரங்கத்தை மூன்றாக உடைக்கலாம். அதை உடைக்கக் கூடிய பெருங்கோடரி பொன்னமராவதி ஒன்றுதான்'' என்றார் பெரிய பல்லவராயர்.

''வீரபாண்டியனுக்கு எதிராகப் படை திரட்டப் பொன்னமராவதியை எதற்குத் தேர்ந்தெடுத்தீர்கள்?'' என வினவினான் படைத்தலைவன்.

''பொன்னமராவதி பெரிய சதிக் குகை என்ற காரணத்தால்''

''சதிக் குகையா?''

''ஆம், அது நிஷதராசனின் சிற்றரசல்லவா!''

''ஆமாம். நிஷதராசனைத்தான் வீரபாண்டியன் வெட்டி அவன் தலையை மதுரைக் கோட்டை வாசலில் செருகினானே!''

''நிஷதராசனை மட்டுந்தான் செருகினானேயன்றி அவன் படைத்தலைவன் காரிவளவனைச் செருகவில்லை. நீலமலைச் சதியில் அவன் கலந்திருந்ததாகப் பெரும் வதந்தி இருந்தது.''

''அதனால்....''

''வீரபாண்டியனின் பெரும் விரோதியொருவன் சுதந்திரமாக இன்னும் உலவுகிறான். வீரபாண்டியன் ஆட்சியில் நம்பிக்கையற்றவனும் அபராஜிதனுக்கு முடி சூட்ட முயன்றவனுமான காரிவளவன் இஷ்டப்பட்டால் பொன்னமராவதி நாளையே புரட்சியிலிறங்கும். பொன்னமராவதி மக்கள் தங்கள் அரசனை வீர பாண்டியன் வெட்டியதால் மனம் கொதித்து நிற்கி றார்கள். அந்த நெருப்பை நாம் சிறிது விசிற வேண்டும், அவ்வளவு தான்.''

''எப்படி விசிறுவது?''

''விசிறி கொண்டுதான்.''

அண்ணன் பல்லவராயன் பேரமைச்சரை ஏறெடுத்துப் பார்த்தான். ''என்ன பார்க்கிறீர்? விசிறி கொண்டுதான் விசிறவேண்டும். அந்த விசிறி காரிவளவன்தான்'' என்று சொல்லிய பேரமைச்சர் சற்றுப் புன்முறுவல் பூத்தார்.

''காரிவளவன் இப்பொழுது எங்கிருக்கிறான்?'' என்று கேட்டான் அண்ணன் பல்லவராயன்.

''எங்கிருக்கிறானென்று புரியவில்லை. பொன்னமரா வதியிலிருந்து வந்த ஒற்றர்கள் அவன் சுவடு தெரியாமல் மறைந்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அவனை எப்படி யும் கண்டுபிடித்துவிடலாம், கன்னிமாட முற்றுகை முடிந்ததும் அவன் எங்கிருந்தாலும் வந்து அபராஜித னோடு சேர்ந்து கொள்வான். முற்றுகை முடிந்ததும் நீர் அபராஜிதனைச் சந்தித்தால் காரியம் முடிந்தது என்று நினைக்கிறேன்.''

''அபராஜிதன் இதில் என்ன சொல்ல முடியும்?''

''புரட்சிக் கொடியைப் பாண்டியநாட்டில் யாராவது உயர்த்த வேண்டுமல்லவா?''

''ஆம்''

''அதை உயர்த்தக் கூடியவன் பாண்டிய சேனாதிபதி அபராஜித பல்லவன் ஒருவன்தான். அவன் வீரபாண்டிய னின் உறவினன். ராஜ குடும்ப ரத்தம் அவன் உடம்பிலும் ஓடுகிறது. அவனைக் கொண்டுதான் நாம் சிங்கள ஆதிக் கத்தை ஒழிக்கவேண்டும். அபராஜிதன் பெயரால் பொன்னமராவதியில் புரட்சிக்கொடி உயர்த்தப்படும். அவனுக்குப் படை திரட்டிக் கொடுப்பான் காரிவளவன். அபராஜிதன் கொடி பொன்னமராவதியில் உயர்ந்தால்'' என்ற பெரிய பல்லவராயன் வார்த்தைகளில் குறுக்கே புகுந்த அண்ணன் பல்லவராயன், ''மதுரையிலும் கிளர்ச்சி நடக்கும். வீரபாண்டியன் மேலைமங்கலத்திலிருந்து திரும்பியபோது ஏற்பட்ட எழுச்சியை நானே நேரில் பார்த்தேன்'' என்றான்.

ஆம் என்பதற்கு அறிகுறியாகத் தலையை அசைத்த பெரிய பல்லவராயர், ''படைத்தலைவரே! பாண்டிய நாட்டு நிலைமை மிகச் சிக்கலானது சரியாக நாம் தீர்க்கா விட்டால் சோழ நாடும் வெகு சீக்கிரம் பாதிக்கப்படும். இலங்காபுரன் பாண்டிய நாட்டில் விளைவித்திருக்கும்

உமக்குத் தெரியும். எத்தனை ஊர்களை அவன் தீக்கு இரையாக்கியிருக்கிறான். எத்தனை கோயில்களை இடித்துத் தள்ளியிருக்கிறான், எத்தனை பாண்டியப் பிரஜைகளைச் சிறைப்பிடித்து அடிமைகளாகக் கப்பலேற்றிச் சிங்களத்துப் புத்தவிகாரங்களில் வேலை செய்ய விட்டிருக்கிறான் என்பதை நான் உமக்குச் சொல்ல வேண்டிய அவசியமுமில்லை. சோழ நாடும் அந்தக் கதிக்கு உள்ளாக வேண்டாமென்றால் நாம் பாண்டியநாட்டை இந்தப் பெரிய அரக்கர்கள் கைகளிலிருந்து விடுவிக்க வேண்டும்'' என்று சொல்லிய பேரமைச்சரின் கண்கள் ஏதோ பெரிய கனவைக் காண்பதுபோல் வெறித்துப் பார்த்தன.

தமிழ்நாட்டின் பிற்காலத்தை நினைத்துப் பேரமைச்சரின் உள்ளம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறதென அறிந்த சோழப்படைத் தலைவனான அண்ணன் பல்லவராயன், அவரைச் சற்றுநேரம் அந்தச் சிந்தனையிலேயே நிலைக்கவிட்டு மௌனமாக இருந்துவிட்டுக் கடைசியாகக் கேட்டான்: ''பேரமைச்சரின் உத்தரவு என்ன, நான் என்ன செய்யவேண்டும்?''

பேரமைச்சரின் கண்கள் அந்தஅறையிலிருந்த புலியின் சிலையைச் சற்று நேரம் பார்த்துக்கொண்டிருந்தன. பிறகு படைத் தலைவன்மீது திரும்பின. அந்தக் கண்கள் ஜாஜ்வல்யமாக ஜொலித்ததைக் கண்ட அண்ணன் பல்லவராயன், ''தாங்கள் மரப் பலகையில் வரைந்துள்ள யானை, குதிரை, காலாள் சித்திரங்களின்படி ஆங்காங்கு அந்தந்தப் படைகளை நிறுத்தி வைக்கிறேன். அவை அனைத்தையும் நீங்கள் பாண்டிய நாட்டு வடக்கெல்லையில் போட்டிருப்பதையும் கவனித்தேன்'' என்றான்.

''அந்தக் குறிப்புகளின்படியே சோழப் படைகள் போருக்குச் சித்தமாகட்டும். போர் ஏற்பாடுகளைப் பகிரங்கமாகவே செய்யுங்கள். நாம் போருக்குத் தயாராவது இலங்காபுரனுக்குத் தெரியட்டும்!' என்று உத்தரவிட்டார் பேரமைச்சர்.

''தெரிய வேண்டுமா?''

''கண்டிப்பாகத் தெரியவேண்டும். அப்பொழுதுதான் சோழநாட்டுப் படைத் தலைவர் சோழநாட்டைவிட்டு நகரமாட்டார் என்று இலங்காபுரன் நினைப்பான். அவன் அப்படி நினைத்து உம்மைப் பாண்டிய நாட்டில் எதிர்பார்க்காத சமயத்தில் நீர் பாண்டிய நாட்டுக்குள் நுழைய வேண்டும்''

''உத்தரவு!''

''இரகசியமாகப் பாண்டியநாட்டுக்குள் நுழைந்து கன்னிமாடத்துக்குச் செல்லும்.''

''சரி.''

''கன்னிமாடத்தில் அபராஜிதனைச் சந்தித்து இந்த ஓலையைக் கொடும்'' என்று பேரமைச்சர் உத்தரவோடு உத்தரவாகத் தமது மடியிலிருந்து ஓலையொன்றையும் எடுத்துக் கொடுத்தார்.

படைத் தலைவனான அண்ணன் பல்லவராயன் அந்த ஓலையைப் பிரித்துக்கூட பார்க்காமல் மடியில் வைத்துக்கொண்டு, ''போர் விஷயமாக மன்னரை நேரில் கலந்து பேச வேண்டிய அவசியமிருக்கிறதா?'' என்று விசாரித்தான்.

''தேவையில்லை. நான் மன்னருக்குச் சொல்லிக் கொள்கிறேன்'' என்று கூறிவிட்டார் பேரமைச்சர்.

மீண்டும் ஒரு சந்தேகம் கேட்டான் படைத்தலைவன் ''மாதவி கூடலுக்குப் போகிறாளே!'' என்று.

''அவளைப்பற்றி நீர் கவலைப்படவேண்டாம்' என்றார் பேரமைச்சர்.

''அவளும் ராஜதந்திரம் அறிந்தவளாயிற்றே!''

''அவளைக் கவனித்துக்கொள்ளக்கருணாகரத்தேவனை அனுப்பியிருக்கிறேன்'' என்று சொன்னார் பேரமைச்சர்.

பேரமைச்சர் சகல விவகாரங்களையும் முன்கூட்டியே தீர்மானம் செய்திருப்பதைக் கண்ட அண்ணன் பல்லவராயன் அத்துடன் மந்திராலோசனை அறையிலிருந்து வெளியேறித் தனது அலுவல்களைக் கவனிக்க

சென்றான். அன்றிலிருந்து நான்கைந்து நாட்கள் வரை படைத் தலைவன் மாளிகை திமிலோகப் பட்டுக்கொண்டிருந்தது. படைத்தலைவன் தூதர்கள் நாலா பக்கத்திலும் பறந்தார்கள். ஒரு வாரத்திற்குள் சோழநாட்டில் படை நடமாட்டம் பலத்து விடவே மக்கள் எந்த நிமிஷத்திலும் போர் நேரலாம் என்ற பீதியால் கலங்கிக் கொண்டிருந்தார்கள். சோழப் படைகள் பாண்டிய நாட்டு எல்லையில் குவிக்கப் படுகிறதைக் கண்ட இலங்காபுரனும், 'இந்தச் சமயத்தில் வீரபாண்டியன் கன்னிமாட முற்றுகையில் காலங்கழிக்கிறானே' என்று ஏங்கிக் கொண்டிருந்தான். ஆனால் அந்த முற்றுகையை ஒரு விதமாக முடித்துத் தீர்க்க மிக விபரீதமான, ஓர் ஏற்பாட்டை விக்ரம பாண்டியன் செய்துகொண்டிருந்ததை கன்னிமாடத்திலிருந்த கார்குழலியே அறியவில்லையே! தொலை தூரத்தில் மதுரையிலிருந்த இலங்காபுரன் எப்படி அறிவான்? பேரமைச்சர் அன்னன் பல்லவராயனுடன் பேசிய எட்டு நாட்கள் கழித்து ஒன்பதாவது நாள் இரவில் விபரீதமான தன் யோசனையை நிறைவேற்ற விக்ரம பாண்டியன் மெல்லக் கன்னிமாடத்தின் இருளடர்ந்த இடத்தில் சென்ற அன்றொருநாள் கள்வனுடன் பேசிய முல்லைக்கொடியின் பக்கத்திலேயே நின்றான். சில நிமிடங்களுக்கெல்லாம் அவனைநோக்கி, ஓர் உருவமும் மெல்ல வந்து அவனுடன் ஏதோ பேசத் தொடங்கியது.

50. பரிவும் பரிகாரமும்

இருளை ஜீவராசிகளின் அமைதிக்காகவே கடவுள் படைத்திருக்கிறார். பகலில் ஓடியாடி உழைக்கும் ஜீவராசிகள் உறங்கி ஓய்வெடுத்த, இந்திரியங்களுக்கு அமைதியளித்து உழைப்பினால் விரயமான சக்தியை மீண்டும் பெறுவதற்காகவே இரவைப்படைத்திருக்கிறார். இயற்கையின் இந்த நியதியையும் அதிசயத்தையும் சில ஜீவராசிகள் உடைத்துக் கொண்டன. சாதுப் பிராணிகளைக் கொன்று ஜீவிக்கும் துஷ்ட மிருகங்கள் இரவைப் பகலாகவும், பகலை இரவாகவும் மாற்றிக்கொண்டன. மிருகராசியில் மட்டும் அந்தக் கொலைத்தொழில் நின்றிருந்தால் உலகம் அதிக சீர்கேடு அடைந்திருக்காது. ஆறறிவு படைத்த மனித வர்க்கத்திலும் துஷ்ட மிருகங்கள் ஏற்பட்டதால் கொலைத்தொழிலும் ஏற்பட்டது. கொலைத் தொழில் ஏற்பட்டதால் ரகசியமும் சதியும் ஏற்பட்டன. ரகசியத்துக்கும் சதிக்கும் இருள் தேவையாயிற்று. இருளடைந்த உள்ளங்கள் இருளடைந்த இரவையும் இடங்களையும் தேடின. ஆகவே, இருளடைந்த தன் திட்டத்துக்கு விக்ரம பாண்டியன் இருளடைந்த அந்த இரவையோ, இருளை மிகப் பயங்கரமாக ஆக்கிக் கொண்டிருந்த அந்த முல்லைக் கொடியின் மறைவையோ நாடியதில் வியப்பேதும் இல்லையல்லவா?

வீரபாண்டியன் அம்பின் மூலம் அபயமளித்த நாளாகவே மெள்ள மெள்ளக் கள்ளர்களின் மனத்தைக் கலைத்துக் கோட்டையை எதிரியிடம் அளிக்கத் தீர்மானித்துவிட்ட விக்ரம பாண்டியன், அடுத்து வந்த ஒன்பது நாட்களுக்குள் தன் சதித் திட்டத்தைப் பெரிதும் உருவாக்கி விட்டிருந்தான். மிகுந்த எச்சரிக்கையுடனும் பயத்துடனும் கள்ளர்களை அணுகிய அவன் முதலில் பகிரங்கமாகத் தன் திட்டத்தைப் பற்றிப் பிரஸ்தாபிக்காமல் வீரபாண்டியன் படைபலத்தைப் பற்றியும் கோட்டையிலிருக்கும் படைகளின் பலவீனத்தைப் பற்றியும் சாதாரணமாகப் பேச ஆரம்பித்தான். கள்ளர்கள் தன் பேச்சில் வெறுப்பு ஏதும் காட்டாமல் காதுகொடுப்பதையும் சில சமயங்களில் தன்னை ஆமோதிப்பதையும் கண்ட விக்ரம பாண்டியனின் துணிச்சல் நாளடைவில் அதிகமாகவே, கள்ளர்களின் நலனில் அதிக அக்கறையுள்ளவன் போல் நடிக்க ஆரம்பித்து, அவர்களது நிராதரவான நிலைகண்டு வருந்துவது போல் பாசாங்கு செய்தான். சில சமயங்களில் அவர்கள் நிலைக்குத் தானே

காரணம் என்பதையும் சொல்லிக்காட்டி அவர்கள் காது கேட்கும்படியாகத் தன்னைக் கண்டபடி நொந்து கொண்டான். இரவுநேரங்களில் சமயம் அகப்படும்போதெல்லாம் கள்ளர்கள் கும்பலாக உட்கார்ந்திருக்கும் இடங்களுக்குச் சென்று அவர்கள் சம்பாஷணையில் தானும் கலந்து கொண்டான். கள்ளர்களிலொருவன் காணாது போன விஷயத்தைப் பற்றி அவர்களிடம் பகிரங்கமாகவே தான் பிரஸ்தாபித்தான். தங்களில் ஒருவன் திடீரென மறைந்து விட்டதற்கு விக்ரமபாண்டியன் காரணமென் பதை அறியாத கள்ளர்கள், ''ஆமாம்! எப்படி மறைந்தான்? எங்கு போனான்?'' என்று வினவினார்கள்.

''எங்கும் போயிருக்க முடியாது. எப்படிப் போக முடியும்? கோட்டைக் கதவுகள்தான் இரவும் பகலும் சாத்தப்பட்டுக் கிடக்கின்றனவே. ஆகவே, யாரும் வெளி யில் போகவில்லையென்பது மட்டும் திண்ணம்!'' என்றான் விக்ரம பாண்டியன்.

''வெளியே போகாவிட்டால்?'' என்று சந்தேகத் துடன் கேள்வியை வீசினான் ஒரு கள்ளன்.

''கோட்டைக்குள்ளேயே மறைந்திருக்க வேண்டும். என்றான் விக்ரம பாண்டியன்.

கள்ளர்களின் முகத்தில் சந்தேகச் சாயை படரலா யிற்று. ''கோட்டைக்குள்ளே இருப்பவன் எப்படி மறைய முடியும்!'' என்று வினவினான் ஒரு கள்ளன்.

விக்ரம பாண்டியன் விஷமமாகச் சிரித்துக் கொண்டே சொன்னான், ''மறைவதற்கா வழியில்லை? ஆயிரம் வழிகளில் மறையலாம், உலகத்திலிருந்து கூட மறைந்து விடலாம்.'' விக்ரம பாண்டியன் எதைச் சுட்டிக் காட்டுகிறான் என்பதைக் கள்ளர்கள் நன்றாகப் புரிந்து கொண்டார்கள். இருந்தாலும் சந்தேகத்தைச் சரிசெய்து கொள்ள ஒருவன் பச்சையாகவே கேட்டான்; ''காணாமற் போனவன் கொல்லப் பட்டானென்று சொல்கிறீர்களா!''

கேள்வி கேட்ட கள்ளனைச் சற்று நேரம் உற்று நோக்கிய விக்ரமபாண்டியன், ''அப்படியேதும் நான் சொல்லவி ல்லையே. கோட்டை பலமாகப் பாதுகாக்கப் பட்டிருக்கிறது கோட்டைச் சுவர்களைத் தாண்டி யாரும் வெளியே போக முடியாது. போக வேண்டுமானால் ஆகாய மார்க்கமாகத்தான் போகவேண்டும். ஆகாயத்தில் உடல் பறக்க முடியாது. ஆனால் உயிர் பறக்க முடியும்!'' என்று சொல்லி புன்முறுவலொன்றை வீசினான்.

கள்ளர்கள் திக்பிரமையடைந்தார்கள். ''காணாமற் போன கள்ளன் கொலை செய்யப்பட்டானென்றால் யார் கொன்றிருக்க முடியும்? எதற்காகக் கொல்லப்பட்டான்?'' என்று கேட்டான் மற்றொரு கள்ளன்.

''என்னை எதற்காகக் கேட்கிறீர்கள்? நானா இங்கு தலைவன்?'' என்ற இன்னொரு சந்தேக விதையையும் அங்கு விதைத்து விட்டுச் சென்றான் விக்ரமபாண்டியன்.

இப்படியே தொடர்ச்சியாகக் கள்ளர்களுடன் உற வாடி அவர்கள் இதயங்களைக் கலைத்துவிட்ட விக்ரம பாண்டியன் ஒன்பதாவது நாள்இரவு, அடுத்தகட்டத்தைச் சரிசெய்யத் தன் பாய்ச்சிகளை உருட்டத்தொடங்கிமெள்ள முல்லைக் கொடியருகில் வந்து யாரையோ எதிர் பார்த்து நின்றான். அவன் எதிர்பார்த்த பேர்வழியும் மெள்ள மெள்ள அப்புறமும் இப்புறமும் பார்த்துக் கொண்டுஅவனை அணுகி வந்து, ''பாண்டிய மன்னனே! என்னைஎதற்காக அழைத்தீர்கள்? அதுவும் இந்த இரவில் இந்தஇடத்தில், இத்தனை ரகசியமாக ஏன் சந்திக்கவேண் டும்?'' என்று வினவினான்.

''மார்க்கியா! மெள்ளப் பேசு. யாராவது நம்மைப் பார்த்தால் தலை போய்விடும்'' என்று கூறிவிட்டு ஜாக் கிரதை என்பதற்கு உதடுகளில் ஆள்காட்டி விரலையும் வைத்து எச்சரித்தான் விக்ரம பாண்டியன்.

',நாம் யாருக்குப் பயப்பட வேண்டும்? எதற்காகப் பயப்படவேண்டும்? அப்படித் தலைபோகிற காரியம்தான் என்ன?'' என்று மறுபடியும் சற்றுச் சீற்றத்துடனேயே வினவினான் மார்க்கியன்.

''மார்க்கியா! தலைபோகிற காரியம்தான். இல்லாவிட்டால் இப்படி ரகசியமாகஉன்னைவரவழைப்பேனா?'' என்று சமாதானப்படுத்த முயன்றான் விக்ரமபாண்டியன்.

ஆனால் ராட்சதன் போல் பிரும்மாண்டமாக நின்ற மார்க்கியன் சமாதானப்பட்டதாகத் தெரியவில்லை. ''தலைபோகிற காரியங்களில் தங்களுக்குப் பழக்கமுண்டு என்பது எனக்குத் தெரியும்'' என்றான் இகழ்ச்சியும் கடுமையும் நிறைந்த குரலில்.

''எனக்குப் பழக்கமா?''

''ஆமாம், மன்னவா! அதை முன்பே புரிந்து கொண்டிருக்கிறேன்.''

''முன்பே புரிந்து கொண்டிருக்கிறாயா?''

''ஆமாம் என் சொந்த விஷயத்தில்.''

''உனக்கு நான் என்ன தீங்கு செய்தேல்?''

''மனத்தைத் தொட்டுப் பாருங்கள். கோட்டைத்தலைவனைத் தாக்கியதற்காக விசாரணை நடந்தது உங்களுக்கு நினைவிருக்கிறதல்லவா?''

''இருக்கிறது.''

''அப்பொழுது என் தலையை வாங்கச் சொல்லிச் சிபாரிசு செய்தவர் தாங்கள்தான். அது தலைபோகிற காரியமென்று நான் தங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியமில்லை.''

விக்ரமபாண்டியன் ஒரு வினாடி மௌனமாயிருந்தான். ''என்ன யோசிக்கிறீர்கள்?'' என்று உஷ்ணமாகக் கேட்டான் மார்க்கியன்.

''யோசிப்பதற்கு நிறைய இருக்கிறது மார்க்கியா. உன்னைக் கொல்ல வேண்டுமென்று நான் யோசனை சொன்னது உண்மைதான். ஆனால் அந்தக்கட்டளை நிறைவேறாது என்பது எனக்குத் தெரியும். இதைச்சொன்னால்

பார் நம்புவார்கள்?'' என்று அலுத்துக் கொண்டான் விக்ரமபாண்டியன்.

''உங்களுக்குத் தெரியுமா?''

''கண்டிப்பாகத் தெரியும்.'

''எப்படித் தெரியும்?''

''அப்பொழுது கோட்டைக்கு நானே தலைவன். உத்தரவை நிறைவேற்றுவதாயிருந்தால் நான்தானே நிறைவேற்றியிருக்க வேண்டும்.''

''நிறைவேற்றியிருக்க மாட்டீர்களென்பது என்ன நிச்சயம்?''

''யோசித்துப் பார்த்தால் உனக்கே தெரியும், மார்க்கியா.''

',இதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?''

''நிரம்ப இருக்கிறது. உனக்கு எதற்காக அந்தத் தண்டனை கொடுக்கக் குழலி இஷ்டப்பட்டாள்?''

தூக்கி வாரிப்போட்டது மார்க்கியனுக்கு. ''இளவரசி இஷ்டப்பட்டார்களா? நீங்கள்தானே தண்டனை விதித்தீர்கள்?'' என்றான்.

''அவள் இஷ்டத்தை நான் பகிரங்கமாகச் சொன்னேன்.''

''இளவரசியின் இஷ்டம் உங்களுக்கு எப்படித் தெரியும்?''

''சரியாகக் கவனித்திருந்தால் உனக்கும் புரிந்திருக்கும். இளவரசியின் மனம் இந்தப் பாண்டிய நாட்டுப் பிரபுவிடம் லயித்திருக்கிறது. அவன் மீது நீ பாய்ந்து அவனைக் கொல்ல முயன்றிருக்கிறாய். அவனைக் கொல்ல முயன்ற உன்னை இளவரசி என்ன செய்ய இஷ்டப்படுவான் மார்க்கியா?'' என்று விஷமமாகப் பேசினான் விக்ரமபாண்டியன். அத்துடன் நிற்காமல் மேலும் சொன்னான்: ''என் தண்டனையைக் கேட்ட மாத்திரத்தில் நீ மட்டும் கூச்சலிடாமலிருந்திருந்தால் உன்னைச் சிறைக் கூடத்துக்கு

அனுப்பியிருப்பேன். ஏதாவது சாக்குச் சொல்லி தண்டனையைத் தாமதித்திருப்பேன். எல்லாவற்றையும் நீதான் கெடுத்தாய்''.

''இத்தனையும் நீங்கள் எதற்காகச் செய்யவேண்டும்?'' என்று மார்க்கியன் கேட்டான்.

''பாண்டிய நாட்டுப் பிரபுவிடம் எனக்குள்ள வெறுப்பினால்'' என்றான் விக்ரம பாண்டியன்.

பாண்டியநாட்டுப் பிரபுவை விக்ரமபாண்டியன் வெறுக்கும் காரணம் மார்க்கியனுக்கு நன்றாக விளங்கியே இருந்தது. ஆகையால் சற்று நேரம் ஏதோ சிந்தித்தான். அவன் சிந்தனைக்கு இடங்கொடாமல் விக்ரம பாண்டியன் அவனுக்கு மேலும் தாபம் போடத் தொடங்கி, ''அத்தனையையும் நீ கெடுத்தாய் மார்க்கியா! என்னைப் புரிந்து கொள்ளாததால் சீறினாய். அவனைக் கோட்டைக்குத் தலைவனாக்கினாய். இப்பொழுது அந்தப் பிரபுவுடன் அவன் நண்பனும் சேர்ந்து கொண்டான். கோட்டையில் ஐம்பது வீரர்கள் இருந்தது போய் நூற்றைம்பது வீரர்கள் சேர்ந்தார்கள். கோட்டைக் காவலன் கை இப்போது ஓங்கி நிற்கிறது. போதாக்குறைக்கு இளவரசியையும் மயக்கித் தன் கைக்குள் போட்டுக்கொண்டான். அந்தச் சாமியாரும் அவன் சொற்படி ஆடுகிறான். எதிரே காட்டியிருக்கும் அபாயத்தை அறியாத வீரர்கள் அவன் வார்த்தைகளை வேதவாக்காக நம்புகிறார்கள். பலிக்குச் செல்லும் ஆடுகள்கூடப் பூசாரியின் உடுக்கையடியிலும் பாட்டிலும், மயங்கித்தான் நிற்கின்றன.''

விக்ரம பாண்டியன் மனப்போக்கை மார்க்கியன் சரியாகப் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை. புத்தி குழம்பியிருந்ததற்கு அறிகுறியாக மார்க்கியன் முகம்சிறிது சலித்துப் பிறகு சரிப்பட்டது. ''இதைப்பற்றி இப்பொழுது யோசித்து என்ன பயன்? என்றான் மார்க்கியன்.

''என்ன ஆனாலும் சரி, இந்தப் பாண்டிய நாட்டுப் பிரபுவின் பிடிவாதத்திற்காகக் கோட்டையிலுள்ள

வீரர்களைக் காவு கொடுப்பதில்லை என்ற முடிவுக்கு வந்திருக்கிறேன்.''

''அதை எப்படி நாம் தடுக்கமுடியும்? எதிரிகள் தாக்கினால் நாம் மடிய வேண்டியதுதானே?''

''அவசியமில்லை மார்க்கியா! தர்ம யுத்தமானால் நாம் எதிரிகளை எதிர்த்து நின்று மாளுவதுதான் நீதி. ஆனால் இது தர்ம யுத்தமல்ல. எந்தக் கொள்கைகளுக்காகவும் நடக்கவில்லை. பெண்ணுக்காகப் போர் நடக்கிறது. இதில் என் உரிமையைக்கூட நான் மறக்கத் தயாராயிருக்கிறேன். உன்னையும் கள்ளர்களையும் அமர்த்தியது நான். நீங்கள் மட்டும் பிழைத்தால் போதும்: பிழைக்கவைப்பது என் கடமையும்கூட.''

''கடமையை நிறைவேற்ற என்ன செய்திருக்கிறீர்கள்?''

''என்ன செய்திருக்கிறேனென்று என்னைக் கேட்காதே மார்க்கியா! உயிரையோ, அந்தஸ்தையோ எதையுமே மதிக்காமல் பல காரியங்கள் செய்திருக்கிறேன். ஆனால் அவை பலனடைந்து, கள்ளர்கள் பிழைக்க வேண்டுமானால் உன் உதவி வேண்டும். கள்ளர்கள் ஆதரவும் வேண்டும்.''

கள்ளர்களிடம் விக்ரமபாண்டியன் காட்டிய பரிவைக் கண்டு அசந்து போனான் மார்க்கியன். ''கள்ளர்களிடம் நீங்கள் இவ்வளவு அக்கறை காட்டுவீர்கள் என்று எனக்குத் தெரியாது பிரபு!'' என்று வாய்விட்டும் சொன்னான்.

''இதில் அக்கறை ஏதுமில்லை மார்க்கியா! முன்பு சொன்னேனே அதுபோல் இது என் கடமை. நான் அழைத்து வந்தவர்களை நான் பலியிடக்கூடாது, அவ்வளவுதான் விஷயம்.''

மார்க்கியன் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான். வெகு நேரம் சிந்தித்துவிட்டுக் கேட்டான்: ''கள்ளர்களைத் தப்புவிக்க ஏதாவது வழியிருக்கிறதா?'' என்று.

''வழியை யோசிக்காமலா உன்னை இந்த இடத்திற்குக் கூப்பிட்டேன்!''

''என்ன வழி?''

''ஒரே வழிதான் மார்க்கியா! எதிரியிடம் சரணாகதி யடைவதைத் தவிர வேறு என்ன வழி இருக்கிறது?'

''வீரபாண்டியனிடம் சரணடையக் கோட்டைத் தலைவர் ஒப்புக்கொள்வாரா?''

''அவரைக் கேட்டாலல்லவா அவர் ஒப்புக்கொள்வதற்கும் நிராகரிப்பதற்கும்?''

''கேட்காமல் எப்படிப் படைகள் சரணடைய முடியும்?''

''அவர் வருவதற்கு முன்பு இங்கு கோட்டைத் தலைவன் யார்?''

''தாங்கள் தான்.''

''மீண்டும் என்னையே தலைவனாக்கி விடுங்கள். அல்லது தலைவனாக நினைத்து,சொன்னபடி கேளுங்கள்''

''கள்ளர்களை நீங்கள் காப்பாற்றுவதானால் நீங்கள் எதைச் சொன்னாலும் கேட்கிறேன். அவர்களை அழைத்து வந்தது நான். அவர்களை உயிருடன் ஊருக்கு அனுப்ப வேண்டியதும் என் பொறுப்பு.''

''உயிருடன் மட்டுமல்ல மார்க்கியா. பணத்துடன்
அனுப்பலாம்; அதற்கும் நான் ஏற்பாடு செய்கிறேன்.''

''அப்படியானால் உங்கள் வார்த்தைக்கு நான் ஏன்
மறுப்புச் சொல்லப் போகிறேன்!'' என்றான் மார்க்கியன்.

மார்க்கியன் மனத்தை மாற்றிவிட்டதால் உள்ளூர
உவகை பொங்க மகிழ்ச்சிப் பரவசனான விக்ரம
பாண்டியன் மேலுக்கு அதைக்காட்டாமல் தன்திட்டத்தை
அவிழ்க்கத் தொடங்கி, ''மார்க்கியா, கோட்டைக் கதவு
களுக்கருகிலும், கதவுகளுக்கு மேலுள்ள கோட்டைத்
தாழ்வாரப் பகுதியிலும் யார் காவல் புரிகிறார்கள்?''
என்று கேட்டான்.

''மழவராயன் வீரர்கள்!'' என்றான் மார்க்கியன்.

''அந்த இரண்டு இடங்களிலும் மழவராயன் வீரர்களை மாற்றி, கள்ளர்களை வைக்க முடியுமா?''

''தண்டிப்பாய் முடியும்.''

''பாண்டிய நாட்டுப் பிரபு ஆட்சேபிக்கமாட்டானோ?''

''நான் எது செய்தாலும் ஆட்சேபிக்கமாட்டார். என்னிடம்தான் அவருக்குப் பூரண நம்பிக்கையாயிற்றே.''

''சரி! நாளை இரவு உன் கள்ளர்களையே கதவுக்கருகிலேயும் மேலேயும் காவல் வை.''

''ஆகட்டும்.''

''மூன்றாவது ஜாமத்தில் கதவுகளைத் திறந்துவிடு.''

''திறந்துவிட்டால்?''

''வீரபாண்டியன் படை உள்ளே நுழையும்.''

''உள்ளே நுழைந்தால் நம்மை வெட்டிப் போடமாட்டார்களா?''

''மாட்டார்கள். அதற்கு நான் உத்தரவாதம். ஏற்கனவே இது சம்பந்தமாக வீரபாண்டியனுக்கு ஓலை எழுதி அம்பின் மூலம் எய்திருக்கிறேன்.''

இதைக் கேட்ட மார்க்கீயன் புருவங்கள் சற்று ஒன்று கூடிப் பிரிந்தன.

''உலகம் நம்மை நிந்திக்காத வகையில் காரியத்தை முடிக்கவேண்டும்'' என்று மெள்ளத் தன் அபிப்ராயத்தைச் சொன்னான் மார்க்கீயன்.

''எப்படி?''

''தங்கள் சொல்படி கோட்டைக் கதவைத் திறக்கச் செய்துவிடுகிறேன்.ஆனால் நாமாகத் திறந்ததாக இருக்கக் கூடாது. கதவின் தாழ்களைத் திறந்துவைக்கிறேன். பேருக்கு ஆயுத வண்டிகளில் மரத்தைக் கட்டிக் கதவை உடைக்கச் சொல்லுங்கள். உள்ளே தாழ்ப்பாள் இல்லாததால் கதவு உடனே திறந்துவிடும். தவிர எல்லோரும் கதவு மூலமாக உள்ளே வரவேண்டாம். அகழியில் இரு இடங்

களில் நீண்ட மரங்களைக் குறுக்கே போட்டுப் பாலமாக்கி, அவற்றின்மீது படைகள் வரட்டும். வீரபாண்டியன் படைகள் மூன்று புறங்களில் தாக்கினால்தான் நாம் சரணடைய வேண்டியதாகப் பாசாங்கு செய்யலாம். எதிரிகள் உள்ளே புகுந்ததும் கள்ளர்கள் ஆயுதங்களைக் கீழே எறிந்து விடுவார்கள்'' என்று விளக்கினான் மார்க்கியன்.

விக்கிரம பாண்டியன் மெல்ல நகைத்தான். அந்த நகைப்பில் எத்தனை விஷம்! எத்தனை குரூரம்! அந்த குரூரத்தின் தொடர்ச்சியாக பரிகசிப்பைப் புன்முறுவலாகக் கொண்ட விக்கிரமபாண்டியன், ''மார்க்கியோ! இன்றிரவே நான் வீரபாண்டியனுக்குச் செய்தி அனுப்பி விடுகிறேன். நாளை மூன்றாம் ஜாமத்தில் என்று இழுத்தான்.

''கோட்டைக் கதவுகளின் தாழ்கள் கழன்று கிடக்கும்'' என்று முணுமுணுத்தான் மார்க்கியன்

விக்கிரமபாண்டியன் முகத்தில், திருப்தியின் குறி சம்பூரணமாகத் தெரிந்தது. அத்துடன் இருவரும் பிரிந்து வெவ்வேறு வழிகளில் சென்றார்கள். மறுநாளன்று மூன்றாவது ஜாமமும் விக்கிரமபாண்டியன் துரோகச் செயலுக்குத் துணை செய்ய வெகுசீக்கிரம் வந்தது. ஏதோ ஒரு கோடிகளில் பாராக்காரர்கள் கூவும் சத்தம் கேட்டது. கன்னிமாடப் புறாக்கூண்டுகளுக்கு அருகிலிருந்த அறையிலிருந்து ஒரு தீபம் இப்படியும் அப்படியும் கோட்டை வாயிலை நோக்கி அசைந்தது. கள்ளர்கள் பத்துப்பேர் கோட்டைக் கதவுக்காகப் பூனைபோல் நகர்ந்து சப்தமேதும் செய்யாமல் தாழ்களைக் கழற்றினார்கள். காட்டுக்குள்ளிருந்த வீரபாண்டியன் படையும் மெல்ல அரவம் செய்யாமல் கோட்டையை நோக்கி நகர்ந்தது.

51. நிலவில் விளைந்த கோரம்

கன்னிமாடக் கோட்டையைப் பந்தாடாக்கிக் கார் குழலியைத் தூக்கிச் செல்ல மனக்கோட்டை கட்டிய வீரபாண்டியன், தன் படைகளை ஏவிய அதே இரவின் மூன்றாம் ஜாமத்தில் நிலவு நன்றாகத்தான் காய்ந்துகொண்டிருந்தது. சாதாரண சமயத்தில் இன்பம் பயக்கவல்ல அந்த நிலவொளிகூட அடுத்து வர இருந்த நிகழ்ச்சிகளின் காரணமாக மிகக் கோரமாகவே காட்சியளித்தது. உலகத்தில் இன்பம் பயக்கும் சாதனங்களும் உண்டு. துன்பம் பயக்கும் சாதனங்களும் உண்டு. இவற்றின் குணவிசேஷங்கள் தனித்தனியாக மாறுபட்டிருந்தாலும் இவை ஒன்று சேரும்போது துன்பத்தின் தொனியே ஓங்கிநிற்கிறது. நல்லது நல்லதுதான். கெட்டது கெட்டதுதான். நல்லதுடன் கெட்டது சேரும்போது கெட்டதன் மகிமையே தலைதூக்கி நிற்கின்றது. பால் நல்லது. இன்பம் பயக்கவல்லது. ஆனால் அதில் விஷம் கலக்கும்போது விஷத்தின் குணமே ஓங்கி நிற்கின்றது. விஷம், பாலை விஷமாக அடிக்கமுடியும். பால் விஷத்தைப் பாலாக அடிக்க முடியாது. சிருஷ்டி விசித்திரங்களில் இது ஒன்று. அந்த விசித்திரத்தின் காரணமாகத்தான் அன்றிரவு காய்ந்த பால்நிலவும் பயங்கரக்காட்சியளித்தது. அடுத்த சில வினாடிகளில் தன்னுடன் கலக்கப்போகும் யுத்தவிஷம் எத்தனையோ உயிர்களைக் குடித்துவிடப் போகிறதென்ற உண்மை, இன்பமே தோய்ந்த அந்த நிலவுக்குத் தெரியாதா என்ன?

பொதுவாக மரணப் பிடியிலிருப்பவனை இறப்பு சூழுமுன்பாக அக்கம் பக்கத்திலுள்ள இதர உயிர்களுக்குத் தாக்கத்தை அளிக்கும் இயற்கை காட்டிலுள்ள பட்சிகளுக்கும் மிருகங்களுக்கும் ஊர்ந்து வாழும் ஜந்துக்களுக்கும் ஆழ்ந்த நித்திரையை அளித்திருந்ததால் இரவின் பயங்கரம் மிக அதிகமாயிருந்தது. இராக்காலங்களில் ஊளையிடுவதைப் பழக்கமாகக் கொண்டிருந்த காட்டு நரிகளும், அலறாமல் இருக்க முடியாத ஆந்தைகளுங்கூட மூச்சு விடாமல் ஏதோ பேராபத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனபோல் மௌனமாகக் காலங்கழித்துக் கொண்டிருந்தன. சில நாட்களில் காலங்கடந்து கூவும் அர்த்தஜாமக் கோழிகூட அன்று காலாகாலத்தில் கூவி

விட்டு மூன்றாவது ஜாமத்தில் உறங்கி விட்டன. சின்னஞ்சிறு மெல்லிய நாக்குகளை நீட்டி, சிலுக் சிலுக்கென்று சப்தம் செய்யும் மரப்பல்லிகள் வாயை அடக்கிக்கொண்டு மரக்கிளைகளில் படுத்துக்கிடந்தன. இராக்காலங்களில் இரையை எதிர்பார்த்து அகழிகளில் தங்கள் முரட்டு வால்களைத் தூக்கியடித்து அதம் செய்து ஆர்ப்பரிக்கும் முதலைகள்கூட அடுத்த சில்வினாடிகளில் கிடைக்கக்கூடிய மானிடச் சடலங்களை எதிர்பார்ப்பனபோல் தங்கள் நீண்ட உடல்களை அகழிகளின் பக்கச் சுவர்களில் சாய்த்துத் திப்பொறி பறக்கும் கண்களுடன் படுத்துக்கிடந்தன.

காட்டுப் பிரதேசத்திலிருந்த இந்தப் பயங்கர நிலையைக் கன்னிமாடக் கோட்டைப் பிரதேசத்திலிருந்த சப்தம் இன்னும் பயங்கரமாக அடித்துக் கொண்டிருந்தது. அபராஜிதன் உத்தரவுப்படி இரவுவேளையில் கோட்டையைச் சுற்றிச் சுற்றி சதா உலவவேண்டிய குதிரைவீரர்கள் தங்கள் பணியை அந்த இரவில் நிறைவேற்றாததால் கன்னிமாடக் கோட்டையில் பீதி தரும் விபரீத அமைதி நிலவிக்கிடந்தது. காலத்திலும், அகாலத்திலும் இடைவிடாது கோஷிக்க வேண்டிய பாராக்காரர்கள்கூட அன்றிரவு தங்கள் கடமையைச் செய்ய மறந்துவிட்டதாகத் தோன்றியது. குடித்துக் கூத்தடிக்கும் அந்தக் கள்ளர்கள்தான் விக்ரமபாண்டியனுக்கு உட்பகையாகி பதுங்கிப் பதுங்கிக் கதவைத் திறந்துவிட்டு மறைந்துவிட்டார்களென்றால் மற்ற வீரர்களுக்கு என்ன வந்துவிட்டது? எங்கே மறைந்துவிட்டார்கள்? உறங்கிவிட்டார்களானால் ஏன் உறங்கிவிட்டார்கள்? வீரர்கள் எப்படியாவது போகட்டும், இரவுக் காவலை, இரவில் பலமுறை சோதிக்கும் பாண்டிய சேனாதிபதியும் அவன் நண்பன் அந்தக் காரிவளவனுமா தூங்கிவிட்டார்கள்? கார்குழலியைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றிருக்கும் இந்த வீரர்கள் தூங்குவது நியாயமா? இவர்களாவது போகட்டும், இக வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள். இக

வாழ்க்கையை அறவே வெறுத்த அந்தச் சாமியார்—அடிகளார்—அடிக்கடி கோட்டையைச் சுற்றி வேவு பார்த்துக் கொண்டிருந்தாரே, அவருக்கென்ன வந்தது கேடு?

என்ன வந்ததோ, எது வந்ததோ? கன்னிமாடக் கோட்டைக்குள்ளும் எந்தவித நடமாட்டமுமில்லாததால் இரவின் பயங்கரம் மிகமிக அதிகமாகவே இருந்தது. அந்த நிசப்த நிலையையும், எல்லோரும் அவரவர்கள் அறைகளில் கண்ணுறங்கிவிட்ட தன்மையையும் கண்ட விக்ரம பாண்டியன், தனக்குக் கடவுளே இத்தகைய உதவியைச் செய்திருக்கிறார் என்று எண்ணிக்கொண்டே கன்னிமாடப் புறாக் கூண்டுகளுக்கு அருகிலிருந்த அறையில் உலாவினான். என்ன அனுகூல நிலையிலிருந்தாலும் வீரபாண்டியன் கோட்டையைப் பிடித்துப் பாண்டிய நாட்டுப் பிரபுவிடமிருந்து தன்னை விடுவிக்கும் வரையில் தன் நிலைமை மிக அபாயமானதென்பதை அறிந்த விக்ரம பாண்டியன் தன் உலாவலை ஒரு வினாடி நிறுத்திக் காட்டு முகப்பில் மெள்ள மெள்ளக் கோட்டையை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த வீரபாண்டியன் படைகளை ஊன்றிக் கவனிக்கலானான். அவன் பார்வைக்கு நிலவும் துணை செய்யவே தான் முதல் நாள் அம்பின் மூலம் அனுப்பிய செய்தியின்படி காரியம் நடக்கிறதா என்பதை ஆராயத் தொடங்கிய விக்ரம பாண்டியன், தன் சொற்படியே சகலமும் நடப்பதைக் கண்டு மிகுந்த மகிழ்ச்சியும் அடைந்தான்.

வீரபாண்டியன் வீரர்கள் காட்டின் முகப்புக்கு வந்ததும் மூன்று கூறுகளாகப் பிரிந்துவிட்டதையும், மத்தியிலிருந்த கூறு பெரிய ஆயுத வண்டிகளில் நீண்ட மரங்களைப் பொருத்திக் கன்னி மாடக் கோட்டைக் கதவை உடைக்க வந்து கொண்டிருந்ததையும் விக்ரமபாண்டியன் பார்த்துப் பெருவகை எய்தினான். அதைத் தவிர மற்ற இரு கூறுகளும் கன்னிமாடக் கோட்டைக் கதவின் இருபுறங்களிலும் கோட்டை அகழிக்குப் பாலம் அமைக்க

முயல்வதையும், அதற்காகக் காட்டுக்குள்ளிருந்த பெரிய
மரங்களை இழுத்து வந்து கொண்டிருந்ததையும்
பார்த்து இன்னும் சிறிது நேரத்தில் கன்னிமாடம் வீர
பாண்டியன் வசமாகிவிடும் என்ற நினைப்பாலும், அத
னால் தன் விடுதலை சித்திப்பதோடு, பாண்டிய நாட்டுப்
பிரபுவின் பல்லும் பிடுங்கப்படும் என்ற சந்துஷ்டியாலும்
நிலை தடுமாறி நின்று கொண்டிருந்தான் விஷமமே உரு
வான விக்ரமபாண்டியன். இப்படி மூன்று இடங்களில்
கோட்டையைத் தாக்க வேண்டுமென்று சொன்ன
யோசனையைக் குறித்து மார்க்கியனையும் மனத்திற்குள்
சிலாகித்ததன்றி, 'அந்த யவனப் பயலுக்கும் மூளை இருக்
கிறது' என்று வாயாலும் லேசாக முணுமுணுத்தான்.
அவன் மகிழ்ச்சியை இன்னும் அதிகப்படுத்த இஷ்டப்பட்
டவர்கள் போல, வீரபாண்டியன் வீரர்கள் தங்கள்
அலுவல்களைத் துரிதமாகச் செய்யலானார்கள்.

அந்த இரவில் மகிழ்ச்சியடைந்து விக்ரமபாண்டியன்
மட்டுமல்ல. விக்ரமபாண்டியனின் பரமவைரியும்
பாண்டிய நாட்டு மன்னனும் கார்குழலியைஎப்படியாவது
அபகரித்துச் சென்று அவன் கர்வத்தை அடக்கவேண்டும்
என்று உறுதி கொண்டிருந்தவனுமான வீரபாண்டியனும்,
இரவின் அனுகூலத்தையும், அதனால் தனக்குக் கிட்டக்
கூடிய பலனையும் நினைத்து மகிழ்ச்சி வெள்ளத்தில்
ஆழ்ந்து கிடந்தான். இந்த வெற்றியால் தனக்கு எத்தனை
வகையில் லாபம் என்பதை நினைந்து நினைந்து பெரிதும்
சந்தோஷப்பட்டான். ஒரே படையெடுப்பு. அதில் மூன்று
காரியசித்திகள் தன் குலவைரியான குலசேகர பாண்டிய
னின் மகன் விக்ரமபாண்டியன், தன் காதலைத் துச்சமென
உதறித் தமிழ்நாட்டிலேயே தனக்கு அழியாத அபக்யாதி
யைத் தேடிக் கொடுத்த மழவராயன் மகள் கார்குழலி,
தான் விரும்பிய மாதவி, ஆகிய இரு பெண்களின்
காதலையும், ஏககாலத்தில் பெற்றதன்றி, அவர்களி
லொருத்தியைத் தன்னிடமிருந்தே தட்டிப்போக எண்ணித்
தன்னை எதிர்க்கத் துணிந்த படைத்தலைவன் அபராஜி

ன்—இந்த மூன்று பேரும் ஏககாலத்தில் தன்னிடம்
சிக்கப் போகிறார்களென்ற குதூகலத்தில் இயற்கைக்கு
மாறாக அதிக உற்சாகத்துடனும் சகஜமாகவும் தன் படை
வீரர்களிடம் நடந்து கொண்டான் வீரபாண்டியன். அந்த
இரவில் படைவீரர்களை அரவம் செய்யாமல் கோட்டையை
அணுகும்படி உத்தரவு பிறப்பித்த அவன், வீரர்கள் புறப்
படும் முன்பு அவர்களில் முக்கியமானவர்களை அழைத்து
அந்தரங்கத்திலும் பேசினான்: "வீரர்களே! உங்களுக்குப்
பெரு வெற்றி காத்திருக்கிறது. ரத்தம் சிந்தாமலே
வெற்றி கிடைக்கப் போகிறது, அதோ தெரியும். பெரிய
கோட்டை, உங்களுக்காகத்தான். விக்ரமபாண்டியனுக்குப்
பணம் கொடுப்பதாகவும், விடுதலையளிப்பதாகவும்
ஆசைகாட்டி கோட்டையிலுள்ள வீரர்களை அஜாக்ர
தையுடனிருக்கச் செய்திருக்கிறேன். கோட்டைத்
தாழ்களைக் கழற்றவும் அந்த அயோக்கியன் ஏற்பாடு
செய்திருக்கிறான். தன் அயோக்கியத்தனம் தெரியாதிருப்
பதற்காக நம்மை மூன்று இடங்களில் கோட்டையைத்
தாக்கச் சொல்லியிருக்கிறான். காரியம் முடியுமட்டும்
நாம் அந்த அயோக்கியன் சொற்படி கேட்டுத்தான் ஆக
வேண்டும். யுத்தத்தில் நாம் இப்படிச் செய்வது அதர்ம
மல்ல; அவன் செய்வது அதர்மமானால் அதற்கு நாம்
பொறுப்பாளிகளல்ல. ஆகவே சந்தர்ப்பத்தைச் சரியாக
உபயோகப்படுத்திக் கொள்ளுங்கள் வெற்றி கிட்டட்டும்'
பிறகு நீங்கள் கன்னிமாடத்தைச் சூறையாடுவதை நான்
தடுக்கமாட்டேன்" என்று நேசமும் ஆசையும் காட்டிப்
பேசிய வீரபாண்டியன் உடனடியாக நடவடிக்கை எடுக்
கவும் ஏற்பாடு செய்தான். ஆனால் விக்ரமபாண்டியன்
ஓலைப்படி படைகளை மூன்றாக அவன் பிரிக்கவில்லை.
நான்காகப் பிரித்து ஒரு பகுதியைத் தன் சொந்தப் பாது
காப்புக்கு நிறுத்திக்கொண்டான். மீதி மூன்று கூறுகள்
கன்னிமாடக் கோட்டையை நோக்கி நகர்ந்தன.

வெற்றி எப்படியும் தங்கள் கைகளில் இருக்கிறது
என்ற நினைப்பால் வீரர்கள் துரிதமாக வேலை செய்தனர்.

காட்டுக்குள் ஏற்கனவே வெட்டித் தயாராக வைக்கப்பட்டிருந்த மரங்கள் சரசரவென இழுத்து வரப்பட்டு அகழிக்குக் குறுக்கே போடப்பட்டன: நீண்ட மரங்கள் கட்டிய ஆயுத வண்டிகளும் அகழி வரையில் மெதுவாக வந்து கோட்டைக்கு எதிரேயிருந்த அகழிப் பாலத்துக்கு வந்ததும் திடீரென வேகமாகச் செலுத்தப்பட்டன. கோட்டைக் கதவுக்கு இரு புறத்திலுமிருந்த அகழிப் பகுதிகளில் மரங்கள் திடீர் திடீரெனப்பலமாகச் சாய்க்கப் பட்டன. முன்வரிசைப் படைகள் கனவேகமாக அந்தப் பாலங்கள்மீது தாவலாயின. இந்த நடவடிக்கைகள் காட்டு முகப்பில் திடீரெனப் பெரும் சப்தத்தைக் கிளப்பிவிட்டன. ஆயிற்று; வீரபாண்டியன் வீரர்கள் பல அகழிகளில் போடப்பட்டிருந்த மரப் பாலங்களைத் தாண்டி கோட்டைச் சுவருக்கருகில் வந்து விட்டார்கள். இன்னும் பல வீரர்கள் பாலங்களில் குவிந்து கொண்டிருந்தார்கள். கத்திகள் உருவப்பட்டன. அடுத்த வினாடி போர் முரசு பலமாகச் சப்தித்தது. அத்துடன் இன்னொரு முரசம் முழங்குவதுபோல கோட்டைக் கதவுகள்மீது வீர பாண்டியன் ஆயுத வண்டிகளிலிருந்த பெரிய மரங்கள் திடீல் திடீலென இடித்தன. கோட்டைக் கதவும் பெரிய சப்தத்துடன் தடாலெனத் திறந்து பக்கத்திலுள்ள கட்டைச் சுவர்களில் மோதின. ஆயுத வண்டிகள் உள்ளே ஓடின. அவற்றுக்குப் பின்னால் தயாராக நின்றுகொண் டிருந்த வீரபாண்டியன் குதிரைப் படையும் கன வேகமாகக் கோட்டைக்குள் பாய்ந்து சென்றது. அகழிக்கு அக்கரையிலிருந்த நான்காவது பிரிவுப்படையுடன் இந்த நடவடிக்கைகளைப் பார்த்துக் கொண்டிருந்த வீர பாண்டியன், "சரி, கன்னிமாடம் நமது கைக்குக் கிட்டி விட்டது" என்று சொல்லவொண்ணா மகிழ்ச்சியால் குலுங்கக் குலுங்க நகைத்தான். அடுத்த விநாடி அவன் நகைப்பு திடீரென நின்றது. மகிழ்ச்சியிருந்த முகத்தில் பீதி மண்டியது.

அதுவரையில் அரவமேதுமில்லாமல் உறங்கிக்கொண் ருந்த கன்னிமாடம் உயிர் பெற்றெழுந்துவிட்டதுபோல் டீரெனக் கோட்டைக் கதவுகளுக்கருகிலும, கோட்டை சுவர்த் தாழ்வாரங்களிலும் அபராஜிதன் வீரர்கள் தோன்றினார்கள். சந்திர வெளிச்சத்தால் மட்டுமே மங்க என ஒளியைப் பெற்றிருந்த பிரதேசங்கள் திடீரெனக் கொளுத்தப்பட்ட பந்தங்களால் தீப்பிழம்பில் குளிப்பவை போல் செக்கச் செவேலென்று தெரிந்தன. அந்த சிவப் புடன் வீரபாண்டியனுடைய வீரர்களின் குருதியும் கலந்து கொண்டது. ஆயுத வண்டிகளைப் பின்பற்றி, கோட்டைக் கதவுகள் வழியாக நுழையத் துவங்கிய வீரர்களை ஐம்பது பேர் கொண்ட குதிரைப் படையுடன் தடுத்து நின்றான் கரிவளவன். கதவின் வழி அதிக அகலமில்லாததாலும் எதிராளிகளும் மறைவில் தயாராகக் காத்துக் கொண்டி ருந்ததாலும் கோட்டைக்குள் நுழைந்தவர்களில் பலர் கண் மூடிக் கண்திறப்பதற்குள் வெட்டிச் சாய்க்கப்பட்டார்கள்.

கோட்டையின் பிரதான மார்க்கத்தின் நிலைதான இப்படி யென்றால் இருபுறங்களிலும் அகழியைத் தாண்டியவர்களின்படை அதோகதியாயிற்று. பாதிப்படை அகழியைத் தாண்டி மதிலோரம் வந்ததும் அங்கு தயாரா யிருந்த எண்ணெய்க் கொப்பரைகள் அவர்கள் மீது சாய்க் கப்பட்டதால் 'ஐயோ' 'ஐயோ' என்று அலறிக்கொண்டு பலர் தரையில் சாய்ந்தார்கள். இன்னும் பலர் வெந்த உட லுடன் பின்னடைய முயன்றார்கள்.

கன்னிமாடப் பிராந்தியம் திமிலோகப்பட்டது. வீர பாண்டியன் வீரர்கள் அலறும் சத்தம் எங்கும் கேட்டது. 'ஐயோ, ஐயோ' என்ற குரல்கள் பல, விஷம் தீட்டப்பட்ட அம்புகள் பட்டதால் கனைத்தெழுந்து அலறி விழுந்த குதிரைகள் பல, அகழிப்பாலங்களில் அம்புகளாலும் வேல்க ளாலும் தாக்கப்பட்டு அகழிக்குள் விழுந்து முதலைகள் கடித்துத் தின்னத் தொடங்கியதால் வீரிட்ட வீரர்களின்

கூச்சல் ஏற்கனவே இருந்த பயங்கரத்தை அதிகப்படுத்தியது. எங்கும் யுத்த தேவதையின் கோர தாண்டவம் நடந்துகொண்டிருந்தது. அந்தத் தாண்டவத்துக்கு உடனாட தலையிழந்த முண்டங்கள் எழுந்தாடித்தரையில் விழுந்து கொண்டிருந்தன. சிலப்பட்ட தனித் தலைகள் கோரமாகத் துள்ளிக் குதித்தன.

எதிர்பாராத இந்தத் தாக்குதலால் வீரபாண்டியன் படையில் பாதிக்குமேல் அழிந்துவிட்டன. எதிரிகள் சொற்பமாயிருந்த போதிலும் அவர்கள் அசுரர்களைப் போல் கன்னிமாடச் சுவர்ப் பக்கங்களில் மறைந்து நின்று தாக்கியதாலும் கூண்டுகளிலிருந்து அம்புகளையும் வேல்களையும் பொழிந்ததாலும், மதில் சுவருக்குமேல் தூங்குவது போல் பாசாங்கு செய்து ஏற்கனவே கொதிக்க வைக்கப்பட்டிருந்த எண்ணெயைத் திடீரெனக் கொப்பரைகளிலெடுத்து வடித்ததாலும் வீரபாண்டியன் படை வெகு வேகமாகப் பின்னடைய ஆரம்பித்தது. எதிரிகள் தப்பிவிட இடங் கொடுக்காமல் அம்புகளை இடைவிடாது பொழிந்தார்கள் கன்னிமாடத்தைக் காத்து நின்ற வீரர்கள்.

தூரத்தே இருந்த இந்த விபரீதக் கொலையைப் பார்த்துக் கொண்டிருந்த வீரபாண்டியன், விக்ரமபாண்டியனையும் அபராஜிதனையும் ஒழித்துக்கட்ட பயங்கரமாகச் சபதம் செய்தான். தவிர அந்தச் சமயத்தில் படையில் பாதி பலி கொடுப்பதில் பயனில்லை என்று தனது படைகளைத் திரும்ப அழைக்கத் தாரையை ஊதச் செய்தான். ஊதிய வினாடி மற்றொரு விபரீதமும் நிகழ்ந்தது. காட்டுக்குள்ளிருந்து வீரபாண்டியன் படைகளுக்குப் பின்னாலிருந்து மற்றொரு படை பாண்டிய மன்னனையும் அவன் படையையும் உக்கிரமாகத் துரிதமாக வீரபாண்டியன் கூடாரத்துக்கும் இதர படைத் தலைவர்களின் கூடாரத்துக்கும் நெருப்பு வைத்துவிட்டுத் தாக்கும் தொழிலை ஆரம்பித்தது.

வீரபாண்டியனுக்கு மெல்ல மெல்லத் தன் நிலை புரிய ஆரம்பித்தது. எதிர்பாராத எதிர்ப்பினால் அபராஜிதன் தனது படைகளில் பாதியை அழித்ததன்றி, பின்புறம் தாக்கவும் ஒரு படையை அனுப்பியிருக்கிறான் என்பதும், கன்னிமாட வீரர்களுக்கும் பின்னால் தாக்கும் வீரர்களுக்கும் இடையே தன் படை இருக்கப்படுகின்றது என்பதும் விளங்கவே என்ன செய்வதென்று அறியாமல் வீரபாண்டியன் பிரமித்தான். எதிரிகள் இருபுறத்திலும் வாட்டவே மிகக் கேவலமான தோல்விக்கு இலக்காகிவிட்டதை உணர்ந்தான் வீரபாண்டியன். மீதியுள்ள வீரர்களுடன் தான் தப்பி மதுரை சென்றால்தான் மேற்கொண்டு ஏதாவது நடவடிக்கை எடுக்க முடியும் என்ற எண்ணத்தில் தாரையை பலமாக ஊதச் செய்து மாண்டவர் போக மீதியிருந்த ஐந்நூறு வீரர்களுடன் மதுரையை நோக்கி வெகு வேகமாகப் பின் வாங்கினான். அந்த இரவில் மூன்றாம் ஜாமத்தில் துவங்கிக் கடைசி ஜாமத்திற்குள் முடிந்துவிட்ட அந்த யுத்தத்தால் ரத்தக்கறை படிந்த பூமி மீது அருணனும் மெல்ல மெல்லத் தன் செங்கதிர்களை வீசினான். யுத்தத்தால் ரத்தக்கறை படிந்த உடையுடனும் ரத்தந் தோய்ந்த உருவிய வாளுடனும் கார்குழலிக்கு வெற்றிச் செய்தியைச் சொல்லச் சென்ற அபராஜிதனைப் பார்த்த மழவராயன் மகளும் உள்ளப் பூரிப்பினாலும் அந்த மகா வீரனிடம் ஏற்பட்ட மிதமிஞ்சிய மரியாதையாலும் ஆழ்ந்த அன்பும் பணிவும் கலந்த புன்சிரிப்பை அவன் மீது வீசினாள்.

அத்துடன் சொன்னாள்: ''வெளித் தாழ்வாரக் கைப்பிடிச் சுவரின் பக்கத்திலிருந்து யுத்தத்தைப் பார்த்தேன் பிரபு!''

''எல்லாம் கடவுளின் கருணை.''

''அதுவும் இருந்தது. அத்துடன் தங்கள் போர்த் தந்திரமும் கண்டேன்.''

அபராஜிதன் சிறிது நேரம் பதில் சொல்லவில்லை. பிறகு சொன்னான். ''குழலி! இந்த வெற்றியைப்பற்றி

நான் அதிகமாகக் கவலைப்படவில்லை. இது நான் எதிர்பார்த்ததுதான்.''

''எப்படி எதிர்பார்த்தீர்கள்?''

''இருபுறமிருந்து வீரபாண்டியனைத் தாக்கத் திட்டம் போட்டேன்; சமயத்தில் உதவிப்படையும் வந்தது.''

''நானும் பார்த்தேன். காட்டில் வீரபாண்டியன் படைக்கும் பின்னாலிருந்து யாரோ தாக்கினார்கள். யாரது?''

யாரது என்பதை மட்டுமன்றி அவர்கள் எப்படி வந்தார்கள் என்பதையும் விவரித்த அபராஜிதனது சொற்களையும் அவற்றில் தொனித்த வீராவேசத்தையும் போர்த் தந்திர ஜாலத்தையும் எண்ணி வியந்த கார்குழலி கருணையும் காதலும் கலந்து கொட்டிய விழிகளை அவன் மீது பதியவைத்தாள். அந்தப் பார்வையில் எத்தனை எத்தனையோ அர்த்தங்கள் புதைந்து கிடந்தன. வீரபாண்டியனிடமிருந்து தன்னை மீட்ட இவர் தன்னை இனி என்ன செய்யப்போகிறார் என்பதை நினைக்க அவள் உள்ளத்தில் வெட்கமும் படர்ந்தது. தனக்கும் அபராஜிதனுக்கும் திருமணம் அதிக தூரத்தில் இல்லை என்றே கார்குழலி எண்ணினாள். ஆனால் அந்த எண்ணத்துக்குக் குறுக்கே விழுந்தது ஒரு பேரிடி!

32. நீங்கள் யார்?

நிலவில் விளைந்த அந்தக் கோரத்தைக் கண்டு வெருண்டு நிலவை உடைத்துக்கொண்டு கிளம்பிய அருணன் தன் தீ விழிகளை ஆகாயத்தில் மட்டுமன்றிக் கன்னிமாடக் கோட்டைச் சுவர்களிலும் பாய்ச்சியதால் அந்தப் பிராந்தியம் பூராவும் ரத்தஸ்நானம் செய்திருந்தது போல் தோன்றியது. அதுவரைப் பொழுதும் பயத்துடன் கன்னிமாடப் பொந்துகளில் பதுங்கிக் கிடந்த புறாக்களும் அருணோதயத்தால் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு மெல்லக் கூண்டுகளிலிருந்து வெளியே தலையை நீட்டின. அருணனைத் தொடர்ந்து அக இருளை உடைத்துக்கொண்டு கிளம்பிய சூரியன் வரவு உயிர்களுக்கு இன்னும் அதிக தைரியத்தை அளிக்கவே கன்னிமாடப் பிராந்திய மயில்களும் தோட்டத்துச் சிட்டுக்குருவிகளும் சப்தங்களைச் செய்துகொண்டு வெளியே பறக்கலாயின. பட்சிகளுக்கு மட்டுமென்ன, கட்டழகியான கார்குழலியின் இதயத்திலும் அன்றுகாலை மிதமிஞ்சிய தைரியமும் ஆனந்தமும் நிலவிக்கிடந்தன.

இரவுமுழுவதும் உறங்காததால் ஆடை சிறிதும் குலையாமலும் தலையில் சூட்டியிருந்த புஷ்பச் சரங்கள் அதிகமாக அலங்கோலமாகாமலும் அப்பொழுதே ஸ்நானம் செய்தவள் போலப் பூரண அழகுடன் விளங்கினாள் கார்குழலி. உறங்காததற்கு அடையாளமாகச் சிவந்திருந்த கண்கள் கூட மகிழ்ச்சி நிரம்பிய அந்தக் காலைநேரத்தில் அவளுக்கு இணையற்ற அழகையே அளித்திருந்தன. தான் பழுவ நாட்டு இளவரசியென்ற நினைப்பாலோ அல்லது போர் அணியில் நிற்கும் தலைவி, ராஜ பாணியில் நிற்கவேண்டும் என்ற நியதியை முன்னிட்டோ தெரியாது, கார்குழலி அன்று ஆபரணங்களை நிரம்ப அணிந்திருந்தாள். துயிலும் சமயத்தில் கழற்றப்படும் தலைச் சுட்டி கூட அவள் நெற்றிப் பிரதேசத்தில் தொங்கிக் கொண்டிருந்தது. இடையில் சேலையை இறுக்கி வைப்பதற்காக அணிந்திருந்த ஒட்டியாணத்தைக்கூட அவள் கழற்றாததால் அதிலிருந்த சதங்கைகள் அவள் வயிற்றில் ஆலையுடன் படுத்துக் கிடந்தன.

இதையெல்லாம் நொடிப் பொழுதில் பார்த்து அரசகுமாரி இரவில் தூங்கவேயில்லையென்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்ட அபராஜிதன், "குழலி! இரவில் அடியோடு தூங்கவேயில்லையா! யார் உன்னைக் கண் விழிக்கச் சொன்னது?" என்று கடிந்துகொண்டான்.

கார்குழலியின் இதழ்களில் புன்முறுவலொன்று தவழ்ந்தது. அவன் வார்த்தைகளிலிருந்த உள்ளத்தைக் கண்டுகொண்ட அவள் இதயத்தில் விவரிக்க இயலாத

ஆனந்தம் பெருகியது. 'அரசகுமாரி என்பதை மறந்து இச்சமயத்திலாவது இவர் சொந்தம் கொண்டாடிக் கடிந்து கொள்கிறாரே' என்று தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டு மெல்ல நகைக்கவும் நகைத்தாள்.

அவள் நகைப்புக்குக் காரணம் புரியாத அபராஜிதன் கோபம் சற்று அதிகமாகவே முன்னைவிடக் கடுமையான குரலில் கேட்டான். 'இதில் சிரிப்பதற்கு என்ன இருக்கிறது?'? என்று.

''உங்கள் கோபத்தையும் கடுமையையும் கண்டால் சிரிப்பு வராமல் என்ன வரும்?'' என்று கேட்டாள் கார்குழலி.

''கோபத்தைக் கண்டால் சிரிப்புதான் வருமா?'' என்று வினவினான் அபராஜிதன்.

''சாதாரணமாக எப்பொழுதும் கோபிப்பவர்கள் கோபித்தால் சிரிப்பு வராது. ஆனால்......கோபிக்காதவர் கோபித்தால்....'' என்று வார்த்தையை முடிக்காமலே விட்டு மீண்டும் புன்முறுவல் செய்தாள் மழவராயன் மகள்.

அவளுடைய இந்தக் கேலி அபராஜிதன் கோபத்தைத் தூள் பறக்க அடித்துவிடவே அவன் என்ன செய்வது, என்ன பேசுவது என்றறியாமல் கையில் உருவிப் பிடித்திருந்த வாளை எடுத்து உறையில் போட்டான். பிறகு அறையைவிட்டுக் கார்குழலி அறைக்கு வெளிப்புறத்திலிருந்த தாழ்வாரத்துக்குச் சென்று எதிரேயிருந்த காட்டை வெறித்துப் பார்த்துவிட்டுத் திரும்பிவந்தான். வந்ததும் அரசகுமாரியை நோக்கி, ''குழலி! உன்னையும் இந்தக் கன்னிமாடத்தையும் காக்கவேண்டியது என்பொறுப்பு...'' என்று சொல்லிக்கொண்டு போனவனை இடைமறித்த கார்குழலி, ''அந்தப் பொறுப்பைத்தான் நிறைவேற்றி விட்டீர்களே'' என்றாள்.

''ஆம், நிறைவேற்றி விட்டேன். ஆனால் கடமை முழுவதும் நிறைவேறவில்லை. மீதிக்கடமையும் நிறைவேற

வேண்டுமானால் இந்தக் கன்னி மாடத்திலுள்ள அத்தனை பேரும், நீ உட்பட, நான் சொல்கிறபடி நடக்கவேண்டும்'' என்றான் அபராஜிதன்.

''அப்படித்தானே நடக்கிறோம்.''

''இல்லை.'

''யார் நடக்கவில்லை?''

''முதலில் நீ நடக்கவில்லை.''

''நானா?''

''ஆம்; உன்னை இரவு முழுவதும் உறங்கச் சொன்னேன், அறையைவிட்டு வெளிவராதிருக்கச் சொன்னேன். கேட்டாயா?''

''இது ஒரு பெரிய குற்றமா? என் அறை வெளித் தாழ்வாரத்தில் இருந்தேன். அதனால் என்ன குடி முழுகி விடும்?''

''உன் சிறு தவறால் கன்னிமாடமே எதிரிகள் கையில் சிக்கியிருக்கலாம்; அல்லது அவர்கள் நமது கையில் சிக்காதிருந்திருக்கலாம்.''

''நீங்கள் சொல்வது புரியவில்லையே! நான் ஒருத்தி கைப்பிடித் தாழ்வாரத்திலிருந்து எட்டிப் பார்த்ததால் இத்தனை விபரீதம் நேர்ந்து விடுமென்று எப்படி நம்பமுடியும்?'' என்று கேட்டாள் கார்குழலி.

அபராஜிதன் ஒரு வினாடி அவளைக் கூர்ந்து நோக்கி விட்டுச் சொன்னான்: ''குழலி யுத்தத்தில் நாம் எதைத் துரும்பு என்று நினைக்கிறோமோ அது பெரிய மலையாகி விடும். நாம் எதை அற்பம் என்று நினைக்கிறோமோ அதனால் கருதவும் முடியாத ஆபத்து விளையும். போர்களில் ஈடுபட்டவர்களுக்கு நான் சொல்வதன் உண்மை தெரியும். கன்னிமாட முற்றுகையை முறியடிக்க நான் செய்த ஏற்பாடுகள் யாருக்கும் தெரியக்கூடாது என்பதற்கே அவற்றை ரகசியமாகச் செய்தேன். நீயோ, அடிகளாரோ, மற்ற எவரோ அஜாக்கிரதையாக ஒரு

வார்த்தை பேசியிருந்தாலும், ஒரு சிறு நடவடிக்கையில் தவறு ஏற்பட்டிருந்தாலும், இக் கன்னிமாட முற்றுகையில் வீரபாண்டியன் வெற்றி கண்டிருப்பான். அவன் வெற்றி காணக்கூடாது என்ற உறுதியினாலேயே என் ஏற்பாடுகளைப்பற்றி உன்னிடங்கூடச் சொல்லவில்லை. நமக்கு வெற்றி ஏற்பட்டது எப்படி என்பது அடிகளாருக்குக்கூடத் திட்டமாகத் தெரியாது....''

இப்படிச் சொல்லிக் கொண்டுபோன அபராஜிதனை இடைமறித்த கார்குழலி, ''என்ன அடிகளாருக்குக்கூடத் தெரியாதா? அவரைக்கூடவா நீங்கள் நம்பவில்லை?'' என்றாள்.

''ஆம் கார்குழலி! நம்பவில்லை. அடிகளார் நாக்கு சும்மா இருக்காது என்பது உனக்குத் தெரியும். பிறரை இகழ்ச்சியாகப் பேசுவதற்குச் சந்தர்ப்பம் கிடைத்தால் அவர் அதைத் தவறவிடமாட்டார். பெரிய இடத்துப் பேர்வழி. அவருக்கும் விக்ரமபாண்டியனுக்குமோ நாற்றெட்டுப் பொருத்தம். அவன் இவரிடம் ஏதாவது பேச்சுக் கொடுத்து இவர் இடக்குக் காட்டி உண்மையைச் சிறிது கக்கினாலும் விக்ரம பாண்டியன் எச்சரிக்கையடைந்திருப்பான். விக்ரமபாணடியன் எச்சரிக்கையடைந்து விட்டால் வீரபாண்டியனும் எச்சரிக்கையடைந்தது போலத்தான்.''

'இவனுக்கும் அவனுக்கும் என்ன சம்பந்தம்? இருவரும் விரோதிகளாயிற்றே!''

''பொதுவாக விரோதிகள்தான். ஆனால் நாம் சம்பந்தப்பட்டவரை இருவரும் நண்பர்கள். இருவரும் சேர்ந்து இந்தக் கன்னிமாடப் பாதுகாப்பை உடைககப் பார்த்தார்கள். நாம் இருவரையும் உடைத்து விட்டோம் இதோ பார் குழலி! விக்ரமபாண்டியன் முதன்முதலில் கள்ளனொருவனை அனுப்பி உன் தந்தையை வீரர்களோடு வரவழைத்து உன்னைத் தூக்கிச் செல்லப் பார்த்தான். நான் சொக்கப்பெருமாளை அனுப்பி அந்தக் கள்ளனைப் பொன்னமராவதியில் சிறைப்படுத்திக் காரியை அவன் வீரர்கள் நூற்றுவருடன் வரவழைத்து விட்டேன். இது விக்ரமபாண்டியனுக்கு முதல் ஏமாற்றம். இந்த ஏமாற்றத்தால் வெகுண்ட விக்ரமபாண்டியன் புறாக்கூண்டு அறையிலிருந்து அம்பு மூலம் வீரபாண்டியனுக்குச் செய்தி அனுப்பித் தொடர்பு கொண்டான். விக்ரமபாண்டியன் கோட்டை வாசல் கதவுகளைத் திறந்துவிடும் பட்சத்தில் விக்ரமபாண்டியனுக்கு விடுதலையும் லட்சம் பொற்காசுகளும் கொடுக்க ஒப்புக் கொண்டான் வீரபாண்டியன். அந்த ஓலையைக் கண்டுபிடித்த அடிகளார் என்னிடம் கொடுத்தார். அந்த ஓலையை அஸ்திவாரமாகக் கொண்டே எதிரிகளை முறியடித்தோம்.''

''எப்படி முறியடித்தீர்கள்?''

''கோட்டைக் கதவுகளைத் திறந்துவிட வேண்டுமென்பது அந்த ஓலையின் முக்கிய நிபந்தனை. அதை விக்ரமபாண்டியன் தனியே நிறைவேற்ற முடியாது. அதற்குத் துணை செய்ய ஆட்கள் வேண்டும்.''

''ஓகோ!''

''ஆம் விக்ரமபாண்டியன் யாரைத் துணை தேட முடியும்?' மழவவீரர்களை அணுக முடியாது. காரியின் வீரர்களை அணுக முடியாது. லஞ்சத்துக்கு உட்படக் கூடியவர்கள் கள்ளர்கள்தான் என்று நம்பினான் அவர்களை அணுகிக் கலைக்க முயன்றான். அவன் இஷ்டத்துக்கு உட்படும்படி நானும் கள்ளர்களுக்குச் சொல்லி வைத்தேன்.''

ஆச்சரியம் ததும்பும் கண்களை கார்குழலி அவன்மீது திருப்பினாள்; அவன் அதைக் கவனிக்காமலே பேசினான். ''விக்ரமபாண்டியன் கள்ளர்களைக் கலைத்த பின்புஎப்படியும் மார்க்கியன் அணுகுவானென்பது எனக்குத் தெரியும். கள்ளர்கள் எப்போதும் ஒரு தலைவனுக்குக் கட்டுப்பட்டவர்கள். இப்பொழுது மார்க்கியன்தான் அவர்களை அமர்த்திய தலைவன். அவன் உத்தரவு இன்றி எதையும்

செய்யக் கள்ளர்கள் மறுப்பார்களென்ற உண்மை விக்ரமபாண்டியனுக்குத் தெரியுமாதலால் அவன் மார்க்கியனை ரகசியத்தில் பேச அழைத்தான். இது நமக்குப் பெருத்த அனுகூலமாயிற்று.''

''எப்படி அனுகூலம்?'' என்று கேட்டாள் கார்குழலி.

''மார்க்கியன் சொல்ல வேண்டிய பதில் என்னவென்பதை நானே முன்கூட்டித் தீர்மானித்தேன். குறிப்பிட்ட நேரத்தில் கள்ளர்கள் கதவைத் திறக்கவேண்டியது என்றும் வீரபாண்டியன் படையை மூன்றாகப் பிரிக்க வேண்டியது என்றும் தீர்மானித்தேன். விக்ரமபாண்டியனுக்கு இணங்குவது போல் பாசாங்கு செய்து என் திட்டத்தை அவனுக்கு உபதேசிக்கும்படி மார்க்கியனிடம் சொன்னேன். மார்க்கியன் சொன்னபடி செய்து முடித்தான்'' என்றான் அபராஜிதன்.

''அதனால்தான் வீரபாண்டியன் படை மூன்று கூறுகளாகப் பிரிந்து வந்தனவா?'' என்று வினவினாள் கார்குழலி

''ஆம் குழலி! திட்டமே நம்முடையதுதானே. நமது திட்டத்தை எதிரிகள் நிறைவேற்றி வைத்தார்கள் அவர்கள், வரவேண்டிய வழி, இடம், முறை எல்லாம் நானே வகுத்துவிட்டபடியால் அந்தந்த இடத்தில் அவர்களை மடக்க ஏறபாடு செய்தேன். இத்துடன் விக்ரமபாண்டியன் கண்களிலும் மண்ணைத் தூவ வேண்டியதாயிற்று. ஆகையால் முதல் ஜாமத்திலேயே படுக்கப்போய்விட வேண்டியதென்று நமது வீரர்களுக்கு உத்தரவிட்டேன். முதல் ஜாமத்தில் விக்ரமபாண்டியன் நித்திரை சோதித்துப் போனவுடனேயே இரண்டாம் ஜாமத்தில் வீரர்களைச் சந்தடி செய்யாமல் கோட்டை மதில் தாழ்வாரங்களில் ஆயுதபாணிகளாகப் படுக்கச் செய்தேன். எண்ணெய்க் கொப்பரைகளும் யாருக்கும் தெரியாமல் ஒவ்வொரு அம்புக் கூண்டுக்குள் காய்ச்சப்பட்டன மீதி அம்புக் கூண்டுகளில் வில்லாளிகள் தயாராக இருந்தனர். மற்ற வில்லாளிகளும். வேலெறிவோரும் மதில் தாழ்வாரத்தில்

படுத்துக் கிடந்தார்கள். குதிரைப்படையை மட்டும் ஆரம்பத்தில் நந்தவனத்தின் இருளிலும், பிறகு கோட்டைக் கதவுக்கருகிலும் நிறுத்தி வைத்தேன்.''

''அது சரி, நந்தவனத்திலிருந்து கோட்டைக் கதவுக்கருகில் குதிரை வீரர்கள் வரும்போது விக்ரமபாண்டியன் பார்த்திருக்க மாட்டானா?''

''முடியாது?''

''ஏன் முடியாது?''

''அவன் புறாக் கூண்டுகளுக்கு அருகிலிருந்த அறையிலிருந்த விளக்கை எடுத்து ஆட்டி எதிரிகளுக்குச் சைகை செயத உடனேயே அவனைக் கைது செய்துவிட்டேன். அதற்கு முன்பாக அவன் விஷயத்தை ஊகித்திருந்தால் தான் கஷ்டம். கைப்பிடிச் சுவருக்கு அருகில் நீ சாய்ந்து நின்று கோட்டைத் தாழ்வாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்ததை விக்ரமபாண்டியன் பார்த்தால் திட்டம் தவிடுபொடியாயிருக்கும். புறாககூண்டு அறையிலிருக்கும் அவன் மேலேயிருந்து கீழே மாடித்தாழ்வாரத்திலிருக்கும் உன்னை எப்படி பார்க்கமுடியும்? பார்த்திருந்தால் உன் பார்வை நிலைத்திருந்த இடத்தையும், அவன் கவனித்திருந்தால் திட்டத்தின் கதி அதோ கதிதான். உன் பார்வைதான் வீரர்கள் படுத்துக் கிடந்த இடத்தில் பதிந்து கிடந்ததே. இப்போது புரிகிறதா, போர்த் தந்திரத்தில் சிற விஷயங்கள் பெருத்த அபாயங்களில் கொண்டுவிடும் என்பது?'' எனறு வினவினான்.

''அது சரி. பின்னால் வந்து தாக்கியது யார்?'' என்று கேட்டாள் அரசகுமாரி.

''சொக்கப் பெருமாள்!''

''சொக்கப் பெருமாளா?''

''ஆம் குழலி! அவனைப் பொன்னமராவதிக்கு அனுப்பத்தான் உன் படுக்கை அறையை உபயோகித்துக் கொள்ள உன்னிடம் அனுமதி கேட்டேன்''

''சுரங்க வழியாக வெளியே அனுப்பினீர்களா?''

''ஆமாம்; வேறு வழியில்லை. காரி கொடுத்த ஓலை சுடன் சுரங்க வழியாக அவனைப் பொன்னமராவதிக்கு அனுப்பி ஐந்நூறு வீரர்களுடன் வரச்சொன்னேன் எங்கே தாக்குவது, எப்படித் தாக்குவது, எந்தச் சமயத்தில் தாக்கு வது என்பதெல்லாம் முன்பாகவே தீர்மானிக்கப்பட்ட விஷயம். அவன் பொன்னமராவதி போய்த் திரும்புவதற்கு அவகாசம் கொடுத்து விக்ரமபாண்டியனுக்கு நாங்கள் பிடி கொடுத்தோம். இதில் ஒன்று மட்டுச் சொல்லவேண்டும்.''

''என்ன?''

''மார்க்கியன் நம்மிடம் நடந்து கொண்ட முறை! அவன் இல்லாவிட்டால் இந்தக் காரியம் சித்தியே அடைந் திருக்காது'' என்றான் அபராஜிதன்.

கார்குழலி சற்று நேரம் மௌனமாயிருந்தாள். அபரா ஜிதன் பேச்சு அவளுக்கு மேன்மேலும் ஆச்சரியத்தையே அளித்தது. பெரிய காரியத்தைச் சாதித்த அந்த மாவீரன் தன்னையும் மறந்து தன்னிடம் சேவை செய்தவனும் தன் னையே ஒரு முறை கொல்லப் பார்த்தவனுமான மார்க் கியனை சிலாகிக்கிறானே என்ற வியப்பினால் பேசாமல் நின்ற அவளுக்கு, அவனிடம் ஏற்கலவே இருந்த அன்பு பதினாயிரம் மடங்கு அதிகமாகக் கண்களை உயர்த்தி, ''உங்களைப் பறறி ஒன்று மட்டும் புரியவில்லை'' என்றாள்.

''என்ன புரியவில்லை?''

''இத்தனை போர்ப் பயிற்சியும் சாமர்த்தியமும் உள்ள நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன? இவற்றைமட்டும்இது வரை சொல்லவில்லையே'' என்றான் கார்குழலி.

'அவர் யாரென்பதை நான் சொல்கிறேன் கேள் அவர் வேறு யாருமல்ல, மழவராயன் மகளே! தமிழ்நாட் டின் மாபெரும் வீரனும் இணையற்ற படைத்தலைவனு மான பாண்டிய சேனாதிபதி அபராஜிதன் இவர்தான். உன் மனம் சரியான இடத்தில்தான் லயித்தது. அரசகுமாரி! சிங்கத்தின் வம்சத்திலுதித்தது சிங்கத்தைவிட்டு நரியை நாடாது!'' என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந் தான் சோழ நாட்டுச் சேனாதிபதியான அண்ணன் பல்லவராயன்.

53. அதிர்ச்சி மேல் அதிர்ச்சி

பாண்டிய சேனாதிபதி அபராஜிதன் என்று அண்ணன் பல்லவராயன் வாயிலிருந்து உதிர்ந்த அந்தச் சொற்கள் கார்குழலியின் காதுகளில் ஒலித்தது மட்டுமன்றி உள்ளத்தையும் ஊடுருவிச் சென்றதால் அவள் ஏதும் பேசமாட்டாமல் திக்பிரமை பிடித்து நின்றாள் கைகளில் விரல் விட்டு எண்ணிவிடக் கூடிய வீரர்களை வைத்துக் கொண்டு கன்னிமாடப் போரில் வீரபாண்டியனை விரட்டியடித்த மர்மத்தைப்பற்றி வினாடி முன்பாக வியந்து நின்ற கார்குழலிக்கு வெற்றி கொண்டவன் யாரென விளங்கியதும் முதலில் ஏற்பட்ட வியப்பெல்லாம் கணநேரத்தில் காற்றெனப் பறந்து போயிற்று. தமிழ் நாட்டின் மிகப் பிரபல படைத் தலைவனும் யுத்த தந்திரத்தில் அண்ணன் பல்லவராயனுக்கு எந்த விதத்திலும் சளைத்தவனல்ல என்று பெயர் வாங்கிய வனுமான அபராஜிதனே தன் முன் நிற்பவன் என்பதை அறிந்த மழவராயன் மகள், 'இப்பேர்பட்டவன், கோழை யும் யுத்த மர்மங்களை அறியாதவனுமான வீர பாண்டியனை வெற்றிகொண்டது ஒரு பிரமாதமான காரியமல்ல' என்றே நினைத்தாள் தன்னைக காத்தவன் அபராஜிதன்தான் என்று அண்ணன் பல்லவராயனால் தெளிவாக்கப்பட்ட அந்தச் சமயத்தில் அவள் மனம் அப்பொழுதிருந்த சூழ்நிலையை அறவே மறந்து கடந்தகால நிகழ்ச்சிகளைக் கணக்கிட்டு அவற்றிலேயே சுழலலாயிற்று. கையில் காயததுடன் கன்னி மாடக் கோட்டைக்கெதிரில் அவன் விழுந்திருந்த பொழுது அடிகளார் அவன் யாரென்று சொல்ல முயன்றதையும் பிறகு எக்காரணங் கொண்டோ மறைந்துவிட்டதையும் எண்ணிப் பார்த்தாள். அந்த முதல் சந்திப்பிற்குப் பிறகு அடுக்கடுக்காக ஏற்பட்ட சம்பவங்களும் அவள் அகத்தே தொடர்ச்சியாக எழுந்தன. தன்னுடைய பள்ளியறையில்

தன்னுடன் இணைந்து நின்ற வேளையில், அவன் நடந்து கொண்ட விசித்திரமான முறைகளுக்கும், தன் எழிலில் சிக்கிக்கிடந்த சமயங்களிலும் அவன் திடீரெனத் தன்னை விட்டுப் பிரிய முயன்றதற்கும் காரணங்கள் அவளுக்கு மெள்ள மெள்ள விளங்கத் தொடங்கின. தன் கைக்கு இரு அரசர்கள் போட்டி போட்டு நிற்கும்போது தன் நிலைமை யாதாகுமோ என்ற நினைப்பினாலும், எது எப்படியான போதிலும் அரசகுமாரியான தனக்குக் களங்கம் ஏற்படக் கூடாதென்ற காரணத்தாலுமே அபராஜிதன் சுயவுணர்ச்சிகளைப் பெரிதும் கட்டுப்படுத்திக்கொண்டான் என்று கார்குழலி நன்றாகப் புரிந்துகொண்டாள் தனக்காக நாட்டைவிட்டு, நகரத்தைவிட்டு அரசனை விரோதித்துக் கொண்டு சொந்தப் பதவியையும் இழந்து நின்ற வீரனை ஒரு முறை ஏறெடுத்துப் பார்த்துக் கண்களை மீண்டும் தரையில் பாய்ச்சினாள்.

அவன் சிந்தனையில் ஓடிக்கொண்டிருந்த எண்ணங்களை அண்ணன் பல்லவராயன் ஒரு நொடியில் புரிந்துகொண்டான் "நீங்கள் யார்?" என்று தான் அறைக்குள் நுழையும்போது கார்குழலி அபராஜிதனைக் கேட்டுக் கொண்டிருந்தபோதே பாண்டிய சேனாதிபதி பெயரை மறைத்தே ஜீவிக்கிறானென்பதை அறிந்து கொண்ட அண்ணன் பல்லவராயனுக்கு மீதி விஷயங்களை ஊகித்துக்கொள்வது ஒரு பிரமாதமான விஷயமாயில்லை. உள்ளே நுழைந்த தருணத்திலேயே உள் முழுவதையும் அங்கிருந்த இருவரையும் கண்களால் அளவெடுத்துக் கொண்ட அண்ணன் பல்லவராயன் கார்குழலியின் கண்களில் பிரதிபலித்துக் கொண்டிருந்த காதலையும் ஆச்சரியத்தையும் காணத் தவறவில்லை. இருவருக்கும் ஆழ்ந்த காதல் ஏற்பட்டிருக்கிறதென்பதையும் இடையே ஏற்பட்டுள்ள அரசியல் சிக்கலாலேயே அபராஜிதன் பெயரை மறைக்கிறானென்பதையும் அறிந்துகொண்ட சோழ சேனாதிபதி, காதலர்களுக்கு இடையேயிருந்த ஒரே மர்மத்தை வெட்டி

விட்டு விட்டால்தான், தான் வந்த காரியத்துக்கு அனுகூலம் என்று எண்ணி, பாண்டியசேனாதிபதியின் பெயரைச் சற்று அழுத்தந் திருத்தமாகவே உச்சரித்தான். ஆனால் அந்த உச்சரிப்பு கார்குழலியை அப்படியே திக்பிரமையடையச் செய்துவிடுமென்றோ நீண்டநேர மௌனத்துக்குக் காரணமாயிருக்குமென்றோ எல்லாமறிந்த அண்ணன் பல்லவராயன் கூட எதிர்பார்க்கவில்லை.

கார்குழலியின் மனோபாவமும் மன எழுச்சியும் அபராஜிதனுக்கு மட்டும் நன்றாகப் புரிந்தே இருந்தது. அல்லிப் பூம்பொழிலின் கரையிலும் பள்ளியறைச் சிறைக்கு அருகிலும் தன் பெயரை அறியாமலே தன் பிணைப்பில் கிடந்த கார்குழலிக்கு, திடும்பிரவேசமாகத் தன் பெயரும் அந்தஸ்தும் உச்சரிக்கப்பட்டது. திக்பிரமையை அளித்துவிடும் என்பதில் அவனுக்குச் சந்தேகமில்லை. யாரென்றறியாமலே சகல சௌந்தரியங்களையும் தன்னிடம் ஒப்படைததுவிட்ட கார்குழலிக்கு, தான் வீரபாண்டியன் சேனாதிபதியென்ற உண்மை தெரிந்தால் ஏற்படக்கூடிய விளைவை அவன் அறிந்தே இருந்தான். தான் நாடு கடத்தப்பட்டது கார்குழலிக்குத் தெரியாதாகையால், தான் இன்னானென்று சொன்னால் அவள் மனத்தில் சந்தேகம் எழக்கூடும் என்ற பயத்தினாலேயே இத்தனை நாள் பெயரை மறைத்திருந்தான். தவிர, தான் யாரென்று தெரிந்தால் விஷப் பாம்பான விக்ரம பாண்டியனும் எச்சரிக்கையடைந்து விடலாம் என்ற நினைப்பும் அவன் பெயரை மறைத்து வைப்பதற்கு ஏதுவாயிற்று. ஆனால் அந்த இரண்டு அவசியங்களும் இப்பொழுது நீங்கிவிட்டதால் தன் பெயர் வெளியாவதால் தவறில்லை என்று அபராஜிதன் உணர்ந்தேயிருந்தான். ஆனால் தன்னைப் பற்றி தகவலை மெள்ள மெள்ள அவளுக்கு உரைக்க வேண்டுமென்று எண்ணியிருந்த அபராஜிதனுக்கு அந்த எண்ணத்தை திடீரென அண்ணன் பல்லவராயன் உடைத்தெறிந்து விட்டது சற்று அதிர்ச்சியையே அளித்தது.

திடீரென அபராஜிதன் பெயரைக் கேட்டதால் கார
குழலியும், பெயர் வெளிப்பட்டதால் அபராஜிதனும் கல்
லாய்ச் சமைந்து நின்றுவிட்டதைக் கண்ட அண்ணன்
பல்லவராயன் அந்த அசந்தர்ப்ப நிலையை மெள்ள
உடைக்க எண்ணி லேசாகச் சிரித்துக்கொண்டே, ''அரச
குமாரி! உங்கள் அறையில் நுழையும்போது ஒரு சிலையைத்
தான் பார்த்தேன் இப்பொழுது இரண்டு சிலைகள் இருக்
கின்றனவே!'' என்றான் கார்குழலியை நோக்கி.

அதுவரை எண்ணச் சுழலில் சிக்கியிருந்த கார்குழலி
கண்களை அண்ணன் பல்லவராயனுக்காகத் திருப்பி,
''என்ன! இரண்டு சிலைகளா?'' என்றாள்.

''இல்லை, மூன்று சிலைகள். ஆனால் ஒன்று பேசிவிட்
டது'' என்று சொல்லி அவளையும் பார்த்து அபராஜி
தனையும் நோக்கினான் அண்ணன் பல்லவராயன்.

கார்குழலி சந்தேகம் நிரம்பிய தன் அழகிய விழிகளை
அவன்மீது பதியவிட்டாள். அண்ணன் பல்லவராயன்
இதழ்களில் புன்முறுவல் லேசாகப் படர்ந்தது. அறைக்
கோடியிலிருந்த அம்மன் சிலையை நோக்கிவிட்டு, அதோ
பார்த்தீர்களா அரசகுமாரி! நான் வரும்போது அந்தச்
சிலையைத்தான் பார்த்தேன். அடுத்த வினாடி உங்களைப்
பார்த்தேன். அதற்குப் பிறகு இவரைப் பார்த்தேன்
என்னைக் கண்டதும் நீங்கள் இருவருங்கூடச் சிலையாகி
விட்டீர்கள். என் சொற்களுக்கு இத்தனை சக்தி உண்டு
என்று எனக்கே இத்தனை நாள் தெரியாது!'' என்றான்
சோழநாட்டுச் சேனாதிபதி.

அவர் பேச்சிலிருந்த சாமர்த்தியத்தையும் குரலில
சதா தொனித்துக்கொண்டிருந்த உறுதியையும் கப்பீரத்
தையும் கவனித்து வியந்த கார்குழலிக்கு அப்பொழுது
தான் வேறொருவர் அனுமதியின்றித் தன் கன்னிமாடத்
துக்குள் நுழைந்திருக்கிறாரென்பதும், அவர் தன் சொந்த
விஷயத்தில் அளவுக்குமீறித்தலையிட்டிருக்கிறாரென்பதும்
விளங்கலாயிற்று. மனத்தின் மலைப்பிலிருந்து அந்த

நொடியே தெளிவு பெற்ற அவள் கண்ணிலிருந்த
ஆச்சரியமும் திக்பிரமையும் நொடிப் பொழுதில் மறைந்து
கோபம் மெள்ள மெள்ளத் துளிர்க்கவே ''நீ யார்? அனுமதி
யின்றி எதற்காகக் கன்னிமாடத்துக்குள் நுழைந்தாய்?
இங்கு அனுமதியின்றி வருவதற்குத் தண்டனை என்ன
வென்று தெரியுமா?'' என்று வினவினாள்.

இதைக் கேட்ட அண்ணன் பல்லவராயன் பலமாகவே
சிரித்தான். மேலும் இந்த நிலையை வளரவிடுவது சரியல்ல
வென்று நினைத்த அபராஜிதனும், ''அரசகுமாரி! இவரை
நீங்கள் பார்த்திராவிட்டாலும் இவரைப்பற்றிக் கேள்விப்
படாதிருக்க முடியாது. இவர்தான் சோழநாட்டுப்படைத்
தலைவரான அண்ணன் பல்லவராயன்'' என்று மெல்ல
விஷயத்தை விழுங்கினான்.

இன்னொரு பெரிய இடி தலையிலிறங்கியது போலிருந்
தது கார்குழலிக்கு. வீரபாண்டியனை வெற்றிகொண்ட
மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தத் தொடங்கிய அவளுக்கு
அன்று காலையில்தான் எத்தனை எத்தனை எதிர் அலை
கள்! ஒரு சேனாதிபதியைப் பற்றித் தகவலை அறிந்து
தத்தளித்து மீண்டமறுகணம் மற்றொரு சேனாதிபதியைப்
பற்றிய தகவல். ஒரு சேனாதிபதி பெயரைச்
சொல்லாமலே தன்னைக் காப்பாற்றி உணர்ச்சிகளை
யெல்லாம் கொள்ளை கொண்டான். இன்னொரு
சேனாதிபதியோ பாண்டியநாட்டின் பரமவிரோதி.
அவன் அந்த பிராந்தியத்திலிருப்பது தெரிந்தாலே அவன்
தலையை வாங்காவிட்டாலும் தகப்பனார் அவனைக்
கைதாவது செய்துவிடுவார். இத்தனை ஆபத்தில்
பாண்டியஎல்லையைத்தாண்டி மேலைமங்கல எல்லைக்குள்
புகுந்திருக்கிறான் சோழ சேனாதிபதி! வீரபாண்டியனின்
கைக்குள் அகப்பட்டிருந்தாலும் இவன் கதி அதோ கதி.
மேலைமங்கலத்தில் அகப்பட்டிருந்தாலும் நிலைமை அதே
தான். இத்தனை ஆபத்தில் எதிரி நாட்டில் மட்டுமன்றி
எதிரிக் கோட்டையிலும் நுழைந்திருக்கிறானே. எதிரிக்
கோட்டையில் மட்டுமா? எதிரியின் மகள் கன்னிமாட

அந்தரங்க அறையிலும் தலையை நீட்டியிருக்கிறானே!
இந்தச் சேனாதிபதிக்கு எத்தனை துணிச்சலிருக்க
வேண்டும் என்று நினைத்துப் பார்த்தாள் கார்குழலி:
இரண்டு சேனாதிபதிகளும் தன் முன் நிடும் பிரவேச
மாகவே தோன்றியிருக்கிறார்களென்பதையும் எண்ணிப்
பார்த்து, 'எனக்கும் தமிழ்நாட்டு வல்லரசுகளின்
சேனாதிபதிகளுக்கும் ஏகப் பொருத்தம் போலிருக்கிறது'
என்று மனத்திற்குள்ளேயே சொல்லிக் கொண்டதன்றிச்
சற்று புன்முறுவலும் காட்டினாள்.

வயோதிகனான அண்ணன் பல்லவராயன்கூட அவள்
புன்சிரிப்பிலிருந்த அழகைக் கண்டு ரசித்தான். மழவ
ராயன் மகளை அதுவரை அவன் கண்டதில்லையானா
லும், அவள் பேரெழிலைப் பற்றிக் கேட்டிருக்கிறான்.
ஆனால் அந்த அழகு இத்தனை தெய்வீகமாக இருக்கும்
என்று மட்டும் அவன் எதிர்பார்க்கவில்லை. எதிர்பார்த்
ததைவிட எத்தனையோ மடங்கு பேரெழிலுடனும்
களங்கமற்ற வதனத்துடனும் நின்ற அந்தக் காரிகையை
உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை நோக்கிய
அண்ணன் பல்லவராயன், 'இவளிடம் அபராஜிதன்
மனத்தைப் பறிகொடுத்ததில் ஆச்சரியமில்லை' என்றே
தீர்மானித்தான். அத்துடன் கார்குழலியை நோக்கிப்
பேசவும் தொடங்கி, ''அரசகுமாரி! கன்னிமாடத்தில்
நுழைவதற்குண்டான தண்டனையை நான் நன்றாக
அறிவேன். ஆனால் இந்தத் தலை போவதைப் பற்றி நான்
என்றுமே பொருட்படுத்தியதில்லை. என்றாவது ஒருநாள்
போகவேண்டிய தலையை யார் வெட்டிப் போட்டால்
என்ன! யுத்தரங்கத்தில் விழுந்து கால்களில் மிதிபட்டா
லென்ன? கோட்டை வாசலில் தொங்கி, கழுகுகளால்,
கொத்தப்பட்டாலென்ன? இந்த உபயோகமற்ற தலையைப்
பற்றி நான் கவலைப்படவில்லை. அரசகுமாரி! இந்த ஒரு
தலை கிடக்கிறது அநேக தலைகள் உருளாமல் எப்படிக்
காப்பாற்றலாம் என்பதைத் தீர்மானிக்கவே இங்கு
வந்திருக்கிறேன்'' என்றான்.

அண்ணன் பல்லவராயன் சொற்களிலிருந்து முக்கிய
மான ராஜாங்க அலுவலாகவே அவன் சோழ நாட்டிலி
ருந்து வந்திருக்கிறானென்பதையும் அவசரமாகத்
தன்னைக் காக்கவே கன்னிமடாத்தில் நுழைந்திருக்கிறா
னென்பதையும் உணர்ந்துகொண்ட அபராஜிதன்,
அண்ணன் பல்லவராயனை நோக்கி, ''சோழ நாட்டுப்
படைத்தலைவர் இங்கு விஜயம் செய்தது கன்னிமாடத்துக்
குப் பெருமையளிக்கிறது தாங்கள் யார் என்பதை அறியா
ததாலேயே அரசகுமாரி கடிந்து பேசினார்கள். மன்னிக்க
வேண்டும்'' என்றான்.

''பாண்டியநாட்டுப் படைத்தலைவரே! அரசகுமாரி
காரணமின்றிப் பேசவில்லையே. கன்னி மாடத்தில்
நுழைவது குற்றந்தானே? அதைப் புரிபவன் யாராயிருந்தா
லென்ன?'' என்று அபராஜிதனை நோக்கிச் சொல்லிய
அண்ணன் பல்லவராயன் கார்குழலியை நோக்கி, ''அரச
குமாரி! நான் தெரிந்து குற்றம் செய்தவன். ஆனால்
வேறு வழியின்றிக் குற்றத்தைச் செய்திருக்கிறேன். பெரிய
நன்மைசகாகச் சிறிய குற்றத்தைச் செய்தேன். தங்கள்
கன்னிமாடத்தின் புனிதத் தன்மையை அழிக்கும் நோக்கம்
எனக்கில்லை. ஆனால் எத்தனையோ தமிழ் பெண்மணி
களின் உயிர், மானம் இவற்றையும் காக்க வேண்டியது
என் பொறுப்பாயிருக்கிறது. அநதப் பொறுப்பை
முன்னிட்டே இங்கு வந்தேன், மன்னிக்கவேண்டும்''
என்றான்

''என்ன! மக்களைக் காக்கும் பொறுப்பா? யாரிட
மிருந்து காக்கவேண்டும்?'' என்று வினவினாள் கார்குழலி.

''சிங்களத்திடமிருநது'' என்று பளிச்சென்று பதில்
சொன்னான அண்ணன் பல்லவராயன்.

''அதற்கு இங்கு யார் என்ன செய்யமுடியும்?''
என்று மீண்டும் கேட்டாள் கார்குழலி.

''அதற்கு உதவக் கூடியவர் இங்குதானிருக்கிறார்.
அதுவும் தங்களுக்கு வெகு அருகில்'' என்று பதில் சொல்லி

அபராஜிதனுக்காகக் கண்களை ஓட்டினான் அண்ணன் பல்லவராயன்.

அண்ணன் பல்லவராயனின் அந்த வார்த்தைகளிலிருந்து அவன் வந்திருக்கும் காரணத்தைப் புரிந்துகொண்ட அபராஜிதன், சோழநாட்டுச் சேனாதிபதியை நோக்கிப், ''படைத்தலைவரே! தாங்கள் நின்றுகொண்டு பேசுவது நியாயமல்ல. அப்படி உட்காருங்கள். கார்குழலி, நீயும் உட்காரேன்'' என்று இரு மஞ்சங்களைக் காட்டிவிட்டுத் தான் மட்டும் உட்காராமல் அவர் எதிரிலேயே நின்றுகொண்டு சம்பாஷணையைத் துவக்கி, ''பல்லவராயரே! பெரிய பல்லவராயர் எதற்காகத் தங்களை இங்கு அனுப்பினார்?'' என்று வினவினான்.

திடீரெனத் தாக்கிப் போட்டதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது அண்ணன் பல்லவராயனுக்கு. ''பெரிய பல்லவராயர் அனுப்பினார் என்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என்று வினவினான் அண்ணன் பல்லவராயன்.

''இரு பல்லவராயர்களைப் பற்றி அறியாதவர்கள் தமிழ்நாட்டில் யாரிருக்கிறார்கள்? அவர் சிந்தனை, நீர் அதை நிறைவேற்றும் கரம் என்பது தமிழ் நாட்டில் தான் பழமொழியாகிவிட்டதே'' என்றான் அபராஜிதன்.

அந்தச் சாமர்த்தியப் பேச்சைக் கேட்ட அண்ணன் பல்லவராயன் கண்களில் ஆச்சரியக்குறி உதயமாயிற்று. பெரிய பல்லவராயர் தன்னை அனுப்பியிருப்பதை ஊகித்துவிட்ட அபராஜிதன், தான் வந்த காரணத்தையும் ஊகித்திருப்பானோ என்று நினைத்த சோழ சேனாதிபதி சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்து பிறகு சொன்னான்: ''ஆமாம் பிரபு! பெரிய பல்லவராயர்தான் அனுப்பினார். தமிழ் நாட்டின் தலைவிதி இப்பொழுது தங்கள் கரங்களில் இருக்கிறது.''

இந்தப் பேச்சினால் பேரதிர்ச்சி அடைந்தான் அபராஜிதன். அண்ணன் பல்லவராயன், 'தன் கலை

கோட்டை வாசலில் தொங்கினாலும், கழுகுகள் கொத்தினாலும் பாதகமில்லை' என்று சற்று முன்பு சொன்ன போதே பழைய நினைவுகளில் லயிக்கத் தொடங்கிய அபராஜிதன் மனம், தமிழ்நாட்டின தலைவிதி தன் கரங்களிலிருப்பதாக அண்ணன் பல்லவராயன் சொன்னதும் ஒரு கணம் திடுக்கிட்டு நின்றது. நினைவு நீலமலைக் குடிசைக்குப் பறந்து சென்றது.

''இதே வார்த்தைகளைத்தான் அன்று அந்தச் சதிகாரப் பிரபுக்களும் சொன்னார்கள். ''தமிழ்நாட்டின் தலைவிதி தங்கள் கரங்களில் இருக்கிறது!' கருணாகரத்தேவனும் அவன் சகாக்களும் அன்று சொன்ன அதே வாக்கியங்களை இன்று அண்ணன் பல்லவராயனும் சொல்கிறான். அந்தச் சதி நடந்த இரவின் விளைவாகத் தொங்கிய அதோ அந்த இரண்டு தலைகள்! அதோ நிஷதராசன் என்னை உற்றுப் பார்க்கிறானே! வங்கார முத்தரையனின் பற்கள் எதற்காக என்னைப் பார்த்துப் பரிகசிக்கின்றன? எந்தெந்தச் சம்பவங்கள் மனித வாழ்க்கையில் எப்படிப் பிணைக்கின்றன? அன்று நான் என்ன சபதம் செய்தேன்? இந்தத் தலைகளை வெட்டியவர்களைப் பழி வாங்குகிறேன். அந்த இரண்டு படைத் தலைவர்களுக்குப் பதில் வேறு படைத் தலைவர்களின் தலைகளை அங்கேயே செருகுகிறேன். என்று சொல்லவில்லையா நான்? என்ன பயங்கர சபதம்!'' என்று நினைத்து நினைத்து எங்கேயோ ஓடியது அபராஜிதன மனம். அந்த எண்ணங்களின் விளைவாக, பிரமை பிடித்து நின்ற அபராஜீதன் உள்ளத்துக்குத் தூபத்தை அதிகமாகப் போடத் தொடங்கிய அணணன் பல்லவராயன், ''நினைவிருக்கிறதா? பாண்டிய நாட்டுப் படைத் தலைவரே! மன்னன், மதுரையில் புகுந்த அன்று மக்கள் தலைகளைச் சிங்களப்படைகள் சீவி எறிந்தது நினைவிருக்கிறதா? அந்தத் தலைகளும் தலையற்ற முண்டங்களும் சிந்திய ரத்த வெள்ளத்தில் வீர பாண்டியன் தேர் மிதந்தோடியது. உமது மனக்கண்களின்

முன்னால் மிதக்கிறதா இல்லையா இன்னும்? அதிகமான
தமிழ் மக்களின் மண்டைகள் மண்ணில் உருளவேண்டுமா?
அவர்களின் குருதியால் தமிழ்நாடு மீண்டும் கறைபட
வேண்டுமா?'' என்று உக்கிரத்தோடு வினவினான்.

''வேண்டாம் பல்லவராயரே! வேண்டாம். அத்தகைய
கோரத்தைப் பற்றிப் பேசாதீர்கள்!'' என்று காதுகளைப்
பொத்திக் கொண்டான் அபராஜிதன்.

''அந்தக் காட்சி வேண்டாமென்றால் பாண்டிய
சேனாதிபதியின் வாள் உறையிலிருந்து வெளிப்
படட்டும்.''

''யாருக்கு எதிராக?;'

''சிங்களப்படைகளுக்கு எதிராக.''

''அப்படியானால் வீரபாண்டியனுக்கு எதிராக?''

''ஆமாம்.''

''அதெப்படி முடியும்? அவன் உப்பை நான் தின்றிருக்
கிறேனே!''

''அவன் உப்பு அல்ல அது! மக்கள் உழைப்பினால்
அளித்த உப்பு. அதற்குத் துரோகம் செய்கிறான் வீரபாண்
டியன். அவனுக்கு எதிராக வாளை உருவுவத க்ஷத்திரிய
தர்மம். மக்களைக் காக்க மன்னன் ஏற்பட்டிருக்கிறான.
மன்னன் அத்தொழிலைக் கைவிட்டபின் அவன் மன்னனல்
லாதபோது நீரும் அவன் படைத்தலைவனல்ல.''

''அவன் என் உறவினன்.''

''அரசியல் அரங்கத்தில் உறவைக் கட்டித் தூர
வைப்பது வீரன் கடமை.''

''என்னை என்ன செய்யவேண்டுமென்கிறீர்கள்?

''வீரபாண்டியனுக்கு எதிராகப் புரட்சிக் கொடியை
எழுப்ப வேண்டும்!''

''புரட்சிக் கொடியா?'' அசைவற்று நின்றான் அப
ராஜிதன்.

''ஆமாம்? மக்கள் நன்மைக்காக.''

''இல்லையேல்?''

''சோழநாட்டுப் படைகள் பாண்டிய நாட்டு எல்லை
யில் தயாராயிருக்கின்றன'' என்றான் அண்ணன் பல்லவ
ராயன் வீராவேசம் ததும்பும் குரலில்.

''போர்'' என்று முணுமுணுத்தன அபராஜிதன்
உதடுகள்.

''ஆமாம். போர்தான். சோழநாட்டுக்கும் பாண்டிய
நாட்டுக்குமா, தமிழ்நாட்டுக்கும் சிங்கள நாட்டுக்குமா
என்பதை நீங்கள் முடிவு செய்யவேண்டும். இலங்காபுர
னுக்குச் சிங்களத்திலிருந்து உதவிப்படை வந்துவிட்டது.
ஜகத்விசயத் தண்டநாயகன் அதற்குத் தலைமை தாங்கி
வந்திருக்கிறான். இனித் தாமதித்தால் தமிழ்நாட்டில்
சிங்கள ஆட்சிதான். சோழநாடு தாமதிக்கத் தயாரா
யில்லை பாண்டியநாடு என்ன செய்யப்போகிறது?''

அபராஜிதன் பதில் சொல்லத் தெரியாமல் திகைத்
தான். 'பாணடியநாட்டுப் படைத்தலைவனே பாண்டிய
மக்களுக்கு எதிரியாவதா? வீரபாண்டியனுக்கு எதிரியாக
என் வாளை உருவுவதா? கன்னிமாடத்தில் ஓர் அபலை
யைக் காக்க வீரபாண்டியனை எதிர்த்ததை உலகம் ஒப்புக்
கொள்ளும். ஆனால் மன்னனுக்கு எதிராகத் தான் புரட்சி
செய்வதை உலகம் மன்னிக்குமா? சரித்திரம் சரியாகப்
புரிந்து கொள்ளுமா? என்று மனத்திற்குள் குழம்பிக்
குழம்பித் தத்தளித்த அபராஜிதனையும் அவன் குழப்
பத்தைக் கண்டு மலைத்துச் சிலை போல் உட்கார்ந்த
கார்குழலியையும் மற்றொரு பேரதிர்ச்சிக்குள்ளாகக்கூடிய
செய்தியை அளிக்க வல்ல ஓலைச் சுருளைக் கையிலேந்தி
அவசர அவசரமாக உள்ளே நுழைந்த அடிகளார்
''கார்குழலி! உன் துரதிர்ஷ்டத்தை என்னம்மா சொல்
வேன்!'' என்று நா தழுதழுக்க கண்களில் நீர் வடிய
அலறினார்.

54. பிரிவு

எப்பேர்ப்பட்ட நிலையிலும் சுய உணர்ச்சிகளை
வெளிக்குக் காட்டாமல் இடக்காகப் பேசும் சுபாவமுள்ள

அடிகளாரே அன்று உணர்ச்சிப் பரவசராகிக் கண்களில்
நீர்வழியக் கலங்கி அலறிக்கொண்டு உள்ளே நுழைந்ததைக்
கண்ட அபராஜிதன் அவர் கொண்டு வந்துள்ள செய்திமிக
விபரீதமாகவே இருக்க வேண்டுமென்று தீர்மானித்தான்.
அதுவும் அவர் கார்குழலியின் துர்ப்பாக்கியத்தைக் குறிப
பிட்டு அலறியதைக் கேட்ட பாண்டிய சேனாதிபதி மழவ
ராயன் மகளின் உள்ளத்துக்கு இணையற்ற துன்பத்தைக்
கொடுக்கக்கூடிய ஏதோ ஒரு துக்கச் செய்தியை அடிகளார்
கொண்டுவந்திருக்கிறார் என்று ஊகித்ததோடு அத்தகைய
செய்தியைக் கார்குழலி மீது திடும்பிரவேசமாக வீசக்கூடா
தென்ற முடிவுக்கும் வந்து, அடிகளாரின் அவசரத்தைச்
சிறிது தேக்கும் நோக்கத்துடன், "உணர்ச்சிகளுக்கு இடங்
கொடுப்பது துறவிகளுக்கு அழகல்ல அடிகளாரே!"
என்றான் சிறிது கடுமையாகவே.

அபராஜிதன் அப்படிக் கடிந்து கொண்டதால் ஓரளவு
சுயநிலையை அடைந்த அடிகளார், தமது காவி வஸ்திரத்
தால் கண்களிலிருந்து வடிந்த நீரைத் துடைத்துக்கொண்டு
அபராஜிதனை ஏற இறங்கப் பார்த்து, "ஓகோ! உணர்ச்சி
களுக்கு இடங் கொடுப்பது துறவிகளுக்கு அழகல்லவோ!"
என்றார் அத்தனை துக்கத்திலும் சற்று ஏளனமாக.

"அல்ல என்பது என் அபிப்ராயம்" என்றான் அபரா
ஜிதன் குரலில் உணர்ச்சி ஏதும் இல்லாமலே.

"துறவியாயிருப்பவன் கன்னிமாடத்தில் இருக்க
லாமோ? என்று அடிகளார் மீண்டும் வினவினார்.

எதற்காக இந்தக் கேள்வியை அடிகளார் போடுகிறார்
என்பதை ஊகிக்க முடியாததால் பதில் சொல்லாமல்
நின்ற அபராஜிதனைப் பார்த்து மீண்டும் கேட்டார் அடிக
ளார், "பாண்டிய சேனாதிபதியவர்களே! துறவி கன்னி
மாடத்திலிருக்கலாம்; கார்குழலியைப் பாதுகாக்கலாம்;
அவளுக்குப் படிப்புச் சொல்லிக் கொடுக்கலாம்; கோட்
டையைப் பாதுகாக்கும் ஏற்பாடுகளில் கலந்துகொள்ள
லாம்; அரசியல் விவகாரங்களில் தலையிடலாம்

பெண்ணைத் தகப்பன் பாதுகாப்பிலிருந்து அகற்ற
ஏற்பாடு செய்யலாம். இத்தனையும் செய்யலாம், உணர்ச்சி
களுக்கு மட்டுந்தான் இடங்கொடுக்கக் கூடாது போலிருக்
கிறது?"

இப்படித் தன் உண்மை நிலையைப் பட்டவர்த்தன
மாக அடிகளார் சொன்னதைக் கேட்ட அபராஜிதன்
அவரை நோக்கி, "அதற்காகச் சொல்லவில்லை
அடிகளாரே! மற்றவர்கள் நிலை தடுமாறினாலும்
ஆறுதல் சொல்லவேண்டிய தாங்களே உணர்ச்சிக்கு இடங்
கொடுத்தால் மற்றவர்களின் கதி என்ன என்பதைப் பற்றித்
தான் யோசித்தேன்" என்று சொல்லிக் கார்குழலியை
நோக்கித் தன் கண்களைத் திருப்பினான்.

அவன் அபிப்பிராயத்தைச் சந்தேகமறப் புரிந்து
கொண்ட அடிகளார் தம்மை மேலும் திடப்படுத்திக்
கொண்டார். "மற்றவர்கள்" என்று பாண்டிய சேனாதி
பதி குறிப்பிட்டது கார்குழலியையே என்பதையும்,
அவளிடம் துன்பச் செய்தியைத் திடீரென வீசக்கூடா
தென்பதற்காகவே பாண்டியசேனாதிபதி தம்மைத் தடை
செய்கிறான் என்பதையும் அறிந்துகொண்ட அடிகளார்,
மேலும் ஏதோ சொல்ல வாயெடுத்த சமயத்தில் மீண்டும்
அவரைக் கண்களால் எச்சரித்த அபராஜிதன்,
"அடிகளாரே! வீரபாண்டியனை நாம் வெற்றி கொண்ட
தால் ஏற்பட்ட மகிழ்ச்சியில் பங்குகொள்ள ஒரு விருந்
தாளியும் வந்திருப்பதைத் தாங்கள் கவனிக்கவில்லை
போலிருக்கிறது" என்று மஞ்சத்தில் அமர்ந்திருந்த
அண்ணன் பல்லவராயனைச் சுட்டிக்காட்டி மூன்றாம்பேர்
வழி அறையிலிருக்கிறார் என்பதையும் அறிவுறுத்தினான்.

தான் கொண்டுவந்த செய்தியிலும் அது சம்பந்த
மாகக் கார்குழலிக்கு ஏற்படும் துன்பம் எத்தன்மையது
என்பதிலும் சிந்தனையை நிலைக்க விட்டிருந்ததால்
மூன்றாவது மனிதர் ஒருவர் அந்த அறையிலிருப்பதைக்
கவனிக்காத அடிகளார் அண்ணன் பல்லவராயன் மீது
பார்வையைத் திருப்பினார். வந்திருந்த மனிதர் யாரென்

பதைக் கண்டதும் அடிகளார் தாம் இருந்த இடத்தை
மறந்தார். ஓலையை மறந்தார். வீரபாண்டியனை
வெற்றி கொண்ட நிகழ்ச்சியைக்கூட மறந்தார். சகலத்
தையும் அவர் சிந்தனை அடியோடு மறந்ததோடு கண்
களும் அந்த அறையையோ அறையிலிருந்த மற்றவர்
களையோ பார்க்கச் சக்தியிழந்தவையாகி அண்ணன்
பல்லவராயன்மீது வெகு நேரம் பதிந்து கிடந்தன.
'அண்ணன் பல்லவராயன் இங்கு எதற்காக வந்திருக்
கிறான்? எப்படிக் கன்னிமாடத்துக்குள் நுழைந்தான்?'
என்ற கேள்விகளோடு சோழ நாட்டு அரசியல் விவரங்
களும் அவர் புத்தியில் மிகத் துரிதமாக நடமாடின.
அவர் தன்னைக் கண்டதும் பிரமித்ததை அண்ணன்
பல்லவராயன் ஒரு பொருட்டாகக் கருதவில்லை. அந்தப்
பிரமிப்பைத் தொடர்ந்து அவர் சிந்தனை எங்கெங்கோ
சஞ்சரிக்கத் தொடங்கிவிட்டதை முகபாவத்திலிருந்து
ஊகித்துக்கொண்டுவிட்ட அண்ணன் பல்லவராயன்
''அடிகளாரே! நான் இப்படித் திடீரென இங்கு வந்தது
உமக்கு வியப்பாயிருக்கலாம்'' என்று சம்பாஷணையைத்
துவக்கினான்.

அடிகளார் சற்றுத் தாமதித்துவிட்டுப் பதில் சொன்
னார். ''வியப்பேதுமில்லை, சோழநாட்டுப் படைத்
தலைவரே! தாங்கள் திடீரென நுழைந்துவிடுவீர்கள்
என்பதற்குப் பழைய ஆதாரமே இருக்கின்றது.?'

''பழைய ஆதாரமா! என்ன அது?'' என்று அண்ணன்
பல்லவராயன் விழிகளில் ஆச்சரியக் குறி தோன்ற வின
வினான்.

''மேலைமங்கலத்திலிருந்த் வீரபாண்டியன் மதுரைக்குத்
திரும்பியபோது ஏற்பட்ட ரத்தக் களறியிலும் குழப்பத்
திலும் கூடத் தாங்கள் பாண்டியன் அரண்மனைக்குள்
நுழைந்ததாகக் கேள்வி'' என விளக்கினார் அடிகளார்.
''ஓகோ? அந்தச் சம்பவத்தைப்பற்றிச் சொல்கிறீரா?''
''ஆமாம், இங்கும் அதேமாதிரிச் சம்பவந்தானே!
இங்கும் ரத்தக்களறி, யுத்தக் குழப்பம். இதற்கிடையில்

கும்பலோடு கும்பலாகச் சோழநாட்டுச் சேனாதிபதியவர்
கள் கன்னிமாடத்துக்குள் புகுந்துவிட்டீர்கள்!''

''விஷயத்தைச் சரியாக ஊகித்துவிட்டீரே!''

உடனே, ''இதை ஊகித்துவிட்டேன்...'' என்று சிறிது
தயங்கிய அடிகளாரைப் பார்த்து, ''எதை ஊகிக்க
வில்லை?'' என்று வினவினான் அண்ணன் பல்லவராயன்.

அடிகளார் உடனே பதில் சொல்லவில்லை. அவர்
கண்கள் ஒருமுறை அண்ணன் பல்லவராயனை நன்றாக
ஏறெடுத்துப் பார்த்தன. பிறகு அவர் உதடுகளிலிருந்து
வார்த்தைகள் நிதானமாகவும், கடுமையாகவும் உதிர்ந்
தன. ''நீங்கள் நுழையும் முறையை ஊகிக்க அதிக நேரம்
பிடிக்கவில்லை எனக்கு. ஆனால், பல்லவராயரே! நீங்கள்
இங்கு வந்திருக்கும் காரணத்தை ஊகிக்கத்தான் முடிய
வில்லை. இங்கு எதற்காக வந்திருக்கிறீர்?'' என்று
வினவினார் அடிகளார்.

அடிகளாரின் சொற்களில் தொனித்த உஷ்ணத்தைக்
கவனித்த அண்ணன் பல்லவராயன் இதழ்களில் லேசாகப்
புன்முறுவல் படர்ந்தது. அவருக்கு நேராகப் பதில்
சொல்லாமல், ''அடிகளாரே! ஜகத்விசயன் கூடலில்
பதினாயிரம் வீரர்களுடன் வந்து இறங்கியிருக்கிறான்...'
என்று கூறிவிட்டு மேலும் ஏதோ சொல்லப்போன
அண்ணன் பல்லவராயனைத் தடுத்து, ''சற்று இருங்கள்'
மதுரையில் இருபதினாயிரம் வீரர்களுடன் இலங்காபுரன்,
கூடலில் பத்தாயிரம் வீரர்களுடன் ஜகத்விசயன்
சிங்களத்தின் மாபெரும் படைகளுக்கிடையில் பாண்டிய
நாடு'' என்று முணு முணுத்த அடிகளாரின் முகத்தில்
சொல்லவொண்ணாத் திகில்படர்ந்தது. 'பாண்டியநாட்டு
மக்கள் கதி அதோகதிதான்' என்று முடிவு கட்டிய
அடிகளாரின் மனத்தே, மேலைமங்கலத்தைப் பற்றிய
கவலையும் பலமாக எழவே, அவர் மேற்கொண்டு ஏதும்
பேசாமல் அபராஜிதனையும் அண்ணன் பல்லவராயனை
யும் மாறி மாறிப் பார்த்தார்.

உன்ன நிலையைக் கணப்பொழுதில் அடிகளார் உணர்ந்து கொண்டு விட்டதைக் கண்ட அண்ணன் பல்லவராயன் அந்தத் துறவியின் அரசியல் அறிவைக் கண்டு பெரிதும் வியந்ததன்றி, அவருக்கு எத்தனை தூரம் ராஜதந்திரம் தெரியுமென்பதை அளக்கவும் விரும்பினவனாய்க் கேட்டான்; "ஏற்பட்டுள்ள ஆபத்தைப் பற்றி அசசப்பட்டுப் பயனில்லை அடிகளாரே! இதற்குப் பரிகாரம் என்ன?"

"பரிகாரம் ஒன்றேதான். இலங்காபுரனுக்கும் ஜகத்விசயனுக்கும் இடையே ஒரு பெரிய சுவரை எழுப்ப வேண்டும்" என்று சொன்ன அடிகளாரின் சிந்தனை எங்கெங்கோ ஓடவே அவர் அத்துடன் நிற்காமல், "சுவரை யார் எழுப்புவது? எப்படி எழுப்புவது? மேலையங்கலம் எழுப்பலாம். ஆனால் தற்சமயம் அது அந்த நிலையில் இல்லையே" என்றார்.

"ஏன் இல்லை?" என்று வினவினான் அண்ணன் பல்லவராயன்.

ஒரு வார காலத்துக்கு முன்பாக கங்கை கொண்ட சோழபுரத்தில் பெரிய பல்லவராயர் சொன்ன அதே வார்த்தைகளை அடிகளார் சொல்லத்தொடங்கி, "சோழநாட்டுப் படைத் தலைவரே! உமக்குத் தெரியாத போர் நிலையை நான் வகுத்துத் தரப்போவதில்லை. ஆனால் மேலைமங்கலம் இந்தப் பணியில் சாதாரண நாளிலே ஈடுபட முடியாதென்பதை நான் உமக்குச் சொல்லத்தேவையில்லை. மேலைமங்கலச் சிற்றரசு சரியாக ஜகத்விசயனுக்கும் இலங்காபுரனுக்கும் இடையே இருக்கிறது. இந்தச் சிற்றரசு சோழநாட்டுப் பக்கம் சாய்ந்தால் ஜகத்விசயனாலும் இலங்காபுரனாலும் இருபுறத்திலும் ஏக காலத்திலும் தாக்கப்பட்டுச் சிதைந்து போகும். அப்படிப் போனாலும் போகட்டுமென்று முயற்சியைச் செய்யக்கூடிய மனிதனும்..." என்று மேலே பேச முடியாமல் மென்று விழுங்கினார்.

அடிகளார் அப்படி மென்று விழுங்கவேண்டிய அவசியம் என்னவாயிருக்குமென்பதை அறியாத அபராஜிதன், "ஏன் அடிகளாரே! ஏன் பேச்சை நிறுத்திவிட்டீர்?" என்று வினவினான்.

அடிகளார் பதிலுக்குக் கையிலிருந்த ஓலையை அபராஜிதனிடம் நீட்டினார். அதைப் பிரித்துப் படித்த அபராஜிதன் முகத்தில் கவலைக்குறி அதிகமாகத் தோன்றுவதைக் கண்ட அண்ணன் பல்லவராயன் விஷயம் என்னவென்று வினவும் முன்பாகவே சோழநாட்டுச் சேனாதிபதியிடம் ஓலையை ஒப்படைத்த அபராஜிதன் அடிகளாரை நோக்கி, "அடிகளாரே! சோழநாட்டுப் படைத்தலைவருக்குத் தங்க இடங்கொடுத்து ஸ்நானபானாதிகளுக்கு ஏற்பாடு செய்யுங்கள். நான் அரசகுமாரியிடம் சிறிது நேரம் பேசிவிட்டு வருகிறேன்" என்றான்.

அடிகளாரும் சோழநாட்டுப் படைத் தலைவனும் அறையைவிட்டு வெளியே சென்றதும் வண்டினும் கரிய தன் விழிகளை அபராஜிதன் முகத்துக்காகத் திருப்பினாள் கார்குழலி. அந்த விழிகளில் குடி கொண்டிருந்த கவலையையும் குழப்பத்தையும் கண்ட அபராஜிதனும் ஓலையில் கண்ட செய்தியை அவளிடம் எப்படிச் சொல்வது என்பதை அறியாதவனாய் அவளை நெருங்கித் தன் இடது கரத்தை அவள் அழகிய இடையைச் சுற்றி வளைவிட்டு அவள் உடலைத்தனக்காக இழுத்து ஆதரவாக அணைத்து, "குழலி! நீ சாதாரணப் பெண்ணல்ல..." என்று ஆரம்பித்தான்.

ஏதோ துக்ககரமான செய்தியைச் சொல்வதற்காகவே அவன் ஆயத்தம் செய்துகொள்கிறான் என்பதைத் தெரிந்துகொண்ட கார்குழலி, அவனிடம் அதிகமாகவே இழைந்து பலமான அவன் கரம் இடையில் சற்று அழுத்திக் கொடுத்ததால் கிடைத்த ஆதரவால் ஓரளவு நிம்மதியையும் அடைந்து அதிகமாகப் பேசாமல் ஓர் 'உம்' மாத்திரம் கொட்டினாள்.

''அரசகுமாரி'' என்றான் அபராஜிதன்.

அதற்கும் 'உம்' கொட்டினாள்.

''அதுவும் எதற்கும் அஞ்சாத மழவராயன் மகள்....''

''அதற்கென்ன இப்போது?''

''அவசியமிருக்கிறது குழலி.''

''எதற்கு அவசியம்?''

''மழவராயன் மகளாக நடந்து கொள்வதற்கு வேண்டிய அவசியம்.''

''வேறெப்படி நடந்து கொள்கிறேன்?''

''அப்படித்தான் நடந்து கொள்கிறாய். மழவராயனுக்குள்ள நெஞ்சுத் திடமும், உரமும் துணிவும் உன்னிடமிருக்கின்றன. அந்தத் திடத்தையும் உரத்தையும் துணிவையும் நீ வரவழைத்துக் கொள்ளவேண்டிய சமயம் இது ''

''துணிவு எப்பொழுதும் உண்டென்றால் இப்பொழுது எங்கே போய்விடும்?''

'' எல்லாம்... சந்தர்ப்பத்தைப் பொருத்தது சில சமயங்களில் எப்படிப்பட்டவர்களும் சுயநிலை இழப்பார்கள்– உன் தந்தையைத் தவிர.''

''என் தந்தையா?''

''ஆமாம் குழலி! உன்னை மேலைமங்கலத்து அந்தப் புரத்திலிருந்து யாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள் என்று உன் தந்தையிடன் சொன்னேன்.''

''தந்தை என்ன சொன்னார்?''

''எதுவும் சொல்லவில்லை. நீ போய்விட்டதை ஒரு

பெரிய சம்பவமாகவே அவர் காட்டிக்கொள்ளவில்லை.

உணர்ச்சிகள் மீது அத்தனை ஆதிக்கம் மழவராயனுக்கு.''

இதைக் கேட்ட கார்குழலிக்கு விஷயம் மெள்ள மெள்ளப் புரியலாயிற்று. அவன் பிடியிலேயே சற்றுச் சுழன்ற அவள் அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கிக் கேட்டாள்: ''சுற்றி வளைக்க வேண்டாம். சமாசாரத்தைச்

சொல்லிவிடுங்கள். என் தந்தை இறந்து போய்விட்டாரா?''

இந்தக் கேள்வியைக் கேட்ட சமயத்தில் அவள் குரல் நிதானமாகத்தான் இருந்தது. ஆனால், அந்தக் குரலில் சாதாரணமாக இருக்கும் நயம் இல்லை. உள்ளக் குமுறலின் காரணமாகக் கடுமை கலந்திருந்தது. அவள் உள்ளத்தில் துவங்கிக்கொண்டிருந்த புயலை அறிந்த அபராஜிதன் அவளை மெள்ள இழுத்துச் சென்று மஞ்சத்தில் அமர்த்தி ''குழலி! மழவராயன் இறக்கவில்லை. ஆனால் மரணத் தறுவாயிலிருக்கிறார்'' என்று செய்தியை லேசாக உடைத்தான்

கார்குழலியின் கண்களில் ஒரு துளி நீர்கூடத் துளிர்க்கவில்லை. சாம்ராஜ்யமே இடிந்து விழும் தருணத்தில்கூட கண்ணீர் உகுக்காத சரித்திரத்தின் பெரிய ராணிகளைப் போலத் திடமாகவே உட்கார்ந்திருந்தாள் பெண் போய்விட்டாள் என்ற சமயத்தில் மழவராயன் இருந்தநிலைக்கும் தந்தை மரணத்தறுவாயிலிருக்கிறார் என்றதைக் கேட்ட கார்குழலி இருந்த நிலைக்கும் எந்தவித வித்தியாசமுமில்லாதிருந்ததைக் கண்ட பாண்டிய சேனாதிபதி, ஆச்சரியத்தில் மூழ்கியதோடு இப்பேர்ப்பட்ட பெண் பெரிய சக்கரவர்த்தினியாயிருக்கத் தகுந்தவள், துரதிர்ஷ்டவசத்தால் இந்தச் சிற்றரசில் பிறந்தாள் என்றும் நினைத்தான்.

கார்குழலியின் மனத்தே வேறு பல எண்ணங்கள் ஓடிக்கொண்டிருந்தன. தன் துரதிர்ஷ்டத்தை எண்ணி எண்ணிக் குமுறினாள், மழவராயன் மகள். கைக்கெட்டியது வாய்க்கெட்டாமலே போகும் சம்பவங்கள் நிறைந்த தன் வாழ்க்கையும் ஒருவாழ்க்கையா என்று அவள் எண்ணினாள் 'இந்தப் பாண்டிய சேனாதிபதியை எதிரே இதே காட்டிலே சந்தித்துக் காதல் கொண்டேன். அவர் இங்கு தங்காது கன்னி மாடத்திலிருந்தே மறைந்தார். வீரபாண்டியனை வெறுத்தேன். அவன் என்னைக் கடிமணம் புரியத் தந்தை சம்மதித்தார். அதிலிருந்து

தப்பினேன். கோட்டையில் சிறைப்பட்டேன் என்னைக் காப்பாற்ற வந்தவர் இவர். முற்றுகை முடிந்ததும் மண வாழ்க்கை கிடைக்குமென்று நினைத்தேன். தந்தை மரணத்தறுவாயிலிருக்கும் செய்தியே கிடைத்திருக்கிறது போதாக்குறைக்கு இவரை என்னிடமிருந்து பிரித்துப் பொன்னமராவதிக்கு அனுப்ப அண்ணன் பல்லவராயன் வந்து முனைந்திருக்கிறார். மரணப் படுக்கை ஒரு புறம்; உயிருக்கு உயிரான இவர் என்னைப் பிரிந்து செல்ல வேண்டிய அவசியம் இன்னொருபுறம். இந்த உலகத்தில் நான் விரும்புவது இருவரை. அவர்கள் இருவரிடமிருந்தும் என்னைப் பிரிக்கிறாயே விதியே! எதற்காக இத்தகைய பேரிடியை என்மீது வீசுகிறாய்? என்று தன்னைத்தானே கேட்டுககொண்டு திக்பிரமை அடைந்து உட்கார்ந்திருந்த கார்குழலியின் முகத்தைத் தன் இரு கைகளாலும் பிடித்துத் தூக்கினான் அபராஜிதன். அப்படித் தூக்கியதால் தன் கண்களோடு கலந்த அவள் கண்களில் ஓடிக் கொண்டிருந்த துக்கத்தையும், அந்தத் துக்கத்தால் அவள் முகத்தில் ஏற்பட்ட பிரமிப்பையும் கவனித்த அபராஜிதன், "குழலி! உலகத்தில் நம் இஷ்டப்படி காரியங்கள் நடப்பதில்லை. விதி நம்மை இழுத்துச் செல்லும் பாதையில்தான் நாம் செல்ல வேண்டும் உன் தந்தை மரணப் படுக்கையிலிருக்கிறார் மேலைமங்கலத்துக்குப் போய் நீ அவருக்கு ஆறுதலாக இரு" என்றான்.

"நீங்கள்?"

"பொன்னமராவதிக்குப் போகிறேன்."

"புரட்சியைக் கிளப்பவா?"

"ஆமாம்."

"புரட்சியைக் கிளப்பி நீங்கள் அகப்பட்டுக்கொண்டால்?"

"மதுரைக் கோட்டை வாசலுக்கு வா என் தலையைப் பார்க்கலாம். புரட்சி வெற்றியடைந்தால் நான் மேலைமங்கலத்துக்கு வருகிறேன், மங்கலக் கயிற்றுடன்."

"வேறு வழியே இல்லையா?"

"இல்லை குழலி! என் நிலையில் இருப்பவர்களுக்கு வேறு வழியில்லை; நாடு கடமைக்கு அழைக்கிறது."

"நான் அழைக்கிறேனே!"

"உயிருடனிருந்தால் மண்ணுலகில் சந்திக்கிறேன். இல்லாவிட்டால் விரோதத்துக்கு இடமில்லாத வேறுலகமிருக்கிறது. அங்கு சந்திக்கிறேன்."

கார்குழலி அவன் மார்பில் தன் தலையைச்சாய்த்துக் கொண்டாள். அதுவரை மடைபோட்டுத் தேக்கி வைக்கப் பட்டிருந்த உணர்ச்சிகள் மடையை உடைத்துக் கொண்டு பீரிட்டுப் பிரவேசிக்கவே குலுங்கக் குலுங்கக் குழந்தை போல் அழுதாள் மழவராயன் மகள். அபராஜிதன் தனது வலக்கரத்தால் அவள் முதுகை ஆறுதலாகத் தடவிக் கொடுத்து, "குழலி! உணர்ச்சிகளை அடக்கிக் கொள் நீ வீரன் மகள். உணர்ச்சிகளைச் சிதறவிடுவது முறையல்ல" என்றான்.

கார்குழலி மெள்ள அழுகையை அடக்கிக் கொண்டாள்.

அன்று பிற்பகலில் இது என்ன வாழ்க்கை என்பதை அடிகளார் விளக்கினார். 'இன்பமும் துன்பமும் மாறிவருவது இயற்கை மகளே! அதற்காக வருந்திப் பயனில்லை. கடமை உனக்காகக் காத்திருக்கிறது வா, மேலைமங்கலம் செல்வோம்" என்றார் அடிகளார். அவர்கள் மேலைமங்கலத்துக்குப் புறப்படுமுன்பாகவே காரிலவளவனுடன் அபராஜிதன் பொன்னமராவதிக்குப் புறப்பட்டு விட்டான். அவர்கள் சொல்வதைக் கன்னி மாடத்தின் மாடியிலிருந்து கண்களில் நீர் பெருகக் கவனித்துக் கொண்டிருந்த கார்குழலி அவனைத் தன்னிடம் திரும்பவும் பத்திரமாய்க் கொண்டு சேர்க்கும்படி ஆண்டவனை வேண்டினாள். அதே தினத்தின் மாலையில் கூடலைச் சேர்ந்தசிங்களத்துப் பைங்கிளி அபராஜிதனை அடியோடு ஒழித்துக் கட்டுவதற்காகப் பிரும்மாண்டமான திட்டமொன்றை உருவாக்கிக் கொண்டிருந்தாள்.

55. மாதவியின் கண் வலை

இராமேச்வரத்துக்குச் சற்று அப்பால் ஊசி போல் ஓடி ஆழ்கடலில் பாய்ந்து கரைந்து கொண்டிருந்த குறுகிய நிலப்பரப்பின் கிழக்கு ஓரத்திலிருந்த கூடல் அப்படியொன்றும் பெரிய நகரமல்ல. ஆனால் சிற்றூர்தானே என்று அசட்டை செய்து ஒதுக்கிவிட முடியாத நிலையில் அது இருந்தது. சிங்களத்துக்கு வெகு அருகிலிருந்த முதல் கப்பல் துறை அதுவாகையாலும், சதா நெல்லைப் பாண்டியர்களுக்கும் சிங்களத்து மகாவம்ச பரம்பரைக்கும் நட்புறவு இருந்து வந்ததாலும், எந்த நிமிஷத்திலும் சிங்களப்படைகள் இறங்கிவிடக்கூடிய கேந்திரமான ஸ்தானத்தில் இருந்தபடியாலும் சோழப் பேரரசர்கள் கண்களும் மதுரைப் பாண்டியர்கள் கண்களும் எப்பொழுதும் கூடலை நோக்கி நிலைத்துக் கிடந்தன. கூடலை எப்பொழுதும் கண்காணிக்க வேண்டிய அவசியத்தை முன்னிட்டு சோழப் பேரரசர் கடற்படையைச் சேர்ந்த ஓரிரு கப்பல்கள் கூடல் பிராந்தியத்தில் அடிக்கடி உலாவுவதும் வழக்கமாயிருந்தது. தென்னாடெங்கணும் வடக்கே சில இடங்களிலும் சோழ சாம்ராஜ்யம் பரந்து வலுத்துக் கிடந்த முதல் ராஜராஜன் காலத்திலேயே கூடலின் நிலை இது என்றால் பாண்டியநாடு சிங்களத்தின் கால்களில் மிதிபட்டு யுத்தமேகங்கள் தமிழ் நாடெங்கும் திரண்டு எழுந்து கறுத்துக் குமுறி இடித்துக் கொண்டிருந்த இரண்டாவது ராஜாதிராஜன் காலத்தில் அந்தச் சிற்றூரின் நிலையைப் பற்றி விவரிக்கவா வேண்டும்?

சிங்களத்துக்குச் சமீபத்திலிருந்த கப்பல் துறையான சிற்றூரில் இலங்காபுரன் வந்திறங்கிய நாளாகவே பயமும் குழப்பமும் நிறைந்திருந்தன. சிங்களத்தின் பெரும் படையுடன் அவன் இறங்கிய இராமேச்வரத்தில் கோயிலை இடித்தும் பக்கத்து ஊர்களின் பயிர்களைக் கொளுத்தியும், தமிழர்களைச் சங்கிலியால் பிணைத்து அடிமை வேலை செய்யப் படகுகளில் கூட்டங் கூட்டமாய்ச் சிங்களத்துக் கனுப்பி கூடல் வாசிகள், இலங்காபுரன் மதுரை சென்று வீரபாண்டியனை அரியணையில் அமர்த்தி நாடாளத்

தொடங்கியதும் சிறிது அமைதியை அடைந்தார்கள். ஆனால் அந்தச் சொற்பகால அமைதியைக் குலைக்க மீண்டும் சிக்கல் எழுந்தது ஜகத்விசயத் தண்டநாயகன் பெரும்படையுடன் வந்திறங்கியவுடன் கூடல் மக்களுக்கு மறுபடியும் குலை நடுக்கம் கண்டது ஆனால், இம்முறை அந்த நடுக்கம் அதிக நாள் நீடிக்கவில்லை. ஜகத்விசயனுக்கும் இலங்காபுரனுக்கும் பெரும் வித்தியாசமிருந்ததைக் கூடல் மக்கள் கண்டனர். ஜகத்விசயன் படை வந்திறங்கிய நாள்முதல் மிக ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் நடந்துகொண்டது. யார் வீடும் சூறையாடப்படவில்லை. பயிர் பச்சைகள் அழிக்கப்படவில்லை. கூடலில் இலங்காபுரனால் இடிக்கப்பட்டு மீண்டும் மக்களால் எழுப்பப்பட்ட சிறு பிள்ளையார் கோயிலைக்கூடச் சிங்களப் படைவீரர்கள் தொடவில்லை. கடற்கரையோரமிருந்த பெரிய மாளிகையை ஊர்க்காரர்கள் ஒழித்துவிட்டிருந்தும் ஜகத்விசயன் அதில்கூடத் தங்காமல் கடற்கரை மணற்பரப்பிலே சென்று தனிக்கூடாரமடித்துக் கொண்டான். அவன் வீரர்கள் பலரும் அவன் உதாரணத்தையே பின்பற்றினர். ஊருக்குள் சில வீடுகளை ஒழித்துத்தரச்சொல்லி அவற்றில் ஜகத்விசயன் இருக்கச் செய்த உபசேனாதிபதிகள் கூட, கூடல்வாசிகளுக்கு எந்தத் தொந்தரவையும் கொடுக்காமல் கண்ணியமாகவே நடந்து கொண்டார்கள்.

மக்களிடமிருந்து தான்ய வகையறாக்களும் அதிகமாக வசூலிக்கப்படவில்லை சிங்களத்திலிருந்து அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்த படகுகளில் படைக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் கொண்டுவரப்பட்டன. இறைச்சிக்கு வேண்டிய ஆடுகள் சிலவும் கோழிகள் சிலவும் அக்கம் பக்கத்துக் கிராமங்களிலிருந்து சிங்களத்துப் பௌத்தமதப் படைகளுக்குக் கொண்டு வரப்பட்டபோது அவற்றுக்குண்டான பணம் தங்கத்திலேயே அளந்து கொடுக்கப்பட்டது வேலையின்றி மாலை வேளையில் பக்கத்து ஊர்களைச் சுற்றச் சென்ற படை வீரர்கள் எந்தச் சேஷ்டையிலும் ஈடுபடாமலும் எதிரே வந்த பெண்களை

ஏறெடுத்துப் பார்க்காமலும் சென்று கொண்டிருந்தார்கள். இவற்றின் காரணமாகப் போர்ப்படை இறங்கிய போதிலும் கூடியவரை சாதாரண வாழ்க்கையே நிலவிக் கிடந்தது. கூடலிலும் அதைச் சுற்றியிருந்த சிற்றூர்களிலும்.

வெள்ளிச்சேணம் போட்ட இரு புரவிகளால் இழுக்கப்பட்ட அலங்கார ரதத்திலே அமர்ந்து பெரிய ராணி போல் கூடலுக்குள் பிரவேசித்த சிங்களத்துப் பைங்கிளி கூடளர் இருந்த நிலையைக் கண்டு பெரிதும் ஆச்சரியப்பட்டாள். கூடலின் நிலைமைக்கான அறிகுறிகளை இராமேச்வரத்தைத் தாண்டிய முதலே கண்ட மாதவி, அந்த ஜகத்விசயன் என்ன மந்திரவாதியாயிருப்பானோ என்று வியந்தாள். போர்ப்படை இறங்கியுள்ள இடத்தைச் சமாதான காலத்தைப்போல் சாதாரணப் பிராந்தியமாக்க அவனால் எப்படி முடிந்தது என்பதை, எல்லாவற்றையும் நொடிப் பொழுதில் அறிந்துகொள்ளக் கூடிய சிங்களத்துப் பைங்கிளியால்கூட அறிய முடியவில்லை. தன்னைப் பார்க்க வழி நெடுக மக்கள்நின்றதையும், அவர்கள் ரதத்தை நெருங்கவிடாமல் செய்வதற்காகத் தடுத்து நின்ற போர் வீரர்கள் முரட்டுத்தனம் எதும் காட்டாமல் மெள்ள ஜனங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருந்ததையும் பார்த்த மாதவிக்கு ஜகத்விசயனைச் சந்திப்பதிலிருந்த ஆசை பன்மடங்காயிற்று.

மாதவிக்குத் தெரியாத பிரபுக்கள் சிங்களத்தில் யாருமே கிடையாது. சிங்களத்தில் பிரதானத் தண்ட நாயகனான இலங்காபுரன் மருமகள் என்ற காரணத்தாலும் அவளுக்கே இயற்கையாகவிருந்த பேரழகினாலும் அவளை நெருங்கிப் பழக முயன்ற பிரபுக்களின் எண்ணிக்கைக்குக் குறைவேயில்லை. ஆனால் இந்த ஜகத்விசயன் பெயரை மட்டும் அவள் கேள்விப்பட்டதேயில்லை. ''எந்தப் பிரபு வம்சத்திலும் சேராத இவன் யார்? எங்கிருந்து இத்தகைய உன்னத பதவிக்கு எழுந்தான்! இலங்காபுரனுக்கு அடுத்தபடியாகப் படைகளை நடத்திச் செல்ல மன்னன் பராக்கிரமபாகுவால் நியமிக்கப்படுவதற்கான இத்தனை அனுபவமும் திறமையுமுள்ள இவன் சிங்களத்துப் படைகளின் எந்த வரிசையில் ஒளிந்து கிடந்தான்?'' என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்ட மாதவி, அவனைச் சந்தித்து அவன் எப்படியிருப்பானென்பதைப் பார்க்கவேண்டுமென்ற பேரவாவுடன் கூடலுக்கு விரைந்தாள். அப்படி விரைந்தவள் வெறுங்கையுடன் வரவில்லை. சோழப் படைகள் பாண்டிய நாட்டைத் தாக்கினால் எந்த முறையில் அவற்றைச் சமாளிக்க வேண்டும், அவற்றைச் சமாளிப்பதில் ஜகத்விசயன் பங்கு என்ன, என்ற திட்டத்தை இலங்காபுரன் வாயிலாகக் கேட்டுக்கொண்டே வந்திருந்தாள். இத்தகைய முக்கியப் போர்த் திட்டத்தை எந்த ஒற்றனிடமும் ஓலையில் எழுதிக் கொடுத்தனுப்ப இஷ்டப்படாத இலங்காபுரன் அதை வாய்மூலமாகத் தனது மருமகளிடமே சொல்லியனுப்பினான்.

முதலில் மதுனரயைவிட்டுக் கிளம்பும்போது மாதவி வேண்டாவெறுப்பாகத்தான் கிளம்பினாள். அவள் மனத்தில் சொல்லவொண்ணாத வேதனை படர்ந்திருந்த காலம் அதுதானே. வலிய அபராஜிதன் கரத்தில் வீழ்ந்த போதும் மதுரையின் மணிமுடியையே அவனுக்கு அர்ப்பணித்த போதும் அவன் தன்னையோ ராஜ்ய லட்சுமியையோ லட்சியம் செய்யாமல் தன்னை முரட்டுத்தனமாகப் பிடித்து மாமன் கையில் தள்ளியதை நினைத்து நினைத்துச் சீறிக்கொண்டிருந்தாள் மாதவி. அபராஜிதன் தன்னைப் புறக்கணித்தது போதாதென்று தன் கைப்பொம்மையாயிருந்த வீரபாண்டியனும் கார்குழலி மீது வெறிகொண்டு அவளை வலிய மணம் செய்யக் கன்னிமாடக் கோட்டையை முற்றுகையிடச் சென்றதும், அவள் உள்ளப் புண்ணை வேல் கொண்டு குத்துவது போலிருந்தது. காதலனுக்காக அரசனைத் துறந்து கடைசியில் காதலனும் அரசனும் போய்த் தனித்து நின்றுவிட்ட

சிங்களத்துப் பைங்கிளி அடிபட்டுத் தப்பிச் சென்றுவிட்ட நாகம் போலிருந்தான். அடித்தவனை என்றாவது ஒருநாள் திரும்பக் கடித்து ஒழித்துவிடக் கரு வைக்கும் சர்ப்பம் போன்ற குணமுடைய சிங்களத்துப் பைங்கிளி தன் அத்தனை சீர்கேட்டுக்கும் அபராஜிதனே காரணமென்று தீர்மானித்து, அவனை தீர்த்துவிடக் கங்கணம் கட்டி நாடு கடத்தப்பட்ட அவன் இருப்பிடத்தை ஆராய முற்பட்டான். அபராஜிதன் மேலைமங்கலத்திலிருந்து திடீரென மறைந்துவிட்ட செய்தியையும் பிறகு கன்னிமாட முற்றுகையைப் பற்றி வினோத விவரங்களையும் ஒற்றர்கள் மூலமறிந்த மாதவி, கோட்டைக்குள்ளிருப்பவன் அபராஜிதன்தான் என்பதைச் சந்தேகமறப் புரிந்து கொண்டான். அந்தக் கோட்டைக்குள்ளேயே அவனை அழித்துவிடத் திட்டம் போட்ட மாதவி தன் மாமனிடம் அதைப்பற்றிப் பிரஸ்தாபித்து, ‘‘மாமா! அபராஜிதன் ஒழிந்தால்தான் நீங்கள் நிம்மதியாக உறங்கலாம். அவன் இப்பொழுது கன்னி மாடக் கோட்டைக்குள்ளிருக்கிறான். அதிகப் படைகளை அனுப்பி அந்தச் சதிகாரனை ஒழித்துக் கட்டுங்கள்’’ என்று யோசனை சொன்னாள்.

அந்த யோசனையைச் சற்றும் காதில் வாங்கிக்கொள்ளாத இலங்காபுரன் அவளைப் பார்த்து நகைத்து, ‘‘மாதவி காதல் மயக்கத்தில் கண்டபடி உளறாதே. அவன் உன்னைப் புறக்கணித்தானென்பதற்காக மதுரையிலிருக்கும் படைகளையெல்லாம் அவனைத் துரத்த அனுப்புவதா? பாண்டிய நாட்டு எல்லையில் சோழப் படைகள் குவிந்து கிடக்கின்றன. போர் எழுந்தால் அவற்றைச் சமாளிக்கப் படைகளை அனுப்புவேனா? வீரபாண்டியன் பெண் வேட்டைக்குத் துணைசெய்யவும், உன் காதலன் தலையை வெட்டிக் கொண்டுவரவும் அனுப்புவேனா? தவிர அபராஜிதன் அங்குதானிருப்பானென்பது என்ன நிச்சயம்? எல்லாம் உன் ஊகந்தானே?’’ என்றான்.

அவன் உறுதியை மாற்ற மாதவி எவ்வளவோ முயன்றாள். அபராஜிதன் கன்னிமாடக் கோட்டையில் தானிருக்கிறானென்பதற்குப் பெரிய பல்லவராயர், அண்ணன் பல்லவராயனுக்கு என்னென்ன காரணங்களைச் சொன்னாரோ அத்தனை காரணங்களையும் மாமனிடமும் சொல்லிப் பார்த்தாள். இலங்காபுரன் அவள் பேச்சுக்குச் செவிசாய்க்கவே இல்லை. ‘‘மாதவி! நீ சொல்கிறபடி அபராஜிதன் அங்கிருக்கலாம். ஆனால் அதற்காகப் படைகளைக் கண்டபடி அனுப்பமுடியாது. உன் கருத்தை அபராஜிதன் அழிவிலிருந்து சிங்களத்தின் நன்மைக்காகத் திருப்பிவிடு. உனக்கோ வேறு அலுவல் கொடுக்கிறேன்மா’’ என்று அவளைச்சமாதானப்படுத்தி, ஜகத்விசயனைச் சந்தித்து அவனிடம் சொல்லவேண்டிய போர்த் திட்டத்தை விளக்கிச் சொன்னான். அத்துடன், ‘‘இதோ பார் மாதவி! ஜகத்விசயனிடம் என் திட்டத்தை விளக்கமாகச் சொல்! அதற்கு அவன் இஷ்டப்படாவிட்டால் அவன் திட்டத்தை எனக்குத் தெரிவிக்கட்டும். அப்படித் தெரிவிப்பதாயிருந்தால் அந்தச் செய்தியையும் நீயே கொண்டு வா. ஓலையில் எழுதி அனுப்ப வேண்டாம். நாட்டில் சோழ ஒற்றர்கள் சஞ்சாரம் அதிகமாயிருக்கிறது’’ என்று சொன்னான்.

இவ்வாறு இலங்காபுரனால் உத்தரவிடப்பட்ட மாதவி வேண்டா வெறுப்பாக மதுரையிலிருந்து கிளம்பினாள். கிளம்பு முன்பாக ஜகத்விசயனைப்பற்றி இலங்காபுரனிடமிருந்து தகவலறிய அவள் முயன்றதும் வியர்த்தமாயிற்று. ஜகத்விசயனைப்பற்றி அவள் வினவியபோது, ‘‘ஜகத்விசயன் என்று தெற்கு சிங்களத்தில் ஒரு படைத் தலைவனிருந்தான். அங்கு எழுந்த இரண்டொரு புரட்சிகளை அவன் திறமையாக அடக்கியதாகச சிங்கள மன்னர் சில நாட்களுக்கு முன்பு எனக்கு எழுதியிருந்தார். ஆனால் இத்தகைய ஒரு படையெடுப்பு அவன் வசம் ஒப்புவிக்கப்படுமென்று நான் நினைக்கவில்லை. எனக்குத் தெரிந்த

ஜகத்விசயனுக்குப் பெரிய போர்களில் வீரர்களை நடத்திச் செல்லும் அனுபவம் கிடையாது. ஆனால் மாதவி, ஒன்று நினைவில் வைத்துக்கொள் திறமை மட்டும் இல்லாவிட்டால் சிங்களத்து மன்னரிடம் உயர் பதவி கிடைக்காது. எதற்கும் நீதான் பார்க்கப் போகிறாயே'' என்று சொல்லியனுப்பினான் இலங்காபுரன்.

இப்படி முன்பின் பிரபலமாக இல்லாமல் ஏதோ இரண்டு புரட்சிகளை அடக்கியதற்காகப் பெரும் பதவி அளிக்கப்பட்ட ஜகத்விசயன், பெரிய பல்லவராயர் போன்ற ராஜதந்திரியையும் அண்ணன் பல்லவராயன் போன்ற அனுபவமுதிர்ந்த படைத் தலைவனையும் எப்படி எதிர்க்கப் போகிறான் என்ற எண்ணத்துடன் மதுரையை விட்டுக் கிளம்பிய மாதவி, கூடலுக்கருகே வந்ததும் தன் அபிப்ராயத்தைப் பெரிதும் மாற்றிக் கொண்டாள். கூடலுக்கு முன்பேயிருந்த கிராமங்களிலேயே அவன் படைப் பகுதிகளைக் கண்ட மாதவி, வீரர்கள் நடந்து கொள்ளும் மாதிரியைப் பார்த்து ஜகத்விசயன் ஆணை அவன் வீரர்களிடத்தில் வேத வாக்கியமாயிருந்தது என்பதைப் புரிந்துகொண்டாள்.

ஜகத்விசயனை உடனே சந்திக்கவேண்டும் என்ற ஆவலுடன் வந்த மாதவிக்குக் கூடலில் ஓரளவு ஏமாற்றமே காத்திருந்தது.

அவள் நினைத்தபடி அவளை எதிர்கொண்டழைக்க ஜகத்விசயன் வரவில்லை. ஓர் சேனாதிபதியையும் சில வீரர்களையுமே அனுப்பியிருந்தான். வந்த உபசேனாதிபதியும் அதிகமாக எதுவும் பேசாமல், தாங்கள் தங்குவதற்குக் கடற்கரையோரமுள்ள பெரிய மாளிகை ஒழித்து விடப்பட்டிருக்கிறது, எல்லா சௌகரியங்களும் செய்யப்பட்டிருக்கின்றன. தங்கள் பணிப்பெண்கள் தங்குவதற்கு...'' என்று ஏதோ சொல்லப்போன அவனைத் தடுத்து நிறுத்திய சிங்களத்துப் பைங்கிளி, ''தனி விடுதி அவசியமில்லை. ஒரு பணிப் பெண்தான் வந்திருக்கிறாள்.

இன்னும்மூவரை இந்த ஊரிலிருந்தே அமர்த்துங்கள்'' என்று உத்தரவிட்டு ரதத்தைக் கடற்கரை மாளிகைக்காக நடத்தும்படி உத்தரவிட்டாள். மாளிகைவாசலிலும் ஜகத்விசயன் காத்திருக்கவில்லை.

இப்பொழுது சூரியாஸ்தமன சமயம். பொழுது மெல்ல மெல்ல மறைந்துகொண்டிருந்தது. அந்த அந்தி வேளையிலே கோபத்தால் நிலையிழந்த உள்ளத்துடன் திடீரென ரதத்திலிருந்து குதித்துப் பணிப்பெண்ணுடன் சரசரவென்று மாளிகைக்குள் நுழைந்து மாடிப் படிகளில் ஏறிச் சென்ற மாதவி மாடியிலிருந்த விசாலமான கூடத்தில் கடற்கரைக்காகத் திறந்துவிடப்பட்டிருந்த இரு பெரும் சாளரங்களில் ஒன்றையடுத்துப் போடப்பட்டிருந்த மஞ்சத்தில் தடாலென உட்கார்ந்துகொண்டு சிந்தனையிலாழ்ந்தாள். ''ஸ்நானத்துக்கு ஏற்பாடு செய்யட்டுமா?'' என்று கேட்ட பணிப்பெண்ணுக்குப் பதில் சொல்லாமல் 'செய்' என்று தலையை மட்டுமே அசைத்தாள்.

நீராடல் முடிந்து இரவு எழுந்து நிலவும் வீசத் தொடங்கிய போதுகூட மாதவியின் மனக் கொதிப்பு அடங்கவில்லை. ஸ்நானத்திற்குப் பிறகு தயாரிக்கப்பட்டிருந்த எந்த உணவையும் அருந்தாமல் பாலை மட்டும் சிறிது பருகிவிட்டுப் பழையபடி சாளரத்துக்குப் பக்கத்தேயிருந்த மஞ்சத்தில் ஒருக்கணித்துப் படுத்துக் கடலின் ஜலப் பரப்பையும் அதை ஒட்டியிருந்த மணற்பரப்பையும் பார்த்துக் கொண்டிருந்த சிங்களத்துப் பைங்கிளியின் சிங்காரம் அன்று பிரமிக்கத்தக்கவகையில் அமைந்திருந்தது. பச்சைப்புடைவையும்சிவப்புரவிக்கையும் வெள்ளை முத்தாரங்களும் அணிந்திருந்தாள் மாதவி. அவள் கருங்குழல் நன்றாக எடுத்துக் கட்டப்பட்டிருந்தாலும் உதிரியாகத் தொங்கிய சிலமயிர்களோடு தலையில் சூட்டியிருந்த முல்லைச் சரம் நழுவி விழுந்து விளையாடிக் கொண்டிருந்தது. கடற்காற்று வீசிக்கொண்டிருந்ததால் அடிக்கடி அலைந்து அவள் மயிர்களுக்கு இடையிடையே மறைந்த முல்லைச் சர மலர்கள் இருளில் பதுங்கிப்

பதுங்கித் தலையை நீட்டும் திருடர்கள்போல் விழித்துக் கொண்டிருந்தன. ஒருக்கணித்துப் படுத்திருந்ததால் சற்றுத் தள்ளி வளைந்து கிடந்த இடைப் பிரதேசம் சாளரத்தின் மூலமாக வந்த நிலவொளியில் வெளேரெனப் பிரகாசித்தது. ஏற்கனவே செழுமையான அவள் உடல், அந்த நிலவொளியில் பன்மடங்கு அதிகமான செழுமையைப் பெற்றுத் 'தகதக' வென ஜொலித்துக் கொண்டிருந்தது. அத்தனை அனுபவத்திலும் கட்டுவிடாமல் உறுதியாயிருந்த அவள் கட்டழகை அனுபவிக்கும் நோக்கமுடையவன்போல் காற்றுத்தேவன் ஏற்கனவே நெகிழ்ந்து கிடந்த அவள் சேலையை இன்னும் சற்று அதிகமாகவே நெகிழ்த்தினான். சாதாரணமாகவே ஆடை அலைவதைக் கவனிக்காமல் அசிரத்தையுடன் படுக்கும் சுபாவமுள்ள மாதவி, அன்று மனோநிலையிருந்த காரணமாக மிகுந்த அசிரத்தையுடன் படுத்திருந்தாள். அப்படி அசிரத்தையாயிருந்தபடியால் தான் வெகுநேரம் சிந்தனையில் ஆழ்ந்துவிட்டதையோ, அந்தச் சிந்தனையின் காரணமாக அந்த அறையில் நுழைந்து வைத்த கண் வாங்காமல் தன்னையே ஜகத்விசயன் பார்த்துக்கொண்டிருந்ததையோ அவள் உணரவே இல்லை

"அம்மா! அம்மா!" என்று பணிப்பெண் இருமுறை கூப்பிட்ட பிறகுதான் மாதவி திரும்பினாள். அவள் திரும்பியதும் கிட்டே ஓடிவந்த பணிப்பெண், "ஜகத்விசயத் தண்ட நாயகர் தங்களைக் காண வந்திருக்கிறார்!" என்று பரபரப்புடன் அறிவித்தாள்.

மாதவி முழுவதும் திரும்பாமல் தலையை மட்டும் திருப்பி ஜகத்விசயத் தண்டநாயகனைப் பார்த்தாள். அவனைப் பார்த்ததும் அவள் கண்கள் ஒருமுறை ஆச்சரியத்தால் மலர்ந்தன. மறுமுறை கீழே ஒருபக்கமாகச் சாய்ந்தன. ஜகத்விசயன் அவள் அழகைப் பிரமை தட்டிய கண்களுடன் பருகிக் கொண்டிருந்தான். சிவப்பு ரவிக்கையாலும், சற்று ஒதுங்கி வளைய வந்து சூழ்ந்துகொண்டிருந்த பச்சைப்பசேலெனக் காட்சியளிக்கும் தடாகத்தின் இடையே எழுந்த

செந்தாமரை மொட்டைப்போல் விளங்கிய அவள் வசீகரக் கவர்ச்சிப் பிரதேசத்தையும் இதர இந்திர ஜாலங்களையும் பார்த்துப் பிரமித்துச் சித்தத்தைப் பறிகொடுத்துச் சித்திரம்போல் நின்ற ஜகத்விசயனை இரண்டாம் முறை ஏறெடுத்துப் பார்த்த சிங்களத்துப் பைங்கிளியின் கொவ்வைக்கனி இதழ்கள் மந்தகாசத்தால மலர்ந்தன. ஜகத்விசயன் கிட்டத்தட்ட அபராஜிதன் வயதோடு அவன் கம்பீரத்தையும் பெற்றிருந்ததையும் கண்ட மாதவியின் அந்தரங்கத்தில் ஆயிரம் திட்டங்கள் திடீரென எழுந்தன. அவற்றின் விளைவாக அவள் கண் வலையும் ஜகத்விசயனை நோக்கி நன்றாக விரிந்தது.

56. சிலந்திக் கூடு

உள்ளத்தையே ஊடுருவிச் செல்லும் சக்தி வாய்ந்த மாதவியின் கள்ளப் பார்வைக்கே கருத்தைப் பறிகொடுத்துவிட்ட ஜகத்விசயத் தண்டநாயகன், அவள் மஞ்சத்தில் எழுந்து உட்கார்ந்ததாலும் புடைவையைச் சரிசெய்து கொண்டதாலும் ஏற்பட்ட வசீகர அம்சங்களின் அசைவினால் பெரிதும் நிலை குலைந்தவனானான். அத்துடன் அவள் மஞ்சத்தை விட்டு லேசாக இறங்கித் தன்னை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தபோது அவள் உடலிலிருந்த இணையற்ற ஒய்யாரத்தையும், ஒவ்வொரு அடிக்கும் வளைந்த இடைப்பிரதேசத்தின் எழிலையும் இடை வளைந்து கொடுத்ததால் மேலும் கீழுமுள்ள அங்கலாவண்யங்கள் லேசாக ஒதுங்கி ஒதுங்கி அவள் கவர்ச்சியைப் பன்மடங்கு அதிகமாக்குவதையும் கண்ட ஜகத்விசயத்தண்டநாயகன் இலங்காபுரன் மருமகள் பேரழகி என்று பெயரெடுத்ததில் எந்தவித ஆச்சரியமும் இல்லையென்றே எண்ணினான். ஜகத்விசயன் கண்கள் தன் உடலின் பலபாகங்களிலும் தாவித்தாவிச் செல்வதைக்கண்ட மாதவி, அவன் மனப் போக்கை நொடிப்பொழுதில் புரிந்து கொண்டவளாய், 'இந்த வாலிபத் தண்டநாயகனை அடிமை கொள்வதோ இவனைக் கைக்கருவியாக்கிக்

கொள்வதோ ஒரு பிரமாதமான காரியமல்ல' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான். அப்படி உள்ளே எழுந்த அந்த நம்பிக்கையின் காரணமாக, அவள் அழகிய காமத்தைச் சொட்டும் கனியிதழ்கள் நன்றாக விரிந்து புன்முறுவல் செய்ததன்றி ஜகத்விசயனை நோக்கி, "உங்களை முன்பே எதிர்பார்த்தேன்" என்று அரைகுறையாக ஏதோ ஓரிரு சொற்களையும் உதிர்த்தன.

இரண்டொரு வார்த்தைகளைத்தான் அவள் பேசினாள். அதனாலென்ன? மந்திரங்களெல்லாம் சொற்கூட்டங்களாகவா இருக்கின்றன? நாலைந்து வார்த்தைகளில் எத்தனை பெரிய சர்ப்பங்களையெல்லாம் பிடாரன் கட்டி விடுகிறான்? அப்படித்தானிருந்தன மாதவியின் வார்த்தைகளும். மகுடியிலிருந்து இனிமையாக உதிர்க்கப்படும் புன்னாகவராளியின் ஸ்வரங்களைப் போல மாதவியின் இதழ்களிலிருந்து உதிர்ந்த அந்தச் சொற்கள் ஏற்கனவே அவள் அழகில் மயங்கிக்கிடந்த ஜகத்விசயனுக்கு இன்னும் அதிக மயக்கத்தைக் கொடுக்கவே அவன் பதில் சொல்லத் திணறினான். அவன் திணறலைக் கண்ட மாதவி களுக்கென்று மெல்ல நகைத்து, "ஏது, இக்கனத்துத் தண்டநாயகர் மௌனியாகி விட்டார் போலிருக்கிறது!" என்று கேலியாகவும் பேசினாள்.

அதற்குமேல் பேசாமலிருப்பது சரியல்லவென்று நினைத்த ஜகத்விசயனும் மெள்ள தன்னைச் சமாளித்துக் கொண்டு, "மௌன விரதம் ஏதுமில்லை. ஏமாற்றத்தால் ஏற்பட்ட பிரமை" என்றான், நின்ற இடத்திலிருந்து அசையாமலும், அவள் முகத்தில் பதியவிட்ட கண்களை அகற்றாமலும்.

"ஏமாற்றமா? என்ன ஏமாற்றம்!" என்று வினவினாள் இக்கனத்துப் பைங்கிளி.

"நான் இவ்விடத்தில் இறங்கியதும் இலங்காபுரத் தண்டநாயகரிடமிருந்து தூதுவரை எதிர்பார்த்தேன்" என்றான் ஜகத்விசயன்.

"தூதர் யாரும் உடனே வந்து சேரவில்லையோ?"

"அதற்காகச் சொல்லவில்லை... நீங்கள் வந்ததைவிடத் துரிதமாக யாரும் வந்திருக்க முடியாது."

"ஆனால் எதில் ஏற்பட்டது ஏமாற்றம்."

"தூதுவர் யாரென்பதில்தான். தூதுவரை அனுப்புவார் என்பது தெரியும். அந்தத் தூதுவர்..." என்று இழுத்த ஜகத்விசயனை நோக்கி, "பெண்ணாயிருப்பாள் என்று எதிர்பார்க்கவில்லை" என்றுசொல்லி வாசகத்தை முடித்தாள் மாதவி.

அவள் அவசரத்தைப் பார்த்த ஜகத்விசயன் முதன் முதலாக முறுவல் செய்து, "இல்லை இல்லை. நீங்கள் நினைப்பது தவறு. வரப்போகும் தூதர் பெண் என்று எனக்கு நன்றாகத் தெரியும். இல்லாவிட்டால் நான் தங்க ஒப்புக்கொள்ளாத இந்தக் கடற்கரை மாளிகையைத் தூதருக்காக விட்டிருப்பேனா? வரப்போகும் தூதுவர் யார் என்று தெரியும். ஆனால்..." சற்று நிறுத்தினான் ஜகத்விசயன்.

மாதவி அவனை ஏறெடுத்துப் பார்த்தாள். "ஏன் நிறுத்தி விட்டீர்கள்? சொல்ல வந்ததைச் சொல்லி விடுங்கள். ஆனால்..." என்று கேட்டுத் தன் புருவங்களையும் உயர்த்தினாள்.

"சொன்னால் கோபித்துக் கொள்ள மாட்டீர்களே?"

"இல்லை, சொல்லுங்கள்."

"ஆனால் தூதர் இத்தனைபேரழகு வாய்ந்தவராயிருப்பாரென்று மாத்திரம் நான் எதிர்பார்க்கவில்லை" என்று மெள்ள உள்ளத்திலுள்ளதை வெளியே கொட்டிய ஜகத்விசயன் தன் புகழ்ச்சியை அவள் வரவேற்கிறாளா அல்லது வெறுக்கிறாளா என்பதை அறிய அவள் முகத்தை ஏறெடுத்துப் பார்த்தான்.

மாதவியின் முகத்தில் மகிழ்ச்சியே தாண்டவமாடியது. எந்த தானாக வலியவந்து வலையில் விழும் புறாவை

வேடனாவது வேண்டாமென்று ஒதுக்கித் தள்ளுவானா? ஆகவே, அவன் வார்த்தைகளைக்கேட்ட மாதவி இன்னும் ஓர் அடி எடுத்து அவனை நோக்கிவைத்து, "ஜகத்விசயத் தண்டநாயகர் போரில்தான் வல்லவர் என்று கேள்விப் பட்டேன். புகழ்ச்சியிலும் வல்லவர் என்று இப்பொழுது தான் தெரிகிறது" என்றாள்.

அவள் பேசப் பேச தைரியம் கூடேறப்பெற்ற ஜகத் விசயத் தண்டநாயகனும் "சில வேளைகளில் உண்மை புகழ்ச்சியாகத் தோன்றும். அதற்கு யார் என்ன செய்ய முடியும்? நிலவு அழகாக இருக்கிறதென்று சொன்னால் சந்திரனை நாம் புகழ்ந்துவிட்டதாகவா அர்த்தம்?" என்று மேலும் தன் அபிப்பிராயத்தை வெளியிட்டான்.

மாதவியின் மனம் திருப்தியால் பூரணமாயிற்று. ஜகத்விசயன் என்ற கருவி தன் கைக்குள் கிட்டிவிட்ட தாகவே நினைத்தாள் ஆனால் அபராஜிதன்மீது தன் பழியைத் தீர்த்துக் கொள்ள இந்தக் கருவியை எப்படி உபயோகித்துக் கொள்வது என்பது மட்டும் அவளுக்குச் சரியாக விளங்கவில்லை. அந்தச் சந்தர்ப்பம் வரும்வரை காத்திருப்பதோடு ஜகத்விசயன்மீது தனக்குள்ள பிடியை விடாதிருக்கவும் தீர்மானித்தாள். தமிழ்நாட்டில் துரித மாக எழுந்து கவிந்துவரும் யுத்த மேகத்தின் எந்தப் பகுதியில் அபராஜிதன் மறைந்து கிடப்பான் என்பதைக் கண்டுபிடித்த பிறகே சிங்களத்துப் படைகளின் யுத்த முறையை வகுக்கவேண்டுமென்ற முடிவுக்கு வந்தாள். ஆகவே ஜகத்விசயத் தண்டநாயகனைக் கூடியவரை கூடலிலேயே நிறுத்தி, கன்னிமாடத்து ஒற்றர்களை ஏவி அங்கு நடக்கும் விவகாரங்களைப் பற்றித் தகவலறிய வேண்டுமென்றும் திட்டமிட்டாள். மாதவி சம்பந்தப் பட்டவரை அவளுக்குச் சிங்களம் ஜெயித்தாலும் சரி, சோழர்கள் ஜெயித்தாலும் சரி, எல்லாம் ஒன்றுதான். ஜெயாபஜெயம் யார் பக்கமாவதாயிருந்தாலும் அபராஜிதனைத் தீர்த்துக்கட்டுவதை மட்டும் கைவிடக்

கூடாதென்ற திடசித்தத்துடனிருந்த மாதவி நீண்ட நேரம் யோசித்த வண்ணமிருந்தாள்.

அவள் மனம் எங்கெங்கோ அலைவதை, கனவு காண் பதுபோன்ற அவள் கண்களிலிருந்து உணர்ந்துகொண்ட ஜகத்விசயன், "தாங்கள் ஏதோ தீர்க்காலோசனையிலிருக் கிறீர்கள். பிரயாணக் களைப்பும் உங்களுக்கு அதிகமா யிருக்கும். படுத்துக் கொள்ளுங்கள். மீண்டும் நாளைக் காலையில் உங்களைச் சந்திக்கிறேன்" என்று சொல்லி விட்டுப் புறப்படத் தொடங்கினான்.

"ஒன்றுமில்லை மாமா தங்களிடம் சொல்லச்சொன்ன விஷயங்களைப் பற்றித் தான் ஆலோசித்தேன். ஏன் நிற்கிறீர்கள்? உட்காருங்கள்" என்று அவனைத் தடுத்து உட்கார வைத்த மாதவி, "யாரங்கே?" என்று கூப்பிட் டாள். உள்ளே அவசரமாக வந்த பணிப்பெண்ணை நோக்கி "ஒரு குவளையில் பால் கொண்டு வா" என்று உத்தரவிட்டாள். பணிப்பெண் பால் கொண்டுவந்ததும் "கதவுக்கு வெளியில் இரு. யார் வந்தாலும் பார்க்க முடியாதென்று சொல்லியனுப்பு" என்று கூறிய மாதவி, கதவைச் சாத்திக்கொண்டு ஜகத்விசயனுக்கு வெகு அருகில் வந்து நின்று "இதை அருந்துங்கள் பிறகு பேசுவோம்" என்றாள். மஞ்சத்தில் உட்கார்ந்திருந்த ஜகத்விசயன் கனவுலகத்தில் பறந்துகொண்டிருந்தான். மாதவி வெகு அருகில் வந்து விட அவள் அங்கங்களின் எடுப்பால் கள்ளைக் குடிக்கும் தன்மை அடைந்துவிட்ட ஜகத்விசயன் மெள்ளத் திக்குமுக்காடி, பாலையும் பருகினான். அவன் கையிலிருந்த குவளையை வாங்கி அறையின் ஒரு மூலையில் வைத்துவிட்டுத் திரும்பிச் சாளரத்தின் ஓரத்திலிருந்த தன் மஞ்சத்தில் உட்கார்ந்துகொண்டு, "பிரபு! தமிழ்நாட்டின் நிலையைப்பற்றி நீங்கள் ஏற்கனவே ஓரளவு புரிந்து கொண்டிருப்பீர்கள்..." என்று துவங்கினாள் மாதவி.

"ஆம், ஓரளவு தெரியும்" என்றான் ஜகத்விசயன்.

"சிங்களம் தமிழ்நாட்டு அரசியலில் தானாகத் தலை யிடவில்லை. பாண்டிய மன்னர்கள் தாயாதிச் சண்டை

வாள் பிணைப்பட்டு சிங்காதனத்தை அமைத்தார்கள். சிங்கள வந்தது'' என்றாள் மாதவி.

''தமிழ்நாட்டின் சரித்திரமே அப்படித்தானே! சிங்கள விஷயங்களில் பரம்பரை பகைகொண்டு மூன்றாம் பேர்வழிக்கு இடம் கொடுப்பார்கள்!'' என்று சொல்லி விட்டுப் புன்முறுவல் செய்தான் ஜகத்விசயன்.

ஆமென்பதற்கு அறிகுறியாக தலையை மட்டும் அசைத்த சிங்களத்துப் பைங்கிளி மேலும் சொன்னாள்; 'பராக்கிரம பாண்டியன் சிங்களத்தின் உதவியை நாடவே மாமா படைகளுடன் வந்தார். அவர் வருமுன்பே குலசேகரன் பராக்கிரம பாகுவைக் கொன்றுவிட்டான். குலசேகரனை மாமா விரட்டிவிட்டுப் பராக்கிரம பாண்டியன் மகன் வீரபாண்டியனை மதுரை அரியணையில் ஏற்றினார். இப்பொழுது குலசேகர பாண்டியனுக்குச் சோழர்கள் உதவி இருக்கிறது. சோழர்கள் பெரும் படை பாண்டிய நாட்டு எல்லையில் தயாராயிருக்கிறது.''

''இதுவரை எனக்குத் தெரியும்'' என்று ஜகத்விசயன் சொன்னான்.

''சோழநாடு எந்த நிமிஷத்திலும் பாண்டிய நாட்டின் மீது பாயலாம்!'' என்றாள் மாதவி.

''அது தெரியும்''.

''சோழப் படைகள் பாண்டிய எல்லையில் யுத்த கோலத்துடன் பத்துப் பதினைந்து நாட்களாகவே நிற்கின்றன.''

''ஆமாம்''.

''ஆனால், படையெடுப்பை ஏன் தாமதிக்கிறார்கள்? நீங்கள் இங்கு பெரும்படையுடன் இறங்கிய பிறகும் படையெடுப்பு ஏன் தாமதிக்கப்படுகிறது?''

''நமது படைபலம் அதிகமென்ற காரணமாயிருக்குமா?''

இதைக் கேட்ட மாதவி ஜகத்விசயனை நோக்கிப் புன்முறுவல் செய்தாள். ''இங்குதான் தமிழ்நாட்டை

நீங்கள் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும்'' என்றும் சொன்னாள்.

''என்ன புரிந்து கொள்ள வேண்டும்?''

''படைபலத்தைக் கண்டு பயப்படும் சுபாவம் பல்லவராயர்களுக்குக் கிடையாது. இரண்டு பல்லவராயர்களும் இப்பொழுது படைகளோடு பாசறையிலேயே தங்கியிருக்கிறார்கள்''

''அப்படியானால் எந்த வினாடியிலும் அவர்கள் பாண்டிய நாட்டைத் தாக்கலாம்''

''ஆமாம். ஆனால், அந்த வினாடி எப்பொழுது வரும்? பத்துப் பதினைந்து நாட்களாக வராத அந்த வினாடி என்று தான் வரும்?'' என்று சீற்றத்துடன் வினவிய மாதவி மஞ்சத்திலிருந்து கீழே குதித்து ஜகத்விசயனை நெருங்கி, ''தண்டநாயகரே! உங்களுக்குப் புரியவில்லையா? பாண்டிய நாட்டில் ஏதோ ஒரு நிகழ்ச்சியை பெரும்பாலும் புரட்சியை எதிர்பார்க்கிறார்கள் பல்லவராயர்கள்'' என்றாள்.

இதைக் கேட்ட ஜகத்விசயன் முகத்தில் சிந்தனை தீவிரமாகப் படர்ந்தது. ஆசனத்தை விட்டெழுந்த தண்டநாயகன், ''பாண்டிய நாட்டில் புரட்சி ஏற்படுமென்று நம்புகிறீர்களா?'' என்று மாதவியைப் பார்த்துக் கேட்டான்.

''நாம் இங்கு ஆளும் அழகுக்கு என்ன ஏற்படுமென்று நினைக்கிறீர்கள்.'' என்று பதில் கேள்வி போட்டாள் மாதவி.

''ஏன் நாம் என்ன செய்துவிட்டோம்?''

''எதுவும் செய்யவில்லை. சில கோயில்களை இடித்துத் தள்ளினோம். பயிர் பச்சைகளைக் கொளுத்தினோம். இலங்கை புத்த விகாரங்களைக் கட்ட ஆள் தேவையாயிருந்ததால் தமிழர்களை அடிமையாக்கி அனுப்பினோம். அவ்வளவு உபகாரம் செய்திருக்கும் போது மக்கள் புரட்சி செய்யமாட்டார்கள்?''

ஜகத்விசயன் மீண்டும் யோசனையில் ஆழ்ந்தான். "நாம் செய்ய வேண்டியதுதான் என்ன? உங்கள் மாமாவின் உத்தரவுதான் என்ன?" என்று கேட்டான்.

"அநேகமாக மதுரைப் பக்கம்தான் சோழப்படைகள் பாண்டிய நாட்டில் வெட்டி உட்புகுமென்பது மாமாவின் அபிப்பிராயம். அப்படி உட்புகுந்தால் அவர் தமது படையுடன் அவர்களை மேற்குப் பகுதியிலிருந்து தாக்குவார். நீங்கள் உங்கள் கடற்படையுடன் கடலோரமாகச் சென்று கிழக்குப் பக்கத்திலிருந்து தாக்கவேண்டியது. உங்கள் இரு படைகளுக்குமிடையில் சோழப் படைகள் நொறுங்கிவிடும். இது மாமாவின் திட்டம்."

"சோழப் படை பலம் எவ்வளவு?"

"குதிரைப் படை, யானைப் படை, காலாட் படை எல்லாமாகச் சேர்ந்து முப்பதினாயிரம் என்று ஒற்றர் மூலம் அறிந்தோம்."

"படைபலம் இரு தரப்பிலும் சரிசமானம். ஆகையினால் தங்கள் மாமாவின் திட்டம் சரிதான். படைபலம் சமானமாயிருந்தாலும் நமது படையில் பிரிந்திருக்கும் நிலை நமக்கு அனுகூலமாயிருக்கிறது" என்றான் ஜகத்விசயன்.

"படைபலம் சரிசமானந்தான். ஆனால் மக்கள் பலம் எதிரிகள் பக்கம் சாய்கிறது" என்றாள் மாதவி.

இந்த விசயத்தில் மாதவியின் அபிப்பிராயத்துக்கும் மாமாவின் அபிப்பிராயத்துக்கும் வித்தியாசமிருப்பதையும் இலங்காபுரன் ஆணைப்படி தன்னை நடக்கவிட மாதவி விரும்பவில்லை என்பதையும் சந்தேகமறப் புரிந்துகொண்ட ஜகத்விசயன், "மாமாவின் திட்டம் உங்களுக்குச் சம்மதமில்லை போல் தெரிகிறது" என்றான்.

"என் சம்மதத்தைப் பற்றிக் கவலைப்படாதீர்கள். தளபதி என்ற முறையில் உங்கள் அபிப்பிராயமென்ன?" என்று கேட்டான் மாதவி.

"நீங்கள் சொல்வதிலும் நியாயமிருக்கிறது" என்று ஒப்புக் கொண்டான் ஜகத்விசயன்.

"நான் சொல்வதற்காக நீங்கள் படைகளை நடத்திச் செல்வதை நிறுத்தவேண்டாம். மாமாவின் உத்தரவைச் சொல்லிவிட்டேன். படைகளைக் கடற்கரையோரமாக நடத்திச் செல்வதானால் நான் உடனே உங்களுடன் புறப்படத் தயார்" என்றாள்.

ஜகத்விசயன் மேற்கொண்டு அதுபற்றி ஏதும் பேசாமலே தீவிர யோசனையுடன் அவள் அறையினின்று சென்றான். அடுத்தபடி என்ன செய்வதென்று ஜகத்விசயனுக்குப் புரியாதபடி அவன் மனத்தைக் குழப்பிவிட்ட மாதவி அவன் என்ன செய்வானென்பதை அறிந்தே இருந்தாள். இலங்காபுரன் உத்தரவை அறவே புறக்கணித்த ஜகத்விசயன், மாதவியின் உத்தரவு பெற்றுக் கொண்டு அடுத்த பத்து பதினைந்து நாட்கள் கூடலைவிட்டு நகரவேயில்லை. இப்படித் தன் மாமன் உத்தரவைக் காற்றில் பறக்கவிட்ட அந்த வாலிபத் தண்ட நாயகனை அடுத்த சில தினங்களில் தன் வலைக்குள் முழுவதும் இழுத்துக்கொண்டாள் மாதவி.

அவள் உத்தரவுப்படி கன்னிமாடப் பிராந்தியத்துக்கும் மேலைமங்கலத்துக்கும் ஒற்றர்களை அனுப்பினான் ஜகத்விசயன். அவள் மனம் பறந்த இடங்களுக்கெல்லாம் ஒற்றர்கள் பறந்தார்கள். அவர்கள் கொண்டுவந்த செய்திகளும் மாதவியின் திட்டத்துக்குப் பெரிதும் துணைசெய்தன. கன்னிமாடத்திலிருந்து வீரபாண்டியன் தோற்று ஓடிய சேதியோடு அண்ணன் பல்லவராயன் கன்னிமாடத்துக்கு வந்துபோன செய்தியும் அவளுக்குக் கிடைத்தது. அதையடுத்து மழவராயன் காலமாகி விட்ட செய்தியும் கார்குழலி சிற்றரசியாகப் பட்டம் சூட்டப்பட்ட விவரங்களையும் கேள்விப்பட்டாள். ஆனால் இந்தச் செய்திகளிலே அவள் சிரத்தை காட்டவேயில்லை. ஒற்றர்கள் செய்திகளைக் கேட்டுக் கேட்டுச் சலனமற்றே இருந்து வந்தாள். அந்த நிச்சலனத்தை உடைத்து அவளையும் அதிரவைக்கும்

[illegible]

"மாதவி!" என்றான் ஜகத்விஜயன்.

பதிலுக்கு அவன் சிரித்தான்.

"செய்தியைக் கேட்டாயா?" என்றான் அவன்.

"இதைத்தான் நான் இத்தனை நாள் எதிர்பார்த்தேன்" என்றான் அவன்.

"இனி என்ன செய்வது?"

[illegible] யோசனை சொல்லத்தான் நான் [illegible]!" என்றான் அவன்.

"என்ன யோசனை?" என்று கேட்டான் அவன்.

[illegible] குனியுங்கள் சொல்கிறேன்!" என்றாள் [illegible] மெதுவாக.

அவன் குனிந்தான்—யோசனையைக் கேட்க அல்ல.

37. போருக்கு முன் புன்னகை

[illegible]

[illegible]

உடலில் ஊடுருவிச் சென்ற காந்த சக்தியால் ஏற்கனவே இருந்த பிரமை ஆயிரம் மடங்கு அதிகமாகப் பெற்ற ஜகத்விசயன் என்ன செய்வது என்று அறியாமல் ஏக்கம் கலந்த பெருமூச்சொன்றை விட்டான். அதுவரை அவள் உடலை லேசாக வளைத்துக்கொண்டு செயலற்றுக் கிடந்தன அவனுடைய இரண்டு கைகளும்.

மாதவியின் மனம் எங்கோ பறந்து கொண்டிருந்தது. அவள் கண்கள் ஏதேதோ இன்பக் கனாக்களைக் கண்டு கொண்டிருந்தன. ஜகத்விசயத் தண்டநாயகனைக் குனியும்படி அழைத்த சமயத்தில் இருந்த சாகசமெல்லாம் அவன் கைகள் அவள்மீது படத்தொடங்கிய வினாடி நேரத்தில் மறைந்து போயின. கூடலின் மணற் பரப்பிலே அவள் உடல் கிடந்ததேயொழிய அவள் உள்ளம் மதுரையிலுள்ள ஒருமாளிகையின் பஞ்சணையிலே பதிந்து கிடந்தது. அதே மாதிரி தனக்கு நேர்ந்த இன்னொரு அனுபவத்தை நினைத்துக் கொண்டிருந்தாள் மாதவி. "அன்றொரு ஆடவன் பஞ்சணையில் படுத்துக் கிடந்தான். அவனிடம் நானே வலியச் சென்றேன். முதலில் நான் கட்டிலின் ஒட்டில்தான் உட்கார்ந்திருந்தேன். பிறகு..." என்று நினைத்துப் பார்த்த பைங்கிளி சோகங் கலந்த பெருமூச்சொன்றை விட்டாள். 'மங்கலான வெளிச்சம் சூழ்ந்த மாளிகையில் அந்த அறையிலே என்னென்ன கனவுகளைக் கண்டேன்! அவன் கைகள் என்னை ஸ்பரிசித்தன. அந்த ஸ்பரிசத்தில்தான் எத்தனை இன்பம்! மன்னன் பலமுறை என்னை வலியக் கட்டிய காலத்தில் காணாத அந்தப் பேரின்பம் கண்மூடிக் கண் திறக்கும் நேரத்தில் கை விட்டுப் போய்விட்ட அந்தப் புருஷனின் ஸ்பரிசத்தில் மட்டும் ஏன் ஏற்பட்டது?' என்று நினைத்தாள் மாதவி. 'எந்தப் பெண்ணுக்கும் வாழ்க்கையில் புகலிடம் ஒன்று உண்டு அது தவறும் போது அமைதி கிடைப்பதில்லை. கிடைக்கும்போது அமைதியைப் பெறுகிறோம். கிடைக்கும் நேரம் கண நேரமாயிருந்தாலும் அந்த அமைதி மறக்க முடியாதது'

என்று தன் மனத்திற்குள்ளேயே சொல்லிக் கொண்டாள் மாதவி. அவள் கண்களில் கூடலின் மணற்பரப்புக் காணப்படவில்லை. மாளிகையின் மங்கலான அறையே தெரிந்தது. அலை ஓசை கேட்கவில்லை. அபராஜிதனைப் பற்றி எழுந்த எண்ண அலைகளின் ஓசையே பேரிரைச்சலாகக் கேட்டது. தன்னை மடியில் கிடத்தியிருப்பது ஜகத்விசயன் என்பதைக்கூட மறந்தாள். அவன் வடிவிலும் அபராஜிதனே தெரிந்தான். அந்தக் கனவின் மயக்கத்திலே ஜகத்விசயன் இஷ்டத்துக்கெல்லாம் இசைந்தாள் சிங்களத்துப் பைங்கிளி.

அந்த மௌன நாடகத்தையே ஜகத்விசயன் தொடர்ந்து நடத்தியிருந்தால் அவனுக்கு இந்திரபோகம் கிடைத்திருக்கும். ஆனால், தண்டநாயகனுக்குச் செயலை விடப் பேச்சு முக்கியமாகப்படவே அவளை இறுக அணைத்தவண்ணம் அவள் காதுக்கருகில் சென்று, "மாதவி!" என்று அழைத்தான். அப்பா! அந்தக் குரலில் தான் எத்தனை கடினம்! இன்ப நாதத்தை எழுப்பும் அபராஜிதன் குரலெங்கே, காதுக்கு நாராசம் போன்ற இந்தக் கட்டைக் குரலெங்கே?

இப்படி நினைத்து மெள்ள எழுந்திருக்க முயன்ற மாதவியைத் தன் இரும்புப் பிடியில் நிறுத்திய ஜகத்விசயன், "மாதவி! என்ன யோசிக்கிறாய்? ஏன் நீ பேசலேயில்லை" என்றான்.

ஜகத்விசயனின் இந்தக் கேள்விகளால் கனவுலகத்தை விட்டுப் பூரணமாக நனவுலகத்துக்கு வந்துவிட்ட சிங்களத்துப் பைங்கிளி மீண்டும் தன்னுடைய சாகசப் போர்வையைப் போர்த்துக் கொண்டு அந்த வாலிபத் தண்டநாயகனை நோக்கி லேசாக நகைத்தாள்.

அவள் சிரிப்பின் காரணத்தை அறியாத ஜகத்விசயன், "ஏன் சிரிக்கிறாய் மாதவி?" என்று கேட்டான்.

"நீங்கள் அடியோடு மௌனியாகிவிட்டீர்களே என்று சிரித்தேன்" என்றாள் அவள்.

ஜகத்விசயத் தண்டநாயகனின் கண்கள் ஆச்சரியத்தால் சற்றே மலர்ந்தன. "என்ன, நான் மௌனியாகிவிட்டேனா!" என்றான்.

"ஆமாம். இல்லாவிட்டால் நானா?"

"நீதான். சந்தேகமென்ன? ஏதோ செய்தி சொல்வதாகக் குனியச் சொன்னாடல்லவா?"

"ஆமாம் சொன்னேன்."

"செய்தியைச் சொன்னாயா?"

"சொல்லும்படி நீங்கள் விட்டீர்களா?"

"விடாமல் நான் என்ன செய்தேன்?"

பதிலுக்குப் பைங்கிளி அவனை நோக்கிப் புன்முறுவல் செய்தாள். அத்துடன் கேட்டாள். "இதற்கு நான் பதில் சொல்ல வேண்டுமென்று எதிர்பார்க்கிறீர்களா?"

"எதிர்பார்த்தால் என்னதவறு?" என்று வினவினான் ஜகத்விசயன்.

"என்ன தவறா? போதும் பேசாதிருங்கள்" என்று சொல்லிய பைங்கிளி மீண்டும் மோகனப் புன்முறுவலொன்றை அவன்மீது வீசினாள்.

அவள் சொற்களின் அர்த்தம் அவனுக்கு நன்றாகவே புரிந்தாலும் அவளுடைய மறைமுகப் பேச்சின் இன்பத்தை மீண்டும் மீண்டும் அனுபவிக்கவே அவளை அடுத்து அடுத்துக் கேள்விகள் கேட்டான் ஜகத்விசயன். ஆனால் அவனுக்கு அதிகச் சலுகை அளிக்க விரும்பாத பைங்கிளி பேச்சை வேறு துறையில் திருப்பத் தொடங்கி "நாம் திரும்பத் திரும்ப நம்மைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தால்..." என்று ஆரம்பித்தாள்.

'பேசிக்கொண்டிருந்தாலென்ன?" என்றான் அப்பொழுதும் மயக்கம் பூராவாகத் தெளியாத ஜகத்விசயன்.

"ஒன்றுமில்லை, பாண்டிய சேனாதிபதியை நோக்கி நீங்கள் செல்லவேண்டியதுபோக, அவன் உங்களை நோக்கி வருவான்" என்றாள் மாதவி. மாதவியின் இந்தச் சொற்கள் ஜகத்விசயனை இந்திரலோகத்திலிருந்து இந்த உலகத்துக்குக் கொண்டுவந்து விடவே அவன் சட்டென்று நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டான். அவன் மடியிலிருந்து எழுந்து பழையபடி சற்றுத் தள்ளி உட்கார்ந்து கொண்ட மாதவியைக்கூட அவன் தடை செய்யவில்லை சற்று முன்பாக தூதன் கொண்டுவந்த பயங்கரச் செய்தியின் முழுவேகம் அவனைமீண்டும் தாக்கவே மணலில் கைகளை ஊன்றிக்கொண்டு தலையைத் தொங்கப் போட்டு நிமிஷ நேரம் யோசனையில் ஆழ்ந்தான்.

"என்ன, யோசிக்கிறீர்களா?" என்று அவன் நினைவுக்குக் குறுக்கே புகுந்தாள் மாதவி, அவன் சுயநினைவுக்கு அதிக இடம் அளிக்கக்கூடாதென்ற காரணத்தால்.

"தூதன் கொண்டுவந்த செய்தியைப் பற்றித்தான் யோசிக்கிறேன்" என்றான் ஜகத்விசயன்.

"அதில் யோசிப்பதற்கு என்ன இருக்கிறது?" என்று மீண்டும் கேட்டாள் மாதவி.

"யோசிப்பதற்கு என்ன இல்லை? நீ எதிர்பார்த்தபடி தானே நடந்துவிட்டது?"

"நான் எதிர்பார்த்தேனா?"

"ஆமாம். நீதான் முன்பே சொன்னாயே, பல்லவராயர்கள் ஏதோ ஒரு நிகழ்ச்சியை எதிர்பார்க்கிறார்கள் என்று..."

"ஆமாம். சொன்னேன்."

"அவர்கள் எதிர்பார்த்தது சரியாகி விட்டது. புரட்சி ஏற்பட்டுவிட்டது. அதுவும் பொன்னையனாரல்ல; புரட்சி அதுவும் தமிழ்நாட்டின் மிகப் பிரபல படைத்தலைவனாகிய அபராஜித பல்லவனே புரட்சியைக் கிளப்பியிருக்கிறான்."

"இதையெல்லாம் நாதன்தான் சொன்னானோ?"

"நாதன் சொன்னான். ஆனால் அந்த செய்தியால் ஏற்படப்போகும் விளைவை நீ அறிந்தாயா?"

மாதலிக்கா அபராஜிதன் செய்துள்ள புரட்சியின் விளைவு தெரியாது? நன்றாக அறிந்தே இருந்தாள். ஆனால் திடீரெனப் புறப்பட்ட இந்தப் புரட்சி யுத்தத்தை ஜகத்விசயன் எப்படிச் சமாளிக்கப் போகிறான் என்பதை அறிய முடியாத மாதலி சொன்னாள்: "பெண்ணான எனக்கும் புரட்சியைப் பற்றியும் போர் நிலைமையைப் பற்றியும் என்ன தெரியும்?"

ஜகத்விசயன் அவள் வதனத்தின் லாவண்யத்தில் எவ்வளவோ மயங்கியிருக்கலாம். ஆனால் அவள், போர் நிலைகளையும் முறைகளையும் நன்றாக அறிந்தவளென்பதையோ போருக்குத் திட்டத்தைக்கூட வகுக்கக்கூடிய கூரிய அறிவு அவளுக்கு உண்டென்பதையோ அறியாத முட்டாளல்ல ஜகத்விசயன். அவள் வார்த்தைகளை அவன் கொஞ்சம் கூட நம்பவில்லையென்பதை அவன் உதட்டில் புன்முறுவல் காண்பித்தது. அதை ஊர்ஜிதம் செய்தன அவன் அடுத்துப் பேசிய சொற்கள். "பாண்டிய நாட்டுப் பல்லவராயர்கள் புரட்சியை எதிர்பார்க்கிறார்கள் என்பது மட்டும் பெண்ணான உனக்கு எப்படித் தெரிந்தது மாதலி?" என்று கேட்டான் ஜகத்விசயன்.

"வெறும் ஊகம்தான்" என்றாள் மாதலி.

"ஊகம்தான். ஆனால் போர் முறைகளை அறியாதவர் செய்ய முடியாத ஊகம்..." என்று சொல்லிய ஜகத்விசயன் மெல்ல நகைத்துவிட்டு மீண்டும் கவலை பாய்ந்த முகத்துடன் கேட்டான், "மாதலி புரட்சியை எதிர்பார்த்த பல்லவராயர்கள் பாண்டிய நாட்டின்மீது படையெடுக்காமல் தாமதிக்கிறார்கள் என்று நீ சொன்னது சரியாகப் போய்விட்டது. ஆனால் நாம் பெருந்தவறு செய்துவிட்டோம் பார்த்தாயா?" என்று.

"என்ன தவறு செய்துவிட்டோம்?" என்று தனக்குச் சம்பந்தம் இல்லாததுபோல் கேட்டாள் மாதலி.

"உன் மாமன் சொற்படி முன்பே படைகளை நான் நடத்திச் சென்று சோழப் படைகள் பாசறையிலிருக்கும்போதே அவர்களைத் தாக்கியிருந்தால் இந்தப் புரட்சியைத் தவிர்த்திருக்கலாம். பல்லவராயர்களை நான் ஒரு பக்கமும், உன் மாமன் ஒரு பக்கமும் தாக்கி முறியடித்திருக்க முடியும். நாம் தாமதித்ததால் புரட்சிக்கு இடங்கொடுத்துவிட்டோம். இதற்கு உன் மாமனுக்கு என்ன பதில் சொல்ல முடியும்?"

"என்ன பதில் சொல்வீர்களோ?"

"என்ன இப்படிப் பட்டும் படாமல் பேசுகிறாயே மாதலி? இங்கேயே தாமதிக்கும்படி நீதானே சொன்னாய்?"

"என் யோசனையைச் சொன்னேன். நீங்கள் மாமா உத்தரவுப்படி படைகளைக் கடற்கரையோரமாக நடத்திச் செல்வதாக இருந்தால் நான் புறப்படத் தயார் என்று உங்களிடம் சொல்லவில்லையா?"

இந்தக் கேள்விக்குப் பதில் என்ன சொல்வதென்று ஜகத்விசயனுக்குப் புரியவில்லை. தாமதிக்கும் அவசியத்தை மாதலி வற்புறுத்தியது உண்மை. ஆனால், படைகளை நடத்திச் செல்வதானால் உடனே புறப்படுவதாக அவள் கூறியதும் உண்மை. இந்த உண்மைகளிடையே சிக்கி உழன்ற ஜகத்விசயன் மாதலியின் சாமர்த்தியத்தை நினைத்துப் பெரிதும் வியந்ததோடு ஓரளவு சினமும் கொண்டான். அவன முகத்தில் கோபம் உதயமாவதைக்

கண்ட மாதவி அதற்குமேல் தன் சொரூபத்தைக் காட்டினால் தண்டநாயகன் தன் பிடியிலிருந்து நழுவி விடுவான் என்பதையும், பிறகு தன் திட்டங்களெல்லாம் தவிடுபொடியாகி விடும் என்பதையும் நினைத்துப் பார்த்து மீண்டும் தன் வலையை அவன்மீது வீசத் தொடங்கித் தன் வலது கையை அவன் தோள்மீது வைத்து, ''ஏது தளபதி அவர்களுக்குக் கோபம் வந்துவிட்டது போலிருக்கிறது?'' என்றாள் மெள்ளச் சிரித்துக்கொண்டே.

''கோபம் வராமல் என்ன செய்யும்'' என்று கேட்டான் ஜகத்விசயன்.

''தளபதிகளுக்கு நிதான புத்தி வேண்டும். கோபங் கூடாது. பொன்னமராவதியில் புரட்சியைக் கிளப்பியிருக்கிறானே பாண்டிய சேனாதிபதி அபராஜிதன், அவனைத் தெரியுமா உங்களுக்கு?'' என்று வினவினாள் மாதவி.

''நேரில் பார்த்ததில்லை. கேள்விப்பட்டிருக்கிறேன்'' என்றான் ஜகத்விசயன்.

''நான் பார்த்திருக்கிறேன்''

''அவனிடம் என்ன அதிசயத்தைக் கண்டாய்?''

''இடியே தலையில் விழுந்தாலும் அசைய மாட்டான் அபராஜிதன். எப்பொழுதும் நிதானம் தவறாதவன்.''

''அப்படித்தான் தளபதி இருக்க வேண்டும்.''

''அதைத்தான் நானும் சொல்கிறேன்.''

அவள் சொல்வதன் அர்த்தத்தைப் புரிந்துகொண்ட ஜகத்விசயன் சிறிது சாந்தமடைந்தாலும் தூதன் மூலம் கிடைத்த செய்தியால் குழப்பமடைந்த உள்ளத்துடன் பேசினான்; ''மாதவி! எந்தச் சமயத்திலும் தளபதிக்கு நிதானம் அவசியம் தான். ஆனால் நானிருக்கும்

நிலைமையைக் கவனித்தாயா? இலங்காபுரன் திட்டத்தைக் காற்றில் பறக்க விட்டேன். என்னைவிடப் போர் அனுபவமுள்ள அவருடைய கட்டளையைக் கைவிட்டேன். சிங்களத்துக்கு வெற்றியைச் சம்பாதித்துத் தரவல்ல அவருடைய போதனையைப் புறக்கணித்தேன் பாண்டிய நாட்டின் இதயத்திலே எதிரி, புரட்சிக் கத்தியைச் செருக இடங் கொடுத்தேன். இப்பொழுது சோழநாடு பலம் பெற்றுவிட்டது. ஒருபக்கம் புரட்சி சைன்யம். இன்னொரு பக்கம் பல்லவராயன் படைகள். புரட்சி சைன்யமும் பலமானதென்று தூதன் சொன்னதைத்தான் கேட்டாயே! இதுவரை ஏழாயிரம் பேர்களுக்குமேல் சேர்ந்திருக்கிறார்களாம். இன்னும் மூவாயிரம் பேர் சேரலாமாம். மொத்தம் பத்தாயிரம் பேர். பாண்டிய நாட்டு மார்பை நோக்கிக் கத்தியை உருவி நிற்கிறது இப் படை. இப்படையின் தென்மேற்குப் பகுதியில் நானிருக்கிறேன். வடமேற்கில் உன் மாமா இருக்கிறார். சோழர்கள் படை அவரையும், புரட்சிப்படை என்னையும் இரண்டுஇடங்களில் லேசாகத் துண்டித்து விட முடியும்.''

உள்ள நிலையை ஜகத்விசயன் சீராகப்புரிந்துகொண்டு அலசியதைக் கேட்ட மாதவி அவன்மீது ஆச்சரியம் ததும்பும் கண்களைப் பதியவிட்டு, ''இத்தனை கூர்மையான புத்தியுள்ள தாங்கள் கேவலமான இந்தப் புரட்சியைக் கண்டு கலங்குவது தவறு'' என்றாள்.

''எப்படித் தவறு, மாதவி?''

''புரட்சி பகிரங்கமாக எழுந்ததே உங்களுக்கு மிகவும் நல்லது.''

''எப்படி நல்லது?''

''மறைந்திருக்கும் எதிரியைச் சமாளிப்பது கஷ்டம். இப்பொழுது, அபராஜிதன் பகிரங்க எதிரி. அவனையும் பல்லவர்களையும் முறியடிப்பது மிகவும் சுலபம்.''

''எப்படிக் கலபம்?''

''போர்க்கவசம் பலமானதுதான் தளபதி! ஆனால் அந்தப் போர்க் கவசத்திலும் இடைவெளி உண்டு. அந்த இடைவெளியில் அம்பு பாய்ந்தால்...''

''மரணம்தான்''

''அந்த இடைவெளியைக் கண்டுபிடிக்க வேண்டியது உங்கள் கடமை.''

ஜகத்விசயன் அவளைக் கூர்ந்து நோக்கினான். ஏதோ ஒரு மகத்தான திட்டத்தை மாதவி வைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை அவள் கண்களிலிருந்து அறிந்துகொண்ட அவன், ''உன் திட்டம் தானென்ன மாதவி?'' என்று வினவினான். சிங்களத்து மன்னனான பராக்கிரம பாகுவாலேயே மிகச் சிறந்த தந்திரசாலியென்று மதிக்கப்பட்ட ஜகத்விசயத் தண்டநாயகனே ஸ்தம்பிக்கும்படியான பிரமாத போர்த்திட்டமொன்றை விவரிக்கத் தொடங்கி மாதவி பேச ஆரம்பிக்குமுன்பு ஒரு முறை சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு. ''இப்படிவாருங்கள் சொல்கிறேன்'' என்று அவனை இன்னும் கிட்டே அழைத்தாள்.

தன் காதுக்கருகில் அவளுடைய செவ்விய இதழ்களிலிருந்து உதிர்ந்த சொற்களில் புதைந்து கிடந்த திட்டத்தைக் கேட்கக் கேட்க ஜகத்விசயனின் முகம்பிரமிப்பை அடைந்தது. கண்கள் மித மிஞ்சிய ஆச்சரியத்தால் மலர்ந்தன புத்தியும் தீவிரமாக வேலை செய்ததால் அவன் பொறியிலிருந்து நரம்பு ஒன்று புடைத்து எழுந்துநின்றது. அவள் சொல்லி முடித்த பின்பு அந்தத் திட்டத்தைச் சொல்லிய இதழ்களைத் தன் இதழ்களால் தழுவிய ஜகத்விசயன், ''மாதவி! மிகத் துணிகரமான திட்டம்'' என்றான்.

''நிறைவேற்றினால்...'' என்று முணுமுணுத்தாள் மாதவி.

''அபராஜிதன் ஒழிந்தான்! சோழ சாம்ராஜ்யம் அழிந்தது'' என்றான் அவன் உதடுகளுக்கு விநாடி சுதந்திரமளித்த வாலிபத் தண்டநாயகன்.

மாதவியின் கண்கள் மயக்கமான பார்வையை வீசின. ஜகத்விசயன் உள்ளத்தில் ஆனந்த அலைகளைப்பாய்ச்சின. பல்லவராயர், அபராஜிதன் ஆகிய ராஜதந்திரிகளை நொருக்கக்கூடிய பெரிய திட்டத்தைத் தனக்குக் காட்டிக் கொடுத்த அந்தக் கட்டழகியின் உடலை ஆசையுடன் கட்டிப் பிடித்தான் ஜகத்விசயன். அவள் மறுக்கவில்லை. 'அபராஜிதனைப் பழி வாங்கவேண்டிய கைகளுக்கு இந்தச் சலுகைகூடத் தரவேண்டாமா?' என்று நினைத்தாள் அவள். அடுத்த பதினைந்து நாட்களில் பாண்டிய நாட்டில் ஓடப்போகும் ரத்த வெள்ளத்தை நினைத்துப் புன்னகை ஒன்று பூத்தாள் மாதவி.

காலனுடைய போர்ப் புன்னகை இவ்வளவு அழகாக இருசக முடியுமா என்று வியந்து வெண்மதி வானத்திலிருந்து அவளை வியப்புடன் உற்று நோக்கிக் கொண்டிருந்தான்.

58. பெரிய பல்லவராயர் கவலை

தமிழ்நாட்டு வான வெளியில் யுத்த மேகங்கள் சூழ்ந்து கருகிக் கனிந்து பேரிடி இடித்துக்கொண்டிருந்தன. இது முதலில் எந்த இடத்தில் விழும் என்பதை அறியாத பாண்டியநாட்டு மக்கள் பயத்தால் பீடிக்கப்பட்டவர்களாய் சோழநாட்டு எல்லையிலிருந்த பல்லவராயர்கள் பாசறைக்கும், பொன்னமராவதியில் தினசரி வலுத்துக் கொண்டிருந்த அபராஜிதன் புரட்சிப் படைக்குமாக மனத்தைப் பறக்கவிட்டு எந்தத் தருணத்தில் என்ன நடக்குமோ என்று நிலை கலங்கி நின்றார்கள். இலங்காபுரன் படையெடுப்பில் அழிந்து போய், புரட்சி

ஏற்பட்டுள்ள அந்த நாள்வரை பழுது பார்க்கப்படாம லிருந்த கோயில்களையும் மாளிகைகளையும் பார்த்த பாண்டியநாட்டு வாசிகள், புரட்சியின் காரணமாக மீண்டும் இலங்காபுரன் சினந்து எழுந்து பாண்டிய மக்களை சூறையாடச் சிங்கள வீரர்களை ஏவினால்என்ன செய்வது என்று ஏங்கிக் கொண்டிருந்தார்கள். ஆனால், புரட்சி ஏற்பட்டுப் பல நாட்களாகியும், அபராஜிதன் சைன்னியம் தினசரி பெருகியும், சிங்களத்தின் ஜன்ம விரோதிகளாகிய பல்லவராயர்கள் பலமான சைன்னியத் துடன் நாட்டின் எல்லையில் வந்து தங்கியும், இலங்கா புரன் எந்தவித நடவடிக்கையும் எடுக்காமலும் தனது மாளிகையில் ஒற்றர்களைத் தவிர யாரையும் பார்க்கா மலும் காலங்கழித்து வந்ததைக் கண்டு மக்கள் ஓரளவு அதிசயப்படவும் தொடங்கினார்கள்.

சாதாரணமாகப் பொது ஸ்தலங்களில் வரும்போது கோபத்தையும் சஞ்சல புத்தியையும் காட்டும் வீரபாண்டி யன் கூட அடக்கத்துடன் நடந்து கொண்டதையும் தங்களை அன்பாக நோக்கியதையும் கண்ட மக்கள் பெரிதும் ஆச்சரியப்பட்டார்களே தவிர, ஏமாறவில்லை. சில நாட்களுக்கு முன்பு மக்கள் தலைகளைவெட்டிஎறிந்து அவற்றின்மீது தேரோட்டிய மன்னனுக்குத் திடீரெனத் தங்கள்மீது அன்பு ஏதும் ஏற்படக் காரணமில்லையென் பதை அவர்கள் அறிந்தே இருந்தார்கள். பின்னால் ஏற் படக்கூடிய பெருத்த விபரீதத்திற்கு இந்த அமைதி பூர் வாங்கமென்பதும் அவர்களுக்குத் தெரியும். இருந்தபோதி லும் அடிக்கடி ஏற்பட்ட படையெடுப்புகளால் துன்பப் பட்ட பாண்டிய நாட்டு மக்களுக்கு அந்த இடைக்கால அமைதி ஓரளவு சாந்தியையே அளித்தது.

மக்கள் பெற்ற அந்த இடைக்கால அமைதியைக்கூட சிங்களத்துத் தண்டநாயகனான இலங்காபுரன் பெற வில்லை. ஜகத்விசயன் படைகளை நடத்தி எதிரிகளைத்

தாக்கமுடியாமல் தாமதிக்கும் ஒவ்வொரு நாளும் வெற்றி சிங்களத்தை விட்டு எட்டிப் போய்க்கொண்டிருக்கிறது என்பதை அறிந்த இலங்காபுரன், ''இவன் எதற்காகத் தாமதிக்கிறான்?'' என்று உள்ளத்தே புகைந்துகொண் டிருந்த கோபத்தில் வீரபாண்டியன்மீதும் ஓரிரு முறை எரிந்து விழுந்தான்.

அபராஜிதன் புரட்சி தினம்தினம் பலப்படுவதை அறிந்த வீரபாண்டியன் மனம் பெரிய எரிமலையாகிக் கொண்டிருந்தது. கன்னிமாடத்தில் சொற்ப வீரர்களைக் கொண்டு அபராஜிதன் தன்னை முறியடித்துத் துரத்தி விட்ட நாளிலிருந்து பொருமிக் கொண்டிருந்த அவன் மனத்தைப் பொன்னமராவதியிலிருந்து கிடைத்த புரட்சிச் செய்தி பெரிதும் கலக்கிவிட்டிருந்தது. அத்துடன் அந்தப் புரட்சி வலுக்கிறதென்பதையும், அபராஜிதனுக்குச் சோழர்கள் பக்க பலமும் இருக்கிறதென்பதையும் கேள்விப் பட்டவுடன் வீரபாண்டியன் மனத்தில் கோபாக்கினி கொழுந்துவிட்டெரிய ஆரம்பித்தது. நிதானத்தை இழந்த வீரபாண்டியன்; ஜகத்விசயனுக்கு மாதவி போர்த் திட்டத்தை வகுத்துக் கொடுத்த அதே தினத்தில் பூரண நிலவு பொழிந்து கொண்டிருந்த அதே இரவில் உப்பரிகை யின்மீது உலாவிக் கொண்டிருந்த இலங்காபுரனை மிகக் கோபத்துடன் அணுகினான்.

பாண்டிய நாட்டையும் சிங்களத்தையும் எதிர்த்து எழுந்து நின்ற போர் மேகங்களில் சிந்தையை மறையவிட் டிருந்த இலங்காபுரன், எதிர்பாராத விதமாகவும், திடும் பிரவேசமாகவும் தன் தனிமையைக் குலைக்க வந்த மன்னனை நெடுநேரம் வரை திரும்பிப் பார்க்கவே யில்லை. அவன் சிந்தனைகளை ஒட்டி ஓடிய கண்கள் கூடல் மாநகரமான மதுரையிலிருந்த அந்த மாளிகையிலிருந்து தொலைதூரத்திலிருந்த ராமேசுவரக் கூடலை நோக்கிப் பதிந்து கிடந்தன. தான் வந்ததைக்கூட லட்சியம் செய்யா

மல் எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்த இலங்காபுரனைச் சிறிது நேரம் பின் பக்கத்திலிருந்தே கவனித்த வீரபாண்டியன், ''ஏது, மாமாவுக்கு யோசனை பலமாயிருக்கிறது?'' என்று பேச்சைத் தொடங்கினான்.

மன்னனைத் திரும்ப நோக்கிய இலங்காபுரன் இதழ்களில் புன்னகை அரும்பியதோடு இகழ்ச்சிக்கு அடையாளமாக அவன் இதழ்களும் ஒருகோடிக்கு இழுக்கப்பட்டதால் கோரமான அவன் மீசை சற்று அசைந்தது. மன்னன் கேள்விக்கு இலங்காபுரன் உடனே பதில் சொல்லவில்லை. கச்சலான அவன் சரீரத்தையும், கோபத்தால் லேசாகத் துடிக்கும் உதடுகளையும், சஞ்சலமான கண்களையும் பார்த்து இலங்காபுரன், 'இவனுக்காகச் சிங்களத்து மன்னர் சிங்களத்தின் பெரும் படையைப் போராபத்துக்குள்ளாக்க இஷ்டப்படுகிறாரே', என்று நினைத்தான்

இலங்காபுரத் தண்டநாயகன் தன் கேள்விக்குப் பதில் ஏதும் சொல்லாமல் தன்னை உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்த வீரபாண்டியன் முகத்தில் கோபக் குறி பூரணமாகத் தாண்டவமாடத் தொடங்கியது ''ஏன், நான் கேட்டது காதில் விழவில்லையோ?'' என்று உக்கிரமாகச் சொற்களைக் கொட்டினான்.

'விழுந்தது'' என்ற இலங்காபுரன் பதிலில் அலட்சியமே காணப்பட்டது.

''அப்படியானால் ஏன் பதில் சொல்லவில்லை?''

''நீங்கள் கேட்டதில் பதில் சொல்ல என்ன இருக்கிறது?''

''என்ன இல்லை?''

''நான் யோசனையிலிருந்தேன். யோசனையிலிருக்கிறாற் போலிருக்கிறது என்று சொன்னீர்கள். உள்ளதைச் சொன்னதற்குப் பதில் என்ன சொல்வது?''

இந்தக் கேள்வி வீரபாண்டியனை அயரவைத்தது. மேற்கொண்டு என்ன பேசுவதென்று அறியாமல் திணறிவிட்டுப் பிறகு கேட்டான், ''எதைப் பற்றி யோசனை?'' என்று.

இலங்காபுரன் விழிகள் மன்னனை நோக்கி ஆச்சரியத்தால் மலர்ந்தன. ''எதைப்பற்றி யோசனையா? எதைப் பற்றி யோசனை செய்யவேண்டிய சமயமிது?'' என்று வினவினான் சிங்களத்துத் தண்டநாயகன்.

''போரைப் பற்றியா?''

''ஆமாம்.''

''அதைப்பற்றி என்ன யோசிக்கிறீர்கள்?''

''உங்களுக்கென்ன அதைப்பற்றிக் கவலை? போரை நடத்த வேண்டியவர்களுக்குத்தானே!'' என்று சொல்லி இலங்காபுரன் மன்னன்மீது தன் கூர்மையான பார்வையை நாட்டினான். இலங்காபுரன் தன்னைப் பார்த்து நகைக்கிறானென்பதைக் கடைசியாக அவன் சொன்ன பதிலிலிருந்து புரிந்துகொண்ட வீரபாண்டியன் கோபம் எல்லை மீறியவனாய், ''இலங்காபுரத் தண்டநாயகரே! நீர் யாருடன் பேசுகிறீரென்பதை யோசித்துப் பேசும். பாண்டிய நாட்டு மன்னனிடம் பேசுகிறீர். நீர் என்னிடம் சேவகம் செய்கிறீர்; எனது அடிமை'' என்று சீறினான்.

இலங்காபுரன் கண்கள மீண்டும் பாண்டியமன்னனின் முகத்தில் குறிப்பாக நிலைத்தன. அந்தப் பார்வையில், 'அட பைத்தியமே! நீ அடிமையா, நான் அடிமையா?' என்ற சொற்கள் சிதறிக் கிடந்தன. இகழ்ச்சி பூரணமாகத் ததும்பிய அந்தப் பார்வையின் நோக்கத்தைப் புரிந்துகொள்ள முடியாத வீரபாண்டியன், இலங்காபுரன் அடங்கிவிட்டதாக நினைத்து, ''உம்மிடம் எவ்வளவோ பிரியமும் நம்பிக்கையும் வைத்துப் பாண்டிய நாட்டின் மன்னனுக்கு அடுத்தபடியுள்ள பெரும்பதவியை உமக்களித்திருக்கிறேன். இந்தப் பதவி...'' என்று பேசிய வீர

பாண்டியனை இடைமறித்த இலங்காபுரன், யாருக்கும் கிடைக்காது'' என்று பேச்சை முடித்தான்.

''இப்பொழுது புரிகிறதல்லவா உங்களுக்கு நான் செய்திருக்கும் உதவி?'' என்றான் வீரபாண்டியன் மீண்டும்.

''ஆகா! நன்றாகப் புரிகிறது. அத்துடன்....''

''அத்துடன்?''

''என் அதிர்ஷ்டமும் நன்றாகத் தெரிகிறது.''

''அதிர்ஷ்டமா?''

''ஆமாம், தங்களுக்குச் சேவை செய்ய வந்தது பெரிய அதிர்ஷ்டமல்லவா?'' என்ற இலங்காபுரன் இடி இடிப்பது போல் பயங்கரமாகச் சிரித்தான். அத்துடன் மட்டு மரியாதைகளை அடியோடு கைவிட்டு, சிரிப்பைத் திடீரெனக் கோபமாக மாற்றிக் கொண்டு மன்னனுக்கு வெகு அருகில் வந்து ''வீரபாண்டியா! உனக்குச் சேவை செய்ய வந்ததைவிடப் பெரிய அதிர்ஷ்டம் வேறென்ன இருக்க முடியும்? குலசேகர பாண்டியன் உன் தகப்பனை அக்கிரமமாகக் கொன்றானென்று நினைத்தேன். உன் மாதிரி ஒரு பிள்ளையைப் பெற்றதற்கு அவனைச் சித்திரவதை செய்தாலும் குற்றமாகாது. மக்களின் அன்பைப் பெற முடியாத உனக்குப் பாண்டிய நாட்டு மணிமகுடத்தைக் கொடுத்தேன். மணிமகுடம் தரித்த பின்பாவது மக்களிடம் அன்பாக நடந்துகொண்டாயா? அதுவும் இல்லை. மக்களால் வெறுக்கப்படும் உன்னை ஆதரிக்கப்போய் சிங்களத்தின் படை இன்று அழியும் தறுவாயிலிருக்கிறது. புரட்சியோ பொன்னமராவதியில் பலத்துவிட்டது. சோழர்களோ படை திரட்டிக் கத்தியை உருவிக் கொண்டு எல்லையில் தயாராயிருக்கிறார்கள். என்ன காரணத்தினாலோ ஜகத்விஜயன் கூடவிருந்து படைகளை அசைக்கவும் மறுக்கிறான். இருக்கிற நிலைமையைப் பார்த்தால் கண் கெட்ட பிறகுதான் சூரிய நமஸ்காரம் நடக்கும் போலிருக்கிறது. வீர இதைவிட என்ன அதிர்ஷ்டம் எனக்கு வேண்டும் மனத்தைப் பாண்டியா! இந்தத் தொல்லைகளில் நான்

பறிகொடுத்திருக்கும்போது உன் இம்சையும் கூடச் சேர்ந்து விடுகிறது'' என்று உக்கிரமான சொற்களை உதிர்த்தான்.

இலங்காபுரன் மேற்கொண்டும் சொன்னான். ''வீரபாண்டியா! வீணாக அடிக்கடி இங்கு வந்து என் கோபத்தைக் கிளறாதே. உன் அரண்மனையில் பாங்கிகள் நிரம்ப இருக்கிறார்கள். அந்த உல்லாசத்தில் காலங்கழி. யுத்தம் வீரர்களைப் பற்றிய விஷயம். அதில் உனக்கென்ன கவலை? இது எனக்கும் அபராஜிதனுக்கும் நடக்கும் போர். தமிழ் நாட்டின் மிகச் சிறந்த வீரனைச் சமாளிக்கும் பெரும் பணியில் நான் ஈடுபட்டிருக்கிறேன். அந்தப் பணியில் குறுக்கே புகுந்து கெடுக்காதே! யோசனையும் சொல்லாதே. அபராஜிதனை முறியடிப்பது, சிங்களத்துக்கு நான் செய்ய வேண்டிய கடமை. உன் விதி நல்லதாயிருந்தால் அந்தக் கடமையை வெற்றிகரமாக நிறைவேற்றுவேன். இல்லையேல் நீ பழையபடி மலைநாட்டுக்குப் பயணமாக வேண்டியிருக்கும். மூட்டைகளைக் கட்டித் தயாராக வை''

இலங்காபுரன் வார்த்தைகள் மன்னனைத் திக்பிரமையடையச் செய்தன. என்றும் மரியாதை தவறாத இலங்காபுரனே இப்படிப் பேச வேண்டுமென்றால் நிலைமை மிகக் கடுமையாகத்தானிருக்க வேண்டும் என்று வீரபாண்டியன் மந்தபுத்தியிலும் சற்று அறிவு உதயமாயிற்று. மேற்கொண்டு எதுவும் தன்னிடம் பேச இலங்காபுரன் இஷ்டப் படவில்லையென்பதை அறிந்த வீரபாண்டியன் தண்டநாயகனை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு மாளிகையின் படிகளில் தயங்கித் தயங்கி இறங்கிச் சென்றான்.

அதற்குப் பிறகு மன்னனும் தண்டநாயகனும் பல நாட்கள் சந்திக்கவேயில்லை. படைகளைச் சென்று பார்வையிடும் நேரம் தவிர இதர சமயங்களில் தன் மாளிகை அறையிலேயே உட்கார்ந்து கொண்டு ஒற்றர்களைப் பல திசைகளுக்கு அனுப்புவதிலும், வந்த ஒற்றர்

களிடமிருந்து தகவலைக் கிரகிப்பதிலுமே காலம் கழித்து வந்தான் இலங்காபுரன். நாளாக ஆகக் கிடைத்த செய்திகள் அவனுக்குப் பெருங் குழப்பத்தைக் கொடுத்தன ஜகத்விசயனிடமிருந்து கிடைத்த ஓலையில் அவன் கண்ட செய்தியும் அவனைத் திடுக்கிட வைத்தது. ''என்ன! கடற்கரையோரமாகப் படைகளை நடத்திக் கொணடு தொண்டித் துறைமுகத்துக்கு வந்து விட்டானா?'; என்று கேட்டான் இலங்காபுரன்.

''ஆம், பிரபு!'' என்றான் ஓலையைக் கொடுத்த தூதன்.

''மாதலி?''

''அவர்களும் ஜகத்விசயருடன் போயிருக்கிறார்கள்.''

இதைக் கேட்ட இலங்காபுரன் தீவிர யோசனையில் ஆழ்ந்தான். ''இது பெரும் விசித்திரமாயிருக்கிறது. ஜகதவிசயன் என்ன செய்ய உத்தேசிக்கிறான்? தொண்டிப் பக்கம் வருவது எதிரிக்கு வெகு அருகில் வருவதாயிற்றே, உடனே போரில் இறங்கப் போகிறானா? அப்படியானால் படைகளை நடத்தி இந்தப் பக்கத்தில் தாக்கும்படி என்னை ஏன் அழைக்கவில்லை?'' என்று ஏதேதோ யோசித்த இலங்காபுரன், ஏதும் தெரியமால் குழம்பினான்

இலங்காபுரன் குழம்பினான். ஆனால்,பெரும்புரட்சிப் படையில் பொன்னமராவதியிலிருந்த அபராஜிதன் மட்டும் குழம்பவில்லை. ஜகத்விசயன் தொண்டித் துறைமுகத்துக்குப் புறப்பட்ட செய்தியை ஒற்றர்கள் கொணடு வந்தபோது பொன்னமராவதியில் நிஷதராசன் மாளிகையின் வெளித்தாழ்வாரத்தில் நின்று கொண்டு எதரே கண்ணுக்கெட்டும் தூரம் வரையில் அடிக்கப்பட்டிருந்த தனது படைகளின் கூடாரங்களையும் அவைஒவ்வொன்றின் முன்பாக ஜொலித்த பந்தங்களையும் பார்த்துக் கொண்டிருந்தான். ஆயிரமாயிரம் பந்தங்கள் ஜொலித்ததால் பூமியே நட்சத்திரக் கூட்டத்தைத் தாங்கும் வானம்போல் விளங்கியதைக் கண்டு பூரித்துக் கொண்டிருந்த அபராஜித பல்லவனுக்கு சற்று அப்பால் தள்ளி நின்ற காரிவளவனும்

மார்க்கியனும் ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். அச்சமயத்தில் அவசரமாகப் படிகளில் ஏறி வந்துஅபராஜிதனை வணங்கிய ஒற்றன் ''பிரபு! ஜகத்விசயத் தண்டநாயகன் தொண்டியை நோக்கிப் படைகளுடன் புறப்பட்டுவிட்டான்'' என்றான்.

அபராஜிதன் கண்கள் ஒருவினாடி ஆச்சரியத்தைக் காட்டின. அந்த ஆச்சரியம் அடுத்த வினாடி மறைந்து விடவே பழையபடி கைப்பிடிச் சுவரில் சாய்ந்து கூடாரங்களைக் கவனிக்கலானான்

பாண்டிய சேனாதிபதியின் அபிப்பிராயத்தைப்புரிந்து கொள்ள முடியாத அவன் படைத்தலைவர்களிருவரும் அவனை அணுகி நின்றார்கள். ''பிரபு படைகளைத் தயார் செய்யட்டுமா?'' என்று மெள்ளக் கேட்டான் காரிவளவன்.

''எங்கு புறப்பட?'' என்று அபராஜிதன் வினவினான் சற்றுத் திரும்பி அவனை நோக்கி.

''கொணடிக்குத்தான்'' என்றான் மார்க்கியன்.

காரியை விட்டு மார்க்கியனை நோக்கித் திரும்பிய அபராஜிதன் ''தொண்டிக்கு எதற்காகப் போகவேண்டும்?'' என்று வினவினான்.

''எதிரி நம்மைத் தாக்குமுன்பு நாம் தாக்க வேண்டாமா?'' என்று கேட்டான் காரிவளவன்.

''தாக்காவிட்டால்....?''

'அவன் படைகளுக்கும், இலங்காபுரன் படைகளுக்குமிடையில் நமது படைகள் சிக்கிக்கொள்ளும்'' என்று சுட்டிக் காட்டினான் காரிவளவன்.

அபராஜிதன் அவர்கள் யோசனையை ஏற்கவில்லை. ''படைகள் இப்பொழுது எங்கும் போகவேண்டாம்'' என்று உத்தரவிட்டான். அவன் உத்தரவைக் கேட்ட அனுபவசாலியான காரிவளவன் திகைத்தான். அவன் மட்டுமல்ல, இந்த மாதிரி அபராஜிதன் வேண்டுமென்றே தன் படையை எதிரிகள் பாக்குவெட்டிக்குள் சிக்க வைப்

பதைக் கண்டு போர்த்தந்திரத்தில் நிகரற்றவன் என்று பெயர் வாங்கிய அண்ணன் பல்லவராயன் கூட அதிர்ச்சியடைந்தான். அடுத்த சில தினங்களில் அபராஜிதன் எடுத்த நடவடிக்கைகள் அண்ணன் பல்லவராயனுடைய அதிர்ச்சியை ஆயிரம் மடங்கு அதிகப்படுத்தியது. "அநேகமாக இந்தப் போரில் நமக்குத் தோல்விதான்" என்று பல்லவராயனிடம் சீறினான் சின்னப்பல்லவராயன்.

பெரிய பல்லவராயர் முகத்திலும் போர் நிலையைக் கண்டு கவலை பெருகலாயிற்று. "இந்த அபராஜிதனைப் பெரிய படைத் தலைவனென்று 'கேள்விப்பட்டோமே அது சரிதானா?" என்று எல்லாமறிந்த பெரிய பல்லவராயர் மனத்திலும் சந்தேகம் உதயமாகத் தொடங்கியது.

59. ஒற்றனும் ஓலையும்

போர் விஷயமாக அபராஜிதன் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பெரிய பல்லவராயர் மனத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டு மக்கள் அனைவர் மனத்திலுமேசொல்லொணாக் கவலையையும் பீதியையும் விளைவித்தன. ஜகத்விசயன் இராமேசுவரப் பகுதியிலிருந்து புறப்பட்டவுடனேயே பொன்னமராவதியிலுள்ள தன் படையுடன் அபராஜிதன் தெற்கு நோக்கி இறங்கி எதிரி சைன்னியங்களின் முன்னேற்றத்தைத் தேக்கி விடுவான் என்று நினைத்த மக்கள் பெரிதும் ஏமாற்றமடைந்தார்கள். ஜகத்விசயன் எந்தவித எதிர்ப்புமின்றித் தொண்டித் துறைமுகம் வரையிலும் வந்து அங்கே தன் சைன்யத்தை நிறுத்தி ஜயபேரிகை கொட்டியவுடன் "இனிமேல் பாண்டிய சேனாதிபதி சும்மா இருக்க மாட்டான்" என்று மக்கள் மனப்பால் குடித்தார்கள். மக்களின் அந்த எண்ணத்திலும் அபராஜிதன் மண்ணைப் போடடுப் பொன்னமராவதியில் கல்பிள்ளையார்போல் உட்கார்ந்திருக்கவே ஆரம்பத்திலிருந்த மக்களின் ஏமாற்றம் பெரும் கவலையாக மாறத்

தொடங்கியது. இலங்காபுரன் மூதன் முதலில் தொண்டியிலும் பாசிப் பட்டணத்திலும்நடத்தியபோர்களில்நடந்த அக்கிரமங்களும் அவன் அடைந்த இணையற்ற வெற்றியும் மக்கள் மனத்தில் அந்தச் சமயத்திலும் அழியாதிருந்தமையால் அதே தொண்டியில் ஜகத்ஸ்சயன் வந்து தங்கியதும் மக்களின் கவலை கலவரத்துக்கு இடம் கொடுக்கலாயிற்று.

இலங்காபுரன், முதன் முதலில் அடைந்த வெற்றியைப் பற்றி, சிங்களத்து ராஜ பரம்பரைச் சரித்திரப் புத்தகமான மஹாவம்சம், "இலங்காபுரன் நீலக்கடலை எதிரிகள் ரத்தத்தால் சிவப்பாக மாற்றினான்" என்று முரசு கொட்டுகிறது. செங்கற்பட்டு ஜில்லாவிலுள்ள ஆரப்பாக்கம் கல்வெட்டுக்களில்கூட, தொண்டியிலும், பாசியிலும் சோழப் படைகளுக்கு முதலில் தோல்வியே உண்டாயிற்று என்று பொறிக்கப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். இந்த ஆரம்பத் தோல்விகளால் பீதியுற்ற மக்கள் அதே தொண்டியில் ஜகத்விசயன் கூடாரமடித்த பிறகும் அபராஜிதன் அசையாமலிருப்பதைக் கண்டு பேரச்சம் கொண்டார்களென்றால் அதில் ஆச்சரியமேதுமில்லை அல்லவா?

தொண்டியில் தான் பத்துப் பதினைந்து நாளிருந்தும் அபராஜிதன் பொன்னமவராதியிலிருந்து நகராததால் சலிப்படைந்த ஜகத்விசயன், மாதவியின் யோசனைப்படி தனது படைகளைத் தொண்டிக்கு வடக்கேயும் செலுத்தி, சோழமண்டலத்துக்குள் காலடி எடுத்து வைத்தான். அவனை உடனே மறிக்கவேண்டுமென்று அண்ணன் பல்லவராயன் துடித்தான். பாண்டிய சேனாதிபதியான அபராஜிதன் அதைத் தடுத்தான். அவன் அனுப்பிய ஓலையை இரண்டு முறை படித்த பெரிய பல்லவராயர் சின்னப் பல்லவராயனை நோக்கி ஏதும் புரியாமல் விழித்து, "இதோ இந்த ஓலையைப் பாரும்" என்று கொடுத்தார்.

ஓலையைப் படித்த அண்ணன் பல்லவராயன் முகத்தில் மிதமிஞ்சிய கோபத்தால் எள்ளும் கொள்ளும் வெடிக்க

''பேரமைச்சரே! இவன் என்ன விளையாடுகிறானா?''
என்று சீறினான்.

''அபராஜிதன் போக்கு எனக்குப் புரியவில்லை''
என்றார் பேரமைச்சர்.

''நமது படைகளைக்கொண்டு ஜகத்விசயனைத்
தாக்கக் கூடாதென்று எழுதியிருக்கிறானே!'' என்று மறு
படியும் கேட்டான் சோழர் படைத்தலைவன்.

பேரமைச்சர் பதிலேதும் சொல்லாமல் 'ஆமாம்' என்
பதற்கு அறிகுறியாகத் தலையை மட்டும் அசைத்தார்.

''அதுமட்டுமல்ல; நமது படையில ஒரு பகுதியை
அழைத்துக்கொண்டு பொன்னமவராவதிக்கு வந்து தன்
னுடன் சேரவேண்டுமென்று அழைக்கிறானே!'' என்று
தொடர்ந்தான் படைத்தலைவன்.

''அப்படித்தான் ஓலையில் கண்டிருக்கிறது'' என்றார்
பேரமைச்சர்.

'நமக்கு முன்னாலிருக்கும் எதிரியைத் தாக்காமல்
நானும் போய்ப் பொன்னமவராதியில் கையைக் கட்டிக்
கொண்டு உட்கார்ந்திருப்பதில் அர்த்தமென்ன இருக்
கிறது?''

''அதுதான் எனக்குப் புரியவில்லை.''

''அப்படியானால் அவனைப் போரிலிறங்கும்படி
உடனே உத்தரவு அனுப்புங்கள்.''

''அபராஜிதன் நம்முடைய அதிகாரத்துக்கு உட்பட்டவ
னல்ல. அவனிடமிருப்பது அவனே திரட்டிய புரட்சிப்
படை. நாம் சொல்வதை அவன் கேட்டால் கேட்கலாம்,
கேட்காவிட்டாலும் விடலாம்.''

பெரிய பல்லவராயர் தீர்க்காலோசனையில் அமர்ந்
தார். நீண்ட நேரம் சிந்தித்த பிறகு சொன்னார்,
''பத்தாயிரம் வீரர்களை அழைத்துக்கொண்டு அவன்
கேட்கிறபடி பொன்னமவராதிக்குப் போவோம்'' என்று.
அண்ணன் பல்லவராயன் தன் கூரியவிழிகளைப்பெரிய
பல்லவராயர் மீது நாட்டினான். பெரிய பல்லவராயர்

அமைதியுடன், ''படைத் தலைவரே! எனக்கு இன்னும்
அபராஜிதனிடத்தில் நம்பிக்கை போகவில்லை. அவன்
நடந்துகொள்ளும் முறைகளைப் பார்த்தால் சந்தேகமும்
கவலையும் என் மனத்திலும் எழத்தான் செய்கின்றன.
இருந்தாலும் அபராஜிதன் ஏதோ காரணமாகவே தாமதிக்
கிறான் என்று எனக்குத் தோன்றுகிறது. அபராஜிதன்
போர் முறைகள் அசாஸ்திரீயமாயிருக்கலாம் ஆனால்
இறுதி வெற்றிக்கு அவை உதவினால் முறைகள் எப்படி
யிருந்தாலென்ன? சாஸ்திரீயம் அசாஸ்திரீயம் என்பதெல்
லாம், காலம் ஏற்படுத்திய வழக்கு. இன்று அபராஜி
தன் எடுக்கும் போர் முறைகள் பலன் தந்தால் அவையே
நாளை சாஸ்திரீய முறைகளாகலாம். எதற்கும் பொறுத்
திருந்து பார்ப்போம். நீர் அவன் சேட்கிறபடி பத்தாயிரம்
வீரர்களை அழைத்துக்கொண்டு பொன்னமராவதிக்குப்
போய்ச் சேரும்'' என்றார்.

இத்தனைக்கும் அண்ணன் பல்லவராயன் மனத்தில்
மட்டும் எந்த நம்பிக்கையும் ஏற்படவில்லை. பத்தாயிரம்
வீரர்களை அழைத்துக்கொண்டு பொன்னமராவதிக்கு
வந்த பிறகு சோழநாட்டுப் படைத் தலைவனின் அவ
நம்பிக்கை முன்னைவிட அதிகமாக வளர்ந்தது. அவன்
வந்த பத்து நாட்களுக்குப் பிறகு அபராஜிதன், படை
களின் ஒரு பகுதியைப் பொன்னமராவதியில் இருத்தி
மற்ற படைகளை அசைய உத்தரவிட்டான். அப்
பொழுதும் ஜகத்விசயனைத் தாக்க அல்ல. ஜகத்விசயன்
படைகளை நடத்திச் சென்ற திசைக்கு நேர் எதிர்த்திக்கில்
அதுவும் தொண்டிக்குத் தெற்கே படைகளை நடத்திச்
சென்றான். இப்படி எதிரிக்குப் புறமுதுகு காட்டி ஓடுவது
போன்ற செய்கையை அறவே வெறுத்த அண்ணன்
பல்லவராயன் அடுத்த ஒரு வாரம் பல்லைக் கடித்துக்
கொண்டிருந்தான் இரண்டாவது வாரத்தில் இலங்கா
புரன் மதுரையைவிட்டுப் படைகளுடன் கிளம்பிவிட்ட
தாகவும் தொண்டியை நோக்கி முன்னேறுவதாகவும்
ஒற்றர்கள் தகவல் கொண்டு வந்தார்கள்.

இந்தச் செய்திக்குப்பிறகு அன்னன் பல்லவராயனால் பொறுக்க முடியாமற்போகவே அவன் மிகுந்த கோபத்துடன் அபராஜிதன் கூடாரத்துக்குச் சென்றான். உள்ளே நுழைந்த சமயத்தில் கூடாரத்துக்குள் ஏற்கெனவே எரிமலை வெடித்துக்கொண்டிருந்தது.

“சேனாதிபதியவர்களே! இனியும் நாம் தாமதித்தால் உலகம் நம்மைப் பார்த்துச் சிரிக்கும்” என்று கடுமையாகச் சொன்னான் காரிவளவன்.

“அது தவிர இலங்காபுரனுக்கும் ஜகத்விசயனுக்கும் இடையில் நமது படைகள் சிக்க இன்னும் சில தினங்களே இருக்கின்றன” என்றான் மார்க்கியனும் எரிச்சல் தொனிக்க.

அச்சமயத்தில் உள்ளே நுழைந்த அன்னன் பல்லவராயன் “படைகள் சிக்கி அழிவது ஒருபுறமிருக்கட்டும். சிங்கள வீரர்கள் சிங்களத்துக்குக் கப்பலேறாவிட்டாலும் நமது மானம் கப்பலேறிவிடும். சரித்திரத்தில் நமது பெயர்கள் பிரசித்தியடைந்துவிடும்” என்றான்.

எதிரே நின்ற மூவர் முகங்களையும் மாறி மாறிப் பார்த்த அபராஜிதன் சிறிது நேரம் ஏதோ யோசித்தான். கடைசியாக எல்லோரையும் உட்காரச் சொல்லித் தானும் உட்கார்ந்துகொண்டான். பிறகு ஒரு மரப்பலகையையும் சுண்ணாம்பையும் கொண்டுவரச் சொல்லி எதிரிப் படைகளும் தன் படைகளும் இருக்கும் இடங்களைக் குறிப்பிட்டுக் கோடுகள் இழுத்தான். அந்தப் பலகையை அன்னன் பல்லவராயனிடம் நீட்டி. “படைத்தலைவரே! தாங்கள் போர்த் தந்திரத்தில் நிகரற்றவர்கள். எந்த இடத்தில் நாம் எதிரிகளை எப்படித் தாக்கவேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறீர்கள்?” என்று கேட்டான்.

அன்னன் பல்லவராயன் தன் விழிகளைப் பலகைமீது நாட்டி ஆராய்ந்தான். எந்த இடத்தில் தாக்கினாலும் தங்கள் படைகளை மீளமுடியாதபடி போர்நிலை அமைந்து நின்றது. அதைப் பார்த்ததும் அன்னன் பல்லவராய

னுக்குக் கோபம் மிதமிஞ்சிப் போகவே, “இந்த நிலைக்குத் தாங்கள்தானே காரணம்?” என்றான் அபராஜிதனை நோக்கி.

“நான் காரணமல்ல” என்றான் அபராஜிதன்.

“பிறகு யார் காரணம்?”

“யாரும் காரணமல்ல, போர் நிலை அமைந்துள்ள விதம் அப்படி”.

“ஜகத்விசயன் கூடலைவிட்டுப்புறப்பட்ட உடனேயே நீர் அவனைத் தாக்கியிருக்கலாமல்லவா?”

“தாக்கியிருக்கலாம். ஆனால் நான் படைகளை அழைத்துக்கொண்டு தெற்கே சென்றால் இலங்காபுரன் மதுரையிலிருந்து கிளம்பி, பொன்னமராவதியைப் பிடித்துக்கொண்டிருப்பான். மேலே பொன்னமராவதிக்கும் கீழ கூடலுக்கு மிடையில், அதாவது இலங்காபுரனுக்கும் ஜகத்விசயனுக்குமிடையே நான் சிக்கிக்கொண்டிருப்பேன்”

“அவர்கள் நிலையும் அப்படித்தானே? நாங்கள் பொன்னமராவதிக்கு வடக்கே இருந்தோம். அப்பொழுது தங்கள் ரட்சிப் படைக்கும் எங்கள் படைக்குமிடையில் இலங்காபுரன் சிக்கியிருக்கமாட்டானா?” என்று வினவினான் அன்னன் பல்லவராயன்.

“சிக்கியிருக்கமாட்டான். தங்களிடம் இருபதினாயிரம் வீரர்கள் இருக்கிறார்கள் அவனிடமும் அதே பலம் அவன் பத்தாயிரம் வீரர்களைப் பொன்னமராவதியில் நிறுத்திப் பாக்கி வீரர்களை எனக்காக ஏவினால் அவனுக்கும் ஜகத் விசயனுக்கும் இடையில் நான் அழிந்துபோவேன். மீதி பத்தாயிரம் பேர் பொன்னமராவதிப் பிராந்தியத் தில் உங்களைத் தேக்கி நிறுத்துவார்கள். என்னை அழித்து விட்டு ஜகத்விசயனும் பொன்னமராவதி சேர்ந்தால் என் பத்தாயிரம் படைகள் நாசமாவதோடு மட்டுமல்ல, உங்கள் படைபலமும் குறையும். நீங்கள் தனித்தே சிங்களத்தின் இரு தண்டநாயகர்களுடன் போரிட நேரிடும். முடிவைப்

பற்றி நான் விவரிக்கத் தேவையில்லை'' என்றான் அபராஜிதன்.

இதைக் கேட்ட சின்னப் பல்லவராயன் மட்டுமின்றி, காரிவளவனும் மார்க்கியனும்கூட யோசனையில் ஆழ்ந்தார்கள். ''நீங்கள் சொல்லுவது வாஸ்தவந்தான். இப்பொழுது நாம் என்னதான் செய்யவேண்டும்?'' என்று அண்ணன் பல்லவராயன் கேட்டான்.

''எதுவும் செய்வதற்கில்லை'' என்றான் அபராஜிதன்.

''கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருப்பதா?'' என்றான் காரிவளவன்.

''வேலையில்லாதபோது படைகளுக்கு ஓய்வு கொடுப்பதுதான் நல்லது'' என்றான் அபராஜிதன்.

மார்க்கியன் ஏதோ சொல்ல முயன்று முடியாமல், 'ஹூம்' என்று ஒருமுறை கனைத்தும், பிரம்மாண்டமான தன் சரீரத்தை ஆட்டியும் தன் எரிச்சலைத் தெரிவித்துக் கொண்டான்.

அபராஜிதன் யார் எரிச்சலையும் லட்சியம் செய்யவில்லை அடுத்த சில தினங்கள் எங்குமே அவன் அசையவில்லை ஒருநாள் கூடாரத்துக்குவெளியே அவன் உலாவிக் கொண்டிருக்கையில் ஓர் ஒற்றன் அவசரமாகக் குதிரைமீது பறந்து வந்து அபராஜிதன் எதிரில் குதித்தான் அப்போது அபராஜிதனுடன் அண்ணன் பல்லவராயனும் காரியும் மார்க்கியனும் இருந்தார்கள். ஒற்றன் கீழே குதித்ததும் இரைக்க இரைக்கத் தகவலைச் சொல்லத் தொடங்கி, ''பிரபு! ஜகத்விசயன் மீண்டும் தொண்டிப்பக்கம் திரும்பிப் போவதாகத் தொண்டியில் பேசிக்கொள்கிறார்கள்.'' என்றான்.

''கப்பல்கள் என்ன ஆயின?'' என்று கேட்டான் அபராஜிதன்.

''துறைமுகத்திலிருந்து மறைந்துவிட்டன'' என்றான் ஒற்றன்.

''சரி, நீ போ'' என்று உத்தரவிட்டான் அபராஜிதன்.

ஒற்றன் சென்ற பிறகு, ''எந்தக் கப்பல்கள்?'' என்று அபராஜிதனைக் கேட்டான் பல்லவராயன்.

''ஜகத்விசயன் அழைத்து வந்திருந்த போர்க் கப்பல்கள்.''

''எங்கு போய்விட்டன?''

''சிங்களத்துக்குத்தான்.''

''பேஷ் பேஷ்! இனி நாம் தொண்டியைப் பிடித்துக் கொள்ளலாம்'' என்ற அண்ணன் பல்லவராயன் குரலில் குதூகலம் மிகுந்திருந்தது.

''அதை எதற்காகப் பிடிக்கவேண்டும்?'' என்று வினவினான் அபராஜிதன்.

ஒரு முக்கியப் போர் நிலையத்தை ஏன் பிடிக்கவேண்டும் என்று கேட்டால் என்ன சொல்வதென்று திகைத்த சோணாட்டுப் படைத்தலைவன், ''வேறு என்னதான் செய்வதாக உத்தேசம்?'' என்று கேட்டான்

''மேலும் தெற்கு நோக்கிப் படைகளை நடத்திச்செல்ல வேண்டியதுதான்'' என்ற அபராஜிதனை நோக்கிப் பல்லவராயனின் உஷ்ணமான கண்கள் திரும்பின.

''பிறகு...?'' என்று வினவினான் பல்லவராயன்.

''திரும்பவும் இங்கு வரவேண்டியது'' என்று கிடைத்தது பதில்.

அபராஜிதனுக்குப் பைத்தியம் பிடித்திருக்குமோ என்று அவனைக் கூர்ந்து நோக்கினான் அண்ணன் பல்லவராயன். அந்தப் பார்வையைக் கண்டதும் பல நாட்களாகச் சிரிக்காத பாண்டிய சேனாதிபதி வாய்விட்டு இடி இடி என்று பலமாகச் சிரித்தான். வெகுநேரம் சிரித்துவிட்டு, அந்தச் சிரிப்பால் சினந்து சீறிக்கொண்டிருந்த அண்ணன் பல்லவராயனுக்கும் கவலையுற்றிருந்த தனது இரு படைத் தலைவர்களுக்கும் தான் அனுஷ்டிக்கப் போகும் போர் முறையை விவரிக்க விவரிக்க அண்ணன் பல்லவராயன் முகத்தில் மட்டுமன்றி, காரி, மார்க்கியன் முகங்களிலும் கோபம் மறைந்து, முதலில் ஆச்சரிய ரேகையும் பிறகு பிரமிப்பும் படரத் தொடங்கின.

போர்த் தந்திரத்தில் இணையற்றவனென்று பெயர் வாங்கிய அண்ணன் பல்லவராயனே வியக்கும்படியான திட்டத்தை வகுத்த அபராஜிதனைப் பற்றியோ, அவன் படைகளைப் பற்றியோ சிறிதும் சிந்திக்காமல், கருணாகரத்தேவன் இருப்பிடமான பாசிப்பட்டணத்துக்கு வந்துசேர்ந்த ஜகத்விசயன், மாதவி விரித்த வலையில் பூரணமாகச் சிக்கிப் பேரானந்தத்தில் மூழ்கியிருந்தான். பாசிப்பட்டணக் கோட்டையில் ஜகத்விசயனை ராஜ மரியாதைகளுடன் வரவேற்ற கருணாகரத்தேவன் அவனுக்குச் சகலவித சௌகரியங்களையும் செய்து கொடுத்தான். அவன் உபசாரங்களில் லயித்த ஜகத்விசயன் பாசிப்பட்டணத்துக் கோட்டைக்குள் சில வீரர்களை மாத்திரம் நிறுத்திக்கொண்டு தன்னுடன் வந்த ஆயிரம் வீரர்களைக் கோட்டைக்கு வெளியிலேயே நிறுத்தினான். அவன் கவலையில்லாமல் காலங்கழிப்பதைப் பார்த்த கருணாகரத்தேவன், "என்ன தண்டநாயகரே! உங்கள் படைகளைத் தொண்டியிலிருந்து இரண்டு காத தூரத்தில் நிறுத்தியிருக்கிறீர்கள். நீங்களும் பெரும் படையை விட்டு இங்கு தங்கியிருக்கிறீர்களே! இது எதிரிகளுக்குத் தெரிந்தால்...?" என்று சந்தேகமாகக் கேட்டான்.

"தேவரே! தெரிந்தாலென்ன? இலங்காபுரத் தண்டநாயகர் சைன்னியமும் என் சைன்னியமும் வெகு அருகிலிருக்கின்றன. தமிழ்நாடு வியக்கும்படியான ஒரு நிகழ்ச்சி தொண்டியில் ஏற்படப்போகிறது. அத்துடன் அபராஜிதன் படைகள் நசுக்கப்படும். பிறகு என் படையும் இலங்காபுரத் தண்டநாயகர் படைகளும் சேர்ந்து வடக்கே தனியாயிருக்கும் அந்தப் பெரிய பல்லவராயனைப் பொடியாக்கிவிடும்" என்று கூறிப் பெரிதாக நகைத்தான்.

தேவனும் கூட நகைத்தான். ஆனால் அவன் சிரிப்பு அன்று வரண்டு இருந்தது. ஒரு வாரத்துக்குப் பிறகு அதே சிரிப்பில் வளப்பம் காணப்பட்டது. அந்த வளப்பமான சிரிப்பை அவன் உதிர்த்த நாள் பாண்டிய நாட்டுக்கும் வளப்பத்தை விளைவித்த நாள். அந்தத் தினத்தில் தான்

தொண்டியிலிருந்த ஒற்றன் ஒருவன் அவசரமாக வந்து ஜகத்விசயனைக் காண விரும்பினான்.

"எதற்காக?" என்று கேட்டான் கருணாகரத்தேவன்.

"அவர் படைத்தலைவர் தொண்டியிலிருந்து செய்தி யனுப்பியிருக்கிறார்."

"சரி; ஓலையை என்னிடம் கொடு" என்றான் கருணாகரத்தேவன்.

"முடியாது. அவரிடம் நேரில் கொடுக்கவேண்டும்."

"அவரைப் பார்க்க முடியாது. மாதவியுடன் உப்பரிகையில் இருக்கிறார்" என்றான் தேவன். அத்துடன் சொன்னான்: "இந்தக் கோட்டைக்கு நான் தான் அதிபதி. இலங்காபுரத் தண்டநாயகன் ஆதரவில் தான் நானும் என்னைச் சேர்ந்த பாண்டிய வீரர்களும் இங்கிருக்கிறோம். செய்தி அவசரமாயிருந்தால் என்னிடம் ஓலையைக்கொடு. நான் இப்போதே ஜகத்விசயனிடம் கொடுக்கிறேன்" என்று.

கருணாகரத்தேவன் குரலிலிருந்த அதிகாரத்தையும் கடுமையையும் கண்ட ஒற்றன் வேறுவழியில்லாமல் ஓலையை அவனிடம் ஒப்படைத்தான். ஒற்றனைக் கவனித்து வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்குமாறு தன் வீரர்களுக்கு உத்தரவிட்டு ஓலையை எடுத்துக்கொண்டு தனது அறைக்குச் சென்றக் கருணாகரத்தேவன் கதவுகளைச் சாத்திக் கொண்டு ஓலையைப் படித்தான் பிறகு மெள்ள அந்த ஓலையைப் பக்கத்தில் எரிந்துகொண்டிருந்த தீபத்தில் காட்டிப் பற்றவைத்தான். எரிந்து கீழே விழுந்த ஓலைச் சாம்பலைத் தன் காலால் மிதித்து அழித்தான் பிறகு இதழ்களில் புன்முறுவல் படர அறைக் கதவைத் திறந்து கொண்டு பூனைபோல் வெளியே நடந்து சென்றான்.

60. பைங்கிளியா? கூண்டுக்கிளியா?

காதும் காதும் வைத்த மாதிரி வெகு ரகசியமாகக் கருணாகரத்தேவன் எரித்துவிட்ட ஓலையைப் பற்றிய

ஸர்மம் பாஸிப்பட்டணக் கோட்டையிலிருந்த யாருக்குமே தெரியாது போயிற்று. ஓலையைக் கொண்டு வந்தவற்றன் என்ன ஆனான் என்பது புரியாத பெரும் புதிராகவே ஆகி விட்டபடியால் ரகசியம் வெளியாவதற்கான ஒரே மார்க்கமும் அடை பட்டு விட்டது. யுத்தரங்கத்திலிருந்தோ படைத் தலைவர்களிடத்திலிருந்தோ செய்தி ஏதும் வராததால் ஜகத்விசயன் எத்தகைய கவலையுமின்றி மாதவியுடன் உல்லாசமாகக் காலங் கழித்துக் கொண்டிருந்தான். விஷயமாக அவன் கொண்டிருந்த அசிரத்தை குணாகரத் தேவனுக்கு மட்டுமல்லாமல் மாதவிக்கும் ஆச்சரியத்தைக் கொடுத்தது. அந்த ஆச்சரியம் இடங்கொடுக்கலாயிற்று. 'ஜகத்விசயன் சீக்கிரம் அபராஜிதனை எதிர்த்து முறியடிப்பான். அவனை கையையும் காலையும் கட்டிக் கொண்டு வந்து தன் முன் வீழ்த்துவான்' என்று நினைத்து அந்த நாளை எதிர் பார்த்து நின்ற மாதவிக்குப் போர் ஏதும் நிகழாதது மட்டுமல்லாமல் பாண்டிய சேனாதிபதி பொன்னமராவதியை விட்டுத் தெற்கே சென்று கைக்கெட்டாமல் நழுவி விடுவதைப் பார்த்ததும் கவலை மட்டுமன்றி, கோபமும் பொங்கவே அவள் ஜகத் விசயனை வெளிப்படையாகவே கடிந்து கொண்டாள். அவள் கோபத்தைக் கண்ட ஜகத் விசயன் அதன் காரணத்தைப் புரிந்து கொண்டு மென்னப் புன்முறுவல்காட்டி. "மாதவி, கோபத்திலும் உன் முகம் அழகாகத்தானிருக்கிறது" என்று செல்லமாகப் பேச ஆரம்பித்து அவள் தோள் மீது தன் கையையும் லேசாக வைத்தான்.

மாதவி கடுப்பான முகத்தை அவன் மீது திருப்பி, தோள்மீதிருந்த அவன் கையையும் தன் கையால் வெடுக்கென எடுத்து எறிந்தாள்.

"எதற்காக இத்தனை கோபம் மாதவி?" என்று கேட்டான் ஜகத்விசயன்.

"யாருக்காவது கோபம் வரவேண்டுமல்லவா?" என்ற மாதவியின் குரலில் உஷ்ணம் மாத்திரமன்றி ஏளனமும் பிரமாணமாகத் தொனித்தது.

உஷ்ணத்துக்குக் காரணததைப் புரிந்துகொண்ட ஜகத்விசயனுக்கு அவள் குரலில் தொனித்த ஏளனத்துக்குக் காரணம் புரியாதுபோகவே கேட்டான், "யாருக்காவது கோபம் வரவேண்டுமா? எதற்காகக் கோபம் வரவேண்டும்?" என்று.

"கோபம் எதற்காக வரும்?"

"நீதான் சொல்லேன்."

"விரோதத்தால்."

"சரிதான்."

"விரோதத்துக்காகக் கோபம் வருவதென்றால் உங்களுக்கு இத்தனை நாள் வந்திருக்கவேண்டும்."

"ஏன்?"

"உங்கள் விரோதி உங்களிடமிருந்து நழுவுகிறானே; புரியவில்லையா?"

'என் விரோதியா! அப்படியொருவன் இருக்கிறானா?

"ஏன், அபராஜிதன் உங்கள் நண்பனோ?"

மாதவியின் கடைசிச் சொற்களைக் கேட்ட ஜகத்விசயன் லேசாக நகைத்தான். "இப்பொழுது நீங்கள் நகைக்கலாம். ஆனால், அபராஜிதன் வெற்றிக்குப் பிறகு தமிழ்நாடு மட்டுமல்ல, சிங்களமும் உங்களைப் பார்த்து நகைக்கும். உங்களைப் பார்த்து மட்டுமல்ல, உங்களுக்கு இடம் கொடுத்தேனே என்னைப் பார்த்தும் நகைக்கும். நகைப்பது மட்டுமல்ல, "இந்தப் படுபாவிப் பெண் இலங்கையின் சிறந்த தண்டநாயகனைத் தன் வலையில் சிக்கவைத்து அழித்துத் தொலைத்து விட்டாள்' என்று தூற்றவும் செய்வார்கள்" என்று வெறுப்புக்கலந்த குரலில் சொற்களை உதிர்த்தாள் மாதவி.

ஜகத்விசயன் அவளுடைய அழகிய இடைக்காகத் தன்கரத்தைச் செலுத்தித் தன்னை நோக்கி அவளை இழுத்து, "மாதவி உன் போன்ற ஓர் அபூர்வ சொத்தைப் பெற நான் செய்ய வேண்டிய பெரும் செயல் என்ன

லென்பதை நான் அறியாதவனென்றா நினைக்கிறாய்? நான் இங்கு ஏதோ கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேனென்று நினைக்காதே. போர்நிலையை நான் அமைத்திருக்கும் முறையில் அபராஜிதன் என் சுண்டு விரலைக்கூட அசைக்க முடியாது. பாண்டியநாட்டில் அபராஜிதன் பெரிய தளபதியாயிருக்கலாம். ஆனால் அவன் போர் முறைகளைக் கவனித்துப்பார். சிங்களத்தில் சாதாரண வீரனுக்குத் தெரிந்த போர்த் தந்திரம்கூட அவனுக்குத் தெரியுமென்று தோன்றவில்லை. அவன் படை எந்தப் பகுதியில் வந்தாலும் என் படைகள் அவனையும் சோழநாட்டுப் படைகளையும் துண்டித்துவிடும். தான் கெட்டது போதாதென்று அண்ணன் பல்லவராயனையும் அபராஜிதன் சேர்த்து இழுத்துக்கொண்டு தெற்கு நோக்கிப் பயணமாயிருக்கிறான். இராமேசுவரத்தைப் பிடித்துக்கொண்டு கூடலில் முதலில் உன் மாமன் அரணில் தங்கிப் பிறகு தொண்டியின்மீது பாயலாம் என்பது அவன் திட்டம். ஆனால் அவன் கூடலை நெருங்கு முன்பாகத் தொண்டிக்கருகில் ஐயாயிரம் படைவீரர்கள் சிங்களத்திலிருந்து வந்திறங்குவார்கள். அதற்காகப் போர்க்கப்பல்களையும் அனுப்பியிருக்கிறேன். அவன் தொண்டிக்குத் திரும்பும்போது அந்த ஐயாயிரம் வீரரும் என்னிடம் தற்சமயமுள்ள பதினாயிரம் வீரரும் அவனை எதிர்ப்பார்கள். அதற்காகவே இங்கே தங்கியிருக்கிறேன். இன்னொரு பக்கத்திலிருந்து அபராஜிதனை உன் மாமா தாக்குவார். நானும் உன் மாமாவும் ஏற்படுத்தும் பாக்கு வெட்டிக்குள் அபராஜிதன் சைன்னியம் சிக்கி, ஒரே வெட்டில் தீர்க்கப்படும்'' என்று போர்த் திட்டத்தை அவளுக்கு விளக்கினான்.

அவன் சிங்களத்துக்குக் கப்பல்களை அனுப்பிய காரணத்தை அப்பொழுதுதான் புரிந்துகொண்ட மாதவி, அவன் போர்த்தந்திரத்தை நினைத்துப் பெரிதும் வியந்தாள். இருந்தாலும் ஒரு சந்தேகம் கேட்டாள்: ''நீங்கள்

எதிர்பார்க்கிறபடி அபராஜிதன் கூடலிருந்து கிளம்பி தொண்டிக்கு வராவிட்டால்?'' என்றுமாதவி வினவினாள்.

''அப்பொழுதும் நிலைமை சீர்படாது. கூடலிலிருந்து சிங்களம் கூப்பிடு தூரம். இடையேயுள்ள கடலில் நமது கப்பல்கள் உலாவும். தொண்டியிலுள்ள நமது படைக்கும் அங்குள்ள கடற்படைக்கும் இடையே சிக்குவான் அபராஜிதன். போர் சைன்னியங்களில் தொகையால் மட்டுமல்ல, அவையிருக்கும் நிலையாலும் ஜெயிக்கப்படுகிறது. இப்பொழுதிருக்கும் நிலையில் அபராஜிதன் தோற்றுவிட்டானென்றே வைத்துக்கொள். அவன் மீள வழியே இல்லை'' என்று பதில் சொன்னான் ஜகத்விசயன்.

ஜகத்விசயனின் அபூர்வ மூளையை நினைத்து வியந்த மாதவி இவனைத் துணையாகப் பெற்றது மாமாவின் பாக்கியம் என்றே நினைத்தாள். அத்துடன் கருணாகரத் தேவனும் அந்த நம்பிக்கைக்குத் தூபம் போட்டுக் கொண்டிருந்தான். அபராஜிதன் மீது வெறுப்பைச் சந்தேகத்துக்கிடமின்றிக் காட்டினான் கருணாகரத் தேவன்.

''ஏன் அப்படி அவரை வெறுக்கிறீர்கள்?'' என்று கேட்டாள் மாதவி.

''அவனை எப்படிவெறுக்காதிருக்க முடியும்? தமிழ் நாட்டைப் போரில் ஆழ்த்தியவனை விரும்பவா சொல்கிறீர்கள்?'' என்று கேட்ட அவன் குரலில் வெறுப்பு பூரணமாகவே தொனித்தது.

''அவர் எங்கே யுத்தத்தில் ஆழ்த்தினார்?'' என்றாள் மாதவி.

''வேறு யார் இந்தப் போருக்குக் காரணம்? என் திட்டப்படி வீரபாண்டியனுக்கும் கார்குழலிக்கும் திருமணம் முடிந்திருந்தால் இந்த யுத்தம் ஏற்பட்டேயிருக்காது. பாண்டியப் படைகளும் சிங்களப் படைகளும் மழவராயன் படைகளும் ஒன்றாக இணைந்திருந்தால் சோழர்கள் படையெடுக்கத் துணிந்திருப்பார்களா? அது மட்டுமா? பாண்டிய சேனாதிபதி மன்னனுக்கு எதிராகப்

புரட்சி செய்து எதிரிகளின் பக்கமா சேரவேண்டும்? வெட்கக்கேடு பெண்ணே, வெட்கக்கேடு! இந்தத் துரோகியை நான் எப்படி நேசிப்பேன்?'' என்றான் கருணாகரத்தேவன்.

அவன் பேச்சில் பல முரண்பாடுகளிருப்பதை மாதவியும் கவனிக்கத்தான் செய்தாள்! பாண்டியப் படைகளும் மழவன் படைகளும் சேர்ந்தால் சிங்களப் படைகள் நிலை மோசமாகியிருக்கும் என்பது அவளுக்குத் தெரிந்துதானிருக்கும். ஆனால் அதை அவள் வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. ஒன்று மட்டும் அவளுக்குத் இட்டமாகப் புரிந்தது. தான் முடித்து வைத்த கல்யாணத்தை அபராஜிதன் குறுக்கே புகுந்து கெடுத்துவிட்டான் என்பதில் தேவன் அடங்காத ஆத்திரம் கொண்டிருந்தான் என்பதை மட்டும் சந்தேகமறத் தெரிந்து கொண்ட அவள், அபராஜிதனிடம் தேவனுக்கு விரோதம் இருக்கும் வரை காரணத்தைப் பற்றிக் கவலைப்படுவானேன் என்று வாளாவிருந்துவிட்டாள்.

மாதவியின் மனத்திலே அமைதி நிலவிக் கிடந்தது. ஜகத்விசயன் திட்டங்களைக் கேட்டதும் அபராஜிதன் ஒழிந்தான் என்றே கருதினாள். அந்த விரோதியின் அழிவில் அவளுக்கிருந்த சாந்தியால் சூழ்நிலையைப் பற்றியோ தினம் தினம் அதிகமாகிக் கொண்டிருந்த ஜகத்விசயன் சேஷ்டைகளைப் பற்றியோ அவள் கவலைப் படவில்லை.

ஜகத்விசயன் தொண்டியிலிருந்த தன் படைத்தலைவனிடமிருந்து செய்தி வராதவரை தான் புறப்படவேண்டிய அவசியமில்லையென்றே நினைத்தான். அது அவனுக்கு ஆறுதலை அளித்தது. ஆனால், அந்த ஆறுதலை அடியோடு தொலைத்து விடக்கூடிய பேரிடியொன்று திடீரென அவன் மீது இறங்கியது.

அன்று அவனும் மாதவியும் கருணாகரத்தேவன் மாளிகையிலுள்ள விருந்து மண்டபத்தில் உல்லாசமாகச் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். பிரும்மாண்டமான

தூண்களில் புதைக்கப்பட்டிருந்த புதுமை விளக்குகள் சுடர்விட்டெரிந்து அவர்களைப் பார்த்துச்சிரித்துக்கொண்டிருந்தன. வெளியிலே மழை லேசாகத் தூறிக்கொண்டிருந்தது. அந்த மண்டபம் இருந்த அடக்கத்துடன், அந்தத் தூறலும் அந்தத் தூறலைத் துழாவி வந்த மெல்லிய காற்றும் இன்பமான சூழ்நிலையைச் சிருஷ்டித்தன. அந்த இன்பச் சூழ்நிலையையும் அமைதியையும் குலைக்க 'தடதட' வென ஒரு வீரன் மாடிப்படிகளில் ஏறிவந்தான். உள்ளே செல்லக்கூடாதெனத் தடுத்த காவல் வீரனையும் ஒதுக்கித்தள்ளி, ''தண்டநாயகரை நான் உடனே பார்க்கத்தான் வேண்டும். யார் என்னைத் தடுத்தாலும் வெட்டிப் போடுவேன்'' என்று மண்டபமே அதிரும்படி இரைந்துகொண்டு உள்ளே நுழைந்தான்.

சமய சந்தர்ப்பம் தெரியாமல் திடும் பிரவேசமாகவும் அநாகரிக முறையிலும் உள்ளே நுழைந்து நின்ற வீரன்மீது கோபம் பொங்கும் விழிகளைத் திருப்பிய ஜகத்விசயன் "எங்கிருந்து வருகிறாய்? முறையின்றி உள்ளே நுழைய வேண்டிய அத்தனை அவசரமான காரியம் என்ன?'' என்று விருந்து மண்டபமே அதிருபபடி இரைந்தான்.

வீரன் ஜகத்விசயனையும் மாதவியையும் மாறி மாறிப் பார்த்துவிட்டுச் சொன்னான். ''உங்கள் அமைதியை நான் கலைக்கவில்லை'' என்று.

"பின் யார் கலைத்தார்கள்?" மீண்டும் இடிபோல் இடித்தது ஜகத்விசயன் குரல்.

''நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. சிங்களத்தின் தலைவிதி கலைத்திருக்கலாம். அல்லது அபராஜிதன் கலைத்திருக்கலாம்'' என்றான் வீரன் சற்றும் பணிவைக் காட்டாமல்.

"அபராஜிதனா! என்ன உளறுகிறாய்?" என்ற ஜகத்விசயனின் குரலில் சற்று கடுப்புக் குறைந்திருந்தது. அபராஜிதன் பெயரைக் கேட்டதும் மாதவியும் தன் அழகிய விழிகளைத் தூதன்மீது நாட்டினாள்.

"தொண்டியிலுள்ள நமது சைன்னியம் முறியடிக்கப்பட்டுவிட்டது" என்று அதிர் வேட்டை வீசினான் வீரன்.

"என்ன நம் சைன்னியமா! உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா? இலங்கையிலிருந்து வந்த படை என்ன ஆயிற்று?" பாதிச் சாப்பாட்டில் உதறிக்கொண்டு திடீரென ஆசனத்திலிருந்து எழுந்தான் ஜகத்விசயன்.

"அதுவும் சின்னாபின்னப் படுத்தப்பட்டது' என்று பதிலளித்தான் தூதன்.

"தொண்டித் துறைமுகத்திலிருந்து சற்றுத் தள்ளி ரகசியமாகத்தானே சிங்களத்திலிருந்து வந்த உதவிப்படை இறங்கியது?"

"ஆமாம்."

"அப்பொழுதுதான் அபராஜிதன் தெற்கே போய்க் கொண்டிருந்தானே!"

"போகவில்லை போவதாகப் பாசாங்கு காட்டினான். தன் சைன்னியத்தில் ஒரு சிறு பகுதியை அந்தப் பக்கம் நடமாட விட்டுத் திடீரென பெரும்படையுடன் தொண்டியை நோக்கி, காட்டுப் பகுதிகளில் மறைந்துவந்து, தங்கியிருந்தான். சிங்களத்திலிருந்து வந்த கப்பலிலிருந்து படைகள் தரையில் இறங்கியதும் அபராஜிதன் படை அவர்களின்மீது பாய்ந்து விட்டது. அணிவகுத்து நிற்கக் கூட அவகாசமில்லை பிரபு! தாங்கள் உதவிப் படைகளுக்குக் கப்பல்களை அனுப்பியது அவனுக்கு எப்படியோ தெரிந்திருக்கிறது."

"அப்புறம்?"

"அவன் காரியம் சுலபமாகிவிட்டது. உதவிப்படையை அழித்ததும் அவன் இராமேச்வரத்துக்குப் போய்விட்டானென்று தூங்கிக்கொண்டிருந்த தொண்டிப் படையையும் இரவில் தாக்கிச் சின்னாபின்னப் படுத்திவிட்டான். தங்கள் உபதளபதி சரணடைந்துவிட்டார்."

ஜகத்விசயன் முகம் 'சவ' மென வெளுத்தது. "இதைப் பற்றி முன்பே ஏன் தகவல் அனுப்பவில்லை?"

"பத்து நாட்களுக்கு முன்பே உபதளபதி ஓலை அனுப்பினாரே?"

"ஓலையா? என்ன ஓலை?" என்று கேட்ட ஜகத்விசயன் கண்களில் சந்தேகச் சாயை திடீரெனப் படரவே, அவன் தன்பார்வையைக் கருணாகரத் தேவன்மீது திருப்பினான். கருணாகரத்தேவன் புன்முறுவலுடன் நின்று கொண்டிருந்தான்.

"என்ன தேவரே, இதற்கு என்ன சொல்கிறீர்?"

"எதற்கு?" என்று கேட்டார் தேவரும்.

"யாராவது ஓலை கொண்டு வந்தானா?"

"ஓ! கொண்டு வந்தானே!"

"ஏன் என்னிடம் சொல்லவில்லை?"

"பிரபுவும் மாதவியும் உல்லாசமாக இருந்தீர்கள். அந்த இன்பத்தைத் துன்பத்தால் உடைக்க இஷ்டமில்லை."

அவ்வளவுதான்! ஜகத்விசயன் சுயநிலை இழந்து மண்டபம் அதிரும்படியாகக் கத்தத் தொடங்கி, "அடே கிழட்டுப் பயலே! உன் துரோகச் செயலுக்குத் தகுந்த பலன் அளிக்கிறேன் பார். உன்னைக் கண்டதுண்டமாக வெட்டி, பராக்கிரமபாகுவுக்கு அனுப்பி வைக்கிறேன்' இங்குள்ள ஜனங்கள்மீது என் வீரர்களை ஏவி ஊரையே கொளுத்திவிடுகிறேன்" என்றான்.

கருணாகரத்தேவன் முகத்தில் புன்முறுவல் அதிகமாகப் படர்ந்தது. "பிரபு! அபராஜிதன்படைகள் தொண்டியைப் பிடித்து உமது படைகளை அழித்துவிட்டன. எனக்குக் கிடைத்திருக்கும் செய்தி சரியானால் அவன் படைகளுக்கும் பெரிய பல்லவராயர் படைகளுக்கும் இடையே கிடக்கிறது

இலங்காபுரன் படைகள் இப்பொழுது அவர்கள் பாக்கு வெட்டி சிங்களப் படைகள் பாக்கு இந்தக் கிழவனையும் தாங்கள் ஒன்றும் செய்ய முடியாது. தங்களுடன் வந்த ஆயிரம் வீரர்கள் கோட்டைக்கு வெளியே இருக்கிறார்கள். நான் கோட்டைக் கதவைச் சாத்திவிட்டேன். ஜகத்விசயத் தண்டநாயகர் இப்பொழுது என் விருந்தினர் மட்டுமல்ல. கைதியுங்கூட. இந்தப் பைங்கிளியும் இப்பொழுது கூண்டுக் கிளிதான். அபராஜிதன் இன்னும் இரண்டு நாட்களில் இங்கு வருவார்'' என்று சொல்லிவிட்டு, ''டேய், யாரங்கே?'' என்றான்.

உள்ளே நுழைந்த வாள் தாங்கிய வீரர்களிடம் ஜகத் விசயனையும்மாதவியையும் ஒப்புவித்த கருணாகரத்தேவன் அவர்களை வீரர்கள் இழுத்துச் சென்றதும் அமைதிக்கு அடையாளமாகப் பெருமூச்சொன்றை விட்டு, ''பாக்கு வெட்டிக் கதையானால் என்ன? தமிழ்நாடு பிழைத்தது'' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டான்.

61. பெரிய இடத்துப் பரிசு

மக்கள் எதிர்பார்ப்பது சொற்பமாயிருந்து அதில் ஏமாற்றம் கண்டாலே மனச்சோர்வு அதிகமாயிருக்கும். எதிர்பார்ப்பது ஏராளமாயிருந்து ஏமாற்றமும் எல்லையை மிஞ்சினால் மனத்தில் இடியே விழுந்துவிடுகிறது. ஆனால் அந்த எல்லை மீறிய ஏமாற்றத்தில் எதிர்பாராத திருப்பம் ஏற்படும்போது மக்கள் மனம் விசித்திரமான நிலையை அடைகிறது ஒருகணம் ஆச்சரியம் என்னும் அணையால் தேக்கப்படும் மன அலைகளின் இக்பரமை பிறகு கரையை உடைத்துக்கொண்டு கன வேகத்துடன் பிரவகித்து எங்கும் பரந்து நிற்கும் மகிழ்ச்சி வெள்ளம்.

அபராஜிதன் போர்த் தந்திரத்தால் தமிழ்நாட்டு மக்கள் அனுபவித்த ஏமாற்றமும் மகிழ்ச்சி வெள்ளமும் எந்தச் சரித்திர ஆசிரியனும் விவரிக்க முடியாத அத்தனை வேகத்தில் ஒன்றை ஒன்று அடுத்துத் தாவி உருண்டு புரண்டு பெரும் அலைகளாகக் கிளம்பியபடியால் இறுதியில் ஏற்பட்ட குதூகலம் போர் முடிந்த ஒருமாத காலத்திற்குப் பின்னும் சிறிதும் குறையாதது மட்டுமன்றி, மேலும் மேலும் அதிகப்பட்டுத் தமிழ்நாட்டில் ஏதோ பெரிய திருவிழா நடப்பதுபோன்ற பிரமையை ஏற்படுத்தியது. அபராஜிதன் சென்ற விடமெல்லாம் மக்கள் கடல் போலக் குவிந்து நின்று ஆரவாரம் செய்தார்கள். பாண்டிய சேனாதிபதி வருகிறான் என்றுகேட்டமாத்திரத்தில் வழிநெடுகக் கட்டப்பட்ட தோரணங்கள் காற்றில் அசைந்து அவனை வாவா வென்று கைகாட்டி அழைத்தன. அவன் வருகையை ஒட்டி வீடுகளின் வாயில்களில் நீர் தெளித்த மங்கையரின் செங்கை வளைகள் குலுங்கியதால் தமிழ்நாடு முழுவதுமே கலீர் கலீரென இன்பநாதம் எழுப்பிச் சூழ்ந்து கிடந்தது. தமிழன்னையும் தன் வீரப் புதல்வன் வருகிறானே என்ற மகிழ்ச்சியால் தமிழ்ப் பாவையர் தன் மண்ணில் தீட்டிய விதவிதமான கோலங்களால் சித்திரப் போர்வையை உடுத்திக் கொண்டிருந்தாள். எங்கும் ஆலய மணிகள் கம்பீரமாகச் சப்தித்தன. தாரைகள் முழங்கின; பாட்டும் கூத்தும், மேளமுமாகத் தமிழ்நாடு அமர்க்களப்பட்டது. அபராஜிதன் சூடிய வெற்றி வாகையில் ஏற்பட்ட அமர்க்களத்தில் மதுரையில் நடந்த குலசேகர பாண்டியன் பட்டாபிஷேகத்தைக் கூட மக்கள் அதிகமாகப் பொருட்படுத்தவில்லை. இலங்காபுரன் முறியடிக்கப்பட்டதுமே மதுரையை விட்டுச் சொல்லாமல் கொள்ளாமல் மலை நாட்டுக்கு வீரபாண்டியன் மூட்டையைக் கட்டிவிட்டதால் காலியாகக் கிடந்த மதுரையின் அரியணையில் குலசேகர பாண்டியனை ஏற்றி வைக்கப் பிரமாதமான ஏற்பாடுகளை அன்னன் பல்லவராயன் செய்திருந்தான். ஆனால், அதே மதுரை நகருக்குள் அதே பட்டாபிஷேகத்திற்கு அபராஜிதன் விஜயம் செய்யப் போகிறான் என்பதைக் கேட்ட மாத்திரத்தில்

மக்கள் நோக்கமெல்லாம் பாண்டிய சேனாதிபதியை வரவேற்பதில் முனைந்துவிட்டபடியால் பாண்டிய மன்னரின் பட்டாபிஷேகத்திற்குப் பிரதான்யம் போய் சேனாதிபதியின் வரவேற்பில் முடிசூடும் வைபவமும் ஒன்று, என்ற நிலை ஏற்படலாயிற்று.

ஏதோ மந்திர ஜாலத்தால் போரை முடித்தது போன்ற அத்தனை பிரமை மக்களுக்கு ஏற்பட்டதற்குக் காரணமும் பரிபூரணமாக இருக்கத்தான் செய்தது. இராமேச்வரத்தில் ஜகத்விசயன் இறங்கியபோது அவனை எதிர்க்காதது மட்டுமன்றி அவனை நன்றாக வேரூன்றவும் விட்டதைப் பார்த்ததுமே மக்கள் அபராஜிதன் போர்த் திறமையைப் பற்றிச் சந்தேகங்கொண்டார்கள். ஜகத்விசயன் தொண்டியை நோக்கி வந்தவுடன் அவனிடமிருந்து நழுவி அபராஜிதன் தெற்கு நோக்கி சவாரி விட்டதைக் கண்டதும் மக்கள் ஏமாற்றம் பரிபூரணமாகி, 'சரி, இனித் தமிழ்நாடு தொலைந்தது' என்ற மனச்சோர்வும் அந்த மனச்சோர்வின் காரணமாக 'இனிச் சிங்களவர் நம்மை என்னென்ன செய்வார்களோ?' என்ற கிலியும் அபரிமிதமாகிவிட்டன. இப்படி மக்கள் மனத்தில் ஏற்பட்ட இருளைக் கிழிப்பதற்காகவே கிளம்பிய ஒளியைப்போல் மாறிய அபராஜிதன் போர் முறை, போர்த் தந்திரத்தைப் பூரணமாக அறிந்த அண்ணன் பல்லவராயனையே திக்பிரமை அடையச் செய்துவிட்டதென்றால் சாதாரண மக்களைப் பற்றிக் கேட்கவா வேண்டும்?''

மக்கள் எங்கும் வெற்றி விளைவித்த விசித்திரத்தைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள். தெற்கே செல்வதாக பாசாங்கு காட்டி ரகசியமாக வடக்கே திரும்பிச் சிங்களத்திலிருந்து வந்த உதவிப்படையோடு தொண்டியில் தங்கிய ஜகத்விசயன் படையையும் கண்ணிமைக்கும் நேரத்தில் சேனாதிபதி ஒழித்துக் கட்டியதைப் பற்றி தமிழ்நாட்டின் மூலை முடுக்குகளிலெல்லாம் பேச்சு

நடந்தது. தொண்டியில் ஜகத்விசயன் படைகளை ஒழித்த இரண்டு நாட்களில் ஜகத்விசயனை அபராஜிதன் சிறைப் படுத்தியதைப் பற்றியும் இந்தப் பணியில் கருணாகரத் தேவன் அனுஷ்டித்த குள்ளநரித் தந்திரத்தைப் பற்றியும் ஜனங்கள் பேசிப்பேசி ரசித்தார்கள். அத்துடன் பெரிய பல்லவராயர் சோழப் படைகளை மேற்குப் புறமாக வரச் சொல்லி அபராஜிதன் கிழக்குப் பக்கமாகப் பாய்ந்து இலங்காபுரத் தண்டநாயகன் படைகளைச் சின்னா பின்னப் படுத்தியதல்லாமல் தண்டநாயகனையும் சிறைப் பிடித்த விசித்திரத்தைப் பற்றியும் மக்கள் பேசிக்கொண்டார்கள். பாண்டிய நாட்டுக்குச் சிங்களம் போட்ட கைவிலங்கை இரண்டே சம்மட்டி அடிகளால் உடைத்துவிட்ட வீரனைப் பற்றிய பேச்சே தமிழ்நாடு எங்கும் பரவிக் கிடந்தது. பாட்டிமார்கள் குழந்தைகளுக்கு அந்த வீரன் கதைகளை நீட்டி முழக்கிச் சொன்னார்கள். கல் தச்சர்கள் கிடைத்த பாறாங்கற்களிலெல்லாம் வெற்றிப் பாக்களை வெட்டத் தொடங்கினார்கள்.

தமிழகமே தன் வெற்றி வாகையைப்பற்றி பா இசைத்துப் பண் பாடிப் பரவசப்பட்டுக் கிடந்த சமயத்தில், அதுவும் தன் வரவால் மதுரை மாநகரமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருந்த நேரத்தில், அபராஜிதன் மட்டும் மனச் சாந்தியில்லாமல் தன் புரவி மீதமர்ந்து மதுரைக் கோட்டை வாசலை அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தான், கோட்டை வாசலின் இரு புறங்களிலும் எழுந்து நின்ற ஸ்தூபிகளின் உச்சியில் அன்றும் இரு தலைகள் அறையப்பட்டுக் கிடந்தன. அன்றும் கழுகுகள் அவற்றின் மீது பாய்ந்து பாய்ந்து கொத்திக் கொண்டிருந்தன. தலைகளின் கன்னங்களையும் நெற்றிப் பிரதேசத்தையும் கழுகுகள் கொத்தியதால் பிரவகித்த ரத்தமும் கழுத்து வெட்டப்பட்ட இடத்திலிருந்து குமிழியிட்டுக்கொண்டு கிளம்பி வந்த குருதியும் கோட்டை ஸ்தூபிகளின் பக்கவாட்டுகளில் சிறிது தூரம் வழிந்து பிறகு கெட்டிப்

...து. கழுகுகள் தலைகளின் உச்சியில் கொத்திய தால் ஏற்பட்ட ரத்தத்தில் கேசங்களும் சேர்ந்து பலவிதமாகப் புரண்டு நெற்றியிலும் கன்னத்திலும் ஒட்டிக் கொண்டு முகத்தில் ஏற்கனவே இருந்த பயங்கரத்தை அதிகப்படுத்தின. வலது பக்கத்து ஸ்தூபியில் செருகப் பட்டிருந்த இலங்காபுரன் தலை, தனது பயங்கரமான மீசையுடன் அபராஜிதனை நோக்கி விழித்தது. இடதுபுற ஸ்தூபியிலிருந்த வாலிபத் தண்டநாயகனான ஜகத்விசயன் தலை சற்று சிறியது. அத்துடன் அத்தலை கோரத்திலும் அவன் முகத்தில் சற்று ஏமாற்றம் காணப்பட்டதே யொழிய உக்கிரம் அதிகமாயில்லை,

இரண்டு தலைகளையும் நீண்டநேரம் உற்றுப்பார்த்து கொண்டிருந்த அபராஜிதன் மனம் இளவேனிற் காலத்தின் ஆரம்பப் பகுதிக்குச் சென்று கொண்டிருந்தது. இளவேனிற் காலத்தின் இன்பச் சூழ்நிலையிலே நீலமலைக் குடிசையிலே சந்தித்த நாள் முதல் அன்றுவரை அவன் வாழ்க்கையில் எத்தனை எத்தனை மாறுதல்கள்! எத்தனை எத்தனை கோரச் செயல்கள்! எத்தனை எத்தனை இன்ப அனுபவங்கள், எத்தனை எத்தனை புது உறவுகள், புதுத் துறவுகள்! எல்லாம் அவன் மனத்தே மாறி மாறிச் சுழன்றன! இலங்காபுரன், வீரபாண்டியன், விக்ரம பாண்டியன், மாதவி, கார்குழலி, அடிகளார், மழவராயன் முதலிய உருவங்கள் எண்ணத்தே எழுந்து நின்றன. எல்லா உருவங்களுக்கும் மேலாக அவன் சித்தத்தே உலவிய சித்திரங்கள் இரண்டு. ஒன்று வங்கார முத்தரையன். இன்னொன்று நிஷதராஜன் வாதமின்றி விசாரணையின்றி தமிழ்நாட்டின் அந்த இரு பெரும் படைத்தலைவர்களை வெட்டி அவரவர்கள் தலைகளைக் கோட்டை வாசலில் இலங்காபுரனும் வீரபாண்டியனும் செருகிய காட்சியும் கழுகுகள் அத்தலைகளைக் கொத்திய கோரமும் அந்தச் சமயத்திலும் அவன் சிந்தனை வெள்ளத்திலே மிதந்து வந்தன. இலங்காபுரனைப் பழிக்குப் பழி வாங்குவதாக

அன்று தேவி மீனாட்சியின் மேல் இளவேனிற் காலத்தில் இட்ட சபதம் முதுவேனிற் கால உதயத்திலே பூர்த்தியானதை நினைத்துப் பார்க்கப் பார்க்க அபராஜிதன் மனத்திலே சாந்தியல்லவா ஏற்படவேண்டும்? சாந்தியில்லை; சஞ்சலமே நிரம்பி நின்றது.

பாண்டிய சேனாதிபதியின் பக்கத்திலே நின்று கோட்டை வாசலில் செருகப்பட்டிருந்த தலைகளையும் அபராஜிதன் முகத்திலிருந்த சஞ்சலக் குறியையும் கவனித்த காரிவளவனும் மார்க்கியும், 'சபதத்தை நிறைவேற்றியதால் மகிழ வேண்டிய சமயத்தில் இவர் மனம் குலையவேண்டிய காரணமென்ன?' என்று ஏககாலத்தில் சிந்தித்து, சிந்தனையிலுதித்த கேள்விக்கு விடை தெரியாதவர்களாயத் திகைத்தார்கள். நீண்ட நேரம் கழுகுகள் கொத்தும் தலைகளைக் கவனித்த பிறகு குதிரையைக் கோட்டை வாசலை விட்டுத் திருப்பிய அபராஜிதனை ஆச்சரியத்துடன் பார்த்த காரிவளவன், "பிரபு! நகருக்குள் போகவில்லையா? தங்கள் வரவேற்புக்காக எல்லா ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்களே!" என்றான்.

அபராஜிதன் தன் கூரிய விழிகளைக் காரிவளவன் மீது திருப்பி, "ஏற்பாடு செய்திருப்பது யார் காரி?" என்று கேட்டான்.

"இளவரசரே செய்திருக்கிறாராம்" என்றான் காரி.

"யார், விக்ரமபாண்டியனா?" என்று கேட்டுவிட்டு மார்க்கியைப் பார்த்துப் புன்முறுவல் காட்டினான் அபராஜிதன்.

அவன் மார்க்கியைப் பார்த்ததையும் அவன் இதழ்களில் புன்முறுவல் அரும்பியதையும் கவனித்த காரியும், "பிரபு! நீங்கள் சிரிக்கும் காரணம் எனக்குத் தெரியாது. நல்ல கன்னிமாடக் கோட்டையில் நடந்த விபரங்களை

...மனத்தில் வைக்காதீர்கள், அப்பொழுதிருந்த விக்ரமபாண்டியன் வேறு. இப்பொழுதுள்ள விக்ரம பாண்டியன் வேறு'' என்று வினவினான்.

''எந்த விதத்தில் மாறிவிட்டது அந்த விஷப் பாம்பு'' என்று கேட்டான் யவனனான மார்க்கியன்.

''எல்லா விதத்திலுந்தான். கன்னிமாடக் கோட்டையில் அவன் இருந்த நிலைமை வேறு. இப்பொழுதுள்ள நிலைமை வேறு. இன்று அவன் பாண்டிய சிம்மாசனத்தைக் காத்து நிற்கின்றன சோழநாட்டு ஈட்டிகள்'' என்றான் காரிவளவன்.

''சோழ நாட்டு ஈட்டிகளின் பக்க பலம் இருக்கும் போது புரட்சிப் படைத் தலைவனுக்கு எதற்காக வரவேற்பு அளிக்கிறான் விக்ரமபாண்டியன் தகப்பனான குலசேகரனுக்கு மணிமகுடத்தைத் தனது இரு கைகளாலும் சூட்டிய பெரிய பல்லவராயர் இருக்கின்றார். பெரும் படைகளை நடத்தி உதவிய அண்ணன் பல்லவராயன் இருக்கிறான். இவர்களுக்கில்லாத வரவேற்பு எனக்கு ஏன்? அன்பினாலா? எந்த அன்பினால் காரி?''

''போரில் வெற்றி கண்டது தாங்கள் தானே?''

''இருக்கலாம். ஆனால். சோழர் படை பலமில்லாவிட்டால் புரட்சிப் படையை மட்டும், வைத்துக்கொண்டு யுத்தத்தில் வல்ல இரண்டு தண்டநாயகர்களைச் சமாளித்திருக்க முடியுமென்று நினைக்கிறாயா? இந்த வரவேற்பு எனக்கு எதற்கு, காரி? சிங்களத்தின் பிடிகளிலிருந்தமக்களை விடுவிக்க நான் போரிட்டேனே தவிர, மணி மகுடத்தைக் குலசேகரன் தலையிலோ, இளவரசுப் பட்டத்தை விக்ரமன் பேரிலோ சூட்ட அல்ல. மக்கள் எனக்கு வரவேற்பளித்தாகி விட்டது. மன்னர் வரவேற்புத் எனக்குத் தேவையில்லை. அதுவும் இந்த வரவேற்புத்

தன்னலமற்றதாயிருக்காது. வரவேற்பில் என்ன நடக்கும் என்பதும் எனக்குத் தெரியும்.''

காரியின் கண்களில் ஆச்சரியக் குறி தோன்றியது. ''இந்த வரவேற்பில் ஏதாவது சூது இருக்கிறதா?'' என்று கேட்டான்.

''அப்படித்தான் நினைக்கிறேன். இரண்டு நாட்களாக விக்ரமபாண்டியன் பெரிய பல்லவராயர் தங்கியிருக்கும் மாளிகைக்கு அடிக்கடி சென்று ஏதோ ரகசியத்தில் பேசிஃருகிறான். நேற்று ஓர் ஒப்பந்தமும் நடந்திருப்பதாகத் தெரிகிறது. மாளிகையில் முதல் இரண்டுநாள் தங்கிய நான் எதற்காக நமது கூடாரத்தைக் கோட்டைக்கு வெளியே அமைத்தேனென்று நினைக்கிறாய் காரி? ஏதோ நாம் அறியாத பெரும் திட்டம் வகுக்கப்படுகிறது. நேற்று நடந்த ஒப்பந்தத்தைப்பற்றி ஒற்றன் தகவல் கொண்டு வந்தானே தவிர, ஒப்பந்தம் எதைப்பற்றி என்று தெரியவில்லை'' என்றான் அபராஜிதன்.

ஏதோ பெரிய ராஜதந்திரம் மதுரையில் உருவாகிறது என்பதை மார்க்கியன் கூடப் புரிந்துகொண்டான் ஆனால் அது என்னவாயிருக்கும் என்பதை உணர மட்டும் அவ ளாலோ காரியாலோ முடியாததால், இருவரும் அபராஜிதனைத் தொடர்ந்து அவன் கூடாரத்துக்கே வந்து சேர்ந்தார்கள்.

கூடாரத்துக்கு வந்து வெகுநேரத்துக்குப் பின்பும் அபராஜிதன் ஆழ்ந்தயோசனையுடன் உலாவிக்கொண்டே இருந்தான். மார்க்கியனுக்கு மட்டும் ஒரு விஷயமும் புரியவில்லை. பிரமாதமான போரினால் தமிழ்நாட்டையே விடுவித்துத் தமிழ் மக்களின் பேராதரவைப் பெற்றிருக்கும் அபராஜிதனுக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய அத்தனை நன்றி கெட்டவர்களா பல்லவராயர்கள் என்று நினைத்

தான் மார்க்கியன். 'தலைநாளை திட்டத்தை விக்ரமபாண்டியன் வகுத்தாலும் நீதிக்கும் நேர்மைக்கும் பெயர்போன பெரிய பல்லவராயர் அதை எப்படி ஒப்புக்கொள்வார்?' என்றும் எண்ணமிட்டு ஏதும் புரியாமல் நின்றான்.

அதுவரை மௌனம் சாதித்த அபராஜிதன், ''காரி! நீயும் மார்க்கியனும் இப்போது நமது படைகள் தங்கியிருக்கும் பொன்னமராவதிக்குப் புறப்படுங்கள்'' என்றான் கடைசியாக.

''தாங்கள்?'' என்று வினவினான் காரி.

''இங்கிருந்து பெரியபல்லவராயர் வகுத்துவரும் திட்டம் என்ன, சோழர்கள் அபிலாஷை எந்தத் திக்கில் பாய்கிறது, குலசேகர பாண்டியன் சுதந்திரமாகப் பாண்டிய நாட்டை ஆளப்போகிறானா! சோழர் கையாளாகக் காலங்கழிக்கப் போகிறானா? என்றவிஷயங்களை ஆராய்ந்து கொண்டு இன்னும் இரண்டு நாட்களில் வருகிறேன்'' என்றான் அபராஜிதன்.

''தங்களுக்கு ஏதாவது ஆபத்து நேரிட்டால்?''

''புரட்சிப் படைகள் இருக்கின்றன. நம்மிடமிருந்து சிதறியோடி, அக்கம் பக்கத்துக் காடுகளிலும் கிராமங்களிலும் மறைந்து கிடக்கும் சிங்கவீரர்கள் இருக்கிறார்கள்.''

''எல்லோரையும் ஒன்று திரட்டினால்?''

''இன்னும் ஸ்திரப்படாத பாண்டிய சிம்மாதனம் மீண்டும் ஆட்டம் கொடுக்கும் என்மேல் இவர்கள் கை வைத்தால் மக்கள் சும்மா இருப்பார்களா? கவலைப்பட வேண்டாம் பொன்னமராவதிக்குப போய்க் காத்திருங்கள்'' என்றான் அபராஜிதன்.

அவன் உத்தரவுப்படி அடுத்த பத்து நாழிகைக்கெல்லாம் மார்க்கியனும் காரியும் பொன்னமராவதிக்குப் பயணமாயினர். அவர்கள் கால் காதம்கூடப் போயிருக்க மாட்டார்கள். அபராஜிதனுக்குப் பெரிய பல்லவராயரிடமிருந்து அழைப்பு வந்துவிட்டது.

இரண்டு வீரர்கள் மட்டும் குதிரைகளில் பின் தொடர தனது வெண் புரவிமீது கம்பீரமாக மதுரைக்குள் நுழைத்து ஜனங்கள் ஆரவாரத்தையோ பூ விற்கும் பெண்கள் தூவிய மலர் மாரியையோ லட்சியம் செய்யாமல் பெரிய பல்லவராயரின் மாளிகைக்கு வந்து இறங்கி மடமடவென்று உள்ளே நுழைந்த அபராஜிதன், நடுவே இருந்த பெரிய சபாமண்டபத்தில் பெரிய பல்லவராயர் மட்டுமன்றி, அண்ணன் பல்லவராயன், குலசேகர பாண்டியன, விக்ரமபாண்டியன் இவர்களும் தனக்காகக் காத்திருப்பதைக் கண்டு வாயிற்படியிலேயே ஒரு கணம் நின்று நால்வரையும் பார்த்தான்.

''பாண்டிய நாட்டுப் படைத்தலைவரே!வரவேண்டும் வரவேண்டும்'' என்று வரவேற்றான் அண்ணன் பல்லவராயன். பெரிய பல்லவராயரும் முகமன் கூறி வரவேற்று ஆசனம் அளித்து அமரச் சொன்னார். சிறிது நேரம் நால்வரும் மௌனம் சாதித்தனர். பெரிய பல்லவராயர், கடைசியாகத் தொண்டையைக் கனைத்தபடி, ''படைத் தலைவரே! உமக்குப் பாண்டியநாடு மட்டுமல்ல,குலசேகர பாண்டியன் மட்டுமல்ல, தமிழ்நாடே கடமைப்பட்டிருக்கிறது'' என்ற பூர்வ பீடிகையை மெள்ளப் போட்டார்.

அபராஜிதன் பதில் ஏதும் சொல்லவில்லை. அந்தப் பாராட்டுதலை ஏற்றுக் கொண்டதற்கு அறிகுறியாகத் தலையைச் சிறிது தாழ்த்தினான். பெரிய பல்லவராயர் தமது உள்ளங்கைகளிரண்டையும் பிரித்து அவற்றில் பார்வையைச் செலுத்திய வண்ணமே மேலும்தொடர்ந்து

''உமது போர்த்திறத்தால் பாண்டிய நாட்டின் தளைகள் களையப்பட்டன. சோழ நாட்டிலும் நிம்மதி நிலவுகிறது. இந்த நிம்மதியை ஊர்ஜிதப்படுத்தவும் நீர் உதவ வேண்டும்'' என்றார்.

''என்ன செய்யவேண்டும்?'' என்ற வார்த்தைகள் அபராஜிதனிடமிருந்து கிளம்பின. அவற்றில் தொனித்த சந்தேகத்தைக் கவனித்த பெரிய பல்லவராயரும் அண்ணன் பல்லவராயனும் ஒருவருக்கொருவர் ஒருமுறை பார்த்துக் கொண்டார்கள்.

பெரிய பல்லவராயர் மெள்ள தயங்கிய குரலில் சொன்னார். ''படைத்தலைவரே! நான் சொல்லப்போகும் பணி உம்முடைய மனத்துக்குப் பிடித்தமில்லாதிருக்கலாம். ஆனால் வீரர்கள்சுயநலத்தைக் கவனிப்பதில்லை. நாட்டின் நலத்தையே கவனிக்கிறார்கள்'' என்று.

''நாட்டின் நலத்துக்கு இப்பொழுது எது தேவை?' என்று வினவினான் அபராஜிதன்.

''மேலைமங்கலச் சிற்றரசு'' என்றான் அண்ணன் பல்லவராயன்.

அபராஜிதன் முகத்தில் கோபக்குறி லேசாக உதயமாகத் தொடங்கியது. பெரிய பல்லவராயர் அதைக் கவனித்தாலும் கவனிக்காதது போலச் சாந்தமாகவேசொன்னார். ''மேலைமங்கலச் சிற்றரசை இலங்காபுரனே சிருஷ்டித்தான். பாண்டிய நாட்டைச் சுற்றிலும் தனக்கு அநுகூலமான சிற்றரசர்கள் இருந்தால் சட்டென்று யாரும் பாண்டிய நாட்டின் மேலோ தன் மேலோ பாய முடியாது என்ற எண்ணத்தினாலேயே இதைச் செய்தான். இப்பொழுது இலங்காபுரன் மறைந்து விட்டான். ஆகவே, அவன் திட்டத்தால் உருவான மேலைமங்கலச் சிற்றரசும் மறையவேண்டியது அவசியம்.

''ஏன் அவசியம்?'' உஷ்ணமாக எழுந்தது அபராஜிதன் குரல்.

''தமிழ்நாட்டுத் தற்காப்புக்கு அவசியம். யுத்தத்தால் களைத்து வசதியிழந்து கிடக்கும் பாண்டியநாட்டின் முகம் களைகட்ட இன்னும் சில வருஷங்கள் பிடிக்கும். அதற்குள் சிங்களத்தால் அதற்கு ஆபத்து ஏற்படாதிருக்க வேண்டுமானால் ஒரு பலமான சைன்னியம் பாண்டிய எல்லைக்கும், சிங்களத்துக்கும் இடையே நிறுத்தப்பட வேண்டும். இந்தச் சைன்னியம்....'' என்று மேலும் ஏதோ சொல்லப்போன பெரிய பல்லவராயரை இடைமறித்த அபராஜிதன், ''சோழசைன்னியமாயிருக்கும். அதற்குப் பாண்டியமன்னரும் ஒப்புக்கொண்டுவிட்டார். இந்தத் திட்டம். எங்கிருந்து உருவாயிற்று சோழப் பேரமைச்சரே தங்கள் புத்தியிலிருந்தா? படைகளை நடத்துவதில் இணையற்றவரென்று பெயர் பெற்ற சின்னப் பல்லவராயரிடமிருந்தா? அல்லது கார்குழலியை மகனுக்கு மணம் பேசிய குலசேகர பாண்டிய மன்னனிடமிருந்தா? அல்லது கார்குழலியையும் கன்னிமாடக் கோட்டையையும் வீரபாண்டியனிடம் காட்டிக் கொடுக்கத் திட்டம் வகுத்த இந்த இளவல் விக்ரமபாண்டியனிடமிருந்தா? யாரிடமிருந்து எழுந்தது இந்தத் திட்டம்? தகப்பனை இழந்து தன்னந்தனியாய் ஒரு சிற்றரசை வைத்துக் கொண்டு தவிக்கும் ஒரு பெண்ணின் சொத்தைப் பறிக்கத்திட்டமிட இருபல்லவராயர்கள், மன்னரொருவர் இளவரசர் ஒருவர்! பேஷ்! இதைக் கேட்டால் பாண்டிய நாடே நகைக்கும் பேரமைச்சரே!'' என்று இரைந்தான் அபராஜிதன்.

''அபராஜிதா! நீ இருக்கும் இடம் எது என்பதை நினைத்துப் பார்த்துப் பேசு'' என்று சீறினான் குலசேகர பாண்டியன்.

பெரிய பல்லவராயர் அவனை அடக்கி, ''மன்னவா! பொறு. படைத்தலைவர் இப்படிப் பேசுவதன் காரணம் எனக்குத் தெரியும்'' என்று நீட்டினார்.

''கார்குழலியிடமுள்ள மையல்'' என்று விக்ரம பாண்டியனை அவர் வாசகத்தைப் பூர்த்தி செய்தான்.

''காரணத்தைப்பற்றி நாம் ஆராய வேண்டாம். தமிழ்நாட்டுப் பாதுகாப்பு நமக்கு முக்கியம். நாட்டுக்குத் தெற்கே சோழர்கள் படை இருக்கவேண்டும். பாண்டிய சிங்களத்தின் முயற்சிகளைத் தேக்கி நிறுத்த மேலை மங்கலம் சோழநாட்டுக்குத் தேவையாயிருக்கிறது'' என்று பல்லவராயர் குரலில் சிறிது உணர்ச்சியை வரவழைத்துக் கொண்டு உரக்கப் பேசலானார். ''அபராஜித பல்லவனே! உமது குலத்தை யோசித்துப்பாரும். கடமையையும் காதலையும் சீர்தூக்கிப் பாரும்'' என்றார்.

''பேரமைச்சரே! பெண்கள் சொத்தைப் பறிப்பதில் என்ன கடமை, என்ன பண்பு இருக்கிறதென்று எனக்கு விளங்கவில்லை. உங்கள் நோக்கம் எனக்குத் தெரிகிறது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் மேலைமங்கலத்தை நோக்கி என் படைகள் நகரமாட்டா. இது நிச்சயம்!'' என்றான் அபராஜிதன்.

''ஒருவேளை எமது படைகள் அனுப்பப்பட்டாலோ?'' என்றான் அண்ணன் பல்லவராயன்.

''இதை எதிர்பார்த்தே என் இரு படைத்தலைவர்களையும் பொன்னமராவதிக்கு அனுப்பிவிட்டேன். எனக்கு ஏதாவது நேர்ந்தாலும் சரி, அல்லது தங்கள் படைகள் மேலைமங்கலத்தை நோக்கி நகர்ந்தாலும் சரி, எனது படைத் தலைவர்களிருவரும் புரட்சிப் படைகளோடு சிதறிக்கிடக்கும் சிங்களவரையும் திரட்டிக்கொண்டு மேலைமங்கலச் சிற்றரசைக் காத்து நிற்பார்கள்'' என்று சபையில் உலவிக் கொண்டே பெருத்த குரலில் பேசிய அபராஜிதன் கடைசியாக எதிரேயிருந்த நால்வரையும் பார்த்து, ''கார்குழலியை எந்த ஆபத்திலிருந்தும் காப்பதாகக் கன்னி மாடத்திலிருந்த

போது சபதம் செய்திருக்கிறேன். அந்தச் சபதம் இந்த உயிர் உடலில் இருக்கும் வரை உண்டு'' என்றான்.

''உயிர் நீங்கிவிட்டால்?'' என்று விசாரித்தான் மன்னன் கோபத்தால் உதடுகள் துடிக்க.

'தங்கள் சிம்மாதனம் நான்கு நாள் நிலைக்காது மன்னவா! கடமை புரியும் ஊழியருக்குப் பெரிய இடத்திலிருந்து கிடைக்கும் பரிசு எத்தன்மையது என்பது எனக்குத் தெரியும். ஆனால், அத்தனை சுலபமாக என்னை ஒழித்துக் கட்டவும் முடியாது. சந்தேகமிருந்தால் மதுரைத் தெருவில் நான் திரும்பிப் போகும்போது பாரும், மக்கள் எனக்குக் காட்டும் ஆதரவை!'' என்றான் அபராஜிதன்.

''மன்னர் அதைப் பார்க்கமுடியாது'' என்றார் பெரிய பல்லவராயர் வறண்ட குரலில்.

''ஏன்?''

''மேலைமங்கலம் சரணடையும்வரை தங்களை இந்த அரண்மனையிலேயே காவலில் வைக்க உத்தேசம்'' என்று உணர்ச்சி சிறிதுமில்லாத குரலில் சொன்ன பல்லவராயர் வாயிலுக்காக ஏதோ சைகை செய்தார். வாளை உருவிக் கொண்டு உள்ளே நுழைந்த சோழப் படைவீரர் நால்வர் அபராஜிதனைச் சூழ்ந்துகொண்டார்கள்.

62. தமிழ் மகளின் சாம்ராஜ்யம்

கடமைக்காகப் பிள்ளையையே பலி கொடுக்கக் கூடிய நெஞ்சுறுதி வாய்ந்த பெரிய பல்லவராயருக்கு, சிங்களப் படைகளைச் சிதைத்து, தமிழ்நாட்டுக்குப் பெரும்

வெற்றியை அளித்த அபராஜிதனைச் சிறை செய்தது எத்தகைய மனத் தாங்கலையும் விளைவிக்கவில்லை. ஆனால், அந்தச் செய்கையால் ஏற்படக்கூடிய விபரீதங்களை எண்ணிப்பார்த்து மட்டும் அவர் மனம் ஏங்கிக்கொண்டிருந்தது. அபராஜிதனை மக்கள் தெய்வம்போல் பாவிக்கிறார்களென்பதையும், அவன் காவலில் இருக்கிறான் என்பதை அறிந்தாலே புரட்சி ஏற்படுவது நிச்சயமென்பதையும் பெரிய பல்லவராயர் நன்றாக அறிந்தே இருந்தார். அத்துடன் தம்மிடம் சிக்கிக் கொள்ளுமுன்பாக அவன் செய்துள்ள ஏற்பாடுகளால் விளையக்கூடிய அனர்த்தங்களை நினைத்துப் பார்க்கப் பார்க்க, பன்னிரண்டாம் நூற்றாண்டிலே இணையற்ற ராஜதந்திரியெனப் பெயர் வாங்கிய பெரிய பல்லவராயர் புத்தியும் பெரிதும் குழம்பி, எத்தகைய தந்திரத்தைக் கையாண்டால் அபராஜிதன் ஏற்படுத்தியுள்ள சிக்கல் தீரும் என்பதை அறியாமல் திண்டாடியது. அபராஜிதனுக்கு ஏதாவது நேர்ந்தால் அவன் படைத்தலைவர்கள் மீதியுள்ள சிங்களப் படைகளைத் திரட்டிக்கொண்டு மேலை மங்கலம் போவார்களென்பதும், மலை நாட்டில் மறைந்து கிடக்கும் வீரபாண்டியனும் அவர்களுடன் சேரலாமென்பதும். இந்த இரண்டு சக்திகள் சேர்ந்தால் மூன்றாவது சக்தியான சிங்களமும் மேலும் உதவிப் படைகளை அனுப்பலாமென்பதும் பெரிய பல்லவராயருக்குக் கன திட்டமாகப் புரிந்திருந்தது. இப்படி எதிரி சைன்னியங்கள் திரண்டால் தமிழ்நாட்டில் மீண்டும் குருதி வெள்ளம் பாயும் என்பதில் அவருக்கு லவலேசமும் சந்தேகம் கிடையாது.

இத்தகைய யோசனைகளால் குழம்பிக் குழம்பி ஏதும் செய்ய வகையறியாமல் திகைத்த பெரிய பல்லவராயர், கடைசியாக, கருணாகரத்தேவனின் உதவியை நாடினார், அவர் வேண்டுகோளின்படியே பாசிப் பட்டணத்திலிருந்து வெகுவேகமாக மதுரை வந்துசேர்ந்த கருணாகரத்தேவன் பெரிய பல்லவராயரை அவரது படுக்கையறையிலேயே

சந்தித்தான். அப்பொழுது இரவின் முதல் ஜாமம் முடிந்துகொண்டிருந்தாலும் பஞ்சணையில் உட்கார்ந்தபடியே தீவிர யோசனையில் ஆழ்ந்திருந்த பெரிய பல்லவராயர், பிரயாண உடையைக் களையாமலே தன்னெதிரிலே நின்ற கருணாகரத்தேவன்மீது கவலை நிறைந்த தமது கண்களை நாட்டினார். எந்த அபாயகாலத்திலும் கவலைக் குறியைக் காட்டாத பெரியபல்லவராயரின் கண்களில்கவலை மண்டியிருப்பதையும் ஆழ்ந்த யோசனைக்கு அடையாளமாக அவர் முகத்திலிருந்த தினகரனும் சற்று அதிகமாகச் சுருங்கிக்கிடப்பதையும் கண்ட கருணாகரத்தேவன், ஏதோ அவரையும் மீறிய சக்திகளைச் சமாளிக்கவே தம்மை அழைத்திருக்கிறாரென்பதைச் சந்தேகமறப் புரிந்துகொண்டாலும் அப்பேர்ப்பட்ட விஷயம் என்னவாயிருக்கும் என்பதை அறியாதவனாய் பெரியபல்லவராயரின் சொற்களை எதிர்பார்த்து நின்றான்.

கருணாகரத்தேவனை ஏறெடுத்துப் பார்த்த பெரிய பல்லவராயர் அவனை உட்காரச் சொல்லவில்லை. சிறிது நேரம் ஏதோ யோசித்துவிட்டுத் தாமும் பஞ்சணையிலிருந்து எழுந்து அறையில் அங்குமிங்கும் உலவினார். பிறகு அறைக் கோடியிலிருந்த மஞ்சத்தில் போய் உட்கார்ந்துகொண்டு அறைநடுவே கற்சிலைபோல் நின்றுகொண்டிருந்த அந்த வயோதிக வீரனையும் பக்கத்திலிருந்த ஆசனத்தில் அமரச்சொல்லிவிட்டு சம்பாஷணையைத் துவக்கினார். ''தேவரே! தமிழ் மக்களுக்கே வெறுப்பை அளிக்கக்கூடிய ஒரு காரியத்தைச் செய்திருக்கிறேன்...'' என்று ஆரம்பித்தார் பெரிய பல்லவராயர்.

''பேரமைச்சரே! மக்கள் வெறுக்கத்தக்கதாயிருந்தாலும் தாங்கள் செய்யும்காரியம் அவர்கள் நலனை உத்தேசித்துத்தானிருக்கும். தாய் புகட்டும் மருந்து குழந்தைக்குக் கசப்பாயிருக்கலாம். ஆனால் உடல் நலனுக்கு உகந்தது தானே.''

"இருக்கலாம், தேவரே! ஆனால் மருந்து சாப்பிடும் நேரத்தில் குழந்தை திமிறி உதைக்கத்தானே செய்கிறது" என்றார் பேரமைச்சர்.

"அதுபோல்...?" என்று கேட்டான் கருணாகரத் தேவன்.

"மக்கள் திமிறி எழக்கூடிய காரியந்தான் தேவரே" என்றார் பேரமைச்சர்.

"அப்பேர்ப்பட்ட காரியம் என்னவாயிருக்கும்?" என்று சந்தேகம் ததும்பியகுரலில் கேட்டான் கருணாகரத் தேவன்.

"அபராஜிதனைக் கைது செய்திருக்கிறேன்" என்று அதிர்வெடியை வீசிவிட்டுத் தலையை ஒரு கணம் குனிந்து கொண்டார் சோழப் பேரமைச்சர்.

அதுவரையில் நிதானத்துடனிருந்த கருணாகரத்தேவன் உடலும் லேசாக நடுங்கியது வயதால் பெரிய பல்லவ ராயரின் புத்தி சபலித்திருக்குமோ என்று அவரை ஏற இறங்க ஒரு முறை நோக்கின அவன் கண்கள்.

"அபராஜிதன் தமிழ்நாட்டைப் பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றியிருக்கிறான். சோழ சாம்ராஜ்யம் சாதிக்கமுடியாத பெரிய காரியத்தைச் சாதித்திருக்கிறான். அவன் போர்த் தந்திரத்தால் அதிக ரத்த சேதமின்றிச் சிங்கள ஆதிக்கம் ஒழிக்கப்பட்டது. இதற்கு அவனுக்குப் பரிசு சிறை" என்ற சொற்களை உதிர்த்த தேவனின் உதடுகள் லேசாகத் துடித்தன.

"இப்படித்தான் மக்கள் நினைப்பார்கள்?" என்றார் பேரமைச்சர்.

'வேறு எப்படி நினைக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?" இதைக் கேட்ட தேவன் குரலில் கடுமை பூரணமாக இருந்தது.

"நான் எதையும் எதிர்பார்க்கவில்லை தேவரே ஆனால் இந்த வெற்றி பயனற்றுப் போகக்கூடாது என்று மட்டும் எதிர்பார்க்கிறேன்" என்றார் பெரிய பல்லவராயர்.

கருணாகரத்தேவன் இருமுறை அறையில் அங்குமிங்குமாய் உலவினான். 'பேரமைச்சரே! உங்கள் அபிலாஷைகள் எந்தத் திக்கில் பாய்கின்றன என்பது எனக்குப் புரியவில்லை ஆனால், அவை எதுவாயிருந்தாலும் தமிழ் மகளின் அபிமானத்துக்குப் பாத்திரமாயிருக்கும் அபராஜிதனைக் கைது செய்தது மட்டும் சரியான ராஜதந்திரமல்ல என்பது எனக்குத் தெரியும் சிங்களத்தின் ஆதிக்கத்திலிருந்து பாண்டிய மக்களை விடுவிக்க அவன் செய்திருக்கும் தியாகம் கொஞ்ச நஞ்சமல்ல. ஆசை இவனுக்கிருந்தால் அவன்பாண்டிய நாட்டுமன்னனாயிருக்கலாம். நானும் இன்னும் மூன்று படைத்தலைவர்களுமாகச் சேர்ந்து அளித்த மணி மகுடத்தை நிராகரித்தான். பின்பு, நாடு அமைத்ததும் உயிரினும் அதிகமாகத் தான் காதலித்த பெண்ணைவிட்டு நாட்டுக்காகப் புரட்சிக்கொடியை உயர்த்தினான். சிங்கள சைனியங்கள் முறியடிக்கப்பட்ட பின்பும் அவன் மன்னனாக வசதியிருந்தது. அதையும் நிராகரித்தான்" என்று பேசிச் சற்று நிறுத்தி, பேரமைச்சரைப் பார்த்தான்.

"வெற்றிக்குப்பின் வசதி இருந்ததா?" ஆச்சரியத்துடன் கேட்டார் பெரிய பல்லவராயர்.

"ஆம், ஜகத்விசயனோடு இலங்காபுரன் மருமகன் மாதவியையும் நான் சிறை செய்தேன், நினைவிருக்கிறதா உங்களுக்கு?"

''அவனைத்தான் அபராஜிதன் விடுதலை செய்து பத்திரமாகச் சிங்களத்துக்கு அனுப்பிவிட்டானே.''

''அவனைப் படகில் ஏற்றும்போது நானும் இருந்தேன். அப்பொழுதும் அவள் அபராஜிதனுக்கு யோசனை சொன்னாள்.''

''என்ன யோசனை?''

''அவள் வார்த்தைகளை அப்படியே சொல்கிறேன் கேளுங்கள்: 'அபராஜிதா! நாட்டை ஆளவேண்டியவன் நீ. உன் வாள் பலம், மக்களிடம் நீ பெற்றுள்ள அன்பு, மணிமகுடத்தைச் சோழர்கள் கையாளான குலசேகரன் தலையில் இணைக்க உதவி புரிகிறாய். இப்பொழுதுகூட ஒரு வார்த்தை சொல். நான் சிங்களத்துக்குப் போகவில்லை. மீதியிருக்கும் சிங்களப் படைகளை ஒன்றுசேர்த்து நடத்துவோம். பல்லவராயர் இருவரும் மீண்டும் சோழ நாட்டுக்குச் சவாரி விடுவார்கள்' என்றாள்'' என்று விளக்கினான் கருணாகரத்தேவன்.

''எங்களிடம் மாதவிக்கு மதிப்பு அதிகம்தான்'' என்றார் பெரிய பல்லவராயர்.

''இது மட்டுமல்ல பேரமைச்சரே! தானும் அபராஜிதனும் சேர்ந்தால் சாதிக்கமுடியாத காரியம் உலகத்தில் எதுவுமில்லையென்று நிச்சயமாக நம்பினாள் மாதவி. அபராஜிதன் அவள் திட்டத்தை நிராகரித்தான். பாண்டிய நாட்டு மணிமகுடத்தை மீண்டும் நிராகரித்தான். மாதவியின் யோசனையை அவன் ஏற்றிருந்தால் குலசேகரபாண்டியன் இத்தனை சுலபமாக அரியணையில் அமர்ந்திருக்க முடியாது என்பது தங்களுக்கே தெரியும். கடைசியில் மாதவி கலங்கிய கண்களுடன் படகில் ஏறினாள். படகு நகரும்போது அபராஜிதனைப் பார்த்துக்கொண்டு சென்ற அவள் கண்களில் நீர் தேங்கி நின்றதைப் பார்த்த

எனக்கே பரிதாபமாயிருந்தது. மாதவி அபராஜிதன் வாழ்க்கையிலிருந்து மறைந்து விட்டாள். ஆனால்...''

''கார்குழலி மறையவில்லை'' என்று முடித்தார் பெரிய பல்லவராயர். அத்துடன் சொன்னார்; ''கார்குழலி அபராஜிதன் வாழ்க்கையில் நுழையுமுன் தியாக அக்கினியில் குளித்தாகவேண்டும். அவன் செய்த தியாகத்தை அவளும் தமிழ்நாட்டுக்காகச் செய்யவேண்டும், அவன் மணிமுடியைத் தூரத் தள்ளினான். அவளும் முடிதுறக்க வேண்டும். காதலனுக்கேற்ற காதலியாக அவள் திகழ வேண்டும். பாண்டியநாட்டுத் தென் எல்லையில், சிங்களத்துக்கும் பாண்டிய நாட்டுக்கும் இடையே சோழ சைன்னியம் நிற்க இடம் வேண்டும். அந்த இடம் மேலை மங்கலந்தான். அங்கு படையை நிறுத்தாவிட்டால் சிங்களத்தின் தொல்லை தமிழ்நாட்டுக்குமீண்டும்ஏற்படும். இதைத்தான் சொன்னேன் அபராஜிதனுக்கு. ஆனால், மேலைமங்கலச் சிற்றரசைக் கார்குழலியிடமிருந்து வாங்க அபராஜிதன் இஷ்டப்படவில்லை. அத்துடன் அதன்மீது படை நடத்தப்படுமானால் தன் புரட்சிப் படை அச் சிற்றரசைக் காக்கும் என்வும் மிரட்டினான்...'' என்று சொல்லி கருணாகரத்தேவனைப் பார்த்தார் பேரமைச்சர்.

உள்ள நிலையை ஒரு நொடியில் புரிந்துகொண்டான் கருணாகரத்தேவன். அத்துடன் தான் வரவழைக்கப்பட்ட காரணத்தையும் அறிந்துகொண்டான் அவன் மனத்திலோடிய எண்ணத்தைப் பட்டவர்த்தனமாக எடுத்துச் சொன்னார் பெரிய பல்லவராயர் ''தேவரே! நீரும் சின்னப் பல்லவராயரும் ஒரு முறை மேலைமங்கலம் போய் வாருங்கள். அபராஜிதனுக்காகக் கார்குழலி மணிமகுடத்தைக் கண்டிப்பாகத் துறப்பாள். தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு மேலைமங்கலச் சிற்றரசு மறையவேண்டும் என்பதை அவளிடம் எடுத்துச் சொல்லுங்கள்'' என்றார்.

பாண்டிய நாட்டின் மீது சோழர் ஆதிக்கம் பலப்படுறது என்பதைக் கருணாகரத்தேவன் உணர்ந்து கொண்டாலும் தமிழ்நாட்டின் பாதுகாப்புக்கு அது அவசியம் என்ற நினைப்பால் அன்றிரவே அண்ணன் பல்லவராயனுடன் மேலை மங்கலத்துக்குப் புறப்பட்டு இரண்டு நாள் பயணத்திற்குப் பிறகு மேலைமங்கலத்தை அடைந்தான்.

அப்போது முதுவேனில் தலை தூக்கி, பகற்காலத்தில் உஷ்ணம் அதிகமாயிருந்தாலும் மேலைமங்கலத்தில் மாலை வேளை இன்பமாகவே இருந்தது. வாவிகளும் வண்ண மலர்ச் சோலைகளும் நிறைந்த அந்தச் சிற்றரசத் தலைநகரத்தின் அந்தி வேளையில் மலர்களில் தாவிச் சென்ற தென்றல் பகற்களைக்கு மாற்று அளிக்கவந்த இயற்கையின் மகோன்னதப் பரிசாகத் திகழ்ந்தது. மற்றச் சோலைகளிலேயே மலர்கள் சிரித்து விளையாடிக்கொண்டிருந்தனவென்றால் கார்குழலியின் அரண்மனைத் தோட்டத்துச் செடிகளிலும் மரங்களிலுமுள்ள வாச மலர்களைப் பற்றிக் கேட்கவாவேண்டும்? எங்கும் புஷ்பமயம் இதமான தென்றலும், அந்தியின் மயக்கமான வர்ணச் சிலப்பும் சேர்ந்து கண்ணுக்கு இணையற்ற விருந்தை அளித்துக் கொண்டிருந்தன. அத்தனை இன்பத்திலும் கார்குழலி துன்பத்தையே அடைந்திருந்தாள். அவள் நந்தவனத்தில் நடந்தபோது, பட்டுப்போல் கீழே பரவிக்கிடந்த புல்தரை கூட அவள் கால்களை உறுத்தின, அதைவிட அவள் நெஞ்சத்தை உறுத்தின பல துன்பங்கள்.

கன்னி மாடத்திலிருந்து அபராஜிதனைப் பிரிந்து வந்த நாளாய் வாழ்க்கைச் சம்பவங்களாகிய சம்மட்டிகள் பல அவள் மனத்தைச் சுக்கல் சுக்கலாக உடைந்தன. வந்த இரண்டே தினங்களில் தந்தையைப் பறிகொடுத்தாள். பாண்டிய ராணியாக மகளைப் பார்க்கத் திட்டமிட்டு அவள் மாளிகையை விட்டோடித் தான் நிர்ணயம் செய்த மணாளனையும் எதிர்த்துப்போரிட்டுவிரட்டியடித்ததாலும்

அதனாலே மக்களிடையே எழுந்த பேச்சினாலும் மழவராயன் மனமுடைந்து நோய்வாய்ப்பட்டு மரணத்தோடு போரிட்ட சமயத்தில் தான் அவள் அவனைச் சந்தித்தாள். மழவராயன் மரணமடையும்வரை தன் மன ஏமாற்றத்தை அவளிடம் வாயெடுத்துப் பேசவில்லை. ஆனால், மனத்திலோடிய எண்ணங்கள் முகத்தில் பளிச்சிட்டபடியால் 'தந்தை ஏமாற்றத்தால் இறக்கிறார்' என்பதை உணர்ந்த அவள், அவன் இறந்தபிறகும் சொல்லவொண்ணாத் துன்பத்தையே அடைந்தாள். தந்தைக்குத் தந்தையாக உடனிருந்த அடிகளாரால் கூட அவள் துன்பத்தைத் துடைக்க முடியவில்லை. காலக்கிரமத்தில் கார்குழலி கண்ணீர் சிந்துவதை நிறுத்திவிட்டாள். ஆனால் அவள் அழகு முகத்தைப் பார்த்த அடிகளார் அவள் மனம் உள்ளூரக் கண்ணீர் உகுப்பதையும் அவள் சரீரம் இளைத்து உருகுவதையும் கண்டு பெரிதும் நொந்துபோனார். இத்தனைக்கும் காரணமான அபராஜிதனைப் பெரிதும் சபித்தார். துறவியான அவர் உள்ளத்திலே, பெண் பாசம் அதிகமாகப் பிடித்து வாட்டி அவளை எப்படியாவது அபராஜிதனுடன் சேர்த்துவிட வேண்டும் என்ற உறுதி துளிர்த்துக் கொண்டிருந்தது.

ஆனால் நாளாக ஆக, கார்குழலியின் உறுதி தளர்ந்து கொண்டிருந்தது. போர் முடிந்தவுடன் அபராஜிதன் தன்னிடம் ஓடோடி வருவான் என்று எதிர்பார்த்த அவள் ஏமாற்றமடைந்தாள். தோட்டத்தில் உலாவிய சமயங்களில் கூட, மரங்களிலிருந்த புஷ்பங்கள், 'போடி பைத்தியமே! அவன் எங்கே வரப்போகிறான்' என்று சிரிப்பன போலிருந்தன அவளுக்கு. அவள் மனம் இத்தகைய சிந்தனைகளால் அலைக்கப்பட்டுக் கிடந்த சமயத்தில் தான் கருணாகரத் தேவனும் அண்ணன் பல்லவராயனும் மேலைமங்கலத்தை அடைந்தார்கள்.

மேலை மங்கலத்து ராணியான கார்குழலி அவர்களை மழவராயன் அறையிலேயே சந்தித்தாள். அந்தச் சந்திப்

பின்போது வெளிவிட்ட விவகாரங்களைக் கண்ட அடிகளார் பெரிதும் வெகுண்டு தாம் துறவியென்பதையும், உலக விஷயங்களுக்கும் தமக்கும் சம்பந்தம் ஏதும் இடையாதென்பதையும் மறந்து பலமுறை எரிந்து விழுந்தார். ''இந்தச்சிறுமியின் சொற்பப் பிதுரார்ஜிதத்தைப் பறிக்கச் சோழப் பேரரசுக்கு வெட்கமாயில்லையா? தமிழ் நாட்டின் நன்மையில் இந்தப் பெண்ணுக்கு அக்கறையில்லையென்று பேரமைச்சர் கூறுகிறாரா?'' என்று சீறினார் அடிகளார்.

''அக்கறை இருக்கிறது என்ற காரணத்தினால்தான் நாங்கள் தூது வந்தோம்'' என்று சாந்தப்படுத்த முயன்றான் கருணாகரத்தேவன்.

''இல்லாவிட்டால் படைகளை அனுப்பி இந்தச் சிறுமியுடன் போர்செய்திருப்பீர்களோ?'' என்று இகழ்ச்சியுடன் விசாரித்தார் அடிகளார்.

''அந்த யோசனையும் இருந்தது அடிகளாரே! அதற்கு இடமில்லாமல் செய்து விட்டான் அபராஜிதன். மேலை மங்கலத்தின் மீது கையை வைக்கும் பட்சத்தில் அதைக் காத்து நிற்கும்படிதனது புரட்சிப் படைக்கு உத்தரவிட்டிருக்கிறான்'' என்றான் கருணாகரத்தேவன்.

''அந்த அசந்தர்ப்பத்தினால்தான் இந்தத்தூதுபோலிருக்கிறது'' என்றார் அடிகளார் மீண்டும்.

''ஆமாம் அடிகளாரே! தமிழர்கள் நன்மைக்கு எது அவசியமானாலும் அதைச் செய்யப் பெரிய பல்லவராயர் தயங்கமாட்டார் என்பது தங்களுக்குத் தெரியாத விஷயமல்ல. சோழப்படைகள் மேலைமங்கலத்தை நோக்கி நகர்ந்தால் புரட்சிப் படைகளும் மீதியிருக்கும் சிங்களப் படைவீரரும் அவன் உதவிக்கு வருவார்கள். வீரபாண்டி மன்னனும் மலைநாட்டு மன்னனுக்கு அபயமளித்திருக்கும் சிங்களமும் உதவிப்படை உங்கள் கட்சியில் சேரலாம்;

அனுப்பலாம். மீண்டும் பலமான போர். மக்கள் ரத்தம் ஆறாக ஓடும். இதை அபராஜிதனே சொல்லி மிரட்டினான். பெரிய பல்லவராயர் மிரட்டலுக்குப் பயப்படவில்லை இன்னொரு யுத்தத்தால் மக்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டத்தை நினைத்துப் பயப்படுகிறார். ஆகையால் மேலை மங்கலத்து ராணியிடம் அந்த அரசை யாசிக்க எங்களை அனுப்பியிருக்கிறார்'' என்று அடிகளாரைப் பார்த்துச் சொல்லிய கருணாகரத்தேவன் கார்குழலியைப் பார்த்துப்பேசலானான். ''மழவராயன்மகளே! கேள் நான் அபராஜிதனின் நெருங்கிய நண்பன். அவனுக்குப் பாண்டிய நாட்டின் மணிமகுடத்தை அளித்தேன். அவன் அதை உதறினான். அவன் உதறியதால் தமிழ்நாட்டின் இரு பெரும் படைத் தலைவர்கள் உயிரிழக்க நேரிட்டது. அவர்கள் தலைகளை மதுரை வாசலில் கழுகுகள் கொத்தின. அதற்காகக்கூட நான் வருந்தவில்லை. நாட்டுக்காகத் தலையிழப்பது வீரர்கள் கடமை. பிறகு உன்னை வீரபாண்டியனுக்குத் திருமணம் பேசினேன். எதனால்? அபராஜிதனிடம் வெறுப்பினாலா? அல்ல, கடமைக்குத் தலை வணங்கினேன் இப்பொழுதும் அந்தக் கடமைதான் இங்கு அனுப்பியிருக்கிறது. அதனால்தான் வந்தேன். யோசித்துப் பார்! இந்தச் சிற்றரசை யார் சிருஷ்டித்தது? இந்த சிற்றரசைக் காப்பாற்ற உன்னால் முடியுமா? திரும்பத் திரும்ப இது தாக்கப்பட்டு மக்கள் சதா யுத்த அபாயத்திலிருப்பதைவிடச் சோழ ஈட்டிகளின் பாதுகாப்பில் நல்வாழ்வு வாழ்வது அவசியமல்லவா? உன் மக்கள் நன்மைக்காக, பிள்ளையைவிட அதிகமாக நான் நேசிக்கும் அபராஜிதனுக்காக யாசிக்கிறேன் மகளே, தயவு செய்!'' என்றான்.

கார்குழலி நீண்ட நேரம் பதில் பேசவில்லை. அவள் மேலைமங்கலத்தைப் பற்றி நினைக்கவில்லை. தமிழ்நாட்டைப் பற்றி நினைக்கவில்லை. அபராஜிதன் தனக்காகச் சிறையிருப்பதை நினைத்தாள். அவள் கண்களில் கிளம்பிய

நீர்த்துளிகள் கன்னங்களில் வழிந்தோடின.
எங்கோ எதையோ பார்த்துக்கொண்டிருந்தாள். வெகுநேரம்
பார்வையும்கண்களிலிருந்து உகுத்தநீரும் கடினசித்தனான
அண்ணன் பல்லவராயனைக்கூடக் கலக்கிவிட்டது. கடைசி
யில் மெல்லக் கேட்டான் "மேலைமங்கல முடியை நான்
துறக்கும் பட்சத்தில் அவரை விடுதலை செய்வீர்களா?"
என்று.

அண்ணன் பல்லவராயன் எழுந்திருந்து இரண்டு
பட்டுச் சீலைச் சுருணைகளை அவளிடம் அளித்தான்.
"மகாராணி! இதிலொன்று, தாங்கள் மணிமகுடம் துறக்
கக் கையெழுத்திட வேண்டிய ஒப்பந்தம். இன்னொன்று,
அபராஜிதன் விடுதலைப் பத்திரம்" என்றான்

கார்குழலி ஒரு விநாடி அடிகளாரைத் திரும்பிப்பார்த்
தாள். மறு விநாடி பட்டுச்சீலைச் சுருள்களிரண்டையும்
பிரித்துப் படித்துவிட்டுச் சுருள்களொன்றில் பக்கத்திலி
ருந்த மயிலிறகால் கையொப்பம் தீட்டி மற்றொன்றை மடி
யில் வைத்துக்கொண்டாள். அதே சமயத்தில் தலையில்
பட்டையாகச் சுற்றிச் சென்ற வைரங்கள் பதித்த மணி
முடியையும் எடுத்து கருணாகரத்தேவன் கைகளில் ஒப்
படைத்தாள். அதை வாங்கிய கருணாகரததேவன்
கரங்கள் நடுங்கின.

இரண்டு தினங்களுக்கெல்லாம் மதுரை மாளிகைச்
சிறையிலே கார்குழலியின் கரங்களிலிருந்துதன் விடுதலைப்
பத்திரத்தை வாங்கிப் பார்த்த அபராஜிதன் கைகளும்
நடுங்கின. "என்ன காரியம் செய்தாய் கார்குழலி! ராஜ்யத்
தையே தியாகம் செய்துவிட்டாயே" என்றான் அபராஜி
தன்.

"பெண்களுக்குக் கணவன்தானே சகல சாம்ராஜ்ய
மும்? ஆகையால் அந்த ராஜ்யத் தியாகம் ஒரு பெரிதா?"
என்றாள் கார்குழலி.

பதில் சொல்லத் தெரியாமல் தயங்கிய அபராஜிதனின்
உதவிக்கு வந்தார் உள்ளே நுழைந்த பெரிய பல்லவராயர்,
"தமிழ் மகள் பண்பு அத்தன்மையது, அபராஜிதா. அதை
உன் போன்ற பிடிவாதக்காரனாலும் உடைக்க
முடியாது" என்றார்.

"கார்குழலி! உன் ராஜ்யத்தைக்காக்க நான் சிறைப்
பட்டேன். என்னைச் சிறைமீட்க நீ ராஜ்யத்தைத் துறந்
தாய். இது என்ன நியாயம்?" என்றான் அபராஜிதன்.

"காதல் நியாயம், கடமையின் நியாயம்" என்று
சொல்லிச் சிரித்தார் பேரமைச்சர்.

இது நடந்த சில நாட்களுக்கெல்லாம் மதுரை அமர்க்
களப்பட்டது. அபராஜிதனுக்கும் கார்குழலிக்கும் பெரிய
பல்லவராயரே முன்னின்று திருமணத்தை நடத்தி
வைத்தார். திருமணம் முடிந்து தம்பதிகள் புறப்படும்
சமயத்தில் நீண்ட ஓலைச் சுருளொன்றைப் பெரிய
பல்லவராயர் கார்குழலியிடம் நீட்டினார்.

"இது என்ன?" என்று கேட்டாள் கார்குழலி.

"என் பெண்ணுக்குச் சிதனம்" என்றார் பேரமைச்சர்.

பிரித்துப் படித்த கார்குழலி அசந்து போனாள்.
"என்ன கன்னிமாடக் கோட்டையை எனக்கு அளித்து
விட்டீர்களே!" என்றாள்.

"குழந்தாய், உன் வாழ்க்கையைப் பக்குவப்படுத்திய
இடம் அது. அங்கேயே உன் வாழ்க்கை வளப்படட்டும்"
என்றார் பேரமைச்சர். அத்துடன், "மகளே! அபராஜி
தனை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள் அவன் புரட்சிப்
படை இனி பாண்டிய சைன்னியத்தில் சேர்ந்துவிடும்.
இருந்தாலும் அவன் படைத் தலைவர்களான காரியையும்
மார்க்கியனையும் இன்னும் சில வீரர்களையுப் கன்னி
மாடக் கோட்டைக்கு அனுப்பி வைக்கிறேன். அங்கும் நீ

முற்றும்